# ஆனந்த நாவல்

விலை
ரூ.20



# கடலோரக் குருவிகள்

## பாலகுமாரன்

பரபரப்பான விற்பனையில்

# பல்சுவை நாவல்

விலை ரூ.15



எழில்

பாலகுமாரன்


யோகி ராம்சுரத்குமார்

# கடலோரக் குருவிகள்



உள்ளங்கையில் விரித்துப் பிடித்திருந்த மந்தாரை இலையில் மூன்று பட்டை சாதமும் ஒரே நேரத்தில் சொத்தென்று விழுந்ததும் மாதவனுக்கு பசிக்கத் துவங்கியது. வயிறு மெல்ல சுழன்று பசியை அதிகரிக்க வைத்தது.

## பாலகுமாரன்

கன்னக்கதுப்பில் சட்டென்று உமிழ் நீர் பொங்கி நாக்கடியில் வழிந்து அதிகப்படியான அந்த எச்சிலை விழுங்கவைத்தது. நாசித் துவாரங்கள் விரிந்து அந்த வெப்ப உணவின் வாசனையை வேகமாய் வாங்கிக் கொண்டு ஒரு சின்ன சுகக் கிறக்கம் அனுபவித்தது. கண்களில் ஒரு களைப்பு ஏற்பட்டது. அந்தக் களைப்பில் விழிகள் அசையாது அந்த வெண் சோற்றையே பார்க்கும்படி ஆயிற்று.

இனி திரும்பி நடக்க வேண்டும். விழாமல் வீடு வரை நடந்து போக வேண்டும். விழுந்தாலும் கையில் உள்ள சோற்றுப் பட்டையில் மண் ஒட்டாது பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படியே விழுந்து வாரி மண் ஒட்டினாலும் தட்டி எடுத்துக் கொண்டு போக வேண்டும்.

அப்பா காத்திருப்பார். அம்மா வாசலில் நின்றிருப்பாள்.

"மாதவா.. உச்சிகால மணி அடிக்கறதுடா. மெல்ல கோவிலுக்கு போய் குஞ்சிதபாதத்துக் கிட்ட நான் கேட்டேன்னு மூணுப்பட்டை சாதம் வாங்கிண்டு வா. மாட்டேன்னு சொல்ல மாட்டான். இதோ தரேன். அதோ தரேன்னு நிக்கவச்சு கொஞ்ச நாழி பண்ணுவான். மத்தபடி தராம போமாட்டான்."

அப்பா திண்ணைக் குறட்டில் மல்லாந்தபடி பேசினார்.

"மாட்டேன்னுட்டா" அம்மா எதிர் கேள்வி போட்டாள்.

"எத்தனை நாழி பசி தாங்குமோ அத்தனை நாழி பொறுத்துப்போம். அப்புறம் வேட்டிய அவுத்து உத்தரத்துல போட்டு தூக்குமாட்டிண்டு போக வேண்டியதுதான்.

போறும். சோத்துப்பட்டைக்கு தூக்குல தொங்குவாளா. நான் பட்டாமணியம் ராமகிருஷ்ணர் கிட்ட போய் பத்து ருவா."

கூடாது.. எட்டு நூத்தி எம்பளத்தெட்டு ருபா பாக்கி ராமகிருஷ்ணனுக்கு. எந்த உத்தாரமும் இல்லாம இன்னொரு பத்து ருவா கொடுன்னு கேட்கப்படாது.

"தருவான்."

"பிச்சை கேட்டா தருவான்டி. நீ கடன்னா கேட்கப் போற."

"பிச்சைன்னு கேட்கறேன்."

"நான் உசிரோட இருக்கறவரைக்கும் கேட்காதே. அப்புறம் உன் இஷ்டம். திருப்பித் தரமாட்டேன். எனக்கு அதுக்கு வக்கில்லேன்னு போய் நாம நிக்கவே கூடாது."

"கோவில் பட்டை சாதம் பிச்சையில்லையா."

"இல்லை.. பிரசாதம். நம் மாதிரி ஏழை ஜனங்களுக்கு எந்த காலத்திலயோ, யாரோ எழுதி வச்சுட்டு போன தர்மம்."

"பிராமணா பிச்சை எடுக்கலாம். உஞ்ச விருத்தி பண்ணலாம்னு சாஸ்திரம் இருக்கே."

"அது சம்சாரியானவனுக்கு இல்லை. பரதேசியா போனவனுக்கு உண்டு. பந்தபாசம் அறுத்து குடும்பத்தைத் துறந்து இனி சமைச்சு சாப்பிடறதில்லைன்னு சங்கல்பம் பண்ணிண்டவாளுக்கு உண்டு."

"தியாகையர் உஞ்ச விருத்தி அப்படியா. அவருக்கு பொண்டாட்டி இருந்தாளே. வீதி வீதியா பாட்டு பாடி அரிசி வாங்கி அதுலதானே சமைச்சு சாப்பிட்டார்."

"அப்படி ஒரு சங்கல்பம். நான் தொழில் பண்ண மாட்டேன்டா ராமா.. எனக்கு தொழில், வாழ்க்கை, லட்சியம் எல்லாமும் நீதான். உம்பேர் சொல்றது தான்.. உம் பேரைச் சொல்லி தெருத் தெருவா போறேன். போடறவா பிச்சை போடட்டும் போட்டா சாப்பாடு. இல்லைன்னா இல்லைன்னு இருந்தவர். ராஜா கூப்புட்டும் போகாத நிதிசால சுகமான்னு இருந்தவர். என்னை மாதிரி எல்லாத்தையும் தொலைச்சுட்டு ரோட்டுக்கு வந்தவர் இல்லை."

அப்பா எல்லாவற்றையும் தொலைத்தது குடியில் இல்லை. சூதில் இல்லை. அப்பாவுக்கு எந்த கெட்டப்பழக்கமும் இல்லை. அவருக்கு அவர் செலவு செய்த அளவு வருமானம் இல்லை. என்ன செலவு. இரண்டு பெண்கள் தான் செலவு.

இரண்டாவது மகள் விமலாவுக்கு கல்யாணமாகி ஒரு வாரம் ஆகிறது. மேஜை நாற்காலியெல்லாம் விற்று நாதஸ்வரக்காரனுக்கு கொடுத்தாகி விட்டது. ஊஞ்சல் பலகையைக் கழற்றி பெட்ரோமாக்ஸ் கணக்கு முடிந்தது. மரக்குதிர் இரண்டு பந்தல் போட்டவனுக்குப் போயிற்று. மற்றபடி நிலம், வீடு, தோட்டம் எல்லாம் கடனில் எழுதிக் கொடுத்து காச திருப்ப முடியாமலும், ஆண்டு அனுபவிக்க முடியாமலும் இருக்கிறது. எல்லாமும் வட்டியில் மூழ்கும். நீட்டிய இடத்தில் கையெழுத்து போட்டு இது என்னுதில்லை என்று ஒரு நாள் சொல்லும்படியாகும். இது தவிர திருப்பித் தருகிறேன் என்று

புரோநோட்டுக்கடனாய் ஏழாயிரத்து ஐநூறு இருக்கிறது. இனிமேல் இந்த ஊரில் யாரிடமும் கடன் கேட்க முடியாது.

அப்பாவின் ஒரே கெட்டப் பழக்கம் சமூக ஒழுக்கம். மரபு மயக்கம். மரியாதைக்குக் குந்தகம் வரக்கூடாது என்கிற பிடிவாதம்.

டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் நடத்துகிற மாசிலாமணி விமலாவைக் காதலிப்பதாய் கடிதம் எழுதினான். கண்ணில் வைத்து காப்பதாய் தாய் மீது சத்தியம் செய்தான். "என்னாங்க... இந்த காலத்துல போய் ஜாதி பாக்கறீங்களே. என் மேல ஒரு குறை சொல்லுங்க.. நான் பொண்ணு கேட்டது தப்புன்னு கன்னத்துல போட்டுக்கிட்டு போயிடறேன்." அப்பா எதிர்க்கவே வந்து பேசினான்.

"உட்கார் மாசிலாமணி. இப்படி பக்கத்துல வந்து உட்கார். ஜாதிங்கறது ஏற்ற தாழ்வு இல்லை. மனசுத்தன்மை. இந்த மனசுத்தன்மை தொழில் மூலமா ஏற்படறது. தொழிலைப் பாதுகாக்க அப்படி ஒரு மனசுத் தன்மை தேவைப்படறது. நான் வேதம் சொல்றவன். விடிகார்த்தால எழுந்து தினம், தினம் என் பாடத்தை உரக்கச் சொல்லி மனனம் பண்றவன். அப்பத்தான் சபைல நாலு பேர்க்கு நடுவுல பிசிறு தட்டாத சுருதி மாறாத, தங்கு தடை இல்லாத, சொல்ல முடியும். இதுக்கு அமைதியான சுபாவம் வேணும்.

சண்டை சச்சரவுக்கு போகாத, படபடப்பு இல்லாத தன்மை வேணும். கோவம் இல்லாத புத்தி வேணும். கோவம் இருந்தா மனனம் பண்ண முடியாது. சண்டை போட்ட, ஆங்காரம் இருந்தா குரல்ல சுருதி சேராது. இது எங்க சுபாவம். சண்டைக்கு போகாத, சமாதான பாவம் பயந்தாங்கொள்ளின்னு வச்சுக்கோயேன்.

நீ வைசியன். பேச்சுதான் முக்கியம். நாலு ஊர் போய், நாலு சாமான் எடுத்துண்டு வந்து ஒன்னுக்கு ரெண்டா விலை வித்து, எது விக்கும்னு கணக்கு போட்டு, எல்லாத்துக்கும் விலைபோட்டு, என்ன லாபம்னு கணக்கு போடற சுபாவம். நீ, விடிஞ்ச பிறகு எழுந்தா போறும். வேகமா பேசத்தான் வேணும். நல்லவனுக்கு நல்லவனா.. கெட்டவனுக்குக் கெட்டவனா ஆட்டம் காட்டணும். இதுக்கு பேச்சுதான் மூலதனம். நீ வந்து படியேறினதுமே பளிச்சறது எனக்கு. என்னாடி, காலங்கார்த்தால சுத்தராகு உக்கப்பான்னு நீ சொன்னா வாயடைச்



சுடும். நம்ம சுபாவம் ஒத்துப்போகாது. மாசிலாமணி. அவ இழுப்புக்கு நீ போய் உன் இழுப்புக்கு அவ வந்து குழப்பமாயிடும். உனக்குப் பொறக்கும் குழந்தைகள் கலவரப்படும். எப்படி எங்க வீட்டுப் பொண்ணு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதோ.. அதே மாதிரி உன் தங்கையை எங்க வீட்டுப் பையன் கல்யாணம் பண்ணிக்கவே முடியாது. உங்கப்பா ஒத்துக்க மாட்டார்னு சொல்லலை. மனசு ஒத்துப் போகாதுன்னு சொல்றேன். சுபாவம் மாறிப்போறது கஷ்டம்ங்கறேன்.. புரியறதா."

அப்பா பேச்சு என்கிற மெல்லிய ஊசியை மாசிலாமணி இருதயம் வரை நோகாது இறக்கினார். அடுத்த வாரமே விமலாவுக்கு வரன் தேட ஆரம்பித்தார். இன்ஸ்டிடியூட்டுக்குப் போக வேண்டாமென்று விதித்தார். அவர் சக்திக்கு மீறி செலவழித்து விமலாவை திருச்சியில் புரோகிதம் செய்யும் சுந்தரேசனுக்குக் கல்யாணம் செய்தார்.

"எங்கப் பக்கத்து மனுஷா நூறு பேர் வருவா. கார்த்தால பலகாரத்துக்கு கூட நுனி இலைதான் போடணும். கிழிச இலை, கீத்து இலைன்னு போட்டா சாப்பிட மாட்டோம்."

அமைதியாயிருந்து ஆரவாரத்திற்கு மாறிக் கொண்டிருந்த, அடக்கத்திலிருந்து அலட்டலுக்கு போய்க் கொண்டிருந்த அதே ஜாதி அப்பாவின் கொஞ்ச நஞ்ச சொத்தையும் சிதற அடித்தது. வீட்டில் உள்ள எல்லா பாத்திரங்களும் பாலீஷ் செய்து சீதனப் பொருட்களாய் மாற்றப்பட்டன. கட்டில், பீரோ, படுக்கை, பவுன், நாலு பந்தி சாப்பாடு என்று காசு கரைந்தது. கல்யாணத்தன்று சாயந்திரமும் கடன் வாங்க வேண்டியிருந்தது. கட்டு சாதக் கூடைக்கு பாக்கி தரவேண்டியிருந்தது. அந்த பாக்கி தர வீட்டில் உள்ள எல்லா பொருட்களையும் ஒழித்து கொடுத்தாகிவிட்டது. வெளியே போ என்று வீடு அடமானம் எடுத்தவன் சொன்னால் துணியை கட்டிக்கொண்டு மாத்தடிக்கு போக வேண்டும். சொல்லவில்லை என்பதால் இன்னும் நிழல் தந்து கொண்டிருக்கிறது. அப்படி சொல்லாத காரணம் அப்பாவின் வேத உச்சரிப்பு.

"உம்மைத் தெருவில் தூரத்தினால் என் குழந்தைகள் கஷ்டப்படும். இருக்கறவரைக்கும் இரும். பையனுக்கு வேலை கிடைச்ச மறுநாள் காலி பண்ணிடும். அது போதும்." கருணையோடு

கடன்காரன் தந்து விட்டுப் போன ஓட்டுவீடுதான் மானம் காக்கிறது.

இப்போது உயிர் காக்க மகாதேஸ்வரர் கோயில் சோறு. மூன்று பட்டை வெறும் சாதம். மகாதேஸ்வரர் பிரசாதம். குஞ்சிதபாதம் அப்பாவிடம் வேதம் கற்றவன். தனக்கு சரியாகப் பாடம் வரவில்லை என்று பாதியில் நின்றவன். இந்த சோறு அவன் கருணை. தினசரி நூறு ஏழைகளுக்கு நூறு பட்டை சாதம் என்பது கோயிலில் எவரோ வைத்துவிட்டுப் போன கைங்கர்யம். இப்போது நாலு பட்டை சாதமாகி அந்த நாலு பட்டையில் மூன்று பட்டை அங்கே போடப்பட்டது. நாளைக்கு போடுவானா.. தெரியாது.

மாதவனுக்கு பி.எஸ்.ஸி., பாட்டனியில் இடம் கிடைத்தது. வாண்டையார் காலேஜில் அப்பா சொல்ல கடைசி நேரம் அவன் கேட்ட கணிதம் மறுக்கப்பட்டு தாவரவியல் தந்தார்கள். தலையெழுத்தே என்று படித்தான். பாஸ் செய்தான். வேலை கிடைக்கவில்லை. எம்.எஸ்.ஸி., படி, டக்குன்னு கிடைக்கும் என்றார்கள். படிக்க வசதியில்லை.

இந்த கருந்தாட்டாங்குடியில் விவசாயம் தவிர வேறு தொழில் இல்லை. விவசாயம் இதுவரை செய்ததில்லை. வியாபாரம் செய்ய காசில்லை. உள்ளூர் குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தான். கோடை வந்தது. மூணு மாசம் கழிச்சு வா போதும், எதுக்கு லீவுல டியூஷன் என்று சொல்லிவிட்டார்கள். விமலா கல்யாணம் கோடையில் நடந்தது. வீடு ஜலமில்லாத காவிரி மாதிரி வறண்டு போயிற்று.

"மாதவா.. ஒரு நிமிஷம்." குஞ்சிதபாதம் கோவில் கணக்கு மேஜையை தள்ளிவிட்டு வெளியே வந்தான்.

"அப்பா கேட்டார்னு சொன்னே.. மாட்டேன்னு சொல்ல முடியலை. டக்குன்னு மூணு பட்டை தந்துட்டேன். நாளைக்கும் தான்னு கேட்டா.. முடியாது. பரிசாகரன், மேலே இருக்கறவாளுக்கு சொல்லிடுவான். ஏழைக்கு தானே சாதம் போடணும். ஏன் ஐயருக்கு கொடுக்கறேன்னு கேட்பா. இது கோவில் வாசல்ல உட்கார்ந்து கேட்கற ஜனங்களுக்குங்கறது அவங்க எண்ணம். நல்ல வேளை.. இன்னிக்கு கோவில் வாசல்லயும் யாரும் இல்லே.. தயவு செஞ்சு நாளைக்கு வராதே. அப்புறம் எனக்குக் கஷ்டமாயிடும்." குஞ்சிதபாதம் கை கூப்பினான்.

மாதவன் இலையை மடித்து தூசு படாமல் வீட்டிற்கு போனான். அப்பா கண்ணை மூடி மனைப் பலகையில் உட்கார்ந்து மத்தியான ஜபம் செய்து கொண்டிருந்தார்.

சோறு வாசனை அவர் மூக்கில் பட்டு நிமிண்டியிருக்க வேண்டும். தொண்டைக்குழி அசைவது தெரிந்தது. சமையலறையில் மூணு கிழிசல் வாழை இலையில் சாதம் பரப்பி வைக்கப்பட்டது.

அப்பா எழுந்து மனைப்பலகையை ஓரம் வைத்து விட்டு சமையலறைக்கு வந்தார். இலை முன் அமர்ந்தார்.

"மகாதேவா" என்று நெஞ்சில் கை வைத்தார். இலை சோறு பார்த்தார். கையில் ஜலம் எடுத்து இலையைச் சுற்றி தெளித்தார். உடம்பிலுள்ள வாயுக்களுக்கு என்று ஒவ்வொன்றும் பெயர் சொல்லி ஒவ்வொரு பருக்கையாய் ஐந்து முறை சாப்பிட்டார். பிறகு பிசைந்தார். வாயில் ஒரு கவளம் போட்டார். மென்றார்.

அழுதார்.

"எதுக்குன்னா அழறேள்."

"கொடிது, கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை. நான் இவனை நினைச்சு அழறேன்டீ. இந்தப் புள்ளைக்கு இப்படி வெறும் சோறு திங்க வேண்டியிருக்கேன்னு அழறேன்."

அம்மா அழுதாள். புடவைத் தலைப்பால் முகம் பொத்தி கேவினாள். மாதவன் அழுதான். அவன் கண்ணில் சூடாய் வழிந்த நீர் உள்ளே ஒரு தீயைக் கிளறி விட்டது. காசு சம்பாதிக்கும் வெறி தணலாய் பறந்தது.

மாதவன் மூன்று கவளம் சாதம் விழுங்கினான். எச்சில் இலையுடன் வெளியேறினான். உடம்பில் நாடி, நரம்புகள் விழுங்கியதை ருசிக்கத் துவங்கின. அமிலமாய் பாய்ந்து அன்னத்தை உருமாற்றின. உயிர் அமைதியாயிற்று. புத்தி யோசிக்கத் துவங்கியது.

மாதவன் எப்படியாவது, ஏதாவது சம்பாதிக்க வேண்டும் என்று வெளியே கிளம்பினான். அவன் கூடப் படிக்கும் விஜயலட்சுமியிடம் பத்து ரூபாய் கடன் கேட்கும் எண்ணம் உதித்தது. அப்படி கடன் கேட்க விஜயலட்சுமியிடம் நிறைய பேச வேண்டும். அவள் கவிதைகளை பாராட்ட வேண்டும். விஜய

போயிட்டேய்யா." பிச்சமணி செருப்பு கழற்றத் தயாரானான்.

"தம்பி என்ன பண்றாப் போல."

"வேலை தேடிட்டிருக்கேங்க."

"அது நல்ல வேலைதான். தம்பி ஐயருங்களா."

"ஆமாங்க. தெரியாத பண்ணிட்டேன். விட்டுருங்க."

அவர் தோளில் கை போட்டு கொல்லைபுற சந்துக்குக்கூட்டிப் போனபோது திமிறினான். தவிலும், ஒத்தும் அவனை அணைத்தபடியே சந்து நடுவுக்கு தள்ளிக் கொண்டு போனார்கள்.

"பாப்பானா பொறந்துட்டு செருப்பு திருடுறியடா நாயே." நாதஸ்வரக்காரர் பளீரென்று அறைந்தார். தவில் முதுகில் குத்தியது. ஒத்து முகத்தில் இடித்தது. இருபது வினாடிக்குள் ஆறேழு அடிகள் விழுந்தன.

"ஒரு மாசத்துக்கு ஆறு ஜோடி செருப்பா ஒருத்தன் வாங்குவான். வக்கு இல்லேன்னா வெறுங்காலோட நடந்து போடா. இனி நீ செத்தாலும் திருடப் படாது." என்று இன்னொரு அறை அறைந்தார். அவர் தொலைத்த ஆறு ஜோடி செருப்புக்கும் பிச்சமணியே அடிவாங்கினான். தொலைவிலிருந்து பார்த்த நண்பர்கள் சிதறியோடினார்கள்.

"அப்பவே சொன்னேன் கொஞ்சம் பழைய ஜோடியா எடுத்துக்கடா, புதுசா தொடாதேன்னு. கரெக்ட்டா புதுச்செருப்பு போட்டுண்டு பேயடி படறான் பாரு." வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு பசக்.. பசக்கென்ற மண் சிதற நடந்தார்கள். பிச்சமணி வந்தபோது துக்கம் விசாரித்தார்கள். நடு முதுகில் தவில் கோலால் மூன்று முறை குத்தி விட்டாரனாம். அதுதான் வலிக்கிறது என்ற பிச்சமணி அழுது கொண்டே சொன்னபோது. எதையும் எங்கேயும் திருடக்கூடாது என்ற பயம் மாதவனுக்கு வந்துவிட்டது. அடிதாங்க முடிந்தால்தான் திருடலாம் என்ற பாடம் கிடைத்துவிட்டது.

அப்பாவிடம் பிச்சமணி வாங்கிய உதையை இரண்டு நாள் கழித்துச் சொன்னபோது வாய் விட்டுச் சிரித்தார்.

"ஜாதிகள் ஒண்ணான மாதிரி தண்டனையும் ஒண்ணாயிடுத்து." என்று சொன்னார்.

"சந்தர சோழர் காலத்தில ஒரு சட்டமிருந்தது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற மகா பாதகங்கள் பண்ணினா, குற்றத்துக்கு தகுந்தா மாதிரி தண்டனையில்லை. குலத்துக்குத் தகுந்தா மாதிரி தண்டனை."

"புரியலையே. தெளிவா சொல்லேன்."

"நாலாவது வர்ணத்தார் பஞ்சமாபாதகம் பண்ணா அவங்களுக்கு சவுக்கடி. க்ஷத்ரியன் பண்ணா அவனை ஊரை விட்டு குடும்பத்தோட துரத்தல். வைசியர்கள் பண்ணா அவன் சொத்து மொத்தமும் பறிமுதல். அபராதம். இதுவே பிராமணன் பண்ணா.."

"மன்னிச்சு விட்டுடுவாளோ." மாதவன் ஆவலாய்க் கேட்டான்.

"இல்லை. சிரச்சேதம். பிராமணனைக் கொல்ல யாரும் முன்வரலேன்னா அவன் கோபுரத்திலேர்ந்து விழுந்தோ, கல்லைக் கட்டிண்டு கிணத்துல விழுந்தோ, விஷம் சாப்பிட்டோ பிராணஹத்தி செய்துக்கணும்."

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா, "ஐயோ." என்று கன்னத்தில் கை வைத்தாள். தற்கொலை செய்துகறது பாவமில்லையா என்று கேட்டாள்.

"அதைவிடப் பாவம், படிச்சவன், சமூகத்துக்கு முன்னோடியாக இருக்கறவன், திருடறது. இதுக்கும் பின்னால் இன்னொரு விஷயம் நடந்திருக்கு. கோவில் நகைய எடுத்து தாசிக்குக் கொடுத்த பிராமணனை ஊர் குற்றம் சொல்ல, சோழ ராஜா தூக்கில போட்டிருக்கான். அவன் சொத்துக்களை பாதிக்கப் பட்டவர்களுக்கு பிரிச்சுக் கொடுத்திருக்கான். அந்த நாதஸ்வரக்காரன் நல்லவன். அறைஞ்சதோட விட்டான். அந்தப் படவாவ அவமானப் படுத்தியிருக்கணும். செருப்ப தலைலவச்சு, ஊர் முழுவதும் சுத்த வச்சிருக்கணும். பொருள் மேல ஆசை இருக்கறவன் பிராமணனா."

"ஏன். பிராமணன் மனுஷன் இல்லையா."

"இல்லை. சாதாரண மனுஷனில்லை. பிரும்மத்தை அடுத்திருப்பது பிரமச்சர்யம். பிரும்மத்தை அறிய முற்படுபவன் பிராமணன். பொருள் தேடற ஆசை இருக்கறவன் பிரும்மத்தை தேட முடியாது."

"நீ பிரும்மத்த தேடு. ஊருக்கு நல்லது சொல்லுன்னு முன்காலத்துல ராஜா அனுசரணையா இருந்தா. இடுப்பு வேஷ்டி. மேலதுண்டு, குடை, செருப்புன்னு தானம் பண்ணினா. இப்ப அப்படி யில்லையே.." அம்மா மறுபடியும் தொடுத்தாள்.

"உண்மை. அதுக்காக, செருப்பு திருடறது

உத்தமமாவிடாது அவர் முதுகில அடிச்சது மறந்து
போயிடும். ஆனா பிச்சுமணிக்கு எப்ப வெள்ளை
செருப்பு பார்த்தாலும் திருடினது ஞாபகம் வரும்.
செருப்பு ஞாபகம் வரும்போதெல்லாம் நாதஸ்வரம்
ஞாபகம் வரும். நாதஸ்வர சத்தம் கேக்கற போதெல்
லாம் செருப்புதான் கண்ணுல நிக்கும். ஒரு சங்கீ
சந்தோஷமே காணாத போயிட்டுதே. இந்த வலி
சாகற வரைக்கும் இருக்குமே. எவ்வளவு பெரிய
தண்டனை அது. இன்னொருத்தன் தர தண்டனை
ஒரு பக்கம் இருக்கட்டும். உன் மனசு ஒரு தண்
டனை தருமே அதிலேர்ந்து எப்படி தப்பிக்கப்
போறே. நம்ம மனசு நம்மளையே கேவலமா
பாக்குமே அதிலிருந்து எப்படித் தப்பிக்க முடியும்
ராமா..." அப்பா பிச்சுமணியின் தவறுக்கு குருவிக்
காதைப் பொத்திக் கொண்டார். மாதவனுக்கு
உள்ளே ஒரு விழிப்பு ஏற்பட்டது. அப்பா சொல்லா
மல் சொல்லிக் கொடுத்து விட்டார் என்று
தோன்றியது.

"சுந்தரசோழன் பத்தியெல்லாம் உனக்கு எப்படி
தெரிஞ்சது."

"படிப்புதான். சரஸ்வதி மஹால்ல போய்
கேட்டா நீலகண்ட சாஸ்திரிகள் புக் தரா. கதை
புஸ்தகம் மாதிரி படிச்சுண்டு போகலாம்."

"சோழர்கள் பத்தி எனக்குக் கொஞ்சம் சொல்
லேம்பா." மாதவன் கேட்க, அப்பாவும் அவனும்
பெரிய கோவில் போனார்கள். அப்பா பெரிய
கோவிலைப் பத்தி கல் கல்லாய் தடவிச் சொன்னார்.
மிகப்பெரிய சாம்ராஜ்யத்தைப் பத்தி கல்வெட்டு
கல்வெட்டாய் படித்துக் காட்டினார். கோவிலின்
இடப்பக்கம் கருவறை நோக்கிப் போகும் படிகளு
க்கருகே அப்பா, ராஜராஜன் முதல் கல்வெட்டை
அவன் மெய்க்கீர்த்தியை வாய்விட்டுப் படித்தா
மெய்க்கீர்த்தியைத் தாண்டியும் படிக்கத் தொட
ங்கினார்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் உடையார்க்கு நாங்குடு
தனவும் அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள்
குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவு
ஸ்ரீவிமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய்
மொழிந்தருள வெட்டின..

"அக்கனை யாருப்பா."

"அக்கான் குந்தவைப் பிராட்டி."

"பெண்டுகளை."

"மனைவியர்."



"குடுத்தார் குடுத்தனவும்னா."

"தான் சம்பளம் கொடுத்தவர் கொடுத்த தானம்னு வச்சுக்கலாம்."

அப்பா ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பான வாழ்க்கை முறையை வியந்து வியந்து சொன்னார்.

"நீ சமஸ்கிருதத்லதான் புலின்னு நினைச்சேன். இந்த தமிழ் இவ்வளவு நன்னா படிக்கிறியேப்பா."

"தமிழை அலட்சியம் பண்றவன் மூடன். பல நாகரீகம் பார்த்த பாஷை அது. பெரிய கோவில் விமானத்த பார். ஒரு கணிதமில்லாம இவ்வளவு பெரிய கட்டடம் கட்டியிருக்க முடியுமா. ஒரு இழை பிசகியிருந்தா கோபுரம் கோணலாயிருக்கும். தமிழ்ல கணக்கு இருந்திருக்குடா. ரொம்பத் துல்லியமா இருந்திருக்கு. காவியமும், கணக்கும் இருக்கற பாஷைய கேலி செய்ய முடியுமா. இந்த மொழி பெரிசு அந்த மொழி சிறுசுன்னு சொல்றவன் தற்குறி. சக்கரம் கண்டுபிடிச்சது சிறுசு. மின்சாரம் கண்டுபிடிச்சது பெரிசுன்னு சொல்ல முடியுமா. கண்டு பிடிப்புகள்ல வித்தியாசம் உண்டா. மொழி மனுஷனோட கண்டுபிடிப்பு. எவரோ கண்டு பிடிச்ச சக்கரத்ல வேற எவரோ மின்சாரம் கண்டுபிடிச்சு வேகமாக ஓட வைக்கலையா. ரெண்டு கண்டுபிடிப்பும் சேர்ந்து இன்னொரு கண்டுபிடிப்பு வரலையா. அப்படித்தான் ரெண்டு மொழி கலந்து வேற மொழி வரும். புதுசாகும். எல்லாக் கண்டுபிடிப்புகளும் மாறும். மொழியை மாறக்கூடாதுன்னு சொல்றவன் மொழியினுடைய துரோகி. யாருக்கு மாறக்கூடாதுன்னு ஆத்திரம் வரும். தன் மொழி பெரிசுன்னு நினைக்கற மூடனுக்குத் தான் வரும். மொழி மேல காதல் இருக்கலாம். காமம் இருக்கப்படாது. காமம்ங்கற வார்த்தைக்கு பேராசைன்னு பொருள். பேராசையுள்ளவன் தனக்கும், தான் சார்ந்ததற்கும் எதிரி."

அப்பாவோடு தினமும் பெரிய கோவில் போனதில் பெரியகோவிலின் அத்தனை கல்லும் மனப்பாடமாகிவிட்டன. அவன் காலேஜ் விஜயலட்சுமி அவன் கல்வெட்டை தடவிக் கொண்டிருப்பது பார்த்து, "இங்க என்ன பண்றே." என்று கேட்க, இரண்டு வரி படித்துக் காண்பித்தான். "பெரிய ஆள்டா நீ." என்று அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு போனாள். கல்லூரியில் அவன் கல்வெட்டு படிப்பதைப் பத்திச் சொன்னாள்.

"பாடத்துல வர தமிழே புரியலை. கோவில்ல எழுதினத படிச்சுட்டு என்ன பண்றது. அதப் போயி

ஒருத்தன் படிக்கறான்னாக்க அவன மடக்கிப் போட்டு மூஞ்சில குத்தறனும். எவனோ ரெண்டு பையன் படிக்கறத பாத்துட்டு நமக்கு கல்வெட்டுன்னு பாடம் வச்சிருவானுக. தேவையா அது." எவனோ அலுத்துக் கொண்டான்.

"நீ தினத்தந்திய பாடமா வச்சாக்கூடப் படிக்க மாட்ட. தினத்தந்திக்கு ரெண்டு சுழி 'னா'வா, மூணு சுழி 'ணா' வான்னு கேட்பே." மாதவன் கோபமாய் பதில் சொன்னபோது கிட்டத்தட்ட சண்டை மூளுகிற சலசலப்பு அங்கே வந்துவிட்டது. விஜயலட்சுமி அவனை விலக்கிக் கூட்டி வந்து தன் கவிதைகளைக் காட்டினாள். அவைகளில் பல கடினமான ஆங்கிலத்திலிருந்தன. விஜயலட்சுமி தன் ஆங்கிலப் புலமைக்கு நாவல்களைக் காரணம் சொன்னாள். அவனையும் சேர்ந்து படிக்க வைத்தாள். சினிமாப்பாட்டு மட்டுமே பேரிலக்கியமாக இருந்த அந்தக் கல்லூரி மாணவர் கூட்டத்தில் விஜயலட்சுமியும், அவனும் சரித்திரம் பற்றியும், கவிதை பற்றியும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் பேசினார்கள். விஜயலட்சுமியின் அப்பா ஹோட்டல் வைத்திருக்கிறார். காலையில் போய் இரவுதான் வீடு திரும்புவார். விஜயலட்சுமியோடு பேச இந்த விஷயமும் சௌகர்யமாக இருந்தது.

அவள் வீட்டு படியேற, அந்த வராண்டா முழுவதும் நிறைய செருப்புகள் இருந்தன. எல்லாம் புதிய செருப்புகள். ஆனால் பெண்டுகள் போடும் செருப்புகள். உள்ளேயிருந்து 'ஓ'வென்று சிரிப்புக் கூச்சல் கேட்டது. வராண்டாவைத் தாண்டி மாதவன் ஹாலுக்குத் தலைநீட்டினான்.

"ஐயோ, படுபாவி நூறு ஆயுசு உனக்கு. உன்னை எப்படி தேடறதுன்னு நினைச்சேன். நீயே வந்துட்ட. உள்ளவா."

"இவர்தான் நான் சொன்ன மனிதர். பெரிய கோவில் முழுவதும் சுற்றிக்காட்ட மிகச்சரியான ஆள் கிடைத்துவிட்டது."

"உங்க ஹோட்டல்ல வேலை செய்யறார இவர்."

"நோ.. நோ.. என்னுடைய காலேஜ் மேட். ஆன பெரிய கோவில் பத்தி நல்லா தெரியும். மாதவ இது ஜானகி, இது வைஷ்ணவி. இவங்கரெண்டு பேரும் எனக்கு பேனா நண்பர்கள். மெட்ராஸ்ல இருக்காங்க. அவங்க காலேஜோட சௌத் டூ வந்திருக்காங்க. கொஞ்சம் பெரிய கோவில் சுத்தி

காட்டேன்."

எல்லோரும் கிளம்பும்போது நின்று செருப்பு போட்டுக் கொண்டார்கள். மாதவன் முதலாவதாக வெளியே வந்தான்.

"சார், நீங்க சப்பல் போட்டுக்கலையே." கூட்டத்தில் ஒரு பெண் அவனுக்கு ஞாபகப் படுத்தினாள்.

"நான் கோயிலுக்குப் போகும்போது செருப்பு போட்டுக்கறதில்லீங்க." மாதவன் பதில் சொன்னாலும் மனசு வலித்தது. அந்தப் பெண் அவனின் அழுக்கேறிய காலரை, பழுப்பேறிய வேட்டியை உற்றுப் பார்ப்பதைத் தெரிந்து தலைகுனிந்து கொண்டான்.

பெரியகோவில் விமானம் பார்த்து 'ஓ' என்று அந்தப் பெண்கள் கூவ அப்பா சொல்லிக் கொடுத்த விவரங்களை அந்தப் பெண்களுக்கு மாதவன் நிதானமாய்ச் சொல்லத் துவங்கினான். அவனுக்கு மறுபடியும் பசிக்கத் துவங்கியது.

## 3

நிர்மலாவுக்கு தஞ்சாவூர் சுற்றுப் பயணம் விருப்பமில்லை. குற்றாலம் போய் ஒரு நாள் தங்கி, அந்த வழியாகவே கேரளாவுக்குப் போய் பாரதப் புழா அருவி சாலக்குடியில் கொட்டுகிறது. அங்கே இரண்டு நாட்கள் காட்டுக்கு நடுவே கேம்ப் போட்டு, என்று அவள் ஆரம்பித்ததை யாரும் காது கொடுத்து கேட்கவேயில்லை.

"அருவில ஒரு நாள் ஒரு மணி நேரம் குளிக்கலாம். அதுக்குப் பிறகு.. அது தவிர குற்றாலம் மாதிரி இடத்துல குளிக்கிறதுக்கு எனக்கு விருப்பமில்லை. ஹான்னு எல்லா ஆம்பளையும் பார்க்கறாங்க. எனக்கு அது பிடிக்கலை. காட்டுக்கு நடுவே கேம்ப் அவ்வளோ ஜாக்கிரதையான விஷயம் இல்லை. சருகு அலைஞ்சாலும் பக் பக்குன்னு இருக்கும். வீட்ல பயப்படறது போதாதா. காட்ல வேற போய் அஞ்சி நடுங்கி நிக்கணுமா." மீனாட்சி கத்தினாள்.

"என்ன பயம். புலி, சிங்கம் இருக்கற காடு இல்லை அது. எப்பவாவது யானை வரும்." நிர்மலா பதில் சொன்னாள்.

"சிங்கம் புலிக்கு பயமில்லை. எவனாவது பத்து குட்டிங்க இருக்குன்னு கதவு உடைச்சு உள்ள

முந்தா என்ன செய்வே."

"உனக்கு ஒண்ணும் தெரியாது நிர்மலா. நான் இந்த ரிஸ்க் எடுக்க மாட்டேன்."

"தஞ்சாவூர் போர் மீனு."

"உனக்குத் தெரியலை. பெரிய கோயில் மட்டுமே ஒரு நாள் போறாது."

"ஹோன்னு இருக்கும் கோவில், பத்தரை மணிக்கு காலை கீழே வைக்க முடியாது. ஒரு தடவ சம்மர்ல போயிட்டு எண்டா போனம்னு ஆச்சு."

"சௌத் சைட் சம்மர்ல எங்கயும் போகக்கூடாது. இது வின்டர். ஜிலுஜிலுன்னு இருக்கும் தஞ்சாவூர், முழங்கால் ஜலம் இருக்கும் காவிரில. நீ பேசாத வா."

மீனாட்சி பேச்சுதான் எடுபட்டது. எப்போதும் அவள் பேச்சுத்தான் எடுபடும். அவள் எது பேசினாலும் ஆமாம் போட ஒரு கும்பல் கூடவே இருக்கிறது. சந்தியா, வனஜா, ஸ்ருதி, பங்கஜம், ரேவதி, பானு, மிருணாள், ரம்யா, செல்வி என்று பெரும் கூட்டம். எப்போதும் அவளைக் கொண்டாடுகிறது.

காசு, எல்லையற்ற காசு. மீனாவின் வீடு பார்த்துவிட்டு எல்லா சிநேகிதிகளும் இளிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவளோடு இழைய ஆரம்பித்து விட்டார்கள். அவள் எது சொன்னாலும் யோசிக்காமல் பின்னால் ஓடுகிறார்கள்.

"ஏய் மீனு, எங்க ப்ரதருக்கு ஒரு வேலை வேணும்டி. பி.ஈ. மெக்கானிக்கல் கடைசி வருஷம். ப்ளீஸ் ஹெல்ப் பண்ணேன்."

படிப்பு முடித்த மறுநாள் வேலை கிடைக்கும்.

"அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக். டிரினிடில் அட்மிட் ஆயிருக்கு. எனக்கு கார் வேணும் மீனா."

"எங்க வீட்டுக்கு பக்கத்துல ஒரு ஹனுமார் கோவில். கோபுரம் கட்டியாச்சு. கலசம் கிடைக்கலை, தாமிரம் காஸ்ட்லியாம்."

"தங்கை தனியா இலினாய்ஸ் போறா யாரும் அங்க உங்க அப்பாவுக்குத் தெரியுமா. திலிவ் கொடுத்துட்டு வரணும். ஒரு வாரம்தான் ஸ்டே."

கார் கிடைக்கும். கலசம் கிடைக்கும். கடல் கடந்து போனாலும் உதவி கிடைக்கும். மீனாவின் அப்பாவுக்கு லாரிக்கான டீஸல் எஞ்சின் தயாரிக்கும் கம்பெனி இருக்கிறது. இந்தியாவின் எல்லா பாகத்திலும், எல்லா லாரிகளிலும், அவர் எஞ்சின் பிரசித்தம். கார், டிராக்டர், பஸ் புல்டௌசர் என்று



பல வண்டிகளுக்கு பலவிதமான எஞ்சின்கள் அங்கே தயாரிக்கப்படுகின்றன.

நகரின் ஒதுக்குப்புறமாய் தொழிற்சாலை, நகரின் மத்தியில் பெரிய தலைமையகம். தென் திசையில் கடலோரமாய் பெரிய பங்களா.

அந்த வீடுதான் பலரையும் 'யப்போவ்' என்று கூற வைக்கும். கடல் தாண்டி மணல். மணல் தாண்டி தார் சாலை. தார்சாலை தாண்டி காம்பவுண்ட் சுவர். பிறகு ஏழு கிரவுண்ட் புல்தரை, புல் தரைக்கு நடுவே கப்பல் மாதிரி வீடு.

கட்டும்போதே தியேட்டரா, தியேட்டரா என்று கேட்டார்கள். இவ்வளவு பெரிய வீடா என்று வியந்தார்கள்.

எல்லா தோழிகளும் பரிட்சை நேரத்தின்போது ஏழெட்டு பேராய் ஒன்று கூடி க்ரூப் ஸ்டடி என்கிற பெயரில் நாலைந்து நாட்கள் அங்கேயே சாப்பிட்டுப் படிப்பதுண்டு. அந்த வீட்டின் எல்லா சௌகர்யத்தையும் அனுபவித்த நன்றி அவ்வளவு பணக்காரத்தனமாய் ஒரு தோழி இருக்கிறாள் என்கிற கர்வம். அத்தனை பணம் காசு இருந்தும் நல்ல ஸ்நேகிதத்திற்கு ஏங்கும் மீனாவின் குணம் அவர்களைக் கட்டிப் போட்டிருக்க வேண்டும். நிர்மலாவும் பணக்காரிதான். அவள் வீடும், தோட்டமும், தூரவும் உள்ளதுதான். ஆனால் இப்படி வாரிக் கொடுக்கிற ஒரு கை அவள் வீட்டில் யாருக்குமே இல்லை.

"இப்ப எதுக்கு டூர் போகணும்." என்றுதான் கேட்கிறார்கள். "இரண்டாயிரம் ரூபாய் கொடு" என்று கேட்டபோது ஐநூறுதான் கொடுத்தார்கள்.

"காசு கையில இருந்தா செலவழிக்கத் தோணும். மீனாட்சியோட தானே போறே. அவ பார்த்துக்குவா." என்று காசு தர மறுத்தார்கள். வீட்டில் கொடுத்த ஐநூறு ரூபாயைத் தவிர நிர்மலா தன் அக்கா புருஷனிடம் முந்நூறும், அண்ணனிடம் இருநூறும் காசு வாங்கி வந்தாள். ஆனால் காலையில் லாட்ஜிற்கு காசு தர மீனாட்சி பர்ஸ் பிரித்தவுடன் மூச்சடைத்துப் போயிற்று. பத்தாயிரம் ரூபாய் கட்டு இருந்தது. அது தவிர சுருட்டி, சுருட்டி ரூபாய்கள் மடித்து வைக்கப்பட்டிருந்தன.

"மீனா என் ஷேர்ல நான் எவ்வளவு தரணும்." என்று நிர்மலா பர்ஸ் பிரித்தபோது ஒன்றும் வேண்டாம் என்று மீனா மறுத்துவிட்டாள். ஏனென்று காரணம் கேட்டபோது "பானு, ரம்யா, பங்கஜம் காசு எடுத்துக்கிட்டு வரலை. நீ உன் ஷேர் தரேன்னா

அவங்க அப்செட் ஆக மாட்டாங்களா. எல்லோருக்குமே நான் செலவழிக்கிறேன். தேவைப்பட்டத வாங்கிக்கறேன்." என்று கட்டளையிட்டாள். இப்படி கட்டளையிட்டு விட்டேன் என்று பங்கஜத்திடமும், பானுவிடமும் மீனா சொல்லியிருக்க வேண்டும். இரண்டு சனியன்களும் மீனாவுக்கு செருப்புத் துடைத்துப் போடாத குறைதான். எப்படியும் தொலைந்து விட்டுப் போகட்டும். அவர்கள் மீனாவைச் சந்தோஷப்படுத்த தன்னை கேலி செய்ததுதான் பொறுக்கவில்லை.

பாத்ருமிலிருந்து "சோப் எங்கேடீ" என்று மீனா கேட்டபோது, தன் கையில் பிரிக்கப்படாதிருந்த லக்மே சோப்பை எடுத்துக் கொண்டு போய் மீனாவுக்கு முதுகு தேய்த்து விட்டதுதான் பொறுக்கவில்லை.

"நீ சோப்பு கூட கொண்டு வரலையா." என்று கேட்டது பானுவிற்கு தைத்துவிட்டது போலும். அதே சோப்பில், அப்படி கேட்டதற்காகவே பங்கஜம், பானு, ரியா எல்லோருக்கும் மீனா முதுகு தேய்த்து விட்டாள். நாலு பேரும், குளியல் ரூமை தாழ் போட்டுக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை ஊற்றிக் கும்மாளமடித்தார்கள். நிர்மலாவைப் புறக்கணித்தார்கள். தஞ்சாவூரில் லக்மே சோப் இல்லை. "உசத்தி சோப் இதுதாம்மா." என்று மைசூர் சந்தன சோப் கொடுத்தாள். பங்கஜம் இதைப் பார்த்துவிட்டு அவளைக் காலையிலிருந்து சந்தன சோப் என்று அழைக்கிறாள்.

"தஞ்சாவூர்ல முன்னல்லாம் தாசிங்க இருப்பாங்களாம். வீட்ல கல்யாணம் நடந்தா காசு கொடுத்து அவங்கள வரவழைச்சு கல்யாணத்துக்கு வர ஆம்பளைங்களுக்கெல்லாம் சந்தனம் தடவச் சொல்லுவாங்களாம். உம்மேலே சந்தன சோப் வாசனையடிச்ச உடனே" எனக்கு தாசி ஞாபகம் வந்தது." பங்கஜம் கதை விட்டாள். மற்ற மூவரும் அவள் எதிரில், தாம் தித்தாம் என்று ஆடினார்கள். மீனாட்சியும் இந்த கேலியில் கலந்து கொண்டாள். கேலி செய்துவிட்டு "ஆல் இன் த கேம்." என்று சொன்னாள்.

மீனாட்சியை மீற முடியவில்லை. நிர்மலாவுக்குள் இந்த கேலி உறுத்திக் கொண்டேயிருந்தது. தஞ்சாவூருக்கு வந்தோமா, கோவிலுக்குப் போனோமா என்றில்லாமல் எவளோ பழைய ஸ்நேகிதி என்று விஜயலட்சுமி வீட்டிற்கு வந்ததும்



நிர்மலாவுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு சந்துக்குள், சிறிய ஓட்டு வீட்டுக்குள் புழுங்கிக் கிடப்பது வெறுப்பாய் இருந்தது. அந்த விஜயலட்சுமி எம்.ஏ. கணிதமாம். பார்க்க மாமி மாதிரியிருக்கிறாள். சுமாராய் ஆங்கிலம் பேசினாலும் நிறைய கட்டுப் பெட்டித்தனங்களிலிருந்தது.

"இது எங்கப்பா, இது எங்கம்மா." என்று வயதானவர்களை விஜயலட்சுமி அறிமுகம் செய்ததும், மீனா திசை கேட்டு காலில் விழுந்து நமஸ்கரித்தாள். மீனா காலில் விழுந்ததும் எல்லா பெண்களும் காலில் விழுந்தார்கள். நிர்மலா கூடத்திலிருக்கிற போட்டோக்களைப் பார்ப்பது போல நகர்ந்து விட்டாள்.

"நீங்க நமஸ்காரம் பண்ணலியா." என்று விஜயலட்சுமி கூப்பிட்டு நமஸ்காரம் பண்ண வைத்ததுதான் கொடுமை. வயதானால் என்ன. அதற்காகக் காலில் விழவேண்டுமா என்று எவளும் சிந்திக்கவில்லை.

"உங்க மேல ஏதோ ஜம்ன்னு வாசனை வருதே." விஜயலட்சுமி கேட்டதற்கு எல்லாப் பெண்களும் வாய்விட்டு சிரித்தார்கள்.

"ஹோட்டல்ல சந்தனம் ஓசில கிடைச்சது. அப்படியே உள்ளங்கையில் ஊத்தி உடம்பெல்லாம் தேய்ச்சண்டுட்டா." என்று கேலி செய்தார்கள். வெளியார் இடத்திலிருந்து தன்னைக் கேலி செய்தது நிர்மலாவுக்குப் பிடிக்கவில்லை. ஊருக்குத் திரும்புவதற்குள் குறைந்த பட்சம் பானுவையாவது அழவைத்து விடவேண்டும் என்ற ஆசை நிர்மலாவுக்கு வந்தது.

பானுவிற்கு அவள் மோதிரத்தை இடது கைக்கும், வலது கைக்கும் மாற்றி மாற்றிப் போட்டுக் கொள்ளும் வழக்கமிருந்தது.

"இந்த மாதிரி பண்ணாத பானு." மீனாட்சி இரண்டு முறை எச்சரித்தும் இடது கையிலிருந்து வலது கைக்கும், வலது கையிலிருந்து இடது கைக்கும் மாற்றிப் போட்டுக் கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை.

"உனக்கு எதுக்கு மோதிரம், கொண்டா." என்று பங்கஜம் அந்த மோதிரத்தைப் பிடுங்கி தன் கைப்பையில் போட்டுக் கொண்டாள். "வெல்டன்," என்று அதை மீனாட்சி பாராட்டினாள். விஜயலட்சுமி வீட்டில், கேசரியும், போண்டாவும் கொடுத்தார்கள். இரண்டே இரண்டு ஸ்பூன்கள் தான்

திருக்கிறதென்று மீனாட்சி கொண்டும், தாய்மாரிடமு கொண்டும் கொடுத்தார்கள். நிர்மலா ஒழுங்கில்லாமல் எப்படி சமாளித்தது என்று தவிக்க மீனாட்சி தன் விழுந்த நிர்மலாவுக்குக் கொடுத்து விட்டாள். கை கூடிய பட்டையால் எல்லா பெண்களும் விஜயலட்சுமி யுடன் கொல்லைப்புறம் போனபோது தரையில் கிடந்த பக்கத்தின் பையிலிருந்து சட்டென்று நிர்மலா மோதிரத்தை எடுத்து தன் பையில் போட்டுக் கொண்டாள்.

அந்த மோதிரத்தை விஜயலட்சுமி வீட்டு பீரோவுக்குக் கீழ் போட்டு விடலாமா, வெளியே எங்கேயாவது சாக்கடையில் போட்டு விடலாமா, அல்லது வேறு யார் பையிலாவது போட்டு விட லாமா என்று தீவிரமாய் யோசித்தாள். மறுபடி எல் லாப் பெண்களும் கூடத்திற்கு வரும்போது வேட்டி யும், அரைக்கைச் சட்டையுமாய் ஒரு பையன் வந்தான்.

"நாம் ஆடிய அவனுக்கு." என்று விஜயலட்சுமி மறுபடி மறுபடி கத்தினாள்.

"மாதவன் தஞ்சாவூர் கோவில் பத்தி நிறைய சொல்வான்."

எல்லோரும் செருப்பு போடும்போது அவன் வெறுங்காலுடன் நிற்பதை நிர்மலா கவனித்தாள். இவன் பையில் மோதிரத்தைப் போட்டாலென்ன என்று நிர்மலாவுக்கு யோசனை வந்தது. செருப் பின்றி வேட்டியுடன் நிற்கும் அவனை உற்றுப் பார்த்தாள். அந்த மாதவன் அவள் பார்வைக்கு வெட்கப்பட்டான்.

தஞ்சாவூர் தெருக்கள் வழியே அந்த கும்பல் நடந்து போனபோது ஊர் முழுவதும் அவர்களை 'ஹா' என்று வியந்து பார்ப்பது தெரிந்தது.

"தஞ்சாவூர் கோவில விசேஷம் என்ன, உங்களுக்கு ஏதாவது தெரியுமா."

அந்தப் பையன் கோவில் வாசலில் நிறுத்தி அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"கோபுரத்து நிழல் தரைல விழாது."

"விழும்."

அந்தப் பையன் பதில் சொன்னான்.

"ஒரே கல்லாலான நந்தி."

"சரி. ஆனா அது ராஜராஜன் காலத்து நந்தி யில்லை. பின்னால் வந்த தெலுங்கு மன்னர்கள் வச்சது."

"கோபுரத்துக்கு மேல ஒரே கல்லாலான



உருண்டை."

"அது கோபுரமில்லை, விமானம். அது ஒரே கல் இல்லை, துண்டு ஒட்ட வச்சிருக்கு. அப்புறம்."

## 4

ஒரு கோட்டையைத் தாண்டி கோவிலுக்குள் போக வேண்டியிருந் தது. கோவிலின் முதல் கோபுரத்து முற்றம் ஒரு இனம் புரியாத பரவசத் தைக் கொடுத்தது. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம்-பல கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை, நாகரீக மாற்றத்தை பார்த்த சரித்திரம் என்று அங்கே எல்லோருக்குமே தோன்றியது. "இது முதல் சுற்று. முதல் கோபுரம் இந்த வாசலுக்கு கேரளாந்தகன் வாயில் என்று பெயர். கேரளர்களுக்கு அந்தகன் என்று இது பிரிக்கப்பட வேண்டும்."

"அந்தகன்னா குருடாச்சே. ராஜராஜன் குருடனா."

"இல்லை. அந்தகன் என்றால் யமன் என்று அர்த்தம்."

"அப்ப யமனைக் குருடன்னு சொல்றீங்களா."

"உண்மை." கேள்வி கேட்டவளைப் பார்த்து மாதவன் லேசாய் சிரித்தான்.

"ஏன்." இன்னொரு பெண் கேள்வி கேட்டாள்.

"யமன் குருடன்தான். நல்லவர், கெட்டவர், சிறியவர், பெரியவர், ஆண்கள், பெண்கள், படித்தவர், பாமரர், உங்களைப் போன்ற அழகியர், என்னைப் போன்ற அவலட்சணமுடையவர் போன்ற எந்த பாகுபாடுமின்றி எல்லோரையும் ஈவு இரக்கமின்றி கவர்ந்து செல்வதால் யமன் அந்தகன் எனப்பட் டான். ஆஹா.. அழகிய சிறு குழந்தை என்று அவன் இரக்கப்படுவதேயில்லை. புத்திசாலியான அழகி என்று அவன் தோற்றம் வைத்து எடை போடு வதில்லை. மனிதர்களாகிய நாம் தோற்றத்தைத் தான் முதல் விஷயமாகக் கொள்கிறோம். நல்லவனா தெரியறான், கெட்டவனா தெரியறான் என்று பாகுபடுத்தறோம். யமனுக்கு எந்தப் பாகுபாடும் இல்லை. அவனுக்கு கண்ணும் குருடு. கருத்தும் குருடு."

"ஐயோ, இந்தப் பேச்சு போதுமே. கோவிலுக் குள்ள நுழைஞ்சவுடனே யமனைப் பத்தி பேச ணுமா." வாழ ஆசைப்பட்ட எவளோ ஒருத்தி மாதவன் பேச்சை குறுக்கே புகுந்து தடுத்தாள்.

இங்கிருந்து தெரிகிறதே அபிடேக வாயில் அபிடேக கோபுரம். அதாவது ராஜராஜன் திருவாயில் என்ற பெயர். அந்த இரண்டாவது பிரகாரத்தை சுற்றி திருச்சுற்று மதிலும், திருச்சுற்று மாளிகையும், ராஜராஜன் ஆணைப்படி அவன் சேனாதிபதி கிருஷ்ணன்ராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன் என்பவர் கட்டினார்.

"ராஜா கோயில் கட்டினா சேனாதிபதி மதிலை கட்டினான்."

"ஆமாம். ராஜராஜன் மட்டுமே கட்டிய கோயில் இல்லை இது. பல்வேறு நபர்களின் பங்கு இக்கோயில் கட்டுவதில் இருக்கிறது. அவர்கள் பங்கு என்ன என்பது பற்றி விரிவாய் சாசனமாய் கல்வெட்டாய் இருக்கிறது."

"ராஜராஜன் என்னென்ன கட்டினான் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. கோயிலுக்குள் போவதற்குள் மிகச்சுவையான விஷயம் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்." இனிமையான ஆங்கிலத்தில் சொல்லியபடி, மாதவன் முதல் சுற்றில் பிரித்து வைக்கப்பட்டிருந்த வேலியைப் பிரித்து உள்ளே நுழைந்தான். மறுபக்கம் போனான். பெண்கள் பின் தொடர்ந்தார்கள். இடது பக்கமாய் சுற்றிக் கொண்டு மெயின் வாசலுக்கு வந்தான்.

"எங்கடி கூட்டிண்டு போறது இது." பின்னால் வந்தவர்கள் பேசுவது கருங்கல் மதில் சுவரில் பட்டு தெளிவாய் கேட்டது. இடது பக்கம் நீள மதில் சுவர் வர வலது பக்கம் வேலிக்காத்தானும் கற்றாழையும் முளைத்திருக்க, ஒற்றையடிப் பாதையில் வரிசையாய் நின்றிருந்தது.

"வழி முழுக்க அசிங்கம் பண்ணி வச்சிருக்கு. அவனுக்கு வேணும்னா போகட்டுமே. நம்மை எதுக்கு படுத்தறான்."

"இங்க என்ன இருக்கு."

கிட்டத்தட்ட மதில் சுவரின் முடிவில் ஏழடிக்கு ஐந்தடிக்கு வாசலுக்கு அருகே மாதவன் நின்றான். "இந்த மேற்குப் புறவாசலை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். இரண்டு புறமும் சாமரம் வைத்திருக்கிற பெண்ணுருவங்கள், வாசல் படியின் உச்சியில் பூரண கலசம். இரண்டு பக்கம் உள்ளே சித்திர வேலைப்பாடுகள்.

இது வடக்கு வாசல். இதற்கு நேராக இருக்கும் தெற்கத்தி வாசல் சாதாரணமாக இருக்கும். மேற்கே வாயில் இல்லை, கிழக்கே ராஜகோபுரங்கள்."



"இந்த வாசல் மட்டும் அலங்காரமாக இருக்கக் காரணம் என்ன."

"ராணி போற வாசலா இருக்கும்."

"இல்லை."

"ராஜாவும், ராணியும் ஒரே வாசல்லதான் வருவா. இது மந்திரி போற வாசல்."

"இல்லை."

"பொதுமக்கள் வாசல்."

"இல்லை."

"அந்தணர்கள் போற வாசலாக இருக்கலாமா. பூரண கலசம் போட்டிருக்கே."

"தவறு. இது தாசிகள் போகும் வாசல்."

"பாரு." பெண்கள் முகம் சுருக்கினார்கள்.

"இந்தப் பக்கம் வாருங்கள். கல்வெட்டு இங்கிருந்து ஆரம்பிக்கிறது. இந்த இடத்திலிருந்து என் கைவிரலைப் பின்பற்றி படிக்க முயற்சி செய்யுங்கள்.

ஸ்ரீ ராஜராஜதேவ உடையார் தளிச்சேரி பெண்டுகளாக சோழ மண்டலத்து தளிச்சேரியிலிருந்து கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரி பெண்டுகளுக்கு, நிவந்தமாக பங்கு செய்தபடி பங்கு வழி பங்கு ஒன்றினால் நில வேலியினால் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நெல்லு நூறு கலமாகவும்..

உங்களுக்குப் புரிகிறதா."

பெண்கள் உதடு பிதுக்கினார்கள்.

"வெளி ஊரிலிருந்து தளிச்சேரி பெண்டுகளை அதாவது நடனப் பெண்டுகளை வரவழைத்து கோயிலுக்கு அருகே குடியமர்த்தி அவர்களுக்கு வீடு கொடுத்து, வீட்டுக்கு எண் கொடுத்து, ஒவ்வொருவருக்கும் வருடத்துக்கு நூறு கலம் நெல், அரசாங்கம் சம்பளமாகக் கொடுத்து, கோவிலில் நடனமாட நியமித்தான். இங்க படிக்கிறேன் பாருங்க.."

"தெற்கு தளிச்சேரி தென் சிறகு தலைவீடு, திருவையாறு ஒலிக்க மஹாதேவி நக்கன் சேரமங்கை, மங்கைக்கு பங்கு ஒன்றும் இரண்டாம் வீடு இத்தளி நக்கன் இரணமுகராமிக்கு பங்கு ஒன்றும்.."

நிதானமாய் மாதவன் எழுத்துகூட்டி படித்துக் கொண்டு போனான். நடனப் பெண்களின் பெயர் தெரிந்து கொள்ள இந்தப் பெண்கள் ஆசைப் பட்டார்கள்.

"ராஜ ராஜி. அருள்மொழி, ராஜகேசரி, குந்தவை

கன்னரதேவி." போன்ற பெயர்கள் வந்தபோது சிருங்காரமாய் அபிநயம் பிடித்தார்கள்."

"எடுத்த பாதம், பவளக் குன்றம், மழலைச் சிலம்பு" என்று வித்தியாசமான பெயர்கள் வந்தபோது மெல்லியதாய் கேலி செய்தார்கள்.

"எச்ச மண்டை, குப்பை" என்று மாதவன் பெயர்கள் படிக்க வாய் விட்டுச் சிரித்தார்கள். நிறைய பெயர்கள் படித்துவிட்டுத் திரும்பினார்கள். இரண்டாவது கோபுரம் தாண்டி விமானத்தைப் பார்த்து வியந்தார்கள். பலகைப் பலகையாய் கட்டப்பட்ட கோபுரம் அது. வெளியே சதுரமாகவும், உள்ளே வட்டமாகவும், அந்த வட்டம் உள்ளுக்குள் சிறுத்துப் போயும், மேரு என்கிற எந்திர வடிவாகவும் இந்த விமானம் இருக்கிறது. வெளியே சதுரம். உள்ளே வட்டம். ஒரு பலகை ஒரு அங்குலம். அதிகமாக செதுக்கப்பட்டிருந்தாலும் கோபுரம் கோணலாகப் போயிருக்கும். நூலிழை தவறாத கணக்கு. சோழ சாம்ராஜ்யத்தில் கட்டிடக் கணிதம் உன்னத நிலையை அடைந்திருக்கிறது என்பதை இந்த விமானம் காட்டுகிறது.

மாதவன் ஓரம் வைக்கப்பட்டிருந்த சோழ கால நந்தியைக் காட்டினான். இதே அளவு நந்திதான் கோபுரத்தின் எட்டு மூலைகளிலும் வைக்கப் பட்டிருந்ததைக் காட்டினான். ஓரம் வைக்கப் பட்டிருந்த நந்தி அங்கிருந்த எல்லா நந்தியையும் விட உயரமாய் இருந்தது. கட்டிப் பிடிக்க முடியாத அகலத்தோடு இருந்தது. கீழுள்ள நந்தியின் உயரம்தான் மேல் உள்ள நந்தியின் உயரம் என்பது நம்ப முடியாததாக இருந்தது.

"இப்போது ஏறுகிறோமே இந்தப் படிகள்.. இது திருஅனுக்கன் வாயில் என்று பெயர்." மண்டபங்கள் தாண்டி இருட்டுக் கருவறைக்கு அடியே போய் நான்கு ஆள் உயர லிங்க ரூபமான பிரகதீஸ்வரரை பெண்கள் கும்பிட்டார்கள். அவர்களை ஓரிடத்தில் நிற்க வைத்து ஓடிப் போய் மாதவன் யாரிடமோ பேசி கோபுரத்தின் மேல் சுற்றுக்குப் போக அனுமதி வாங்கி வந்தான். முதல் சுற்றில் உள்ள நடன சிற்பங்களைக் காட்டினான். படியேறி இரண்டாம் சுற்றுக்குப் போனார்கள். விளக்கு வெளிச்சத்தில் தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த ஓவியங்களை கோமணமும், கோட்டும் போட்டுக் கொண்டிருக்கிற போர் வீரர்கள், நகைகளை மட்டும் உடையாய் கொண்ட நாட்டிய பெண். இடுப்பில்



பூப்போட்ட பாவடையும், மேலே ஒரு துண்டு மட்டும் அணிந்து கொண்டிருக்கிற அரசிகள்.

இடையே துண்டு மட்டும் அணிந்து தாடியும், மீசையும், கொண்டையுமாய் உள்ள ராஜராஜனை வியப்புடன் பார்த்தார்கள். "ராஜான்னா சினிமாவுல பளபளன்னு வருது.. டைட் பேண்ட் போட்டுண்டு ஜிகினா சட்டை மாட்டிண்டு சிவாஜி, எம்.ஜி.ஆர். வராங்க."

"அது பொய்" மாதவன் தீர்மானமாய் சொன்னான்.

"எது பொய்." ஒரு பெண் கேட்டாள்.

"சினிமா பொய். இதுதான் டிரஸ். ரவிக்கை இல்லை. கச்சு என்பதைக் குல மகளிர் அணிவதில்லை."

"பிரஸ்ட் ஓபனா இருக்கே, சார்."

"அப்படித்தான் இருந்தது மேடம். அதுக்கு யாரும் வெட்கப்படலை."

"கடவுளே.." பெண்கள் வியந்தார்கள். கொஞ்சம் வெட்கப்பட்டார்கள். "ராஜாவைப் பத்தின இமேஜே போயிடுத்து." என்று ஒரு பெண் வேதனைப்பட்டாள்.

குதிரை ஏறி கைலாயம் போன நாயன்மார் கதையை மாதவன் சொல்லக் கேட்டார்கள். விளக்குகள் அணைக்கப்பட இருட்டில் தட்டுத் தடுமாறி இறங்கினார்கள்.

நிர்மலா, மாதவன் கீழிறங்கக் காத்திருந்தாள். அவன் இறங்கி பின் தொடர்ந்தாள். கைப்பை யிலிருந்த மோதிரம் எடுத்து படியிறங்கியவன் தோள் வழியே அவன் பைக்குள் போட்டாள்.

அவர்கள் வெளிச்சத்துக்கு வந்தார்கள். கோவிலின் மற்ற இடங்களை அவன் சுற்றிக் காட்ட வியப்புடன் பார்த்தார்கள்.

"இவை ராஜராஜன் காலத்துக்குப் பிறகு கட்டிய கோயில்கள்" என்று உள்ளே இருந்த முருகன் சன்னதியைக் காட்ட அங்கு வெறியோடு ஓடும் கல் யானையின் சிலையைப் பார்த்தார்கள்.

"மேடம், ஒரு நூறு ரூபா கொடுங்க. பியூனுக்குக் கொடுக்கணும்."

"நூறு ரூபா ஜாஸ்தியில்லை."

பானு கேட்டாள்.

"இல்லீங்க, வேறு யாரும் மாடிக்கு போய் ஓவியத்தை, சிற்பத்தை பார்க்கவே முடியாது. உங்களுக்குன்னு ஸ்பெஷலா பர்மிஷன் வாங்கிட்டு

“...” என்று ... ஒற்றைத்தாள் கொடுக்க மாதவனிடம் நூறு ரூபாய் ... மாதவன் பைக்குள் ரூபாய் நோட்டை ... மாதவன் ... மோதிரத்தை சொருக மோதிரம் இடித்தது. மோதிரத்தை கைக்குள் விரல் விட்டு மாதவன் எடுத்தான்.

“இதென்ன மோதிரம், என் பையில இருக்கு.” வெருளியாய் எல்லோர் முன்னிலையிலும் எடுத்து வியப்பாய் பார்த்தான்.

நிர்மலா இருண்டாள். மற்றவர் முகங்கள் பிரகாசித்தன. சட்டென்று அந்தப் பிரகாசம் அடங்கி இதெப்படி உங்கிட்டே என்கிற கூர்மையான பார்வை பார்த்தன.

மாதவன் அந்தக் கூர்மையான பார்வைகளைப் பார்த்தும் வியப்படங்காமல் நின்று கொண்டிருந்தான்.

“ஏய் இவனே... இது உன் மோதிரமில்லை. மிஸ்டர், இதெப்படி உங்கிட்ட வந்தது.” நிர்மலா நாடகம் துவங்கினாள்.

இப்போது மெல்ல மாதவன் முகம் இருண்டது.

## 5

இத்தனை வெளிப்படையாய் அந்தப் பையன் மாதவன் மோதி ரத்தை எடுத்து எல்லோர் முன்னிலை யிலும், ‘இது எப்படி வந்தது. இது எப்படி என் பையில் வந்தது’ என்று நீட்டுவானென நிர்மலா எதிர்பார்க்கவில்லை.

“பங்கஜம் நீதானே என் மோதிரத்தை வாங்கினே. அது என் மோதிரம் மாதிரியிருக்கு.”

“ஆமா. நான்தான்.” பங்கஜம் சட்டென்று பர்ஸ் திறந்து பார்த்துவிட்டு, ‘இதுல மோதிரம் இல்லை’ மொத்த பர்ஸையும் பங்கஜம் கவிழ்க்க, ரூபாய் நோட்டுகள், சில்லரை காசுகள், ரூப்ஸோ பென்சில், அவள் அப்பாவின் விஸிட்டிங் கார்ட், கைக்குட்டை, மடிச்ச பேப்பர் என்று கொட்டியது. பெண்கள் கூட்டம் விபரம் புரியாமல் நிற்க, மாதவன் கீழே விழுந்தவைகளைப் பொறுக்கி மோதிரத்துடன் பங்கஜத்திடம் நீட்டினான். மோதிரத்தை வாங்கிக் கொள்ளவா வேண்டாமா என்று பங்கஜம் தவிக்க, “இந்த மோதிரம் என்னுடையது மிஸ்டர் மாதவன். நான் கழட்டி கழட்டி போடறேன்னு பங்கஜம்தான் வாங்கி வச்சா. பங்கஜம் நீ மறந்து போய் உன் விரல்ல போட்டுண்டிருப்பே. நம்ம இருட்டுல



பெயிண்டிங்ஸ் பார்த்துக்கிட்டிருந்தபோது எப்படியோ நழுவி அவர் பையில விழுந்திருக்கும்.” பானு ஏதோ சொல்லி சமாளித்தாள். பங்கஜம் அவனை விநோதமாகப் பார்த்தாள்.

“அதெப்படி என் பையில் நழுவி விழும் மேடம்.” மாதவன் மறுபடியும் வெருளியாய் கேட்டான்.

“வேற எப்படியும் சான்ஸ் இல்லை மிஸ்டர் மாதவன்.” மீனாட்சி குறுக்கிட்டுச் சொன்னாள்.

“யாரோ எடுத்து என் பையில போட்டிருக்கணும். டெலிபரேட்டா இதை செய்திருக்கணும்.”

மாதவன் முகத்தில் பயமும் கலவரமும் கலந்து நின்றன.

“சேச்சே... எங்க குருப்ல இருக்கிறவங்களெல்லாம் அப்படி விளையாட மாட்டாங்க. எனிவே மோதிரம் கிடைச்சுடுச்சு. எங்கிட்ட குடுத்துடுங்க.” வாங்கி பானு தன் கையில் மாட்டிக் கொண்டாள். அந்தப் பெண்கள் கூட்டம் அமைதியாய், தனித்தனியே குழம்பிய நினைவுகளுடன் ‘பெரிய’ கோவிலை விட்டு வெளியே வந்தது. எல்லோர் மனதிலும் ஒரு இனம் தெரியாத வேதனை இருந்தது. பங்கஜம்தான் அதிகம் ஆடிப்போயிருந்தாள்.

“ஐயம் ஸாரி பானு. ரொம்ப ஜாக்கிரதையா என் பர்ஸில வச்சேன்.”

“ஒழிஞ்சு போறதுடீ. விடுறி. மோதிரம் கிடைச்ச பிறகு என்ன பேச்சு.”

“மோதிரம் இல்லாத போயிருந்தா எங்க வீட்ல கொன்னுட்டிருப்பாங்க.” பானு முகம் வாட்டமடைந் திருந்தது.

“அதே மாதிரி இன்னொரு மோதிரம் நான் வாங்கிக் கொடுத்துட்டு போறேன். அதுக்கும் போயி என் மூஞ்சிய தூக்கிட்டு வரே.”

“அந்தப் பையன் எடுத்திருப்பான்னு நினைக்கிறாயா.”

எல்லோருக்கும் பின்னால் தலைகுனிந்து வருகிற மாதவனைச் சுட்டிக்காட்டி பங்கஜம் மீனாட்சியைக் கேட்டாள்.

“பர்ஸ்ல வச்சத எடுக்கற பையனா பாக்கட்லேர்ந்து மோதிரத்தை எடுத்து நீட்டுவான். அவன் எடுக்கலை.”

நிர்மலாவுக்கு அவர்கள் பேச்சு சின்ன பயத்தை கொடுத்தது.

“அப்படி சொல்லாதடீ. நீங்க கையலம்பும்போது அந்தப் பையன் நடு கூடத்திலே உட்கார்ந்துட

கிருக்கான். ஒரு வேளை பங்கஜம் பர்ஸை அவன் திறந்திருக்கலாம்."

"அப்ப ஏன் இத யாருதுன்னு நடு கோவில்ல காட்டறான்."

"திருட்ல நான் அவன் மேல முட்டிண்டேன். திடீர்னு முழங்கையில ஏதோ இடிச்சது. என்னது 'நச்'னு முழங்கையில வச்சிருக்கீங்கன்னு கேட்டேன். பாக்கெட்ல கல்லா வச்சிருக்கீங்கன்னு கேட்டேன். ஒண்ணும் இல்லேன்னுட்டான். நான் கண்டுபிடிச்சுட்டேன்ற பயத்துல ரொம்ப இன்னஸெண்ட்டா நீட்டியிருக்கலாம்." நிர்மலா பேச்சின் போக்கை வேறு வகையாய் மாற்ற பொய்களோடு விளையாடினாள். எல்லோரும் அவளைக் கூர்மையாகப் பார்த்தனர்.

"வேணாம், இத்தோட விடுங்க, இப்படி நாம பேசறது தெரிஞ்சா விஜயலட்சுமிக்கு கஷ்டமா இருக்கும். அந்தப் பையன் இன்னஸெண்ட்ன்னு எனக்குத் தோன்றது."

"யாரு இப்படி பண்ணினான்னு கண்டுபிடிக்க வேண்டாமா." நிர்மலாவின் கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

"தொலைஞ்ச போனாத்தானே கண்டுபிடிக்கணும். மோதிரம் கிடைச்சுடுச்சில்ல. அப்புறம் எதுக்கு, என்ன கண்டு பிடிக்கணும்." மீனாட்சி அதட்டலுடன் சீறினாள். அவளுக்கு ஏனோ நிர்மலாவின் மீது சந்தேகம் வந்தது. ஆனால் அதை வெளிக்காட்டும் நேரம் இது இல்லை என்றும் தோன்றியது.

"அந்தப் பையன் இத்தோட கட் பண்ணிடுவோம்மா."

"முடியாது நிர்மலா. அதுவும் சந்தேகம் வரும். அவன் மேல சந்தேகப்பட்டா விஜயலட்சுமிக்குக் கஷ்டமா இருக்கும். இதை சப்ஜாடா எல்லோரும் மறந்திருங்க. பசிக்குது. மாதவனையும், விஜயலட்சுமியையும் லன்ச்சுக்கு கூப்பிடுங்க. நம்மோட சாப்பிடட்டும். சட்டுன்னு எல்லாத்தையும் மறந்துட்டு ஜாலியாயிடணும். இது என் ஆர்டர், வேன்ல ஏறுங்கடி."

பூங்கொத்தை நெருக்கிக் கட்டினாற் மாதிரி அந்தப் பெண்கள் வேனில் ஏறிக் கொண்டார்கள்.

"மாதவன் உங்களுக்கு பெரிய கோவில் மட்டும்தான் தெரியுமா, இல்ல எல்லா கோவில் கல்வெட்டும் படிப்பீங்களா."

"வேற கோவிலும் தெரியுங்க. ஆனா, அதெல்லாம் இங்க இல்லை. கும்பகோணத்துக்கு கிட்டதான் நிறைய கோவில் இருக்கு. அங்க விதவிதமான கல்வெட்டெல்லாம் இருக்கு."

"நீங்க ஹிஸ்டரி ஸ்டுடண்ட்டா."

"இல்லீங்க பாட்டனி."

"இவ்வளவு அழகா கோவில் பத்தி சொல்றீங்க. அதெப்படி."

"எங்கப்பா கத்துக் கொடுத்தார்."

"அவரு ஹிஸ்டரி புரொபஸரா."

"இல்ல மேடம், புரோகிதம்."

"அப்படியா, அவருக்கு உங்களை விட அதிகமா தெரிஞ்சிருக்குமே."

"மாதவன் அப்பா ஒரு ஜீனியஸ். அதேசமயம் ரொம்ப சிலர்வ்ட் டைப். புரோகிதம் தொழில், சில சமயம் எங்க ஹோட்டலுக்கு வந்து அவர் சங்கீதம் பத்தி பேசறத கேட்டிருக்கேன். சுத்திப் பத்துப் பதினைஞ்சு பேரு ஹான்னு வாயைத் திறந்து கேட்டிட்டிருப்பாங்க."

"ஐ வுட் லைக் டு மீட் ஹிம்."

"வாங்க மேடம்." மாதவன் சட்டென்று தன் வீட்டின் வறுமையை மறந்து அவளை வாய் திறந்து கூப்பிட்டான். கூப்பிட்டு முடித்தவுடன் வந்து விடுவாளோ என்று பயந்தான்.

"லன்ச் முடிச்சுட்டு விஜயலட்சுமியை அவ வீட்ல ட்ராப் பண்ணிட்டு அப்படியே உங்க வீட்டுக்கு வரோம். ஒரு அஞ்சு நிமிஷம் உங்கப்பா கூட பேசிட்டு உடனே கிளம்பிடறோம், சரியா."

அவனை தாங்கள் குற்றவாளி என்று கருதவில்லை என்று சந்தோஷப்படுத்துவதற்காக மீனாட்சி வலிய வந்து பேசினாள். அவன் வருத்தப்படின் விஜயலட்சுமி முகம் கறுப்பாள் என்கிற எண்ணத்தில் இருவரையுமே சந்தோஷப்பட வைக்கும் நினைப்பில் குஷால் படுத்தினாள். இந்த பத்துப் பெண்களின் வருகையை தன் வீடு தாங்குமா என்று மாதவன் பயந்தான். தன் அப்பா இந்த வருகையை ரசிப்பாரா என்று கவலைப் பட்டான்.

"இந்த கல்வெட்டுலல்லாம் என்ன தெரியுது. இவங்க ஆட்சி இன்ன விதமா இருந்ததுங்கறத இந்த பேரு வச்சு எப்படி கண்டுபிடிக்க முடியும். ராஜராஜ சோழன் நல்லவங்கறதுக்கு அவன் கொடுத்த தானம்தானே அத்தாட்சி."

"இல்ல மேடம். ரோடு போட்டிருக்கான். நிலத்தை அளந்து சாகுபடி நிலத்துக்கு ஒரு வரி,

சாருபடி இல்லாத நிலத்துக்கு ஒரு வரின்னு பிரிச்சு வச்சிருக்கான். ஆதாரச் சாலை அதாவது ஆஸ்பத்திரி கட்டியிருக்கான். அவன் கோவில் கட்டினதே நிறைய பேருக்கு வேலை கொடுக்கனுங்கறதுதான் என்பது என் அபிப்ராயம்."

ஏதேதோ பேசிக் கொண்டு ஹோட்டலுக்கு வந்தார்கள். சாப்பாட்டு ஹாலுக்குள் வந்தவுடன் மாதவனுக்கு மறுபடியும் பசித்தது.

"இங்க வாங்க, என் பக்கத்துல உட்காருங்க."

மீனாட்சி மாதவனை உட்கார அழைத்தாள்.

"வேண்டாம் மேடம், லேடீஸ் ஒரு பக்கமா உட்காருங்க, நான் இந்த பக்கமா உட்கார்றேன்."

"ஏன் இந்த வரிசையில ஜென்ட்ஸ் உட்காரக் கூடாதா."

"உட்காரலாம். யாராவது பார்த்தா வம்பு."

"யாருக்கு வம்பு."

"மாதவனுக்குத்தான் வம்பு.." விஜயலட்சுமி சிரித்தபடி கூறினாள்.

"ஏன்" மீனாட்சி விழிகள் விரித்தாள்.

"அப்புறம் தஞ்சாவூர்ல தலைகாட்ட முடியுமா. அவன் ஃப்ரெண்ட்ஸ் பார்த்தா வாரிப்பாங்க."

"இதுல வாரிக்கறதுக்கு என்ன இருக்கு."

"இது மெட்ராஸ் இல்லம்மா, இஷ்டத்துக்கு உட்கார்ந்து பேச, தஞ்சாவூர், கன்னா பின்னான்னு கதை கட்டி விட்டுடுவாங்க."

"என்னன்னு."

"மாதவன் லவ் பண்றான்னு."

"லவ் பண்ணினா தப்பா. அப்படியே ஆம்பளையும், பொம்பளையும் பேசினா அது லவ் தானா. ஃப்ரெண்ட் ஷிப்பா இருக்க முடியாதா."

"எங்க ஊர்ல ஆம்பளை, பொம்பளை ஃப்ரெண்ட்ஷிப்பெல்லாம் ஒண்ணும் கிடையாது."

மாதவன் இந்த பேச்சுக்குக் கூட வெட்கப்பட்டு நகர, எதிர்பக்கம் போய் உட்கார, மீனாட்சி எழுந்து போய் அவன் அருகில் உட்கார்ந்து கொண்டாள். பெண்கள் 'ஹே' என்று சிரித்தார்கள். ஹோட்டல் முழுக்க அவர்களைத் திரும்பிப் பார்த்தது.

## 6

"ஏன்னா.. எனக்கு ஸ்பெஷலா ஸ்வீட் வாங்கி தரேளா.." இளம் மனைவியைப் போல் மாதவனைக் கேலிப் பண்ணினாள். மாதவனுக்கு ஒரு அதிர்ச்சியில், வயிறு குழைந்தது. தாங்க



முடியாத சந்தோஷத்திலும், வெட்கத்திலும் காது அடைத்தது. முகம் சிவந்தது.

"மாமி மாமாகிட்ட இன்னும் நெருக்கமா உட்காருங்கோ.." பங்கஜம் உரக்க கத்த, மீனாட்சி அவனுக்கு அருகே இன்னும் நெருக்கமாய் நாற்காலி போட்டுக் கொண்டாள்.

வாழ்க்கையில் இனிமையான பெண் வாசனையை முதன் முதலாய் மாதவன் உணர்ந்தான். உணவு வகைகள் வந்தபோது மீனாட்சி சர்வரைப் பார்த்து, "அவருக்கு முதல்ல பரிமாறிட்டு அப்புறம் எனக்குப் பரிமாறுங்கோ" அதுதான் முறை."

"அப்படியே செய்யறேங்க." சர்வர் மாதவனை உறுத்துப் பார்த்தான். அந்த சர்வருக்கு மாதவனைத் தெரியும். மாதவன் அப்பாவைத் தெரியும்.

"ஒரே ஒரு அப்பளம் போடறேள், இன்னும் ஒரு அப்பளம் போடுங்கோ."

"ஒரு எக்ஸ்ட்ரா அப்பளம் நாப்பத்தைஞ்சு பைசா மேடம்."

"நாப்பத்தைஞ்சு பைசாவா அப்ப நாலு அப்பளம் போடுங்கோ. எங்க ஆத்துக்காரருக்கு அப்பளம்ன்னா ரொம்ப பிடிக்கும்."

சர்வருக்கு மாதவனின் வெட்கமும், மீனாட்சியின் கேலியும் புரிந்து போயிற்று.

"மாதவா உன் காட்ல இன்னிக்கு மழை." என்று உரக்க கூறி விட்டு அப்பளம் எடுக்க உள்ளே போனான். உள்ளே வேலை செய்து கொண்டிருந்த சக ஊழியர்களிடம் மாதவன் அதிர்ஷ்டத்தை சுட்டிக் காட்டினான்.

"அவனுக்கு மச்சம்டா.." தள்ளி நின்று சகலமும் கவனித்த ஊழியர்கள் பொறாமைப்பட்டார்கள். மாதவனுக்கு பசித்தது. ஆனால் வேகமாய் சாப்பிட வெட்கமாய் இருந்தது. ரசித்து சாப்பிட வேண்டு மென்ற ஆசை வந்தது. அப்படி சாப்பிடுவதில் ஒரு சங்கடமிருந்தது.

"ஹலோ. யாரங்கே, இன்னும் கொஞ்சம் கோஸ் கொண்டு வாங்க."

வெளி பார்வைக்கு கேலி செய்தாலும் மாதவன் சாப்பிடுகிற வேகம் பார்த்து விட்டு மீனாட்சி லேசாய் அதிர்ந்து போனாள்.

"ரொம்ப பசியா மாதவன்." என்று சாதாரணமாய்க் கேட்டாள். மாதவனுக்கு அந்த

கேள்வி உறுத்தி விட்டது. அவளை திரும்ப வெறிக்க பார்த்தான்.

"ஆமா மேடம். இப்படி குழம்பு, ரசம், மோர்னு சாப்பிட்டு இன்னையோட பதினேழு நாளாச்சு. பதினேழு நாளைக்கு முன்னாடி என் ஃப்ரெண்ட் வீட்ல திவசம். அதுக்கு விஷ்ணு இலைல சாப்பிட உட்கார்ந்தேன். அதுக்குப் பிறகு இப்பதான் அப்படி சாப்பிடறேன். காத்தால ஒண்ணுமே சாப்பிடலை மானு கேட்காதீங்க மேடம். சாப்பிட்டேன். கோவில்ல உருண்டை கட்டி கொடுத்தா. மூனு வாங்கிண்டு வந்து நான், எங்கப்பா, அம்மா ஜலம் விட்டு சாப்பிட்டோம். என் வீட்ல அரிசி இல்லையான்னு கேக்காதீங்க மேடம்.. எங்க வீட்ல அரிசி வைக்கிறதுக்கு பாத்திரம் கூட இல்லை. ஏன் இல்லை அப்படின்னு கேள்வி வருதா. அது தலையெழுத்து. பாத்திரம், பண்டம், நகை, நட்டு, பீரோ, கட்டில் எல்லாத்தையும் வித்து போன மாசம் எங்கக்காவுக்கு கல்யாணம் பண்ணினோம். எங்க வீட்டுக்கு அவசியம் வரணுமா, வந்து எங்க வறுமைய வேடிக்கை பார்க்கணுமா. ப்ளீஸ் நீங்க வராதீங்க மேடம். அது எனக்குக் கஷ்டம், எங்கப்பாவுக்கும் கஷ்டம்." பொத்தல் விழுந்த கோணியிலிருந்து அரிசி பிய்த்துக் கொண்டு கொட்டுவது போல மாதவன் சாதத்தில் தயிர் ஊற்றி பிசைய, மீனாட்சி அவனை விநோதமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். வறுமை என்பதன் ஒரு நுனி அவளுக்கு லேசாய் புலப்பட்டது. அதை முற்றிலும் தெரிந்து கொள்ள விரும்பினாள்.

"நோ ஐயாம் கமிங், நிச்சயம் உங்க வீட்டுக்கு நாங்க எல்லோரும் வரோம்." ஒரு முடிவோடு பேசினாள். அந்த முடிவில் ஒரு கருணையிருந்தது.

ஒரு இருபது வயசுப் பெண் தனது எட்டுத் தோழிகளுடன் ஒரு பையனைத் தேடி அவன் வீட்டுக்கு விருந்தாளியாய் வருவது என்பது தஞ்சாவூரில் அபூர்வம். நாகரிகம் என்பது ஊருக்கு ஊர் மாறும் விஷயம். பம்பாயில் உள்ள பெண் காபி சாப்பிட வருகிறாயா என்று வலிய கேட்பாள். சென்னையிலுள்ள பெண் கூப்பிட்டால் வருவாள். தஞ்சையில் பெயர் சொல்லி அழைத்தாலும் பெண்ணுக்கு கோபம் வரும். சாப்பிட அழைத்தால் கொலையே நடக்கும்.

இவர்களில் எவரும் தவறானவர்கள் இல்லை. யாரும் உசத்தி, மட்டம் இல்லை. அந்தந்த



இடத்தின் சூழ்நிலை அது. தஞ்சாவூர் ஒரு தூங்கும் நகரம். ஒரு காலத்தில் சோழ மன்னர்களின் தலைநகராக கொடி கட்டி வளர்ந்த இடம். சரபோஜி காலத்தில் பட்டணமாய் உருவான இடம். அங்கேயே நின்று விட்டது. நானூறு வருடங்கள் பின் தங்கிவிட்டது. அந்த நகரம் விரிவாவதற்கான சூழ்நிலை இல்லாது சாக்கடை சந்துகளாய் கார் திரும்ப முடியாத குறுகிய தெருக்களாய் இன்னமும் இருக்கிறது. மாறிக் கொண்டே இருக்கிற மரபுகள் அங்கே அதிகம் மாறாது இருந்தன. ஊர் என்பது மக்கள். மக்களுக்கு வேலை வாய்ப்பும், வசதியும் இல்லாதபோது மாறுதலும் இல்லாது போகும். ஏனெனில் மரபு மாறுதல் பொருளாதார மாறுதலோடு சேர்ந்தது. பொருளாதார மாறுதல் அதிகம் அடையாத தஞ்சையின் இளைஞர்கள் மரபு மாறுதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினார்கள். வாரப் பத்திரிகையின் அட்டையில் வரும் ஜீன்ஸ் போட்ட பெண்ணை, நேரில் பார்த்ததும் திகைத்துப் போனார்கள். தமிழ் படத்தில் கலர்கலராய் சிலும்பிக் கொண்டு இங்கிலீஷ் பேசும் ஹீரோயின் போலவே நேரில் எட்டு பெண்கள் வர திகைத்துப் போனார்கள். மாதவன் மீது பொறாமையானார்கள்.

"பெரிய கோவில் காட்டறேன்னு மொத்த குட்டிகளையும் அணைச்சாப்பல கூட்டிட்டு போயிட்டான். ஆறு, மூங்கித்தோப்பு, வெத்தலை கொடுக்கால்னு அந்தப் பொண்ணுங்க பாக்க வந்திருந்தா நானும் பூந்தருப்பேன். பெரிய கோயில் போச்சங்களா.. ஐயோன்னு போயிடுச்சு எனக்கு. அறியாத பொண்ணுங்களா இருந்தா வாய்க்கு வந்தத விட்டிருக்கலாம். அதுங்க கோயில் பத்தி மடக்கி மடக்கி கேக்குதுங்க. தொலைவா நின்னு வெந்துட்டு வந்துட்டேன்."

"பொறந்ததுலேர்ந்து பாக்கறியே. இந்த பெரிய கோயில் பத்தி நாலணா புஸ்தகமாவது வாங்கிப் படிக்கக் கூடாது. உள்ளூர் பொண்ணுங்களை சுத்தறதுக்காக நீங்க கோயிலுக்கு போகறீங்களேகண்டி உருப்படியா ஏதாவது தெரிஞ்சுக்கறீங்களா. சமயத்துக்கு உதவுலில்லே."

"இனிமே தெரிஞ்சுக்கணும்பா. ஆனா நாப்பத்தாறு ரூபா சொல்றான் புஸ்தக விலை. நமக்கு கட்டுப்படியாவுமா. எங்கனா லைப்ரரியில் பிராயணும்."

"சரஸ்வதி மஹால் லைப்ரரியில உன்னைச் சேர்ரா. தூக்கி வெளில போட்டாங்களா இல்லையா. தினம் வந்து தூங்கறேன்னு தூரத்தினாங்களா இல்லையா. நீ லைப்ரரிக்கும் போக முடியாது. வேற எதானா நான் செய்யணும்."

"வேற என்ன செய்யறது."

"மாதவன்கிட்டயே கேட்டுக்கறது."

"செலவு பார்க்காத ரெண்டு இட்லி வடை சாம்பார் வாங்கிக் கொடுத்து கல்லுல எழுதியிருக்கறதெல்லாம் படிச்சு சொல்லுடான்னு கேட்டுக்கறது."

"அப்படித்தான் செய்யணும். மாதவன் பொண்ணுங்களோட ஓட்டலுக்கு போயிட்டான். நாம நாலு பேரும் பேசாத அவங்க வீட்டுக்கு போவோம். அவன் அதுங்களை வேன் ஏத்தி அனுப்பிச்சுட்டு வீட்டுக்கு வருவான். குறைந்த பட்சம் அந்தப் பொண்ணுங்க பேராவது தெரிஞ்சுக்குவம்."

"இன்னும் நாலு ஜென்மத்துக்கு நீ எது பத்தியும் கத்துக்கப் போறதில்லை. சாப்பாட்டுக்கு இல்லாத பையன் அழுக்கு வேட்டி கிழிசல் சட்டைகளோட ஒட்டு மொத்தமா தள்ளிக்கிட்டு போயிட்டான். நாம ஜொள்ளு வுட்டுகினு கிடக்கறோம்."

"மாதவன் நல்லா இங்கிலீஷ் பேசறாம்பா."

"அதாவது கத்துக்க."

"ரஜினி பேசற இங்கிலீஷ்தான் நமக்கு. வேற எதுவும் தெரியலையே. பி.காம் இங்கிலீஷ்ல சேர்த்தாங்கன்னு அழுது அடம் புடிச்சு தமிழில சேர்ந்தியே. இப்ப கண்ட பலன். ஜொள்ளு வுடறதுதான்."

"அது சரி. கரந்தை தமிழ் கல்லூரியிலாவது சேர்ந்திருக்கலாம். சுத்திப் பார்க்கற பொண்ணுங்க கிட்ட நாலு கவிதையை விட்டு அசத்தி இருக்கலாம். நமக்கு கொத்தமல்லி வாசனை தவிர வேற கவிதையே தெரியாது. ஒட்டு மொத்தமா நாம பாழா போயிட்டம்னு எனக்கு ஒரு நினைப்பு. அக்கா பொண்ணையும், அத்தைப் பொண்ணையும் கல்யாணம் கட்டி மதியான வெயில்ல க்யூவுல நிக்க வெச்சு சினிமா பாக்கறதோட லைஃப் முடிஞ்சு போச்சு."

"இன்னொரு வாட்டி அந்த மெட்ராஸ் பொண்ணுங்களைப் பார்க்கணுமே. என்ன பண்ணலாம்."



"உடுப்பி ஓட்டல் வாசல்ல பிச்சைக்காரன் மாதிரி உக்காரு. அதத் தவிர வேறு வழி கிடையாது."

"ஓட்டல் உள்ளே போலாம்னா என்கிட்ட ஒரு ரூபா தான் இருக்கு. டீக்குக்கூட பத்தாது."

"சும்மா தண்ணி குடிக்கற மாதிரி போனா.."

"அப்படி போறதுக்கு கல்லு சந்தில முட்டிக்கிட்டு சாவலாம்."

"ஏண்டா."

"அடுத்த ஜென்மத்திலையாவது நான் இஷ்டப்பட்ட பொண்ணுக்கிட்ட இஷ்டப்பட்ட நேரத்துல பேசி சிரிக்கணும்னு வரம் வாங்கத்தான்."

"ஐயோ எனக்கு அந்தப் பொண்ணுங்களைப் பார்க்கணுமே."

"மறந்துரு. மாதவனைப் பார்க்கலாம் வா."

அவர்கள் பொடி நடையாய் புழுதி பறக்கும் சாலைகளூடே நடந்து மாதவன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார்கள். வெய்யிலில் வாடி கசங்கிப் போயிருந்தார்கள். சட்டை முதுகில் ஒட்டி அவர்கள் வியர்வை நாற்றமே அவர்களை வேதனையுறச் செய்தது.

களைப்பாய் சுவரில் சாய்ந்து கண்களை மூடி மனசுக்குள் விதவிதமாய் பாட்டுப் பாடி கனவுகள் நெஞ்சை அரிக்க தூங்கிப் போனார்கள். தமிழ் நாட்டின் மிகப்பெரிய இளைஞர் கூட்டம் அநேகமாய் இப்படித்தான் இருக்கிறது. எந்த ஆற்றலையும் வெளிப்படுத்தாமல் கிடைத்த திண்ணையில் சுருண்டு தூங்குகிறது. கனவுகள் கிளறி, கிளறி கண்களை மறைக்க நிஜம் மறந்து வாழ்கிறது.

வேன் வந்து நின்றது. இறங்கி அத்தனை பெண்களும் மாதவன் வீட்டிற்குள் போனதும் அவர்களுக்குத் தெரியாமல் போயிற்று. வேட்டியும் சட்டையுமாய் திண்ணையில் சுருண்டு தூங்குகிற பையன்களைப் பார்த்தபடியே அந்தப் பெண்கள் உள்ளே போனார்கள்.

முற்றமும் தாழ்வாரமும் பெரிய ஹாலும், வீட்டுக் கூரையும், குனிந்து போக வேண்டிய நிலைப் படியும், விதவிதமாய் ஒலியோடு திறக்கும் மாக்கதவும் அவர்களுக்கு வியப்பாய் இருந்தன.

"இது எங்கப்பா, இது எங்கம்மா." மாதவன் அறிமுகப்படுத்தினான். நெடுநெடு என்று உயரமாய் குடுமியும், தாடியுமாய் நெற்றியில் சந்தனக் கீற்றும் முகத்தில் புன்னகையுமாய் இருந்த அப்பாவைக் கண்டதும் கரம் குவித்து வணங்கினார்கள்.

"பாரு.. விஜயலெஷ்மி. உன் சினேகிதிகளா. ஊர் எதுவோ. தெரியலை. படிச்சிண்டிருக்கேளா. என்ன படிப்பு. காலேஜா. ஊர் சுத்தி பார்க்கணும்னு வந்தேளா. பெரிய கோவில் மட்டும்தான் பார்த்தேளா. சரஸ்வதி மஹால் பாத்திருக்கப்படாதா. ஏண்டா, அங்க இவாளை அழைச்சுண்டு போகப்படாதா. சோழர் காலம்னா தஞ்சை மாவட்டத்தோட கும்பகோணத்துல தான் சான்றுகள் அதிகம். சோழன் மாளிகை, அம்மன்குடி, பட்டீஸ்வரம், நாகேஸ்வரம் கோவில். இன்னும் எத்தனையோ இருக்கு பார்க்க. அதுல தாராசுரம் ரொம்ப முக்கியம். சுண்டு விரல் பாதிக்கு புள்ளையார் பொம்மை செதுக்கி வச்சிருக்கான். கல்லை களிமண் மாதிரி புரட்டிப் புரட்டி பொம்மை அடிச்சிருக்கான். எல்லாத்தையும் விட்டுட்டு இந்தக் கிழவன் வீட்டுக்கு எதுக்கு வந்திருக்கேள். நீங்க சந்தோஷப் படும்படியா ஒண்ணுமில்ல இந்த வீட்ல, ஒரே ஒரு விஷயம் தவிர."

"என்ன அது." பெண்கள் வியந்தார்கள்.

"கொல்லைல காவேரி ஓடறது. குளிக்கலாம், இஷ்டம் இருந்தா."

"ஹை.." என்று பெண்கள் போட்ட கூச்சலில் கூரை ஓடு நகர்ந்து முற்றத்தில் விழுந்து உடைந்தது. எந்த அனுமதியுமில்லாமல் கொல்லைப்பக்கம் ஓடினார்கள். சுழித்து கலங்கலாய் ஓடும் வாய்க்காலைப் பார்த்தார்கள்.

"குளிக்கணும் போல இருக்கு.. குளிக்கணும் போல இருக்குடீ." என்று ஒருவரையொருவர் பார்த்துக் கேட்டுக் கொண்டார்கள். "மாமா.. மாமா.. குளிக்கலாமா." பர்மிஷன் கேட்டார்கள்.

"மாதவா.. அவா குளிக்கட்டும். நீ வாசலுக்கு போ." என்று பையனை அனுப்பிவிட்டு மனைவியையும், பக்கத்து வீட்டு பெண்களையும் துணைக்கு அழைத்து கொல்லையில் இன்னும் குலை தள்ளாத வாழையை வெட்டி தாம்பு கயிறால் கட்டி வாய்க்கால் குறுக்கே போட்டு மாதவன் அப்பா அவர்கள் குளிப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

நெஞ்சில் தெறித்த வாழைக்கறையைத் துடைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தார்.

"வாசல்ல உன் சினேகிதா யாரோ படுத்துக் கிட்டிருக்கா போல இருக்கே."

"ஆமாப்பா. இப்ப எழுப்பினா ஹான்னு கொல்லைப்புறம் போய் நிப்பா.. அப்படியே



கிடக்கட்டும்."

"உனக்குப் போகத் தோணலியோ.."

"இல்லப்பா."

"ஏன்."

மாதவன் பேசாது நின்றான்.

"ஏன்னு கேட்கறேன்! பதில் சொல்லு." அப்பா பிள்ளையைக் கூர்மையாகப் பார்த்தார்.

"மத்தியானம் கொலைப்பசி. இவாதான் ஹோட்டல்ல சாதம் வாங்கிக் கொடுத்தா. ரொம்ப நாளைக்கப்புறம் சந்தோஷமா சாப்பிட்டேன். சாதம் போட்டவாளைத் தப்பா பார்க்கலாமா. தப்பா பார்க்கும்படியா மனசு சஞ்சலப்பட்டா அது எனக்கே கேவலமில்லையா."

ஆனால் பெண் உதவி என்று கூப்பிட்டால் எந்த நேரமாயினும் எந்த இடமாயினும், எப்பேர்ப்பட்ட விரதத்தில் இருந்தாலும் எவ்விதமான சமயத்தில் இருந்தாலும் ஒரு ஆண் உதவிக்கு போக வேண்டும் என்று தர்மசாஸ்திரம் சொல்கிறது. பெண் ஓலமிட கண்டும் காணாது செல்பவன் நரகத்தை அடைவான் என்று சொல்கிறது.

வாய்க்காலின் குறுக்கே போடப்பட்டிருந்த வாழை மரத்தில் வந்து ஏறி அமர்ந்து வாட்டர் ஸ்கூட்டர் என்று கற்பனை பண்ணி "சைக்கிளும் ஓட மண் மேலே.. இரு சக்கரம் சுழல்வதுபோலே.." என்று கல்யாணப்பரிசு பாட்டுப்பாடி மீனாட்சி அந்த தாரில் ஈரம் சொட்ட சொட்ட போட்ட ஆட்டம் தாங்காமல் வாழை புரண்டது. அவள் கனம் அவளைச் சேற்றில் அழுத்தியது. வாய்க்கால் சுழி அவளை இழுத்துக் கொண்டு போயிற்று. எதிர்த்து நீந்தியவளின் கை சோர்ந்து போயிற்று. ஓடும் நீரோடு அடித்துக் கொண்டு போய் மூன்று கொல்லைகள் தாண்டி நான்காவது கொல்லையில் சிரித்து கொண்டிருந்த வேலிக்காத்தானை பயத்தோடு மீனாட்சி அணைத்துக் கொண்டாள். நீர் இறுக்கச் செடியை இறுக்கினாள். முள் செடி அவள் நெஞ்சு முழுவதையும் கிழித்தது. எல்லா பெண்களும் கத்த, அப்பாவும் பிள்ளையும் கொல்லைக்கு ஓடினார்கள். வாசல் பக்கத்து இளைஞர்கள் கூச்சல் கேட்டு விழித்துக் கொண்டு திசை தெரியாமல் தவித்தார்கள்.

மாதவன் ஜாதகம் அன்று நல்ல திசையை நோக்கி மெல்ல திரும்பியது.

## 7

யுத்தம் என்பது சமமான பலம் உள்ள வர்களோடு செய்யப்படுவது. நான் பெண். மெல்லியள். ஆடவனை அண்டி வாழ்பவள். மாமழையே கையாய் மலையைப் பெயர்த்து பாட்டமெடுக்க உனக்கு என்மீது என்ன கோபம். இன்று இப்படி செய்து என் காதலரை வராது போக வைத்து என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாய். நான் பெண். மெல்லியள். யுத்தம் என்பது சமமான பலம் உள்ளவர்களோடு உள்ளவர்களால் செய்யப்படுவது.

துணைப்பாடமாக இருந்த தமிழில் மாதவனுக்கு ஔவையார் பாட்டு பிடித்தமானது. பொழிப்புரையாய் சொல்லப்படும் அர்த்தத்தைத் தாண்டியும் அந்தக் கவிதையில் நிறைய விஷயங்கள் புதைந்து கிடப்பதாய் மாதவனுக்குத் தோன்றும். மனிதன் இயற்கையோடு ஒட்டியவன். அந்த இயற்கை அவனை உசுப்பியும், அடக்கியும் வைத்திருந்தது. வீட்டில் இருக்கிற என்னையே கோடை இப்படி தகிக்கிறதே.. சாலைக்கற்கள் மிகுந்த கொடிய கானகத்தில் பொருள் தேடிப் பிரிந்த என் காதலர் எத்தனை தவிப்பாரோ.. என்று கவிதை பாடிய பெண்ணே, குளிர் மழையைக் கண்டித்து கவிதை பாடுகிறாள்.. மழை வேண்டல் என்று கவிதை பாடுகிறவர்களே மழை வந்த பிறகு ஐயோ.. என்ன மழை என்று அலுத்துக் கொள்கிறார்கள். எந்த ஆற்று நீர் ஆனந்தக் கூத்தாடுமிடமாக இருந்ததோ அதுவே அவலமாகவும் போய்விட்டது. எந்தச்செடி வெய்யிலுக்கு இதமாய் நிழல் தந்ததோ அதுவே நெஞ்சு கீறியும் விட்டது.

கரையிலிருந்து தள்ளிப்பாய்ந்து நாலு எட்டில் மீனாட்சியை அடைந்து ஓட்டத்தை எதிர்த்து கால் அளைந்தபடியே அவள் இடுப்பு பற்றி தன் பக்கம் திருப்பி அப்படியே குப்புறத் தூக்கி முதுகில் சாய்த்து இடது கையால் அவள் தொடைகளை இறுக்கிக் கொண்டு வலது கையால் நீருக்கு எதிரே வீசி நீரின் ஓட்டத்தைக் கிழித்துக் கரையில் கால் இடிக்க அவளை உந்திக் கரையில் போட்டு அவள் மணலில் புரண்டு எழுந்ததும் தன் பலத்தைத் தளரவிட்டு ஆற்றோடு போய் ஒரு வீச்சில் மறுபடி கரையேறி அவள் தடுமாறி உட்கார்ந்த இடத்திலிருந்து பத்தடி தள்ளி கரையில் எகிறி உட்கார்ந்து எங்கும் காயப்படவில்லையே என்று கேட்டபோது இல்லை என்று



அவள் நெஞ்சு மூடிக் கொண்டாள். காயம் பட்டிருப்பது தெரிந்து போயிற்று. மருந்து போட தன்னால் முடியாது. அவளைத் தாண்டி கரையோடு தன் வீட்டுக் கொல்லைப் பக்கம் போய் எதிரே வந்த விஜயலட்சுமியிடம், "நெஞ்சில முள்ளு குத்திருக்கு.. வேலிக்காத்தான் முள் கடுக்கும். ஏதாவது களிம்பு போடணும். வேற எங்காவது காயமிருக்கான்னு பார்க்கணும். கொஞ்சம் பார்த்துரு விஜயலட்சுமி." என்றான்.

கொடிக்கயிறு அவிழ்த்து வாழை மரத்தின் அடியில் சுருக்கு போட்டு கொல்லைப்புறம் நட்டு வைத்த கல்லோடு கட்டினான். 'இப்ப மரம் அசையாது குளிங்கோ' என்று வீட்டுக்குள் புகுந்து கொண்டான். அப்பாவும் பின் தொடர்ந்தார்.

"பயந்துட்டாளா."

"ஆமாம், இழுப்பு வேகமாக இருக்கு. பழக்கமில்லாததால் புரண்டு ஓடிப் போயிட்டா."

"உனக்கு வேற வேட்டி இருக்கோ."

"இல்லை."

"என் வேஷ்டி தரேன்." அப்பா கொடியிலிருந்து தன் மடி வேஷ்டியை இழுத்துக் கொடுத்தார்.

சட்டையும் சுத்தமாய் நனைந்து போய்விட்டது. இப்போது பிழிந்து போட்டாலும் உலர சாயந்தரம் ஆகிவிடும். இவர்கள் உடனே ஹோட்டலுக்குக் கிளம்பினால் போட்டுக் கொள்ள சட்டையில்லை. பெட்டிக்குள் இரண்டு சட்டை இருக்கிறது. ஒன்றில் நாலு பட்டனும் இல்லை. இன்னொன்றில் காலர், கை இரண்டும் கிழிசல். நாலு நாளாய் போட்டுக் கொண்ட ஒரு நல்ல சட்டை துவைக்கப்படாமல் கிடக்கிறது. அவர்கள் கிளம்பி விடுவார்களா தெரியவில்லை. வெளியே கிளம்பினால் கூப்பிடுவார்களா தெரியவில்லை. கூப்பிட்டால் போக முடியுமா என்று தெரியவில்லை. போவதற்குள் பிழிந்து போட்ட இந்த சட்டை காயுமா என்று தெரியவில்லை. இத்தனை அழகான பெண்களோடு, பிழிந்து பாதி உலர்ந்த சட்டையோடு போவது தேவைதானா என்பது புரியவில்லை.

ஔவையார் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார். கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடுமை இளமையில் வறுமை. மாதவனுக்குள்ளே துக்கம் மண்டியது. அவிழ்த்துப் போட, சொத்தென்று தரையில் விழுந்த ஈரச்சட்டையும், தானும் ஒன்று என்று தோன்றியது.

தூக்கத்தில் நனைதச் சொல என்று ஒரு வார்த்தை
... என்ன, என்னிடமிருப்பது
... சரி ... கூட்டு என்ன ... வறுமை கிடைத்தால்
இல்லாததால் ... பட்டம் இல்லாத
... வீட்டுப் போகட்டும் ... இரண்டு குண்டுச் சுத்திக்
... கொண்டு போகலாம்.

'என்ன ... ' என்று யாராவது
கேட்டால், 'ஆமாம்,' என்று அடக்கமாய் பதில்
சொல்லலாம். எதிர்க்கிற போதுதானே வலி. கேலி
செய்பவர்களுக்குக் கொண்டாட்டம். 'ஆமாம்'
என்று ஏற்றுக் கொண்டால், என் வாழ்வு
அப்படித்தான் என்று ஒப்புக் கொண்டுவிட்டால்
என்ன கேலி செய்ய முடியும். மேலும் வறுமையைக்
கேலி செய்ய என்ன இருக்கிறது. வறுமையில்
செம்மை என்னிடம் உண்டு. அவர்களுக்கும்
புரியும். மாதவன் ... கொண்டு, ...
... போல இடைவிடாது யோசனை
பண்ணிக் கொண்டிருந்தான். அவன் ...
... போட்ட. உதறி ...
... வைத்தபோது வாசலிலிருந்து
நண்பர்கள் ... வந்தது. ... பார்த்தான்
... எங்கே போயிருப்பார்கள் என்று
யோசனையுடன் ... உதறிக் ...
போட்டான். கொல்லைப்புறம் போயிருப்பார்களோ
என்று ... அவனுக்கு கொல்லைப் புறம்
போகத் தயக்கமாக இருந்தது. ...
தோளில் போட்டுக் கொண்டு வந்தான். அந்தப்
பெண் மீனாட்சி தன்னைப் பார்க்க வெட்கப்படுமோ
என்கிற கவலை வந்தது.

"கண்ணாம்பு வச்ச சரியாப் போயிடுங்க."
அந்தப் பையன்களில் ஒருவன் சொல்ல, "சரி நாங்க
வச்சுக்கிறோம். நீங்க போங்க." என்று விஜய
லட்சுமி அதட்டினாள்.

"கண்ணாம்பு வச்சிட்டு வாடுங்களா," என்று
அவன் மறுபடி கேட்க, விஜயலட்சுமி அவனை
முறைத்துப் பார்த்தாள். மீனாட்சிக்கு அந்தப்
பையன்களின் பார்வை படும் வேகம் புரிந்தது.
... உடம்பை உற்று உற்றுப்
பார்க்கிற ... கோபம் வந்தது. ...
... உதறக வேண்டும் என்கிற ஆத்திரம்
... ஆனால் உடம்பு இன்னும் உதறிக் கொண்
... காலோ, கையோ ஆட்டவில்லை
... உடம்பு ... இடைவிடாத ...



அதில் நடந்து கொண்டிருந்தது. இது பயம்.
செத்துப் போய் விடுவோமோ என்கிற பயம்.
இரண்டு முறை புரட்டி, நீர் அடியே சொருகிய
போது 'நச்' சென்று புத்தியைத் தாக்கி நடுங்க
வைத்த பயம். காப்பாற்றிக் கரையில் தூக்கிப்
போட்டபோது, உடம்பு உட்கார்ந்து எழுந்தபோது
உள்ளுக்குள்ளே அந்த பயம் விடாது ஆடிக்
கொண்டிருந்தது. செத்துப் போயிருந்தால் என்ன
ஆகியிருக்கும் என்று நடந்ததையே தாத்திக்
கொண்டிருந்தது. பையன்களின் பார்வை தாங்கா
மல் மீனாட்சி உள்ளே போக முடிவு செய்தாள்.
மீனாட்சி உள்ளே வந்ததும் மற்ற பெண்கள்
பின்னே நகர்ந்தனர். அவர்கள் உள்ளே வருவது
கண்டு, அப்பாவும் பின்னையும் வாசலுக்கு
நகர்ந்தார்கள். அவர்கள் அப்படி நகர்வது
மீனாட்சிக்குப் பிடித்திருந்தது. அது தான் அழகான
ஆண்மை என்று தோன்றியது.

பெண் தன் உடம்பு குறித்து பெருமையுள்ளவள்.
அப்படியொரு பெருமை இருப்பதாலேயே அதன்
இகழ்ச்சி குறித்து கவலையும் உள்ளவள். இதனால்
அவ்வுடம்பை காணப்படும் நேரங்கள் வித்தியாசப்
படுகின்றன. பெண் பட்டாம் பூச்சியாகவும், கூட்டுப்
புழுவாகவும் மாறி, மாறி இருப்பவள். கூட்டுப் புழு
நாடிக் கொள்வது இரவில் நாடிக் கொண்டும், பட்டாம்
பூச்சியின் அலையல் போல் ஆட்டம் காட்டியும்
இருப்பவள். அவளின் இந்த இரண்டு குணத்தை
யும் புரிந்து கொள்ள முடியாத போதுதான்
ஆணுக்கு பெண் வியப்பாகிறாள். விசித்திரமாகி
றாள். அவளை அறிந்து கொள்ளும் ஆவலில் மீறிப்
பார்ப்பவனை, 'சீச்சீ' என்று விலக்குகிறாள்.
உன்னை அறிய வேண்டாம் என்று விலகி
நிற்பவனை ஆர்வத்தோடு பார்க்கிறாள். பெண்கள்
ஈர உடையோடு உள்ளே நுழைந்ததும், அப்பாவும்,
பின்னையும் வெளியே போனது அவளுக்கும்
பிடித்திருந்தது. அந்தப் பையன்களும் வீட்டைச்
சுற்றிக் கொண்டு திண்ணைக்கு வந்தார்கள்.
மாதவனை நோக்கி அனுதாபம் புன்னகைப் பார்ப்பது
போல கையசைத்தார்கள்.

"தண்ணியில விழுந்துட்டாங்க போலருக்கு.
நீச்சல் தெரியாது போல. வேலைக்காரதானை
படிக்கட்டுங்க."

"ஆமாம்."

"கண்ணாம்பு வாச்சு சரியா போயிடுச்சு

சொன்னேன், கேட்டுக்கல."

மாதவன் அதற்கு பதில் பேசவில்லை.

"யாரோ வாழைமரம் வெட்டிப் போட்டிருக்காங்க. அதையும் தாண்டி அடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு. இன்னும் கொஞ்சம் தள்ளிப் போயிருந்தாங்கன்னா கண்மாய்ல சொருகிட்டிருப்பாங்க."

"அந்த இடம் சுழல் ஜாஸ்தி."

அந்த பேச்சு பிடிக்காமல் மாதவன் அப்பா போஸ்ட் ஆபீஸ் ஐயர் வீடு நோக்கிப் போனார்.

போஸ்ட் ஆபீஸ் ஐயருக்கு காலில் நிரந்தர புண். வகை வகையான ஆயின்மெண்ட்டுகள் வாங்கி வைத்திருப்பவர். பழைய ட்யூப் ஏதாவது இருந்தால் கூட பிதுக்கி போடச் சொல்லலாம் என்று நினைத்தபடி கடன் வாங்கப் போனார். மாதவன் அப்பா நகரும் வரை காத்திருந்து விட்டு பையன்கள் மாதவனை நோக்கித் திரும்பினார்கள்.

"குடிக்க தாகமா இருக்கு. ஒரு சொம்பு ஜலம் குடேன்."

"தரேன்."

"தரேன்னு நின்னுகிட்டே இருக்கே."

"உள்ளே லேடீஸ் இருக்காங்கள்ள."

"உனக்கு கூச்சமா இருந்தா எங்கிட்ட விட்டுடு. நான் போயி உங்கம்மா கிட்ட வாங்கிட்டு வரேன்."

"இப்ப போகக்கூடாது."

"ஏன்."

"அதுதான் உள்ள லேடீஸ் இருக்காங்கன்னு சொல்றேனே."

"என்ன சரபோஜி வம்சமா. அத்தனை லேடீசும்.. அதுதான் வாழை மட்டையை புடிச்சு கவுந்த நீச்சடிச்சத பார்த்தமே."

மாதவன் இதற்கும் பதில் சொல்லவில்லை.

"உனக்கு சொந்தமா."

"இல்லை.."

"நம்ம விஜயலட்சுமி நிக்குது. அதுக்கு சொந்தமா."

"தெரியாது."

"எங்க புடிச்ச இதுங்கள."

"கோயில் சுத்திக்காட்ட கூப்பிட்டாங்க போனேன்."

"வேற ஏதாவது காட்டுவியா."

"என்ன."

"வேறெதனாகோவில் காட்டுவியான்னு கேக்கறேன்."



"அவங்க புரோகிராம் தெரியலை."

"அந்த மீனாட்சிதான் லீடரா."

"யாரு மீனாட்சி."

"டேய், இது மரியாதையில்லை. என்ன உன் முறை பொண்ணயா முறைச்சு பாக்கறோம். இல்ல உன் அக்கா, தங்கச்சியா, யாரோ மெட்ராஸ் போற பொண்ணுங்க. என்னமோ உங்ககூட மட்டும்தான் பேசுன்ற மாதிரி அலட்றியே."

"கூப்பிட்டு ஓட்டல்ல சோறு போட்டாங்கன்ன, அடுத்த வேளைக்கு நாம பங்குக்கு வந்துடுவோமோன்னு பயப்படறான். அதுங்க நல்லாதாம்பா பேசுது. இவன் என்னமோ அடைக்கோழி மாதிரி கொத்தறான்."

"மெட்ராஸ்ல எங்கேயாம்."

"தெரியாது."

"படிக்கற பொண்ணுங்க மாதிரி இருக்கு."

"இருக்கும்."

"எங்களோட சேர்ந்து நீயும் தானே பால் குடம் தூக்கற பொண்ணுங்கள டாவடிக்கற. பால குடத்துக்கு ஊர்வலமாப் போற பொண்ணுங்கள டாவடிச்சே.. இப்ப பிரிச்சு பேசறியே. நாங்க மடக்க முடியாதா அந்தப் பொண்ணுங்கள.."

"போற போது வேணைப் பார்த்து ரெண்டு கல்லுவிட்டம்னா கதை கந்தர கோலம் ஆயிடும். நாங்க என்ன குடிக்கத் தண்ணிதானே கேட்டோம். உன் சாப்பாட்டுக்கா வந்து நின்னோம். ஆத்தோட போற தண்ணி, நீயும் குடி. நானும் குடி, என்னப்பா சொல்றது."

மாதவன் பேசாது நின்றான். வேனிலிருந்து ஒரு பெட்டியை விஜயலட்சுமி எடுத்துக் கொண்டு போகும்போது மிரித்துக் கொண்டிருந்த மாதவனையும், கால்மாற்றிக் கொண்டிருந்த பையன்களையும் உற்றுப் பார்த்தபடி போனாள். விஜயலட்சுமிக்கு தஞ்சாவூர் பையன்கள் அத்துப்படி. அவர்கள் மூர்க்கம் அனுபவ பாடம். எதிலும் எல்லைக் கடக்கவே அவர்கள் பிரயத்தனப்படுவது தெரிந்த விஷயம். மாதவன் அப்பா பழைய மருந்து ட்யூப்புடன் வர, பையன்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். பெண்கள் வீட்டை விட்டு உடை மாற்றிக் கிளம்பிப் போவது தெரிந்து, சரசரவென்று தெருவோடு போனார்கள். மாதவன் இருப்பதா, போவதா என்று தெரியாமல் பயந்தான். உள்ளே போய் பழைய சட்டை அணிந்து கொண்டு, பட்டன்

இல்லாத இடத்தில் இரண்டு சேப்பிடி பின் குத்தி
கொண்டான். அவர்கள் வண்டியேற, முன் பக்க
அமர்ந்துக் கொண்டான். வண்டி உருமி அவர்க
தெரு திரும்பியது. திருப்பத்தில் இரண்டு கற்க
பறந்து வந்தன. முதல் கல் மாதவன் அமர்ந்
பக்கத்து கண்ணாடியைத் தாக்கியது. இரண்டாவ
கல் வேனின் கூரை மீது விழுந்தது. வேன் டிரைவ
வண்டியை நிறுத்திவிட்டு பாய்ந்து ஓடினா
தெருவில் கூட்டம் கூடியது.

# 8

அந்த டிரைவருக்கு இந்த
பெண்கள் கூட்டம் வண்டியி
ஏறியதிலிருந்தே பயம் வந்து விட்ட
கால் தூக்கி உட்காரும் விதத்தாலு
ஒரு வரையொருவர் உந்தித் தள்
விளையாடும் விளையாட்டாலும் வேனி
இருக்கைகள் பாழாகி விடுமோ என்று பயந்தா
கதவை ஓங்கி அறைந்து சாத்துவதை
பார்த்துவிட்டு விளிம்போ, பிடியோ சேதமாகு
என்று பயந்தான்.

அந்தப் பெண்கள் அக்ரஹாரத்து வீட்டுக்
வரும்போது வாசலிலுள்ள பையன்களை
பார்த்துவிட்டு, "இங்கேயும் வந்துட்டானுங்களா
என்று அந்தப் பையன்களைப் பார்த்து வெறு
படைந்தான். அந்த பெண்களின் குலுக்கையு
மினுக்கையும், பையன்களின் அலைமோதலை
அமைதியாய் காரின் ஒரு தகர உறுப்பாய் இரு
பார்த்துவிட்டு, இந்த க்ரூப்ல ரெண்டு பே
யாருக்கோ இன்னிக்குப் பொழுது சரியாப் போக
என்று நிச்சயித்தான். அந்தப் பையன்கள் அ
அரக்கி மாதவன் வீட்டை விட்டுப் போகும்போ
"இப்படி பொண்ணுங்க பின்னால அலையறத
தாண்டுக்கிட்டு சாகலாம். போங்கடா போங்
என்று மனசுக்குள் அவர்களை அலட்சியப்ப
தினான். வேனைத் தொடர்ந்து இந்த பையன்
சைக்கிளில் வந்தால் அப்படி வரும் சைக்கி
ஓரம் ஒதுக்க வேண்டும். உரசாமல் சா
வேண்டும்' என்று கோபப்பட்டான். ஆனால்
மீதே இந்தப் பையன்களின் கோபம் உரசும் எ
எதிர் பார்க்கவில்லை. தெரு திரும்பும்போது, அ
பையன்களில் ஒருவன் வண்டியை நோக்கி
எறிவதும், கல் வண்டியில் பட்டுவிடக்கூடாது
கவலைப்படும்போதே, கல்வண்டியைப் பல



தாக்கியதும் அவனுக்குக் கடும் கோபம் கொடுத்
தன. வீட்டிற்கு இறங்கியபோது கலகலப்பாய்
இறங்கிய பெண்கள் மறுபடி வண்டியில் ஏறும்
போது அமைதியாய் ஏறியதையும் வழிகாட்டிய
ஐயர் பையனின் முகம் வெளிறியிருந்ததையும்
கவனித்து விட்டு, சரி ஏதோ பொண்ணுகளுக்குள்
தகராறு என்று நினைத்துக் கொண்டிருந்தவன் கல்
வண்டியில் பட்டதும், இந்தப் பையன்களால்தான்
தகராறு என்று முடிவு கட்டினான். வண்டியை
விட்டிறங்கி கல் எறிந்த பையன்களை நோக்கி
ஓடினான்.

முதற் கல் வீசியவன் இவன் துரத்தியதும் காபி
கிளப்புக்குள் ஓட, டிரைவரும் காபி கிளப்பிற்குள்
புகுந்தான். க்ளப்பின் பின்பக்கம் பாத்திரம் அலம்பி
அலம்பி சேறான இடத்தில் கால் வைத்து,
பொறிக்குள் சிக்கிய பெருச்சாளி மாதிரி அந்தப்
பையன் முழித்துக் கொண்டிருக்க, நாலே எட்டில்
அவன் மயிரைப் பிடித்தான். க்ளப்பிற்கு பின் பக்கம்
கட்டை விரல் தடிமனில் கிடந்த சவுக்கு கொம்பை
டிரைவர் எடுத்துக் கொண்டான். சொட்டேரென்று
கூசாமல் அந்தப் பையனின் காலில் அடித்தான்.
உந்தி வெளியே தள்ளிக் கொண்டு வந்தான். ஒரு
விடுதலைக் கவிதை போலும் ஆங்காரமான
தஞ்சாவூர் கெட்ட வார்த்தைகள் அந்த டிரைவர்
வாயிலிருந்து வெளியே வந்தன. நாலைந்து
அடிகள் பையன் முதுகில் விழுந்தது. இன்னொரு
பையனை, அவன் ஓடுவதன் காரணம் புரியாமல்
கடைத்தெரு பிஸ்தா மடக்கிப் பிடித்துக் கொள்ள,
அவனையும் டிரைவர் கம்பால் தாக்கினான்.

"பண்ணாடைக்குப் பொறந்தவனே, எதுக்குடா
என் வண்டியில கல் அடிக்கற."

"நான் அடிக்கல." பையன் திமிறினான்.

"நீ அடிச்சத நான் என் கண்ணால பார்த்தேன்."

யாரோ ஒரு சமையல் ஐயர் அழுத்தம்
திருத்தமாகப் பேசினார்.

"மெட்ராஸ்லேர்ந்து கோவில் பாக்க,
பொண்ணுங்க வருது. சுத்தி சுத்தி பின்னால
வரானுங்க. காரணமில்லாத கல்லடிக்கறானுங்க."

"இவ்ளோ பெரிய கல்லு. ஆள் மேல பட்டிருந்தா
என்ன ஆயிருக்கும்," யாரோ கத்த, "நாலுதட்டம்பது
போயிங்க ஒரு சைடு கிளாக." டிரைவரும்
கத்தினான்.

"எல்லாம் விளையாட்டாப் போயிடுச்சுங்க.

"நாங்க கல அடிக்கவே இல்லீங்க. இந்த டிரைவர் ஒரு மடையன்."

"செருப்பு பிஞ்சுடும்." டிரைவர் திட்டினான்.

"இவங்க அடிச்சாளுங்க. நான் பார்த்தேன்."

விஜயலட்சுமியும் சீறினாள்.

"ஏய் குண்டு விஜயலட்சுமி என்ன பார்த்தே நீ." அந்த பையன் முறைப்பாய் தலை நிமிர மீனாட்சி மிரண்டாள். எல்லாப் பெண்களையும் வெறித்துப் பார்க்கிற அந்த பையன்களை இழிவோடு நோக்கினாள்.

"உங்களுக்கு அக்கா தங்கையே கிடையாதா." கடுகடுப்பாய் பேசினாள்.

"உண்டு. இவன்தான் சொன்னான். உங்கள பார்த்தா அவன் தங்கச்சி மாதிரி இருக்குன்னு.. சரி நீங்க என் ஸ்நேகிதன் தங்கச்சிதானேன்னு உங்க ளுக்கு கண்ணாம்பு குடுக்கறதுக்கு ட்ரை பண்ணினேன். நீங்க தப்பா நினைச்சட்டீங்க." அந்த குரலிலிருந்த கேலியை மீனாட்சி புரிந்து கொண்டாள்.

"அப்ப உன் தங்கச்சி யாரு."

"குண்டு விஜயலட்சுமி." சொல்லிவிட்டு வாயை இறுக்க மூடி, பேப்பர் கிழிப்பதுபோல் சிரித்தான்.

"ஓஹோ, உன் தங்கச்சிய அவன் பார்ப்பான், அவன் தங்கச்சிய நீ பார்ப்பியா. "அதுக்குத்தான் பின்னாடி சுத்துவீங்களா." மீனாட்சி உஷ்ண மானாள்.

"பொண்ணுங்க போனா ஆம்பளைங்க பார்க்கத்தான் பாப்பாங்க. என்னமோ கற்பழிச்சிட்ட மாதிரி கத்தறீங்களே."

"என்னைக் கற்பழிக்க முடியுமாடா உன்னால.."

"மீனாட்சி.."

"சும்மா இருடீ. என்னைக் கற்பழிக்க முடியுமாடா உன்னால." மீனாட்சி தன் உக்கிரம் முழுவதையும் மண்டைக்குக் கொண்டு வந்தாள். நின்று விட்ட வேனின் கதவைத் திறந்தாள். அந்தப் பையனை உந்தித் தள்ளினாள். பணப்பையை அருகிலிருந்த விஜயலட்சுமியிடம் கொடுத்து விட்டு, பை யோடு தானும் புழுதிச் சாலைக்கு வந்தாள். இரண்டு பக்கமும் வயல்கள் இருந்த தார்ச்சாலையில் அவனை விரல் சொடுக்கிக் கூப்பிட்டாள்.

"கம், கம் அண்ட் ரேப் மீ பாஸ்டர்ட், பாஸ்டர்ட்னா அர்த்தம் தெரியுமா உனக்கு. இங்கிலீஷ் படிச்சிருக்கியா. கம் மேக் ஆன் அட்டெம்ப்ட், பொட்டை ராஸ்கல்." அவன் மீது துப்பினாள். அந்த பையனும் ஆங்கிலம் பேச விரும்பினான்.

"போடீ பிட்ச்." என்று திட்டினான். அவள் கோபத்தை அதிகப்படுத்த அந்த வார்த்தையே போதுமானதாக இருந்தது. அவள் கையை நீட்டி, அவன் சட்டையைப் பற்றி, காலால் கால் இடறி அவன் மூக்கு நடுவே பலம் கொண்ட மட்டும் அடித்தாள். அடுத்த பையன் ஓடிப் போய் அவள் தோள் பிடிக்க, முழங்கையால் அவன் நெஞ்சு தாக்கினாள். பெண்கள் பாய்ந்து வண்டியிலிருந்து இறங்க, அவர்களை நிற்கச் சொல்லி அதட்டி, தோளைத் தொட்டவன் வயிற்றில் எட்டி உதைத் தாள். கீழே விழுந்தவன் தொடையை மிதித்தாள். வயிற்றில் அடிபட்டு குனிந்தவன் தலையை பளிச்சென்று பூமியை நோக்கி அழுத்த, இரண்டு நிமிடத்தில் ஒருவன் குப்புறப் படுத்தும், ஒருவன் மல்லாக்க கிடந்தும் பூமியில் நெளிந்தார்கள். மாதவன் இறங்கி ஓடி வந்து "ப்ளீஸ் வேணாங்க ப்ளீஸ்." என்று கை கூப்பியதும் தணிந்தாள்.

"உனக்கு பொம்பளை அத்தனை தேவையா இருந்தா உங்கம்மா மேல கை வைடா, போ." வலி யோடு எழுந்தவனை பின் நோக்கித் தள்ளினாள். மாதவனும் அவளும் ஏறிக் கொள்ள வண்டி பின்னோக்கி நகர்ந்து முன்னோக்கி நகர்ந்தது.

"சே, தமிழ்நாட்ல ஏன் பொம்பளைய யாருக்கும் மதிக்கவே தெரியலை. பொம்பளைய ஏன் உடம்பாவே பார்க்கறாங்க." அவள் தனக்குத்தானே பேசியது மாதவனுக்கு மிகவும் உறுத்தியது. தான் பெண்களை எப்படிப் பார்க்கிறோம் என்ற கேள்வியைக் கொடுத்தது. மாதவன் கலங்கிப் போய் மனசுக்குள் தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் சொல்லத் துவங்கினான். உலகத்தின் எல்லா அனுபவங்களிலிருந்தும் எனக்குப் பாடம் கற்றுக் கொடு என்று வேண்டினான்.

## 9

"அப்ப நாங்க வரோம்." எல்லா பெண்களும் தனித்தனியே மாதவன் அருகே வந்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

"கோவில் கோவில்னு சுத்தறானே ரொம்ப போர் அடிக்குமேன்னு நினைச்சேன். நல்ல வனை நீங்க கெட்டா வந்தீங்க. பெரிய நாவலை

படிச்ச மாதிரி இருக்குது நீங்க கோவில் பத்தி சொன்னதெல்லாம்." ஒரு பெண் வந்து அவன் புறங்கைத் தொட்டுப் பேசினாள்.

"மறக்க முடியாத அனுபவம் உங்க வீடுதான். அந்த வாய்க்காலும் செம்பருத்தி செடியும். துளசி தோட்டமும் கண்ணுலயே இருக்கு. வாசனை மூக்கை துளைக்குது," என்றாள்."

"உங்க அப்பாவுக்கு ரொம்ப நன்றி சொல்லணும். வாழை மரம் வெட்டிப் போட்டு அதை கயிறுல கட்டி குறுக்கப் போட்டு எல்லாரும் வாய்க்கால்ல குளிச்சது மறக்கவே முடியாது."

மாதவன் மௌனமாய் அந்த பேச்சை ஏற்றான்.

"மீனாட்சியை காப்பாத்தினதுக்கு டபுள் தாங்க்ஸ்." இன்னொரு பெண் முன்னேறி கை குலுக்கியது.

"சில பேரை ரொம்ப நாள் வரைக்கும் மறக்கவே முடியாது மாதவன். உங்களை நான் அந்த வகையில சேர்க்கறேன். உங்க வீடு ஒரு நல்ல பேமிலி. உங்கப்பா ஒரு ஜெண்டில்மேன். நாங்க வாய்க்கால்ல இறங்கின உடனே உள்ளே நகர்ந்து போயிட்டார். நான்தான் பேலன்ஸ் பண்ணத் தெரியாத குப்புற விழுந்தேன். கரைல கை ஊனி ஏறத் தெரியாம முள்ளுச் செடிய பிடிச்சுட்டேன். எனிவே எல்லாம் ஒரு எக்ஸ்பீரியன்ஸ். இத்தனை சிநேகிதமா எங்களுக்கு ஹெல்ப் பண்ணதுக்கு தேங்க்ஸ்ன்னு சொல்ல முடியாது. மச் மோர் தென் தெட். மெட்ராஸ் வாங்க. இது என் அட்ரஸ். வீட்டுக்கு வரபோது போன் பண்ணிட்டு வாங்கோ. நான் வரட்டுமா. விஜயலட்சுமி வரேண்டி." விஜயலட்சுமியின் கன்னத்தில் மீனாட்சி முத்தமிட்டாள்.

பஸ் ஏறினான்.

மதுரை போகிறார்களாம். அங்கிருந்து
திருநெல்வேலி, குற்றாலமாம். அவர்கள் பஸ்ஸு
க்குள் ஏறியதும் கலகலப்பு இடம் மாறியது.
பஸ்ஸுக்குள் ஒரு ரம்யம் வந்துவிட்டது. பாதி
பாதியாய் மூடிய கறுப்புக் கண்ணாடி கத
களுக்குப் பின் கீச்சுக் குரல்களும் சிரிப்பும் கூச்சலு
அதட்டலும் கேட்டன. பஸ் கிளம்பி எல்ல
தலைகளும் எட்டிப் பார்த்தன. சிகப்பாய், பழுப்பா
வெளுப்பாய், சங்கு வளையல்களாய், வெள்
வளையல்களாய், பிளாஸ்டிக் சலசலப்பாய் கைக
விரித்து ஆட்டி டாட்டா சொல்லின.

பெட்ரோமாக்ஸ் விளக்கை கல்யாண



கூடத்திலிருந்து வாசலுக்கு எடுத்துப் போனது போல் மனதுக்குள்ளே ஒரு இருட்டு பரவியது.

ஊர் முழுக்க மின்சாரம் நின்று போய் அகல் விளக்குகள் மட்டும் எரிவது போல் தோன்றியது. தியேட்டரில் படம் அறுந்து மெல்ல நடு பல்பு வெளிச்சமாவது போல் மனதின் ஒரு ஒளி மாறியது. அந்த பெண்களின் சிரிப்புகளும், அசைவுகளும் மெல்லிய வெளிச்சமாய் மின்ன அவர்கள் இருப்பு பளிச்சென்று மறைந்தது.

யார் பெற்ற பெண்களோ, ஆனால் எல்லோர் மீதும் ஏனோ ஒரு நேசம் வந்துவிட்டது. நானும் மதுரைக்கு வரட்டுமா என்று கேட்கத் தோன்றியது.

வேண்டாம் அப்படி போவது அவர்களுக்கு இடைஞ்சலாகலாம். தனக்கு சிரமமாகலாம் என்கிற எண்ணம் ஏற்பட கேட்காது நிறுத்திக் கொண்டான்.

"கொஞ்சம் இரு.. மாதவா உன்கூட பேசணும்." விஜயலட்சுமி சொல்லிவிட்டு பஸ் ஸ்டாண்ட் பத்திரிகை கடைக்குப் போனாள். நூறு ரூபாய் நீட்டி ஏதோ தடிமனான ஆங்கிலப் பத்திரிகை வாங்கினாள்.

இதுக்குத்தானே வந்தோம். ஒரு பத்து ரூபா கடன் கேட்கலாம் விஜயலட்சுமியை என்று தானே வீட்டை விட்டு கிளம்பினோம், விஜி பன்னிரெண்டு ரூபாய் புத்தகம் வாங்குகிறாள், காசு பிரளல் அதிகம் போல் தோன்றுகிறது. பதினைந்து கேப்பமா, வர மாசம் கொடுத்துடறேன் விஜி ப்ளீஸ் ரொம்ப அர்ஜண்ட் செலவு. என்ன செலவுன்னு கூட உன்கிட்ட சொல்ல முடியாத நிலை கேட்போமா.

எப்படி சொல்ல முடியும். சாப்பாட்டுக்கு காசு இல்லை விஜி என்று ஒரு பெண்ணிடம் ஒரு ஆண் எப்படி கேட்க முடியும்.

பதினைந்து ரூபாய் கொடுத்தால் இரண்டு கிலோ அரிசி வாங்கலாம். புளிச்ச தயிரா இருந்தாலும் பரவாயில்லை கொடு என்று ஆழாக்கு தயிர் வாங்கலாம். நாளைய பிரச்சினை ஓவர். நாளை மறுநாள் என்ன செய்வது. தெரியவில்லை. நீங்க நல்ல கெய்ட் என்று ஒரு பெண் சொன்னது நினைவில் மின்னியது. காலையில் எழுந்து பெரிய கோவில் பக்கம் வந்துவிட வேண்டும். வெளியூர் பார்ட்டிகள், வருகிறபோது ஆங்கிலமோ, தமிழோ தெரிந்தவர்கள் வரும்போது கோவில் பற்றி விளக்கி சொல்லி.. அஞ்சோ பத்தோ கிடைக்காதா.

மனது எங்கெங்கோ அலைந்து என்னென்னவோ

கணக்குப் போட்டது.

ஏய் அந்த செருப்பை ஈரத்தோட தொடாதே. இரு நூற்று நாற்பது ரூபா மீனாட்சி கத்தியது ஞாபகம் வந்தது. ஒரு ஜதை லேடீஸ் செருப்பு இருநூற்று நாற்பதா. அது ஈரம் படக்கூடாத பொருளா. கடவுளே ஒரு மாச அரிசி எனக்கு அது. உள்ளே அப்போது விம்மியது. இப்போது மறுபடி நினைவுக்கு வந்தது.

ஆனால் அந்த செருப்பு போட்டுக் கொண்டு தான் உறுதியாய் கால் விரித்து நின்றாள். எட்டி உதைத்தாள். பளிச்சென்று அந்த பையனை மல்லாக்கத் தள்ளி கம்மான் ட்ரை மி என்று கத்தினாள். ட்ரை பண்ணவே முடியாதோ. வேறு ஒரு சிந்தனை முளைவிட்டது. நாலு ஆம்பளையா சேர்ந்தா என்ன செய்வா. இரண்டு பக்கம் ரெண்டு பேர் கைகளைப் பிடித்துக் கொள்ள சரட்டென்று சுடிதாரை கிழித்தால் என்ன செய்வாள். மனகள் துணி கிழிபட்டது. வேண்டாம் அது தவறு. தலை உலுக்கி சரி செய்து கொண்டான். அவள் உடம்பு ஈரத்துடன் தன் உடம்பில் பட்டதை நினைவுக்குக் கொண்டு வர முயன்றான். உருவம் மனசில் தெரியவில்லை. உடம்பில் உடம்பு பட்டது கொஞ்சம் நினைவுக்கு கொண்டு வர முடிந்தது. மல்லாக்கக் கிடத்திய போது வாய் வழியே நீர் பொங்கியது தான் மறுபடி ஞாபகம் வந்தது. ஆனால் இப்படி நினைப்பதும் தவறு.

பொம்பளைய ஏன் உடம்பாவே பார்க்கறாங்க. ஏன் பொம்பளைய யாருக்கும் மதிக்கவே தெரியலை. மீனாட்சியின் குரல் உள்ளே மிரட்டியது.

உடம்பில்லாது பெண்ணை எப்படி உணர்வது. உடம்பு இல்லாதவளை உடம்பாய் எப்படி கற்பிதம் செய்து கொள்வது. கை, கால், முகம், முதுகு என்கிற அங்கம் தெரியாது யாரை என்ன பெயர் சொல்லி அழைப்பது.

ஆண் என்பவனை பெண்கள் உடம்பாய் பார்க்காமல் என்னவாய் பார்க்கிறார்கள். உணர்வுகவா. உணர்வாய் பார்ப்பது எப்படி.

விஜயலட்சுமி அவன் யோசிப்பை அருகில் வருவதன் மூலம் நிறுத்தினாள்.

"ஒரு நாள் ஜாலியா இருந்ததில்லை." கேட்டாள்.

"ஆமாம்."

"பை த வே நீ கோவில்ல கெய்ட் பண்ணதுக்கு,



உங்க வீட்டு வாய்க்கால்ல குளிக்க ஏற்பாடு பண்ணினதுக்கு, மீனாட்சி ரொம்ப தேங்க்ஸ் சொல்லச் சொன்னா.. வார்த்தையா எவ்வளவு சொன்னாலும் போறாதுன்னு இந்த கவர் தரச்சொன்னா."

"லெட்டரா எழுதி கொடுத்துருக்காளா."

"இல்லை."

"வேற."

"பிரிச்சுப் பாரேன்."

பிரித்தான். நாலு நூறு ரூபாய் நோட்டுகள் இருந்தன. சட்டென்று அத்தனை காசு பார்த்ததும் ஒரு சந்தோஷம் படபடப்பு வந்துவிட்டது. எனக்கா, எனக்கா இது என்று கேள்வி குடைந்தது.

"என்ன இது விஜி."

"காசு."

"தெரியறது. ஏன்."

"இது என்ன கேள்வி. நீ ஹெல்ப் பண்ணதுக்கு அவ ஹெல்ப் பண்ணா, வச்சுக்கோ."

"இது கிடைக்கும்னா நான் செய்தேன்."

"அப்ப பெரிய கோயில் உண்டில போட்டுறு."

"இத்தனையுமா."

"மாதவா அலட்டாதே. உனக்கு காசு வேண்டாமா. அது அவஸ்யமில்லாத விஷயமா."

"ரொம்ப அவசியம்."

"அது தெரிஞ்சு கொடுத்துருக்கா. உள்ள ஒரு விஸிடிங் கார்ட் இருக்கும். காசுக்கு ரொம்ப தேங்க்ஸ். விஜி நானூறு கொடுத்தா சமயத்துக்கு கிடைச்சதுன்னு ஒரு போஸ்ட் கார்ட் எழுதி போடு."

"அவஸ்யம் போடணுமா."

"இல்லைன்னா, நான் தரலைன்னு நினைச்சுடலாம். நீ எழுதறது எனக்கு நல்லது.".

"என்ன இப்படி பேசற."

"எனக்கு இருநூறு கவர்ல போட்டுக் கொடுத்தா."

"நீ வாங்கிண்டியா."

"சந்தோஷமா வாங்கிண்டேன். வுமன் ஈரா நான் காசு கொடுத்து வாங்க முடியுமா. ரொம்ப நாளா வாங்கணும்னு ஆசை, அவ காசுல வாங்கிண்டேன்."

"நீ டிபன் பண்ணி போட்டதுக்கா காசு."

"எல்லாத்துக்கும்தான். நாப்பது இட்லி செலவாயிருக்கு."

"எப்படி விஜி இதுல கணக்குப் பார்க்கற."

"நானும் ஒண்ணும் பணக்காரியில்லை மாதவா.

நாகலிங்கம் கேட்க மாட்டேன். தந்தா மறுக்க மாட்டேன். அது தவிர அவ செருப்பு எனக்கு கொடுத்துட்டு போயிட்டா அவ ரூபகார்த்தமா." சக்கரைக் காட்டினான்.

"இருநூற்றி நாற்பது ரூபா செருப்பா."

"இந்த காசுக்கு செருப்பு வாங்கினா இதை ஓரமா

"இந்த காசட்டு பழசு போடும்பா" இங்க அப்பா. எடுத்து வச்சட்டு பழசு போலண்ட் மாதிரி கிடைச் இப்ப பழசே எனக்கு பாலண்ட் மாதிரி கிடைச் சிருக்கா. யாரும் ஒண்ணும் சொல்ல முடியாது."

மாதவன் விழி விரிய அவளைப் பார்த்தான்.

"வேற, நான் ஒரு மாதிரி பிச்சை. நீ ஒரு மாதிரி பிச்சை. வருத்தப்படாத வாங்கிண்டு போய் வீட்டுக்கு உபயோகமா செலவு பண்ணு ஏன் முழிக்கறே."

"எத்தனை சமாதானம் சொன்னாலும் உள்ள காச வாங்கறோமேன்னு ஒரு வெட்கம் இருக்கு."

"அது உனக்கு எனக்கு வேண்டாம். இந்த ஜென்மத்துல ஒரு செருப்பு இப்படி நான் காசு கொடுத்து வாங்க முடியாது."

"எம்.எஸ்.சி. படிக்கறே விழி. படிச்ச படிப்புக்கு நல்ல வேலை கிடைச்சா வாங்க முடியாதா."

"நமக்கு மனசு வராது மாதவா. பண்டி பிடில் கிளாஸ்."

"மீனாட்சி ரொம்ப சிச்சா."

"உன்னால கற்பனை செய்து பார்க்க முடியாத பணம்."

"ரொம்ப விசித்திரம்."

"என்னது."

"உலகம்."

"ஏன்."

"இன்னிக்கு ராத்திரிக்கு எனக்கு சாப்பாட்டுக்கு வழியில்லை. மீனாட்சிக்கு கற்பனை செய்ய முடியாதபடி பணம். ஏன் இப்படி ஒரு விசித்திரம்."

"ஜாதகம்."

"இல்லை. வேற ஏதோ இருக்கு."

"என்ன."

"தெரியலை விழி. கற்பனை செய்ய முடியாதபடி பணம்."

"அவங்க கம்பெனி மதிப்பே நூற்று நாற்பது கோடி. வெளிநாட்டு இண்டஸ்ட்ரி."

"விழி."

"என்ன."

"வெட்கம் போனா ஒரு வேலை போட்டு



தருவாளா.. மீனாட்சியை கேட்கலாமா."

"உன்னால அவ்வளவுதான் கேட்க முடியும். செய்யற ஜாதகம் அப்படி. கூலி வேலை போட்டுக்கறது என் ஜாதகம். அவ செருப்பு புதுசன்னு நான் யாவேதாம் பணக்காரரா ஆகப்போறோம். இந்த ஜென்மத்துல அது இல்லை. உனக்குத் தெரியுமா மாதவா. அவ பர்ஸ்ல நாற்பதாயிரம் ரூபாய் வச்சிருக்கா. நாற்பதாயிரம் நோட். கேஷ்."

மாதவன் தன் கையிலுள்ள நாலூறு ரூபாயைப் பார்த்தான். மீனாட்சி மீது பொறாமைப்பட்டான். அந்த பொறாமையில் மீனாட்சி மீதுள்ள சிநேகம் சிறிது குறைந்தது.

## 10

சட்டென்று ஸ்நேகிதமெல்லாம் மறந்து அந்த நாலூறு ரூபாயே மிகச் சந்தோஷமான விஷயமாய் போயிற்று மாதவனுக்கு.. நான் சம்பாதித்தது என்கிற கர்வம் பொங்கிற்று. தன்னால் இதுபோல நிறைய சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது.

தினம் கார்த்தால போய் தமிழ்நாடு டூரிஸம் பங்களா வாசல்ல நிக்க வேண்டியது. நான் தஞ்சாவூர் சுத்தி காட்டறேன்னு அங்க போய் ஆள் பிடிக்க வேண்டியது. பத்தோ, இருபதோ, முப்பதோ வாங்கிண்டு பெரிய கோவில் அக்கு வேற ஆணி வேறா அலசி சொல்ல வேண்டியது. ஒரு நாளைக்கு முப்பது ரூவா கிடைச்சா போறாதா. போதும். சாப்பாட்டுக்கு கஷ்டமில்லாத இருக்கலாம். ஆனா போறாது. சாப்பாடு மட்டும் போறாது. சாப்பாட்டுக்கு மட்டும் சம்பாதிக்கறதுல சந்தோஷமில்லை. அப்பா அப்படித்தான் சம்பாதிச்சார். அப்பாவுக்கு அப்பா கொடுத்த வீட்டை வச்சுண்டு தானம் கொடுக்கிற வேஷ்டி, புடவையை வாங்கிண்டு சாப்பாட்டுக்கு மட்டும் சம்பாரிச்சா போறும்னு ஒரு நாளைக்கு அஞ்சு ரூபா, பத்து ரூபான்னு சம்பாதிச்சார். அப்பா சோம்பேறியில்லை. தர்வி, காசால என்னை யாரும் அடிமைப்படுத்த முடியாது என்கிற அலட்சியம். காசு இருக்கறவனுக்கு கவலைதான் அதிகம் என்கிற தப்பான அபிப்ராயம்.

"நாலு பேருக்கு சாதம் போட்டு ஆளுக்கு அஞ்சு ரூபா தட்சணை கொடுக்கலாம்னு நினைச்சேன். எல்லாருக்கும் சாதம் போடறேன். ஆனா தட்சணை

ரெண்டு ரூபாய் குறையும்." திவசம் பண்ணுகிறவர் கணக்குப் பார்த்துப் பேச, எல்லாரும் சண்டை போடுவார்கள். அப்பா மட்டும் சிரித்தபடி உட்கார்ந்திருப்பார். எவ்வளவு கொடுத்தாலும் சந்தோஷம் என்று, வாங்கிக் கொண்டு வீடு வருவார்.

"எனக்கு அஞ்சு ரூவான்னு ஒத்துண்டல்லியா அதகொடு. மத்தவங்களுக்கு உன்னால முடிஞ்சத கொடு." எனப் புரோகிதர்கள் சண்டை போட அப்பா நாராயணா என்று உட்கார்ந்திருப்பார். "உங்களுக்கு எவ்வளவு தாஜும்." திவசம் செய்கிறவர் உணர்ந்து கேட்க, "இதென்ன கூலியா.. இல்லை மாசாந்திர. வருஷாந்திர சம்பளமா இதுக்குப் பேரு தட்சணை, சன்மானம். நீங்க ரெண்டு ரூபா குடுத்தாலும் சன்மானந்தான். ரெண்டாயிரம் ரூபா குடுத்தாலும் சன்மானந்தான். சகதர்மிணியோட பக்கத்துல நின்னு, கை கூப்பி, உங்க படிப்புக்கு தட்டு நிறைய வாரகள் தாஜும். எனக்கு அத்தனை முடியலை. யத்கிஞ்சிதம் அதாவது என்னால முடிஞ்சத தரேன்னு சொல்லுங்கோ. இவ்வளவு தான் முடியும்னு மனப்பூர்வமா சொல்லுங்கோ. நான் சந்தோஷமா வாங்கிண்டு போறேன். காசு குறைஞ்சா மந்திரம் குறையுங்கறது எங்கிட்ட கிடையாது. அப்படி மந்திரத்தைக் குறைச்சா கஷ்டப்படப் போறது நீங்க இல்ல. நான். அதனால மந்திரம் குறைக்கற காரியம் பண்ணவே மாட்டேன்."

திவசம் செய்தவர் கூட ஒரு ரூபாய் வைத்துக் கொடுப்பார். அப்பா அதற்கு மேல் எதுவும் பேசாது ரொம்ப திருப்தி..ரொம்ப திருப்தி என்று வீடு நோக்கி வருவார்.

இந்த மாதிரி விஷயங்களால் சுற்று வட்டார கிராமங்களில் அப்பாவிற்கு நிறைய மரியாதையிருந்தது.

"என்ன வோய் இந்த குளிர்ல மேல் துண்டோட வெளியே கிளம்பிட்டீர். எங்கிட்ட ஒரு பழைய சால்வை இருக்கு தரட்டுமா."

"பழசு வாங்கப்படாது. புதுசா வாங்கிக் குடுன்னு உன்னை கேட்கப்படாது. யாராவது குடுத்தா வாங்கிக்கலாம். குடுக்காத வரைல இந்த மேல் துண்டு போறும்."

வாண்டையார் வீட்டில் இருபது பேருக்கு சால்வை கொடுத்தார்கள். அப்பா தனக்கு



போர்த்திய சால்வையை ஒரு வயதான கிழவிக்குக் கொடுத்து விட்டார்.

"யாருப்பா அது.." மாதவன் கேட்டான்.

"பால்காரப் பொண்ணு. அவ அம்மா எனக்கு பத்து வயசு இருக்கறச்சே ஒரு மாட்டுப் பாலை வேத பாட சாலைக்குன்னு குடுத்துருவோ. கிட்டத்தட்ட ஒரு டம்ளர் பசம்பால் கிடைக்கும். அப்ப இந்த கிராமத்திலேயே இவதான் ரொம்ப அழகி. இவளைக் கல்யாணம் பண்ணிக்க பெரிய போட்டி. உடுராஜமுகி ம்ருக ராஜகடி, கஜராஜ விராஜித ராஜி அப்டின்னு இவ வரபோது பாடசாலை பசங்க பாடுவாங்க."

"என்ன அர்த்தம் இதுக்கு."

"நட்சத்திரங்களுடைய ராஜா சந்திரன். உடுன்னா நட்சத்திரம்னு அர்த்தம். சந்திரன் மாதிரி முகம் உடையவளும், மிருகத்திலுடைய ராஜா சிங்கம் சிங்கத்தைப் போன்ற இடுப்புடையவளும், யானைகளில் மிகபெரிய யானையின் நடையைப் போன்ற பின்புறம் உடையவளும்னு அர்த்தம்."

"உனக்கும் அவமேல சின்ன லவ் உண்டாப்பா."

"முட்டாள். அழகைப் பார்த்துட்டு லவ் பண்றவன் முட்டாள். அந்த அழகுதான் அவளுக்கு ரொம்ப துன்பத்தைக் கொடுத்தது. அவ புருஷனை தொட்டதுக்கெல்லாம் சந்தேகப்பட வச்சது. அவபட்ட கஷ்டந்தான் எனக்கு இப்ப மனசில இருக்கு. நான் ரூபாவை கொடுத்தது லவ்வுல இல்லை. நன்றில.. கார்த்தால நாலுலேர்ந்து எட்டு மணி வரைக்கும் கனம் சொல்லிட்டு, சுடச்சுட ஒரு டம்ளர் பால் குடிச்சா இன்னொரு நாலு மணிநேரம் படிக்க முடியும். அப்படித்தான் நான் படிச்சேன்."

"தப்பா நினைச்சுக்காத. சின்ன வயசில்கூட பொம்மனாட்டி ஆசையே கிடையாதா."

"நேரமில்லை. அது தவிர பயம். நாரி ஸ்தனபர நாபீ தேசம். த்ருஷ்ட்வா மா கா மோஹாவேசம். ஏதன் மாம்ஸ வஸாதி விகாரம். மனஸி விசிந்தய வாரம் வாரம்."

உடம்புங்கறது ஒரு விகாரம். ஆத்மா விகாரமடைந்து உடம்பாயிற்று. விகாரப்பட்டதை எப்படி அழகுன்னு சொல்றது. மார்பழகின் விகாரம் வியர்வை. இடையழகின் விகாரம் மலம். வியர்வையையும் மலத்தையும் எப்படிக் காதலிப்பது.

"அப்போ, அம்மாவைக் கல்யாணம் பண்ணிண்டது."

அப்பா சிந்தார். விகாரம் விகாரத்தைத் தொட்டு விகார முண்டாக்கிற்று. 'மண் மண்ணைக் கூட்டி இன்னொரு மண்ணைப் பிறப்பித்தது. விகாரற்று புரிந்த போசகனை மோஹாவனத்தை பிள்ளை. மரண பயம் இல்லை. என்னுடைய உடம்பும், வேர்வையும், மலமும்தான். அதுக்காக வெட்டி கொன்னுக்க முடியுமோ. விகாரத்த நினைச்சக்காம, அதை பெரீட பூசிக் கொண்டாடாம, எது நான், எது விகாரமடையாத நான்னு உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்.'

கேட்கக் கேட்க கேள்வி குறைந்தது. பதில் அறந்தது. எதற்குப் பிறப்பு என்று மனசு முட்டிக் கொண்டது. வீட்டிற்குள் தத்துவம் பேசி விட்டு வெளியே வந்தால் வெளியேயுள்ளவர்கள் செல்வம் வாயைப் பிளக்க வைத்தது.

நைலக்ஸ் புடவையில் எல்லாப் பெண்களும் அழகாக இருந்தார்கள். ஹோண்டா மோட்டார் சைக்கிளில் யார் போனாலும் கம்பீரமாகத் தெரிந்தான். காண்டஸா காரில் தலையணையை வைத்து சாய்ந்து கொண்டு வருபவனைப் பார்க்கும்போது, மூச்சு நின்று தடுமாறி மறுபடி வாங்கிற்று. இரண்டு நெய் மசால் தோசை என்று ஒருவனே ஆர்டர் பண்ணும்போது வாயில் எச்சில் ஊறியது. புத்தி மலரும் பருவத்தில் மாதவன் இரண்டு தத்துவங்களால் பலமாய்த் தாக்கப் பட்டான்.

ஒரு வண்டிக்கு முன் பக்கமும், பின் பக்கமுமாய் இரண்டு ஏர்க்கால்கள் இருக்க முடியுமா. இரண்டு பக்கமும் மாடு கட்டி இழுத்துப் போக முடியுமா. ஏதாவது ஒரு ஏர்க்காலைத் தறித்து விட்டால்தான் வண்டி ஓடும். எந்த ஏர்க்காலைத் தறிப்பது என்று தெரியாமல் மாதவன் தயங்கினான். அந்த நானூறு ரூபாய் காசு வந்தபோது அப்பா சொன்ன தத்துவங்களைத் தறித்துவிட மனசு முனைந்தது. அந்த நானூறு ரூபாயை எப்படி செலவு செய்வது என்று திட்டம் போட்டது.

ராயர் ஓட்டலுக்குப் போய் நாளாயிற்று. கோதுமை அல்வா சாப்பிட்டு ஒரு வருடமாயிற்று. ரெண்டு கோதுமை அல்வாவுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, மேஜையில் தாளம் போட்ட போது, முதல் அல்வாவை வேகமாகவும், இரண்டாவது அல்வாவை நிதானமாகவும் சாப்பிட வேண்டுமென்று மனசு திட்டம் போட்டது.



அடுத்தது பேப்பர் மசாலாவா, ஸ்பெஷல் ரவாவா என்று யோசிக்க வைத்தது. ரவா தோசை எதிரே வைக்கப்பட்ட போது, மற்ற மூன்று நாற்காலிகளில் மூன்று பேர் உட்கார்ந்தார்கள். அவன் சாப்பிடு வதையே கவனித்தார்கள்.

'நம்ம பசங்கள அடிச்சுட்டு இங்க உட்கார்ந்து டிபன் சாப்பிடறான் பார்த்தியா. ஒரு அறை தாங்குவானா.' அவர்கள் பேசத் துவங்க மாதவனுக்கு திக்கென்றது. வாயில் மென்ற தோசையோடு அவர்களை வெறித்துப் பார்த்தான்.

'நம்மூர்ல எத்தினி பொண்ணுங்க போகுது. யாரானா எதுனா பேசறானா. பஜாரி பொண்ணுங்க பத்து வந்தது. பார்ரா அதுன்னு பார்த்திருக்கான். வண்டில கூட்டிட்டுப் போய் அடிச்சிங்களாமே. சும்மா விட்டுருவோமா. சாப்பிட்டுட்டு வெளியே வரட்டும். குத்தற குத்தல தோசையெல்லாம் கக்கிறான் பாரு.'

மாதவனுக்கு உடம்பில் நடுக்கம் பரவியது.

'நீங்க யாரைச் சொல்றீங்க,' குளறலாய்க் கேட்டான்.

'உன்னைபத்தான்.'

'நான் அடிக்கலை.'

'காட்டிக் குடுத்த. இல்லியா. நம்மூர் பசங்கள அடிக்கறபோது வாயில விரலை வச்சுக்கினு வேடிக்கை பார்த்தல்லியா. இப்ப உன்னைய மடக்கி அடிச்சா யாரானா உதவிக்கு வருவானா.'

'நான் ஒண்ணுமே செய்யலை.'

'அதுதான் தப்பு. அந்தப் பொண்ணு எட்டி உதைச்ச போது தடுத்திருக்க வேண்டாம். அந்த வேன் தஞ்சாவூர்ல ஓடுமா. அப்படியே ஓடினா ஒரு கண்ணாடி அந்த வேன்ல இருக்குமா. ஊல கல்லுன்னு ஒரு விஷயம் எதுக்கு இருக்கு.'

'இப்ப என்ன சொல்றீங்க.'

'அடிச்ச பையனுக்கு ஏதாவது குடு.'

'எங்கிட்ட ஏதும் இல்லை.'

அருகிலிருந்தவன் அவன் சட்டைப் பைக்குள் கை விட்டு கவர் எடுத்தான். மாதவன் தடுக்க முயன்ற போது கன்னத்தில் அறைந்தான். ஹோட்டல் முழுவதும் அந்த 'பளார்' சத்தத்திற்கு திரும்பிப் பார்த்தது. அறை வாங்கிய வெட்கத்தை விட எல்லாரும் திரும்பிப் பார்த்த வெட்கம்தான் மாதவனை கடித்துக் குதறியது.

'கடன் வாங்கறபோது காலை புடிச்ச கெஞ்ச

ரலேட திருப்பி கேட்டா தனியா பதுங்கறியேடா." அடுத்தவன் உரக்கக் கத்தினான். பார்த்தவர்கள் சமாதானமானார்கள்.

"அந்த பொண்ணுங்க கொடுக்காதே. ரெண்டு பசங்களுக்கும் ரெண்டு நூறுரூபா. எங்க டிபன் செலவுக்கும் ஒரு நூறு ரூபா. இந்தா இத நீ வச்சுக்க. நான் சொல்றது புரியுதா. நம்ம ஊர் பசங்கள நாமே காட்டிக் கொடுக்ககூடாது. வேத்தாள் அடிக்கும் போது நின்னு வேடிக்கை பார்க்ககூடாது. நாம் சம்பாரிச்ச நாலு பேருக்கு கொடுக்கணும். அதுதான் மரியாதை. அறிஞ்சு புரியுதா. அழுவாத. தோசையை சாப்பிட்டுடு. ஆறிப் போனா நல்லாருக்காது."

மாதவன் எழுந்திருக்க முற்பட, காலரைப் பிடித்து உட்கார வைத்தார்கள். அவர்களும் தோசை ஆர்டர் செய்தார்கள். "எங்க பில்லை இவர்கிட்டே கொடுத்திடு," என்று அவசரமாய்ச் சாப்பிட்டார்கள். எழுந்து போனார்கள். மிஞ்சின நூறு ரூபாயில் நாற்பத்தி இரண்டு ரூபாய் பில் கொடுத்துவிட்டு மாதவன் ஹோட்டலை விட்டு வெளியே வந்தான். காற்றால் தள்ளப்பட்ட காகிதக் குப்பை போல மனசு அலைந்தது. நெஞ்சைத் தாக்கியது. எங்கேயோ தனியாக உட்கார்ந்து ஹோவென்று அழவேண்டும் போலிருந்தது. பெரிய கோவில் வெளிப்பிரகாரத்தில் போய் அமர்ந்து கொண்டான். எதிரே விமானம் தெரிந்தது. திருப்பி அறைய முடியவில்லையே என்கிற வேதனை பிடுங்கியது. எந்த எதிர்ப்பும் காட்டாமல் முந்நூறு ரூபாயை இழந்தது காலகாலத்திற்கும் தன்னைக் கொல்லும் என்று தோன்றியது. அடி வாங்கிய இடது கன்னம், காது வலித்தது. மாதவன் அழுதான். கருங்கல்லில் முதுகு சாய்ந்து முகத்தைப் பொத்திக் கொண்டு கேவினான். எதிரே விமானத்தின் வலது பக்கம் பூணூலும், தடித்த உடம்பும் தலைப்பாகையுமாய் நான்கு அந்தண உருவங்கள் அமர்ந்திருந்தன. நடுவிலுள்ள உருவம் பெரிதாயும், மற்றவைகள் அதைவிடச் சிறிதாயும் இருந்தன. "அது பிரம்மராயரா இருக்குமோன்னு எனக்கு தோணுது மாதவா.." அப்பா அதைச் சுட்டிக்காட்டி பேசியிருக்கிறார்.

"எந்த பிரம்மராயர்."

"கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர். சேனாதிபதி."

"பிரும்மராயன்னா பிராமணன் தானே. பிராமின் சேனாதிபதியா."



"இருந்திருக்கான். மூணு – தலைமுறைக்கு சேனாதிபதியா இருந்திருக்கான். அந்த சிலைக்கு நேர் எதிர்க்க, இங்க பார் இங்க தான் அவனைப் பத்தி கல்வெட்டு இருக்கு. அவன் உட்கார்ந்த இடம் இதுவாகூட இருக்கலாம்."

அப்பா அந்தக் கல்வெட்டைத் தடவிக் காட்டினார். அருகே உட்கார்ந்து கொண்டார்.

"சேனாதிபதின்னா சண்டைக்கு போயிருக்கணுமே."

"போயிருக்கான்."

"கத்தி வச்சண்டிருக்கணுமே."

"வச்சண்டிருந்திருந்தான்."

"பிராமின் கத்தி எடுக்கலாமாப்பா."

"நிர்பந்தம். வேற வழியில்லை. வரியார. போர் வீரனா இருக்கும்படி ஒரு நிர்பந்தம். யுத்தம்ங்கறது வெறும் உடம்பு பலம் மட்டுமல்ல. புத்தியும் முக்கியம். உடம்புல வலுவும், நெஞ்சில் உரமும், கூரிய புத்தியும் அவனுக்கு இருந்திருக்கணும். இல்லாம ராஜ ராஜ சோழன்கிட்டே அவன் காலம் தள்ளியிருக்க முடியாது. சோழ சாம்ராஜ்யத்தின் முதுகெலும்பே இவன்தான்னு எனக்கு அபிப்பிராயம்."

அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. மாதவன் தான் உட்கார்ந்த இடத்தை பிரம்மராயரை நினைத்தபடி மெல்லத் தடவினான்.

## 11

வாழ்க்கை என்பது பிறர் பேசுவதைக் கேட்டு, நடப்பதைப் பார்த்து தன் அனுபவத்தை ஒப்பிட்டு தானாய் புரிந்து கொள்வது. எல்லாம் தெரிந்து இங்கு பிறந்தவன் எவருமில்லை. அப்படிப் பிறப்பவனை கடவுள் என்று உலகம் கொண்டாடுகிறது. அவன் யுகத்துக்கு யுகம் அவதரிப்பான் என்று உறுதி கூறுகிறது. மற்றபடி, மனிதர்கள் அறிவுரைக் கேட்டு அதை அனுபவத்தில் தோய்த்து மேற்கொண்டு நடப்பவர்கள். அறிவுரையைக் கேட்க மாட்டேன் என்பவன் நிர்மூடன். சொல்ல மாட்டேன் என்பவன் அகம்பாவி. இங்கே நீ கற்றதனைத்தும் பிறர் எச்சம். பிறர் வாழ்ந்து அனுபவித்ததின் மிச்சம்.

அது பிரம்மராயரா.. தெரியவில்லை. சோழ நாட்டு வெண்ணாட்டு அமணக்குடி என்ற கிராமத்தில் பிறந்த மூன்று தலைமுறை சோழ

சேனாதிபதியாய் இருந்த மன்னர்களுக்கு பஞ்சமில்லை. ஆனால் அந்த பிரம்மராயர் நீண்ட உடம்பும், முகத்தில் தெளிவு திடகாத்திரமான உடம்பும், அவரால் இருக்குமோ அடக்கமான புன்முறுவலும், எண்ணத் நானே என்ற ஆவல் சேர்ந்த எண்ணுகிறது நான் விட்டது அவர்தான் என்று மனம் எண்ணி அந்த உருவத்தை நோக்கி கைகூப்பியது.

உங்களை என்றும் பிடித்திருக்கிறது பிரம்மராயரே. உங்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஒரு ஆச்சரியம் பரவுகிறது. அதெப்படி மூன்று தலை முறை சோழ மன்னர்களிடம் சேனாதிபதியாய் உங்களால் சேவகம் பண்ண முடிந்தது. உடைவாள் தரித்து குதிரை ஏறி சாந்தரும் சாளுக்கியரும், கொள்ளிப்பாளையும், வெல்லொடு நாடும் போய் போரிட முடிந்தது. என் தலையிலிருந்து ஒருவன் மூன்றுறு ரூபாய் பிடுங்கிக் கொண்டு போனானே. அப்படி உம்மை யாரும் செய்ததுண்டா. அப்படி செய்திருந்தால் பதிலுக்கு என்ன செய்திருப்பீர் நான் அழுதேன் பிரம்மராயரே அசட்டுத்தனம் இல்லை. அடித்தவனை அடிக்க முடியவில்லையே என்கிற ஆத்திரத்தில் அழுதேன் பிரம்மராயரே. உம்மால் எப்படி போர் செய்ய முடிந்தது. நசிகேதனபர நாசி தேசம் என்பதை போக விசாரம் என்று உமக்கு சொல்லித் த... வில்லையா. அந்தவரும் உபயோகமில்லை என்று சேனாதிபதி ஆகி விட்டீர. காசு முக்கியமில்லை. அன்றைய உணவுக்கு சம்பாதித்தால் போதும். கற்பதும், கற்பிப்பதுமே வாழ்க்கை. வேள்வி செய்வதும், வேள்வி செய்விப்பதுமே தொழில் ஏற்பதும், ஏற்பித்தலுமே இயல்பு என்கிற ஆதி கட்டளைகள் உமக்கு பொருந்தாதா. யா... வனுக்குமே வேள்விகள் எழுதின.

அப்போவால் சொல்லப்பட்ட சோழ சரித்திர தெருவில் ஓடியது. ராஜராஜத்தேவர் திருவாய் மொழிக்குள் இத்திருச்சுற்று மாளிகை எழுப்பி தான். சேனாதிபதி அன்றைக்கு கிருஷ்ணன் ராமன் அம்மன் குடி ஊர்பெயர். கிருஷ்ணன் என்பது அப்பா பெயர். ராமன் அவன் பெயர். ஏ... ராமன் என்று இப்போது உயிரோடு இருந்தால் கையெழுத்து போடுவானா. இப்போதும் இந்... சோழ நாட்டில் எங்கேயாவது பிறந்து பெயர்களை பெயர்கள் என்று கற்றுக் கொண்டிருப்பான் இப்போதும் உடனே ராமனாய் இருப்பான்.



எனக்கேன் இத்தனை பிரேமை இந்தக் கோவிலின் மேல். நானும் இங்கே பிறந்தவனோ. சோழ சரித்திரத்தில், ராஜராஜன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவனோ. என்னவாய் இருந்திருப்பேன். இதேபோல் பயந்த பாப்பாரப் பையனாகவா. அரசர் வருகிறார். அரசர் வருகிறார் என்று பயந்த அந்தணனாகவா. கூனிக் குறுகி கும்பிட்டு போட்டு எல்லோருக்கும் பின்னால் இரண்டுங்கெட்டானாய் விழி விரிய நின்று ராஜராஜத்தேவா வாழ்க என்று குரல் கொடுத்து விட்டு யஜுர் வேத வாக்கை சொல்லி ஒரு அழுக்கு தட்சணை வாங்கி திருப்தி. திருப்தி என்று அசான் காதுபடச் சொல்லி நகர்ந்து போகிற கும்பலில் ஒருவனோ. கூட்டத்தோடு கூட்டமாய் கரைந்து செத்துப் போனவனோ. பிரம்மராயருக்குப் பின்னால் மூன்று பதுமைகள் இருக்கின்றன. அவர்கள் யார். பிரம்மராயரின் மகனா. ஒருவன் பிரம்மராயன் மகன். மற்றவர் உதவி ஆட்களா. பிரம்மராயருக்கு வலக்கரம், இடக்கரம் போன்றவர்கள். அவர்களும் குதிரை ஏறி உடைவாள் தரித்துப் போயிருப்பார்கள். சோழ தேசத்தில் அவ்விதம் வாழ்ந்தவன் இப்போது ஆபீஸில் அடி வாங்கி அழுவானா. சம்பாதித்த காசை பிடுங்கிக் கொண்டு போக அனுமதிப்பானா.

சே. என்ன வேலை. ஒரு வார்த்தை கூட நான் எதிர்க்கவில்லை. ஏனென்று கேட்கவில்லை. என்னமோ ஒரு மயக்க நிலையில், என்னால் எதிர்க்க முடியாது என்று தீர்மானத்தில் இருந்து விட்டேன். எதுத் தவறு செய்யாதபோதும், மானம் கெட்ட, மடையனாய் தோசையைப் பிடுங்கி விட்டபோல் நானோ என்கிற பழத்தில் உறைந்து விட்டேன்.

உள்ளே வெறுச்சினம் புரள்கிறது. ஆனால் கையாலாகவில்லை. கோபம் போசியில் வருகிறது. ஆனால் உடனே எழவில்லை. பயம், பயம், பயம். எல்லாவற்றுக்கும் பயம். நசிகேதனபர நாசி தேசம். பயம். அது போக விசாரம் என்கிற பயம். பயத்தில் ஆசையை அடக்கிக் கொண்டிருக்கிறேன் கொட்டியின் கைகோர்த்து. தோள் உரச நடக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் பயம். என் பயத்திற்கு என்ன காரணம். வளர்ப்பா. வசதி இன்மையா.

சாதவன் கன்றுக்கு தன்னைப்பற்றி தானே ஆராய்ச்சி செய்தான். ஆயிரம் வருடத்திற்கு முன்பு வாழ்ந்த அந்தணனோடு தன்னை ஒப்பிட்டு

கொண்டான். தன் குறை எது தன் நிறை எது என்று முதன் முதலாய் யோசிக்கத் துவங்கினான். அவமானத்திற்கு பயப்படுகிறேன் என்று முடிவு செய்தான்.

ஹோட்டலுக்கு வந்து அருகே உட்கார்ந்தவர்கள் உரத்துப் பேசினார்கள். அப்படி உரத்துப் பேசுவதற்கு அவர்கள் அவமானப்படவில்லை. பெண்கள் குளிக்கும் போது நண்பர்கள் வெறித்துப் பார்த்தார்கள். அப்படி வெறித்துப் பார்ப்பது அவமானம் என்று அவர்கள் உணரவில்லை. உதை வாங்கியதோடு விட்டுவிடவில்லை. யாரையோ தூண்டி என்னை அவமானப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது போய் பார்த்தால் சிரிப்பார்கள்.

"என்னா ஐயரே.. ரவா தோசையா." என்று சிரிப்பார்கள். மறுபடி அவமானப்பட நேரும். அதற்கு பயந்து அவர்கள் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்ளத் தோன்றும். முதன்முதலாய் குதிரை ஏறியபோது பிரம்மராயனும் பயந்திருப்பான். எகிறி விழுந்திருப்பான். 'என்னையா தள்றே' என்று சீறி மறுபடி ஏறியிருப்பான். மூன்று தலைமுறை அரசர்களுக்கு அமைச்சனாய், சேனாதிபதியாய் இருந்தவன் 'ஏகத்துக்கு அவமானப்பட்டிருப்பான். ஆனால் அவையேதும் சரித்திரமாய் இல்லை.' ராஜராஜத்தேவர் திருவாய் மொழிஞ்சருள இத்திருச்சுற்று மாளிகை எழுப்பித்தான்.. சேனாதிபதி கிருஷ்ணன்ராமன் என்றுதான் இருக்கிறது. எல்லா அவமானமும் தாண்டி இதுதான் இருக்கிறது. என்னால் முடியுமா. ஆயிரம் ஆண்டுகளாய் நிற்கின்ற இத்திருச்சுற்று மாளிகை மாதிரி ஒரு மாளிகை என்னால் எழுப்ப முடியுமா.

என்னால் போர் செய்ய முடியுமா. என்னால் அவமானம் தாங்க முடியுமா. என் ஆசைகள் வெறும் ரவா தோசையாய் போய்விடுமா. பசிக்கு சோறு தின்பதே ஆசையாய் போய் விடுமா. எவளோ ஒரு பெண் என்று முப்பது வயதில் யாருக்கோ தாலி கட்டி அவளுக்கு என்னைப் பிடிக்கிறதா என்று கேள்வி கேட்காமல் மயங்கி பிள்ளைகள் பெற்று தேவசத்திற்கு கும்பலாய் போய் ரெண்டு ரூபாய் தட்சணை வாங்கி த்ருப்தி.. த்ருப்தி என்று முடிந்து விடப்போகிறேனோ..

இல்லை. முடியாது. எனக்கு குதிரை வேண்டும். உடைவாள் வேண்டும். போர் போர் என்று வெறியோடு பாய வேண்டும். அடிக்க வேண்டும். அடிபட வேண்டும். அஞ்சாது அவமானம் தாங்க



வேண்டும். சதா நேரமும் போர் வெறியோடு இருக்க வேண்டும். கோவில் பட்டை சாதம் கூடாது. அப்பா வாழ்ந்த விதம் என்னால் முடியாது. நான் அந்தணன் இல்லை. போர் வெறியன். ராஜராஜத்தேவன் இல்லை, நான் முழுக்க தேவன் இல்லை. முழுவதும் அந்தணன். இல்லை. நான் அந்தணத்தேவன். எனக்கு தஞ்சாவூர் போதாது. தெற்கு, வடக்கு, கிழக்கு எல்லாம் வேண்டும்.

சட்டென்று கனவு உதறி எழுந்தவன் போல் மாதவன் எழுந்து நின்றான். எழுந்த வேகத்தில் கால் இடறியது. வலக்கால் வைத்த இடத்தில் கல் புரண்டு முன்னே தள்ளியது. அருகே இருந்த அரளிச் செடியைச் சட்டென்று பிடித்துக் கொண்டு நின்றான். கால் விரலால் கல்லை எத்தி செடிக்கருகே தள்ளினான். கோயிலை வலமாய் சுற்றிக் கொண்டு வெளியே நடந்தான். எதற்கு. என்ன செய்யப் போகிறோம் என்று தெளிவாய் தெரியவில்லை. என்னவோ செய்யப் போகிறோம் என்பதாய் தோன்றியது. திரும்பி மறுபடி பிரம்மராயரைப் பார்த்தான். அந்த கோணத்திலிருந்து உதட்டுச் சிரிப்பு பெரிதாய் தெரிந்தது. அவனையே பார்ப்பது போலிருந்தது.. கை கூப்பி தலை வணங்கினான்.. நிமிர்ந்து பார்த்தான்.

"பிரம்மராயரே.. என்னோடு இரும்." என்று உரத்துக் கூவினான். கையசைத்து கோவில் சுற்றி வெளியே போனான். பையிலிருந்த காசுக்கு அரிசி, பருப்பு வாங்கி அதைப் போட்டுக் கொள்ள துணிப்பை வாங்கி பஸ் ஏறினான். ஊரின் கடைத் தெருவில் இறங்கினான். அந்த இரண்டு பசங்களும் மாலை மலர் போஸ்டர் படித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. உள்ளே ஆத்திரம் பொங்கிற்று. போய் சட்டையைப் பிடித்து உலுக்கி அடிக்க வேண்டும் என்று தோன்றியது. போய் அடிக்கலாமா. வெறியெல்லாம் சேர்த்து முகத்தில் குத்தலாமா. இல்லை. இப்போது கூடாது. அரிசியும் பருப்பும் சிதறும். அவை முக்கியம். ஆனால் இவர்களை அறையாமல் இந்த ஊர் விட்டு போகக்கூடாது.. வீட்டுக்கு வந்து அம்மாவிடம் பைகளை இறக்கி வைத்துவிட்டு ஐந்து ரூபாய் தவிர மீதி சில்லறைகளை அம்மாவிடம் கொடுத்துவிட்டு வாசலுக்கு ஓடினான். அப்பா எதிர்பட்டார்.

"எங்கே வந்தே.. ஓடறே.. என்ன சமாச்சாரம்."

"ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேரைப் பார்க்கணும்."

"மீனாட்சிகிட்ட உதைப்பட்டானே.. அவா ரெண்டு பேரையுமா."

"எப்படி உனக்குத் தெரியும்."

"எவனோ பார்த்தானாம். கடைத்தெருவுல கதையா சொல்லிண்டிருக்கான். நம் ஊர்தான் எதையும் சாதாரணமாக விட்டு வைக்காதே. அந்தப் பசங்களுக்கு ஆளனுப்பி வரவழைச்சு என்னன்னு கேட்டாங்க. அவன் உன்னைக் குற்றம் சொல்றான்."

"நீ என்னப்பா பண்ணினே."

"கேட்டுண்டிருந்தேன்."

"அப்புறம்."

"அதெப்படி நம்மூர் பையனை வெளியூர் பொண்ணு அடிக்கலாம்னு ஆறேழு பேர் கிளம்பிப் போனாங்க. உன்னை விசாரிக்கணும்னாங்க. விசாரிச்சாங்களா."

"இல்லை." மாதவன் பொய் சொன்னான்.

"நீ அவங்கக்கிட்ட போய் என்ன பேசப் போறே."

"வந்து சொல்றேன்."

"மாதவா."

நகர்ந்த மாதவன் அப்பாவைப் பார்த்து நின்றான்.

"எண்ணித் துணிக கருமம்

துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு."

எதற்கு துணிந்திருக்கிறேன் என்பதை அப்பாவிடம் சொல்ல மனசு வரவில்லை. சொன்னால் அப்பா என் புத்தியை மாற்றிவிடலாம். ஆலோசனை கேட்டால் அபிப்ராயங்களைத் தகர்த்து விடலாம். கடைத் தெருவுக்குப் போகும் வரை, போய் என்ன செய்யப் போகிறோம் என்ற எண்ணம் எழவே இல்லை. ஒரு பதட்டம் மட்டுமே அவனைத் தூக்கிக் கொண்டிருந்தது. வெற்றி அல்லது வீரமரணம் என்கிற வேகம் மட்டுமே அவனை ஆட்கொண்டிருந்தது.

அந்தப் பையன்கள் அங்கே நின்றிருந்தார்கள். கடையில் ஒசி வாங்கிய புத்தகத்தை இரண்டு பேராய் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். மாதவன் எதிரே போய் நின்றான். அவர்கள் நிமிர்ந்து பார்த்தார்கள். சிரித்தார்கள். அந்தப் புத்தகத்தைப் பிடுங்கி மாதவன் தெருவில் வீசினான். புத்தகம் பிடித்திருந்தவன் முகத்தில் பளிச்சென்று குத்தினான். அடுத்து நின்றவனை மல்லாக்கத் தள்ளினான். தாக்கப்பட்ட இரண்டு பேரும் ஏய் என்று எழுந்து நின்றார்கள். அவன்ன வெறியோடு



பார்த்தார்கள். மாதவன் நெஞ்சுக்குள் ஒரு பயம் எழுந்து அடங்கியது. அவன் சகலத்துக்கும் தயாராய் தன் முஷ்டி மடக்கி காத்திருந்தான்.

## 12

மரணம் போன்ற நேரம் அது. இதோ இதோ என்று தினமும் பயமுறுத்தி நெஞ்சக் குழிக்குள் வலித்து முறுக்கி உயிர் பிரியும் கலவரம் போன்ற நேரம் அது. உந்தி உந்தி மூளைக்குள் நகர்ந்த கோபத்தை பல்கடித்து முஷ்டி மடக்கி நச்சென்ற குத்தாய் எதிரியின் முகத்தில் இறக்கியாயிற்று. அவனை வலிக்கச் செய்தாயிற்று. இனி வலிதாங்க வேண்டும். எங்கே குத்து விழும் எங்கே வலி ஏற்படும் என்றே கலவரம் துவங்கும். எதிரியின் வீச்சை தடுக்கிற கைகள் முதலில் வலிக்கும். பிறகு உதடா, தலையா, முதுகா, மாரா, வயிறா தெரியவில்லை. எங்கோ ஒரு இடம் எதிரியால் தாக்கப்பட்டு 'விண்விண்' என்று நோகும். இனி வலி நிச்சயம். வலிக்க வலிக்க வலியைக் கோபமாக மாற்ற வேண்டும். அந்த கோபத்தை சிறிது கூட வெட்கமின்றி, வெட்கத்தால் ஏற்படும் தயக்கமின்றி எதிரியின் மீது செலுத்த வேண்டும்.

சுற்றி எல்லோரும் பரபரப்பாகி விட்டார்கள். அவனுடைய முதல் குத்தை மிகுந்த அதிசயத்துடன் பார்த்து தொடர்ந்து நடப்பவைகளுக்கு தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

"செம குத்துவிட்டான்ய்யா." ஒருவர் வாய் திறந்தே பாராட்டினார். துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு அடுத்த குத்து எப்போது, எவ்விதம், எவரால் என்று எதிர்பார்க்கத் துவங்கி விட்டார்கள். அவர்கள் எவருக்கும் வலிக்கப் போவதில்லை. சிறிதளவும் அவமானம் இல்லை. மாறாய் பொங்குகிற சந்தோஷத்தோடு அந்த சண்டையை வெகுநாள் விவாதிப்பார்கள். அடித்தவனை உற்சாகப்படுத்தி, அடிப்பட்டவனை இகழ்ச்சியாகப் பேசுவார்கள். இங்கே யார் ஜெயிப்பார்கள் என்கிற கவலை அவர்களுக்கு இல்லை. ஜெயித்தவர்கள் பக்கம் சேர்ந்து கொள்வார்கள். இவர்கள் மட்டுமில்லை. இந்த மொத்த உலகமும் ஜெயித்தவர்கள் பக்கம்தான் இருக்கிறது. எப்படி ஜெயித்தார் என்று பார்க்காது. அந்த ஜெயித்தலுக்கு எத்தனை வேதனைப் பட்டானென்று யோசிக்காது. "பொரட்டிப் பொரட்டி அடிச்சாம்பா.." என்று

பார்ட்டும். தூக்கித் தூக்கி உதைச்சாம்பா என்று புழு பேசும். தோற்றுப் போனால் "உனக்கு என்ன இது" என்று இளக்காரம் சொல்லும். "எங்க நோவுது இங்கயா." என்று தொட்ட இடத்தில் விரல் வைத்து அழுத்தும். ஸிக்கிப் புடைத்த வலியைவிட விரல் வைத்து அழுத்தியபோது ஏற்பட்ட வலியில் உயிர் துடிக்கும். யுத்தம் துவங்கிவிட்டது. இன் ஜெயிப்பதே முக்கியம்.

எதிரிகள் சுதாரித்துக் கொண்டார்கள். இரண்டு பேராய் இருப்பதால் சட்டென்று வியூகம் வகுத்தார்கள். அடிவாங்கி விட்டோம் என்ற அவமானத்தில் அடித்த மாதவனைக் காட்டிலும் வெறியாய் இருந்தார்கள்.

"எதுக்குடா அடிச்ச.." அடிபட்டவன் சீறினான்.

"நான் கஷ்டப்பட்டு சம்பாதிச்ச நானூறு ரூபாய ஆளவிட்டு அடிச்சுப் புடுங்கிட்டுப் போறியே நியாயமா. உனக்கு நான் என்னடா கெடுதல் செய்தேன். ஒருவேளை சோத்துக்கு திண்டாட என் காசுதானா உனக்குப் புடுங்கக் கிடைச்சுது. தான் பேசியது தனக்கே பரிதாபமாய்ப் பட மாதவன் மீண்டும் தாக்கினான். அவன் பேச்சிலுள்ள தர்ம எதிரியைத் தாக்கியிருக்க வேண்டும். தான் செய்தது அநியாயம்தானே என்று தடுமாற்றம் வந்திருக்க வேண்டும். இதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாமே அடிப்பதா என்று நொய்மை ஏற்பட்டிருக்க வேண்டும். அவன் பின் வாங்கினான். ஆனால் தர் நியாயங்கள் எல்லா இடத்திலும் செல்லுபடியா வதில்லை. சிலரிடம் நியாய வாதம் எடுபடாமலும் போகும். இதுவரை அடிபடாதிருந்த இரண்டாவ ஆளுக்கு மாதவன் கோபமும், வேகமு தலவர்த்தைக் கொடுத்தன. இவன் நம்மையு தாக்கினால் என்ன செய்வது என்கிற பயத்தில் அடிக்கு அடிதான் மருந்து என்கிற வித்த்தில் மாதவனை நோக்கி வெறியோடு, நகர்ந்து அவ முகத்துக்கு குத்தை இறக்கினான். மாதவ வலதுகை அதைத் தடுத்தது. தடுத்த கைே எதிரியின் கையைப் பற்றி வெடுக்கென்று இழுத் போட்டது. வேகமாய் வருகிறவனை இன்று வேகமாய் இழுக்க எதிரி நிலைகுலைந்தான். மு பக்கம் சாய்ந்து தரையில் விழுந்தான். புரண் எழுந்து மாதவனை நோக்கிக் காலால் உதைத்தா மாதவன் நகர்ந்து கொள்ள எதிரியின் கால் காற்



உதைத்தது. அடுத்த கணம் மாதவன் கால் எதிரியின் தொடையில் அழுந்த மிதித்தது. மாட்டு மிதி அது. தசை புரண்டு ஒவென்று கத்த வைக்கும் வலி அது. அவனுடைய ஒரு அங்கம் செயல் பாட்டை முற்றிலுமாய் இழந்தது. எழுந்து நிற்கும் முயற்சியை செய்வதற்குள் மாதவன் அவன் இடுப்பில் எட்டி உதைத்தான். அந்த இரண்டாவது எதிரி மல்லாக்க புரண்டான். மாதவனுக்கு எட்டி உதைத்த கால் வலித்தது. பழக்கமின்மையால் சுளுக்கு பிடித்துக் கொண்டது. ஆனால் சுதாரிக்க முடிந்தது. முதல் எதிரி ஆவேசத்தின் உச்சநிலையை அடைந்திருந்தான். தன் தோழன் தாக்கப்பட்டதை உணர்ந்து மிக கவனமாய் மாதவனை நெருங்கி, மிக வேகமாய் கையை வீசினான். இரண்டு மூன்று குத்துகள் காற்றில் போய் நான்காவது குத்து மாதவனின் இடது புறத்தில் விழுந்தது. பேய்க் குத்து அது. குத்து வாங்கியதில் உடம்பு ஆடியது. இடது கை வலு இழந்து விடுமோ என்று தோன்றியது. மாதவன் விலகினான். மீனாட்சி இடதுகாலை ஊன்றி, வலது காலைச் சுழற்றியதை ஞாபகப்படுத்திக் கொண் டான். அதே நேரம் சில ஆங்கிலப் படங்களில் அவன் பார்த்த சண்டைக் காட்சிகளும் ஞாபகம் வந்தன. கை முஷ்டியை இறுக்கிப் பிடித்து இடது காலில் மனது செலுத்தி அழுந்த ஊன்றி, வலது காலை மடித்து, குதி'காலை எதிரியின் முகம் நோக்கி ஹோ.. என்று சப்தத்துடன் வீசினான். சப்தமும், கால் வீச்சும் ஒன்றாய்க் கலந்தன. அதிர்ஷ்டவசமாய் அந்தப் பையனின் முகமும் அருகே வர, அந்தப் பையனின் தாடை மீது மாதவனின் குதிகால் முழுபலத்துடன் பட்டது. கைக்கிருந்ததை விட அதிகமான பலத்துடன், வேகத்துடன் தாளம் தப்பாது அந்த அடி விழுந்தது. அந்தப் பையன் துள்ளி கீழே விழுந்து மல்லாந்தான். அவன் பிருஷ்டமும் முதுகும் சொத்தென்று தரையைத் தாக்கின பின் மண்டை மண்ணில் மோதியது. விழுந்த வேகத்தில் அவன் கால்கள் உயர தூக்கின. அடுத்த ஸ்டெப் வலது காலை முன் வைத்து, இடது காலால் தூக்கப்பட்ட எதிரியின் காலை உதைக்க அந்தப் பையன் சொத்தென்று விழுந்தான். அவனது தொடையும் சேதாரமாகியது. இரண்டு பேரும் தரையில் கிடந்தார்கள். மாதவனுக்கு அபரிதமான சந்தோஷம் ஏற்பட்டது. படுத்திருந்

"போலீஸ்காரங்க தேடிட்டு வாறதுக்குள்ள நீயா போயிடு." என்று அந்த பையன்கள் பயமுறுத்தப் பட்டிருக்க வேண்டும். வாசலில் தயங்கி நின்ற பையன்களை 'தரதர' வென்று கூட்டிக் கொண்டு வந்து, குந்திட்டு உட்கார வைப்பதில் போலீசுக்கு சந்தோஷம் இருந்திருக்க வேண்டும். இது ஒரு கட்சி பிரச்சினை. இரண்டு கட்சிகளின் பிரச்சினை என்பதாய் போலீஸ் கருதியிருக்க வேண்டும். விஷயம் பெரிதாகியது. புகார் எழுத்தாகியது. எழுத்து பதிவாகியது. சட்டம் சோம்பலும், திமிருமாய் விரல் சொடுக்கியது. ஹோட்டலில் காசு பறித்தவர்கள் தானாய் ஸ்டேஷனுக்கு வந்து போலீசிற்கு வணக்கம் சொன்னார்கள்.

"துட்டு எங்க.." என்று போலீஸ் கேட்டதும் பையில் கைவிட்டு எடுத்து வைத்தார்கள்.

"சோறுதானா சாப்பிடற நீ. உன் கட்சி கொடி பிடிக்கறவனெல்லாம் உத்தமமா ஊருக்கு வந்த பொண்ணுங்களா கேலி பண்ணியிருக்கானே நியாயமா."

"அப்படிப்பட்ட பசங்க இல்லை சார்."

"அப்படியா உட்கார். வேன் நம்பர் என்ன. அந்த டிரைவரை கூப்பிடு. தஞ்சாவூருக்கு ஃபோன் போடு, உங்கப்பா யாரு அந்த குடுமி வச்சு, கழுத்துல மாலை போட்டிருப்பாரே அவருதானே. எட்டு அவரைப் போயி விவரம் சொல்லி இட்டா."

மாதவன் அப்பாவின் வருகைக்குத்தான் பயந்தான். அவர் வந்ததும் தலைகுனிந்தான். அவனுக்கு கால், கை, புஜம் எல்லாம் அப்போதுதான் வலிக்கத் தொடங்கியது.

## 13.

"ஐயா வாங்க." மேஜையின் விளிம்பில் கோணலாய் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் எழுந்திருந்து, கை கூப்பி அப்பாவை வரவேற்றார்.

"உட்காருங்க." நாற்காலி காட்டினார்.

அப்பா கை கூப்பலையும், தலையசைப்பையும் ஒன்றாய் செய்து இன்ஸ்பெக்டரின் மரியாதையையும், நாற்காலியின் மறுப்பையும் ஒரே நேரத்தில் தெரிவித்தார்.

"நான் இந்த ஸ்டேஷனுக்கு வந்து நாலு வருஷமாச்சு. பல தடவை உங்களைப் பாத்திருக்கேன். ஒருக்கா காந்தி படம் திறந்து வச்சீங்களே



அப்ப ஐயா யாருன்னு கேட்டு, ஊர் சொல்ல விவரம் தெரிஞ்சிருக்கேன். போலீஸ்காரன் கெட்டவங்களை மட்டும் விசாரிச்சு வச்சுக்க மாட்டான், நல்லவங்களையும் விசாரிச்சு வைப்பான். ஏன்னா அவனுக்கு கெடுதல்னு வரும்போது நல்லவங்க நாலு பேர் துணை வேணும். மத்தியஸ்தம் பேச சரியானவங்க துணை வேணும். உங்களுக்கு என்னைத் தெரியாத இருக்கலாம்."

போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னைத் தெரியுமா என்பதுபோல அப்பாவைப் பார்த்து பேச்சை நிறுத்தினார்.

"தெரியாத என்ன. இன்ஸ்பெக்டர் ஜான் பிரிட்டோன்னா தஞ்சாவூர்லேர்ந்து கும்பகோணம் வரைக்கும் எல்லோர்க்கும் தெரியறதே. ஜனங்க உங்க பேரைச் சொல்லி, ஐயோ அவர் வரார்னு ஒதுங்கிப்போறதே."

"கெட்டவன் ஒதுங்குவான். நல்லவன் ஒதுங்க வேண்டிய அவசியமில்லை."

ஜான்பிரிட்டோ நாடக பாணியில் பேசினார்.

"சில கெட்டவாள நீங்க ஹாண்டில் பண்றதப் பார்க்கறபோது, நல்லவாளுக்கும் வயிறு கலக்கும். இதைப் பார்க்க வாண்டாம்னு கெட்டவாகிட்டேர்ந்து ஒதுங்கி இருக்கத் தோணும். அது உங்களக் கண்டு ஒதுங்கறதில்லை.

இரண்யகசிபுவ மடியில் போட்டு நரசிம்மர் கிழிச்சபோது 'பிரகலாதன் கண்ணை மூடிண்டு கையைக் கூப்பிண்டுட்டான். அது அப்பாவை கொல்ற பயம் மட்டுமில்லை. அப்பாவை வதை பண்ற நரசிம்மனைப் பார்க்கவும் பிரகலாதனுக்குப் பயம். ஊர் ஜனங்களுக்கு உங்க மேல ஒரு நரசிம்ம பயம்."

"அடேங்கப்பா. காவியமா தூக்கி வச்சிட்டீங்க. கேக்க குளுமையாதான் இருக்கு. இதெல்லாம் புள்ளைக்கு சொல்லித் தரக்கூடாதா. பிரகலாதனைப் பத்தி அவங்கிட்ட பேசியிருக்கப்படாதா. அவங்கிட்ட கதை சொல்றபோது நரசிம்மரைத் தூக்கி சொல்லிட்டீங்க போலிருக்கு. நடுத்தெருவில் சண்டை போட்டு, ஒரு ஆள் தொடையை மிதிச்சிருக்கான். ரெண்டு அங்குலம் தள்ளி மிதிச்சிருந்தா இந்த சோம்பேறி விரைக்கொட்டை மிதிப்பட்டிருக்கும். அப்புறம் கண்ணை மூடி என்ன, கையக் கூப்பி என்ன, ஐயர் புள்ளை கம்பி எண்றாங்கற அசிங்கம்தான் ஏற்பட்டிருக்கும். அடிதடி

தனை பண்றவனை நாங்க விடுறதில்லீங்க."

"தண்டிச்சிருவீங்களோ."

"என்னது."

"இதுக்கு, என்ன தண்டனை உண்டோ அதை தயங்காம கொடுக்கறதுல்லோ."

"அடேங்கப்பா.. பெரிய மனுஷாள் பெரிய மனுஷாள்தான். எந்த சந்தர்ப்பத்திலேயும் மாறுறதில்லை. என்னப்பா மாதவன், உங்கப்பா சொல்றத கேட்டியா. தண்டிச்சிடலாமா. எழுபத்தஞ்சுல புக் பண்ணி உள்ள போட்டுருவேன். ஆனா உன் பக்கம் ஒரு நியாயம் இருக்கு. நானூறு ரூபாயை ஆள் வச்சு புடுங்கிட்டான்ற கோபத்துல செய்துட்ட. பொண்ணுங்கள கேலி பண்ணி, கார் கண்ணாடி உடைச்ச அவங்க பலதும் செய்தது தாங்காம கை நீட்டிட்ட. அப்ப நாங்க எனத்துக்கு இருக்கோம். புடிங்களா. ஐயா இத இது இப்படி ஆச்சன்னு ஒரு வெள்ளை பேப்பர்ல எழுதிக் கொடுத்திருந்தா நாங்க விசாரிச்சிருப்பமில்ல. படிச்ச புள்ள நல்ல குடும்பத்துப் புள்ள நீ ரோடு சண்டை போட்டா கைக்கென்ன மதிப்பு. பதில் சொல்லுப்பா."

மாதவன் பதில் சொல்லாது அவரையே பார்த்தபடி நின்றிருந்தான். அவன் பார்வையில் ஒரு அலட்சியமும், விறைப்பும் இருந்தன. அதைக் குறைக்க இன்ஸ்பெக்டர் ஜான்பிரிட்டோ முடிவு செய்தார். மெல்ல சிரித்தார்.

"உன் பக்கம் என்ன நியாயம் இருக்கட்டும். அடிதடில இறங்கிட்டவன் இன்னொரு அநியாயக்காரன். சட்டத்த அலட்சியம் பண்றவன். சினிமால ஹீரோ வசனம் பேசறான்ல. சட்டம் தன் வேலைய செய்யல. நான் சட்டத்த கையில எடுத்துக்கிட்டேன்னு அதில இன்ஸ்பையா ஆகியிருப்பீங்க. சட்டத்த சரியானபடி அணுகினாதான் சட்டம் அதன் வேலைய செய்யும். வீட்ல உட்கார்ந்து அழுதா சட்டத்துக்கு காது கேக்காது. நீ நடு ரோட்ல அடிச்சது தப்பு. என்ன சொல்ற."

இப்போது மாதவன் பேசாதிருந்தான். ஆனால் வயிற்றிலிருந்து ஒரு பயம் நெஞ்சுக்குள் உதறி உதறி ஓடிக் கொண்டிருந்தது. அதேசமயம், 'ஐயா தப்புயா.' என்று சொல்லவும் வெட்கமாக இருந்தது. ஒரு யுத்தம் செய்த பின் அந்த யுத்தத்திற்காக மன்னிப்பு கேட்பது யுத்தத்திற்கு அவமானம். அந்த வீரனுக்கும் அவமானம் என்று தோன்றிற்று. இன்ஸ்பெக்டர் ஜான்பிரிட்டோ அவன் முகபாவத்



தைக் கூர்ந்து கவனித்தார். முகம் மாறினார். ஓரக்கண்ணால் ஐயர் முகத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டார். ஐயர் முகம் சலனமற்று எல்லா பாரத்தையும் கடவுள் தலையில் இறக்கி வைத்து விட்டது தெரிந்தது. இங்கு நிற்க வேண்டியிருக்கிறதே என்கிற வேதனை இருந்தது.

"உனக்கு நான் பேசறது புரியலையில்லையா." இன்ஸ்பெக்டர் அவனுக்கு அருகே நின்று கேட்டார். மாதவன் பயந்தான்.

"புரிய வைக்கிறேன்."

அவனிடமிருந்து திரும்பினார். மாதவன் முகம் மறுபடி சாதாரணமாயிற்று. அவனிடமிருந்து மூன்று தப்படி நடந்தபோது ஒரு அலட்சியம் தோன்றத் துவங்கியது. இன்ஸ்பெக்டர் சட்டென்று ஒரே தாவலில் அவனை அணுகி பளீரென்று அவன் கன்னத்தில் அறைந்தார். மாதவனுக்குப் பொறி கலங்கியது. அடி தாங்காமல் சொத்தென்று தரையில் விழுந்தான். கன்னத்தைப் பொத்திக் கொண்டான்.

"நோகுதா. கிர்ன்னு வருதா. சண்டைக்குப் போறவன் எதுக்கும் தயாராய் இருக்கணும். இப்ப கொடுத்தது சாம்பிள். இந்த மேஜையில எத்தனை பேரை லாடம் கட்டியிருக்கேன் தெரியுமா. எழுந்திரு. இங்க வா. இந்த மேஜையில குப்புற படு. எழுந்திருடா." அவரது வலது பூட்ஸ் கால் எழுந்து முகத்திற்கு முன்னே நின்றது. மிக மெதுவாய் அவன் முகத்தில் இடித்தது. மாதவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான். அப்பா இடது கையால் முகத்தைப் பொத்திக் கொண்டார்.

"இங்க.. இங்க.." என்று மேஜையை சுட்டிக் காட்ட அவன் மேஜையின் மீது குப்புறப்படுத்தான். ஒரு கான்ஸ்டபிள் தலைமயிரைப் பிடித்துக் கொள்ள, இன்னொரு கான்ஸ்டபிள் குப்புறக் கிடந்த அவன் முழங்கால் வளைவு மீது லத்தியால் அழுத்திக் கொண்டார். அந்த இரண்டு கான்ஸ்டபிளுக்கும் லாடம் கட்டுவது சிரிப்பான விஷயம் போலும். அதிகமான இளிப்போடு அவர்கள் செயல்பட்டார்கள். லட்டியால் முழங்கால்கள் அழுத்தப்பட, பாதங்கள் மேல் நோக்கி நின்றன.

"இப்ப இந்த கால்ல அடிச்சேன்னா தலைக்கு ரத்தம் போகும். விர்ன்னு ஏறும். ஒரு இருபது முப்பது தடவை அடிச்சுட்டு சட்டுன்னு நிமிர்த்துவோம். மண்டை ரத்தம் உடம்புக்கு இறங்கும்.

சன்னு இறங்கும். மரண வேதனை, மரண வேதனைன்றாங்களே அப்பத்தான் என்னான்னு புரியும். ஏம்பா முப்பத்தாறு பன்னிரெண்டு நம்பிக்கு கல்யாண நட்சத்திரமாமா."

"நட்சத்திரமாம் சார்."

"நீங்க, நீங்க போங்க. நான் தம்பிய கொஞ்சம் விசாரிச்சிட்டு அனுப்பறேன்."

அப்பா பேசாமல் நின்றார்.

"இந்த பசங்க இங்க வரும்போது புரியலைய்யா. இப்ப புரிஞ்சு போச்சு. இவங்க மூஞ்சி எப்படி வீங்கியிருக்கு பாருங்க. மேலுதடு, கீழ் உதடு, முகவாய்க் கட்டை எல்லாம் வீங்கிப் போயிருக்கு. கேட்டா ஹோம்னு சத்தம் போட்டு எட்டி உதைச்சானாம். இப்ப வர்ற சினிமா பண்ற தப்புய்யா இது. வன்முறை சொல்லித் தர்றாங்க. ஆறு பேரை அடிச்சிட்டு ஹீரோ அலுங்காம நடந்து போறதா காட்டறாங்க. அது எப்படி முடியும். அது நிஜம் இல்லீங்க. உங்க புள்ளை அடிச்சது இன்னும் என் கை எரியுது. அடங்க இன்னும் அரைமணி நேரம் ஆகும். அடிச்சா நோகும்னு சினிமால காட்டல. நாங்க காட்ட வேணாமா. எல்லாரும் வன்முறைல இறங்கிட்டா பூமி தாங்குமா. நரசிம்மர் கடைசியில தான் வருவாரு. அதுக்கு முன்னாடி நாங்க நடவடிக்கை எடுக்க வேணாமா. நீங்க போங்க."

"நான் இருக்கேன்."

அப்பா அமைதியான தீர்மானத்துடன் பேசினார்.

"அவரு புகார் கொடுத்தவரு. அதனால அவரை அடிக்க மாட்டோம்னு பாக்கறீங்களா. நாலு பேரை அடிச்சிட்டு வந்து புகார் கொடுத்துட்டா அடிச்சவன் உத்தமனாயிட முடியுமா. ஐயா அவன் இந்த மாதிரி செய்துட்டான்னு எங்கிட்ட வந்து சொன்னா அது மரியாதை. அடிதடில ஈடுபட்டா எங்களுக்கு எல்லாரும் ஒண்ணுதான். ஒரு ஐயர் பையன் அடிதடில ஈடுபடறான்னா, அது பர்ஸனலா எனக்குப் புடிக்கலை."

"எனக்குப் புரியறது."

"அப்ப போங்க. நான் அடிக்க மாட்டேன்னு நினைக்கிறீங்களா."

"அப்படி அடிச்சா மரண வேதனை வரும்னு சொல்றேன். நான் நின்னு எம்புள்ளைய கூட்டிட்டு போகணுமோன்னோ, கைத்தாங்கலா கூட்டிட்டுப் போக ஆள்வேணுமோன்னோ, நான் அதுக்காகத் தான் நிக்கறேன்."



"என்ன தம்பி ஆரம்பிக்கலாமா." மாதவன் முகவாயை மேஜையில் வைத்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இனி அடிதடில ஈடுபடறதில்லைன்னு சொல்லு."

அவர் கேள்விக்கு பதில் சொல்லாது மறுப்பைக் காட்டி அமைதியாக இருந்தான்.

"ரோட்ல போற பொம்பளைய கேலி பண்ணுவியா. கார் கண்ணாடில கல் எறிவியா."

இன்ஸ்பெக்டர் சடேரென்று அறையின் மூலைக்கு ஓடி அங்கே உட்கார்ந்திருந்த இரண்டு பேர் முதுகிலும் படேர் படேர் என்று அறைந்தார். தலையைப் பிடித்து உலுக்கினார். படுத்திருந்த நிலையிலிருந்து அறையின் மூலை தெரியவில்லை.

"மாட்டேங்க. இனி சாமி சத்தியமா செய்ய மாட்டோங்க." இரண்டு பேரும் அலறினார்கள். அடித்த இடத்தை வலி தாங்காமல் தடவிக் கொண்டார்கள்.

"சாமி, உங்களுக்கு எதுடா சாமி."

ஏதோ கட்சியின் பெயரைச் "சொல்லித் திட்டினார். அவர்களை கழுத்தைப் பிடித்து லாக்-அப்பிற்குள் நெட்டித் தள்ளினார். கதவு சாத்தினார்.

"அவன் பொறுக்கி. அப்படித்தான் இருப்பான். நீ அடிதடில இறங்கினதுதான் தப்பு. சொல்லு இனிமே அடிதடில இறங்க மாட்டேன்னு சொல்லு."

மாதவன் அந்த நேரடியான கேள்விக்கு மௌனம் சாதித்தான். பாதங்களை இன்னும் உயரத் தூக்கினான்.

"எனக்குப் புரிஞ்சு போச்சு. உங்களுக்கு வீரம் இருக்கான்னு சோதிச்சுப் பார்க்கிறீங்க. துணிஞ்சவனுக்கு தூக்கு மேடை பஞ்சு மெத்தைன்னு உள்ளுக்குள்ள வசனம் பேசிக்கிட்டிருக்கீங்க. ஒரு லெவல் வரைக்கும் அசிங்கப் பட்டுட்டோம். இனி மொத்தமும் பாத்துடலாம்னு நினைக்கிறீங்க. தூக்கு மேடை பஞ்சு மெத்தையா இருக்கலாம். போலீஸ் ஸ்டேஷன் பஞ்சு மெத்தை இல்லை. முப்பத்தாறு பன்னிரெண்டு இறக்கப்பிடி."

லட்டி முழங்காலை நெரித்தது. முதலடி வலது உள்ளங்காலில் விழுந்தது. அடுத்த அடி இடது உள்ளங்காலில் விழுந்தது. நெஞ்சு குலுங்கியது. அடிவேகத்தில் மார்பு மரம் ஏறி உராய்ந்தது. மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு.. மிக பலமாய் பாதங்கள் தாக்கப்பட்டன. ஒவ்வொரு அடிக்கும் கண்ணுக்குள்

ரத்தம் தெறித்தது. காதுக்குள் ரத்தம் வழிந்தது. தொண்டைக்குள் ரவா தோசை காரம் எட்டிப் பார்த்து உள்ளே போயிற்று. காதுகளில் குத்துவலி ஏற்பட்டது. "ஸ்டாண்ட் அப்." ஜான் பிரிட்டோ கத்தினார். சட்டென்று சட்டைக் காலரைப் பிடித்து நிற்க வைத்தார்கள். மாதவன் சுருண்டு விழுந்தான். போலீஸ் ஸ்டேஷன் சுவர் கண் முன்னே எழும்பி, தலைக்கு மேல் போய், பின் பக்கம் சரிந்து, கால் வழியே நகர்ந்து, மறுபடியும் பழைய நிலைக்கு வந்தது. யாரும் குலுக்காமலேயே போலீஸ் ஸ்டேஷன் குலுங்கியது. கண்கள் சொருகிக் கொண்டன. மூக்கில் நீர் வழிந்தது. காதுகளில் ரீங்காரம் அதிகரித்தது. தலை, முதுகு, பிடரி எல்லாவற்றிலும் கடுமையான வலி இருந்தது. மாதவன் அக்குளில் லட்டியைக் கொடுத்து போலீஸார் தூக்கினார்கள். தள்ளாடும் முன் நிற்க வைத்தார்கள். மேஜையிலிருந்த முன்னூறு ரூபாயை எடுத்து, கசக்கி ஜான்பிரிட்டோ அவன் முகத்தில் வீசினார்.

"நீ பார்ப்பானே இல்லடா," என்று கத்தினார். "நீ வெளில போ." என்று அவன் முதுகில் கை வைத்துத் தள்ளினார். மாதவன் அப்பாவின் எதிரே போய் நின்றான். தள்ளாடினான். அப்பாவைத் தாண்டினான். உள்ளங்காலைத் தரையில் வைக்கும் போதெல்லாம் வலித்தது. காலை அகட்டி தெருவில் வீடு நோக்கி நடந்தான். அந்த வலிக்கு தெருப்புழுதியின் மிருது இதமாய் இருப்பதுபோல ஒரு பிரமை தோன்றியது. கடைத்தெருவில் நிறைய பேர் அவனை வேடிக்கைப் பார்த்தார்கள்.

"உன்னையும் அடிச்சுட்டாங்களா. நீதான போய் புகார் கொடுத்த. யார் அடிச்சது ஜான்பிரிட்டோவா. அந்தாளு ரொம்ப முரடம்ப்பா." அவன் முதுகுக்குப் பின்னால் பேசினார்கள். யாரையேனும் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டுமென்று மாதவனுக்குத் தோன்றிற்று. திரும்பி அப்பா வருகிறாரா என்று பார்த்தான். அப்பா வரவில்லை. மாதவன் தனியே நடக்கத் துவங்கினான். வீட்டிற்குப் படியேறி கொல்லைப்புறம் போய் உட்கார்ந்தான். துவைக்கிற கல்லுக்குக் கீழே அமர்ந்து, முதுகை கல்லில் சாய்த்துக் கொண்டான். அவன் கண்ணிலிருந்து ஜலம் வழிந்தது. ஆனால் அது அழுகையில்லை. அது துக்கம். ஒருவர் தன் வலியை, அவமானத்தை யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியாது என்று தெரிந்து போன துக்கம். யுத்தத்திற்குத் தயார் என்று



சொல்லி துணிந்து இறங்கியவன் எல்லோருமே, தனிமைப்படுத்தப் பட்டுத்தான் ஆக வேண்டும் என்கிற துக்கம்.

மாதவனுக்கு அவன் துக்கமும், அழுகையும் பிடித்தன.

## 14

"என்ன ஐயரே, பையன போலீஸ்ல அடிச்சுட் டாங்களா. லாடம் கட்டினதா சொன்னாங்க." மாதவன் அப்பாவை ஊர் மறித்துக் கொண்டது. அது சிறிய ஊர். தஞ்சை நகருக்கு அருகே இருக்கிற கிராமம். கும்பகோணத்திற்குப் போகிற வழி என்பதால் ஒரு பஸ் போகிற ரூட்டும், பஸ் போகிற வழி என்பதால் கடைத்தெருவும், ஏற்பட்ட இடம். அந்த கடைத்தெருவே ஊரின் ஹிருதயம். அதுவே ஊரின் தகவல் மையம். ஒவ்வொரு வீட்டில் நடப்பதும், இறப்பும், பிறப்பும், அங்கே நிச்சயம் பேசப்படும்.

மாதவன் அப்பா ஊர் கேட்ட கேள்விக்கு பேசாது நின்றார். அவர் மௌனத்தை ஊர் மிகுந்த துக்கம் என்பதாய் எடுத்துக் கொண்டது.

"போலீஸ்காரனுங்க அப்படித்தான். அடிதடி சண்டைன்னா வெல்லக்கட்டி மாதிரி, அடிதடில இருக்கறவன் கண்டா போலீஸ்காரனுக்கு பயம். அவன் அடிச்சவனையும் அடிப்பான். அடி வாங்கினவனையும் அடிப்பான். எதுனால அடிச்சான். ஏன் அடிச்சான்றதெல்லாம் அப்புறம். நான் ஒருத்தன் இருக்கச்சொல்ல நீ யார்ரா அடிக்கறதுன்னு அடிப்பான்."

யாரோ சகலமும் தெரிந்ததுபோல பேசினார்கள்.

"லாடம் கட்டற அளவுக்கு ஜான்பிரிட்டோ போக மாட்டாரே. அதுதான் ஆச்சரியம் எனக்கு."

வேறு யாரோ வியந்தார்கள்.

"முறைச்சிருப்பான். கை கால் ஆட்டி பேசியிருப்பான். போலீஸ் கடுப்பாயிட்டிருக்கும்."

"மாதவன் நல்ல புள்ளைப்பா. வர்றது போறதே தெரியாது."

"அதுதான் லாடம் கட்டினதுக்கே காரணம். போலீஸ் இப்ப ரௌடிங்கள அடிக்கறதேயில்ல. அவங்களண்ட பொறுமையா போயிடும். ரெண்டு, மாசம் ஒரு வருஷம் போயி இருன்னு மாமியார் வீட்டுக்கு அனுப்பிச்சிரும். புதுசா ஒருத்தன் அடிதடில இறங்கினான் பாருங்க. அவனை போலீஸ்

டின்னு கட்டிடுடுத்து. அவன் ரெளடியாயிட கூடாதுன்னு பயமுறுத்தது."

"அடி வாங்கறவன் தானப்பா ரெளடியாகறான்."

"அது வேற விஷயம். இத பாரு. புள்ளை எடாகூடம் பண்ண அப்பாவுக்கு கஷ்டமாகுது. நீங்க போங்க ஐயரே. போயி புள்ளைக்கு நல்ல வார்த்தை சொல்லுங்க. படுக்காத, சாய்ஞ்சாப் போல உட்கார சொல்லுங்க. படுத்தா தலைசுத்தும்."

மாதவனின் அப்பா ஊரின் இரக்கத்தை மௌனமாக ஏற்றுக் கொண்டு வீடு நோக்கி நடந்தார். அவர் மனைவி பிள்ளையைப் பார்க்க கொல்லைப்புறம் ஓடுவதும், வாசலுக்கு வந்து அவர் வருகையைப் பார்ப்பதுமாய் இருந்தாள்.

"என்ன ஆச்சு. என்னமோ மாதிரி உட்கார்ந்துண்டிருக்கான். நீங்களும் கவலையா வரேள்."

அவள் குரலில் பதட்டத்தை விட பயம் அதிகமாக இருந்தது.

"நீ புள்ள வேணும்.. புள்ளை வேணும்னு ஆசைப்பட்டது தப்பு. நீ மூணாவதும் பொண்ணாவே பெத்துருக்கலாம்."

"ஏன் என்ன பண்ணினான்."

"ரெளடி. ரெளடியாயிட்டான். அந்த பொண்ணுங்கிட்ட கை நீட்டி காசு வாங்கியிருக்கான். ஊர் கத்தி காட்டினதுக்கு ஏதாவது போட்டு கொடுங்கோன்னு கெஞ்சியிருக்கான். பொம்மனாட்டி கிட்டேர்ந்து வாங்கின காசு அதமம். அதமம் ஆங்காரம் தரும். ஆங்காரம் ரெளடித்தனம் தரும். யாரோ அந்த காசை புடுங்கிக்க, உன் புள்ளைக்கு கோபம் வந்துடுத்து. யாரையோ அடிச்சு, யாரையோ மிதிச்சு போலீஸ் வரைக்கும் போயிருக்கு. அவனை ஸ்டேஷனுல, நீ மனுஷன் இல்லை. மாடுன்னு சொல்லி, என்னமோ லாடமாம் அது கட்டி அனுப்பிச்சிருக்கா."

"காஸ்லியா." அவர் மனைவி வெகுளியாகக் கேட்டாள்.

"தலையில் லாடம் கட்டுவாளான்னு எனக்குத் தெரியாது. ஆனா மாட்டை விட கேவலமா அடி வாங்கினான்."

"உங்க எதிர்க்கயா அடிச்சா, வாண்டான்னு சொல்ல வேண்டியதுதானே. இந்த ஒரு தடவை மன்னிச்சுக்கோங்கோன்னு சொல்லியிருக்கப் படாதோ."

"நான் கேட்டா அவனை மன்னிப்பாளா.



அவன்ல கேக்கணும். உன் புள்ளை எங்கேயோ பெரிய தப்பு பண்ணறான். இப்ப பண்ணினதை விட பெரிய பெரிய தப்பெல்லாம் பண்ணப் போறானோன்னு பயமா இருக்கு. சில பேருக்கு புத்தி சொன்னா ஆங்காரம் வந்துரும். நான் சொல்லப் போறதில்லை. இனி அடிதடில ஈடுபடாத திருந்தா அவன் இங்க இருக்கட்டும். இல்லையா கண் காணாத எங்கயாவது போகட்டும்."

"வேண்டாம். இப்போதைக்கு ஒண்ணும் பேச வேண்டாம்." மாதவன் அம்மா பரபரத்தாள்.

"வேதனையோட வேதனையா இதையும் பேசிடறது நல்லது. அவனைப் போயி உள்ள கூட்டிண்டு வா. என் எதிர்க்க உட்கார சொல்லு. ரெண்டே கேள்வி அவனைக் கேக்கப் போறேன். அவன் சொல்ற பதிலை பொறுத்துதான் அவன் வாழ்க்கை அமையும்."

கொல்லைப்புறத்திலிருந்து மாதவன் வர மறுத்தாலும் அவன் அம்மா வலுக்கட்டாயமாய் அவனைக் கூட்டி வந்தாள். மாதவன் அப்பாவின் எதிரே உட்கார்ந்தான். அப்பா தரைநோக்கி தீவிர சிந்தனையிலிருந்தார். நிதானமாய் மாதவனை நோக்கி ஊடுருவிப் பார்த்தார். மெல்ல சிரித்தார்.

"மாதவா." என்று அடிக்குரலில் அவனைக் கூப்பிட்டார். என்ன நடந்தது என்று அப்பா கேட்கப் போவதாய், அதற்கு விரிவாய் விளக்கம் சொல்லும் முயற்சியாய் மாதவன் தொண்டையை செருமிக் கொண்டான்.

"தெருவில் ஒரு பர்ஸ் இருக்கு மாதவா. உள்ள கலைவ நோட்டா பத்தாயிரம் ரூபா இருக்கு. உங்கிட்ட பத்து பைசாகூட இல்லை. அதில விலாசமோ, பேரோ எதுவுமில்லை. நீ என்ன பண்ணுவே."

பர்ஸில் பத்தாயிரம் காசு என்றதும் அம்மாவும் அருகில் உட்கார்ந்து கொண்டாள். மாதவன் முகம் சுருக்கி அப்பாவைப் பார்த்தான். என்ன செய்வேன் என்று யோசித்தான். பேண்ட், சட்டை, ரவா தோசை, கோதுமை அல்வா, தோல் செருப்பு என்பதாய் பட்டியல் மனசுக்குள் ஓடியது.

"யாருன்னு தெரிஞ்சா அவாகிட்ட கொடுப்பேன். யாருதுன்னு தெரியலைன்னா கடவுள் எனக்கு கொடுத்ததா எடுத்துப்பேன்."

"நிச்சயமாவா." அப்பா அவனைக் கூர்ந்து பார்த்துக் கேட்டார்.

ரெண்டுகெட்டானா இருப்பே. பாதி நேரம் பயப்படுவே. மீதி நேரம் ஆத்திரப்படுவே. எப்போ எது செய்யணும்னு தெரியாம திண்டாடுவே."

"நான் செய்தது தப்பாப்பா."

"என்னைக் கேட்டு நீ எதுவும் தெரிஞ்சுக்க வேண்டாம். நீயே தெரிஞ்சுக்கோ. இனிமே உனக்கு பாடம் சொல்லிக் கொடுத்து வராது."

"என்னை தூரத்தா மாதிரி பேசறியே."

"இன்னொரு தடவை என்னால போலீஸ் ஸ்டேஷன் போக முடியாது மாதவா, நீ அடி படறதை என்னால பார்க்க முடியாது."

"உனக்கு அவமானமாயிடுத்தா."

"இல்லை. ஒரு மாடு பாரம் இழுக்கறது அவமானமில்லை. ஐயோ இத்தனை பாரம் இழுக்கறதேங்கற வேதனைதான். ஒண்ணு பாரத்திலேர்ந்து மாட்டை அவிழ்க்கணும். இல்லை மூஞ்சியை திருப்பிக்கணும். ரெண்டுமில்லாத வெறுமனே புலம்பிண்டிருக்கறது எனக்கும் வேதனை, மாட்டுக்கும் லாபமில்லை. நான் மூஞ்சியை திருப்பிக்கறேன் மாதவா உங்கிட்டேர்ந்து, உன் வாழ்க்கைலேர்ந்து மூஞ்சியை திருப்பிக்கறேன்."

"ஒரு கை மாட்டுக்கு உதவியா வண்டிய தள்ளினா ஆகாதா." அம்மா கோபம் கொண்டவளாய் கேட்டாள்.

"எத்தனை தூரம் தள்ள முடியும். எத்தனை நாள் தள்ள முடியும்."

"எம்மேல கோபமாப்பா உனக்கு."

"இல்லை மாதவா. எனக்கு கோபமோ, சந்தோஷமோ இல்லை. உன் ஆசைக்கு நீ போராடற குணம் உனக்கு வந்துடுத்து. இன்னிக்கு தடுத்தா நாளைக்கு நான் செத்த பிறகு சபிப்பே. நான் இடைஞ்சல்னு நினைப்பே. நான் இடைஞ்சலா நிக்கக்கூடாதுன்னுதான் உன்னை, வெளில அனுப்பறேன். உங்கிட்ட கொடுக்கறதுக்கு எங்கிட்ட ஒண்ணுமில்லை. என் ஆசீர்வாதம்."

அம்மா விழித்தாள். மாதவன் தயங்கினான்.

"இது தண்டனையில்லை மாதவா. உனக்கு நான் பண்ற பெரிய உதவி. இதைப் பின்னால புரிஞ்சுப்பே. நீ கிளம்பு. உன்கிட்ட காசு இருக்கு. அது நீ சம்பாதிச்ச காசுன்னு உனக்கு கர்வம் இருக்கு. அந்த காசோட கிளம்பு."

"அப்பா நீ உன் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவே."



"பகவான் இருக்கார். அதை பத்தி நீ கொஞ்சம்கூட கவலைப்பட வேண்டாம். நீ கிளம்பு மாதவா."

அடுத்த அரைமணியில் தன்னிடமிருந்த சில துணிகளை ஒரு ஏர்பேக்கில் மடித்துக் கொண்டு ஒரு பொட்டலத்தில் மடித்த காசோடு மாதவன் அப்பா எதிரே நின்றான். மீனாட்சி கொடுத்த காசில் ஒரு ஐம்பது ரூபாயை எடுத்து. அப்பா வாங்கிக் கொண்டால்தான்' போவேன் என்று பிடிவாதம் பிடித்தான். அப்பா வாங்கிக் கொண்டார். அவன் அறியாத போது அவன் ஏர்பேக்கில் அதைச் சொருகினார். அவனை தடவிக் கொடுத்தார். மாதவன் அவரை நமஸ்கரித்துவிட்டு, "எனக்கு ஏதாவது சொல்லேம்ப்பா." என்று நின்றான்.

அவன் அப்பா கண்களை மூடிக் கொண்டார்.

## 15

மூன்று பக்கமும் ஓடுகள் சரிந்த முற்றத்தில், கள்வரோ, காக்கையோ இறங்கி விடலாகாது என்று எப்போதோ போட்ட இரும்புக் கம்பித் தடுப்பில் மாலை வெய்யில்பட்டு தகப்பன் மீதும், பிள்ளை மீதும் கோடு கோடாய் விழுந்திருந்தன. அம்மா சற்றுத் தொலைவிலிருந்து புருஷனையும், பிள்ளையையும் காதலோடும், கவலையோடும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இனியும் நீ குழந்தையில்லை மாதவா. நீயாய் சகலமும் தெரிந்து கொள்ள வேண்டிய வயது வந்துவிட்டது. பறக்கத் தெரிந்த குஞ்சுகளை கோழி அருகில் சேர்ப்பதில்லை. விரட்டி விரட்டி விலக்கி விடும். நீயும் நானும் விலகி நிற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. என் சுயநலத்துக்காக உன்னைக் குழந்தை, குழந்தையென்று பொய்யான வாஞ்சையுடன் உன்னை இறுக்கிக் கொண்டால், நீ பாழ்பட்டுப் போவாய். உன் மத்திம வயசில் எந்த விவரமும் தெரியாது போவாய். நீ உலகம் கத்துக்கணும்னே உன்னை வெளியே அனுப்பறேன். எல்லாம் எனக்குத் தெரியும். நானே பார்த்துக்கறேன்னு கிளம்பாம எனக்கு ஏதாவது சொல்லேம்ப்பான்னு நடு முற்றத்துல நிக்கறியே இது ஒண்ணு போறும். நாம ரெண்டு பேரும் சண்டைப் போட்டு பிரியலேன்னு இதுல தீர்மானமாயிடுத்து. நல்லதோ, கெட்டதோ நடக்கும்போது நாம் ஒருத்தரை ஒருத்தர் நினைச்சப்போம்னு

கேன். இது உடனே புரியாது. பல தடவை கவனிக்க பழகணும்னு தோணறது. இப்ப கேள்வி கேக்காதேன்னு மனசு சொல்றது."

"அவ்வளவுதான். அவ்வளவேதான்."

அப்பா கூவலாய் பேசினார். அருகே வந்து அவனை ஆரத்தழுவிக் கொண்டார்.

"ஜெய விஜயீ பவ. உனக்கு கொடுக்கறதுக்கு இப்ப என்கிட்ட ஏதும் இல்லை. இப்ப நான் சொல்லிக் கொடுத்தது எப்பவும் உன்னைக் காப்பாற்றும். என்னால என் பிள்ளைக்குன்னு செய்ய முடிஞ்சது ஒண்ணுதான். நான் உசிரோட இருக்கறவரைக்கும் தினமும் காத்தால ஏழு மணிக்கு ஆயிரத்து எட்டு காயத்ரி சொல்வேன். என் மனசார அதை உனக்குன்னு தத்தம் பண்ணறேன். எல்லாம் புரிஞ்சவனா நீ இருக்கணுங்கறது என் ஆசை. சௌக்யமா போயிட்டு வா."

மாதவன் அப்பாவை நமஸ்கரித்தான். கண்ணில் வளர்த்தவர்களை தனியே தவிக்க விட்டுட்டுப் போவதாய் ஒரு துக்கம் பொங்கியது. வாழ்க்கை தன்னைப் பிரித்து வேறெங்கோ இழுத்துப் போவது போல ஒரு பதட்டம் ஏற்பட்டது. எங்கும் போக வேண்டாம். எதையும் தேட வேண்டாம். இங்கே இந்த கோவில் சோறே போதும் என்று இருந்து விடலாமா என்று ஒரு அயர்ச்சி தோன்றியது. மாதவன் தோல் பையைப் பிடித்தபடி வெளியேறினான். திண்ணைக்கு வந்தான். நாளை காலை இந்த திண்ணையில் உட்கார முடியாது. இந்தத் தூணைப் பிடித்து நிற்க முடியாது. இனி வேறு ஏதோ திண்ணை. வேறு ஏதோ தூண். வேறு ஏதோ உலகம். அந்தத் தெருவே அவனுக்கு வித்தியாசப் பட்டது.

அவன் தெருவில் இறங்கி நடக்க உள்ளே அம்மாவின் அழுகை கேட்டது. பதட்டம் ஏற்பட்டது. உள்ளே போய் அம்மாவை சமாதானப்படுத்தலாமா என்று தோன்றிற்று. ஒரு நிமிடம் நிதானித்தான். என்னவென்று சமாதானப்படுத்துவது. எவ்வளவு நேரம். இதனால் என்ன பயன். கேள்வி கேட்டான். மனசு 'ஒன்றுமில்லை' என்று பதில் சொல்லியது. 'உன் வேலையைக் கவனிக்கப் போ.' என்று உத்தரவிட்டது. மாதவன் சலனமின்றி தஞ்சாவூர் ஜங்ஷன் நோக்கி நடந்தான். நடக்கும்போது உள்ளங்கால் வலித்தது. முழங்கால்கள் இரும்பைக் கட்டியதுபோல கனத்தன. தொடை இடுக்கில்



நெரிகட்டிக் கொண்டதுபோல் கால் அசைக்க அசைக்க ஒரு வலி ஏற்பட்டது.

'இப்போது எங்கே போவது. சென்னைக்கா, சென்னைப் பட்டணத்துக்கா. எல்லோரும் பேசுவது போல் அங்கே போகிறேனா. இல்லை பம்பாய், கல்கத்தா என்று வேறு நகரம் போய் விடுவோமா.'

'வேண்டாம். சென்னைக்கே போவோம். மீனாட்சியைப் பார்ப்போம். ஏதாவது கம்பெனியில் வேலை போட்டுக் கொடுக்கும்படி கெஞ்சுவோம். அழுவோம். நானூறு, ஐநூறு என்று சம்பளம் கொடுத்தாலும் ஒப்புக் கொள்வோம். கால் ஊன்றி இனி சோற்றுக்குக் கவலையில்லை என்கிற போது, வேறு ஊர் பற்றி யோசிக்கலாம். போகும் முன் விஜயலட்சுமியிடம் சொல்லி விட்டுப் போகலாம். நான் மீனாட்சியைப் பார்க்கப் போறேன். ஏதாவது செய்தி உண்டா என்று சொல்லலாம்.'

தஞ்சாவூரை அடையும்போதே இருட்டிவிட்டது. விஜயலட்சுமி வீட்டு வாசலில், அகல் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால் கதவுகள் சாத்தப் பட்டிருந்தன.

விஜயலட்சுமியின் அம்மா கதவை திறந்தாள். அவள் ஜங்ஷனுக்கு புத்தகம் வாங்கப் போயிருப் பதாய் சொன்னாள்.

"ஒண்ணும் இல்லெ. நான் வேலை விஷயமா மெட்ராஸுக்குப் போறேன்னு விஜயலட்சுமிகிட்ட சொல்லுங்க."

அந்த அம்மாவின் அடுத்த கேள்வியைத்தடுக்க அவசரமாய் படியிறங்கி பெரிய கடைத்தெரு வழியே ஜங்ஷன் நோக்கி நடந்தான். ராமேஸ்வரம் வரும். இரண்டாவது வகுப்பு ஜெனரல் கம்பார்ட்மெண்ட் டிக்கெட் வாங்கிக் கொண்டால், விடிகாலையில் சென்னை சேர்த்து விடுவார்கள். சில சமயம் ராமேஸ்வரம் காலியாய் கிடக்கும். தூங்கிக்கொண்டு கூட போகலாம். கொஞ்சம் தூங்கினால்தான் மனசிலுள்ள சோர்வு போகும்.

இப்போது மனசு என்ன சொல்கிறது. தன்னை ஊன்றிக் கவனித்தான். ஒரு சோர்வு. துக்கம், பயம், பரபரப்பு எல்லாம் இருக்கிறது. கூடவே ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஜெயிக்க முடியும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. ஜங்ஷன் படியேற விஜயலட்சுமி எதிர்பட்டாள்.

"ஏய், எங்கே." என்றாள். "மீனாட்சி கொடுத்த காசுக்கெல்லாம் புக்ஸா வாங்கிட்டேன். இன்னும்

# 16

கிடக்கும் தருணங்கள் உண்டு என்பதை ஏற்று
கொள்வதே வலிது. தன்னால் தீர்மானிக்க முடியாத
அந்த நேரத்தை, ஆளுமை செய்ய முடியாத அந்த
தருணத்தை தன்னிலும் மீறிய சக்தியிட
ஒப்படைத்து விட்டு, அமைதியாய் இருக்க வெகு
சிலருக்கே தெரியும். இப்படித் தெரிய, தன்னை
உற்றுப் பார்க்க வேண்டும்.

வெறிச்சோடிக் கிடந்த தஞ்சாவூர் ஜங்ஷனில்
உட்கார்ந்து அப்பா சொன்னபடி மாதவன் தன்னை
உற்றுப் பார்த்தான். "எங்கு வேண்டுமானாலும்
போ." மறுபடி மனசு சொல்லியது.

"எனக்கு ஏதாவது வழி செல்லுன்னா எங்க
வேணாலும் போகறிலே, திரும்பி வீட்டுக்கு
போயிட்டுமா."

"இல்லை, விடு உன் இடமில்லை."

"அப்படியானால் எங்கே இருக்கு என் உலகம்."

"வெளியே.. வெளியே.."

"அடச்சீ.. இந்த மனசை உத்துப் பார்க்கற
தெல்லாம் வீண் வேலை."

"அப்ப புத்தின்னு ஒன்னு எதுக்கு இருக்கு
மாதவா, கரெக்ட்டா யோசனை பண்ணு. மெட்ராஸ்
போறது சரியா, மதுரை போறது சரியா. இன்னும்
நாலு நாள் ஆகும், மீனாட்சி மெட்ராஸ் வர்றதுக்கு.
அதுவரைக்கும் சோத்துக்கு என்ன பண்ணுவே. காசு
செலவழிஞ்சு போய்; கிழிசலா அவ வீட்டுக்குப்
போறதுக்கு பதிலா, மதுரைக்குப் போய் மீனாட்சி
யைக் கண்டுபிடிக்க.. முடியுமா. அவ்வளவு பெரிய
ஊரில் மீனாட்சியைக் கண்டுபிடிக்க முடியுமா. என்
முடியாது. கோவிலுக்குத் தானே வந்தாகணும்.
பார்க்கலை. மதுரையில் என்ன பண்ணுவே.
மதுரையில இருக்கலேன்னா மெட்ராஸ் போகலாம்.
நீ மதுரையில் என்ன கத்தை கட்டுவே. நீ போயா
மெட்ராஸுக்குப் போய்.." யோசிக்க யோசிக்க
குழம்பியது. மறுபடியும் வெறுமை படர்ந்தது.
தலை நிமிர, ஸ்டேஷன் சுறுசுறுப்பாவதை உணர்ந்
தான். ஏதோ வண்டி வருவதற்கு ஆயத்தமாவதை
உணர்ந்தான்.

"என்ன வண்டிங்க வருது."

"ராமேஸ்வரம் பாஸஞ்சர்."

"அடிசக்கை.. அப்போ மெட்ராஸ்தான்."

மாதவன் சந்தோஷமாய் டிக்கெட் கவுண்டரை
நோக்கி ஓடினான். மூன்று பேர் நின்ற கியூவில்
மூச்சிரைக்க நின்று, எட்டி எட்டிப் பார்த்தான்.



"வண்டி வந்துடுச்சு, சார். டிக்கட் வாங்கணும்.
கொஞ்சம் வழி விடுங்க சார்."

முன்னால் இருப்பவரைக் கேட்டான். அவர்
நகர்ந்து கொள்ள அடுத்து நிற்பவரை நச்சரித்தான்.
கவுண்டரில் டிக்கெட் வாங்கிக் கொண்டிருப்
பவரைத் தாண்டி,

"மெட்ராஸுக்கு ஒரு டிக்கெட்," என கூச்ச
லிட்டான்.

"நாங்களும் மெட்ராஸ்தானே போறோம்.
உங்களுக்கு மட்டும் என்ன அவசரம்."

"வண்டி வந்துடுச்சே."

"அது ராமேஸ்வரம் வண்டி."

"அதுக்குத்தான் டிக்கட் கேக்கறேன்."

"கடவுளே. அது ராமேஸ்வரம் போற வண்டி.
ராமேஸ்வரம் பாஸஞ்சர் முன்னேயும் போகும்.
பின்னேயும் போகும். நீ எங்க போகணும்." பின்னால்
நின்றவர் தலையிலடித்துக் கொண்டார். அதற்குள்
அவன் நீட்டிய நூறு ரூபாயை கவுண்டரில் உருவிக்
கொண்டார்கள்.

"இந்த வண்டி மெட்ராஸ் போகாதா."

"போகும். முதல்ல ராமேஸ்வரம் போயிட்டு
நாளைக்கு சாயங்காலமா மெட்ராஸ் கிளம்பும்."

"எங்கய்யா போகணும்." டிக்கெட் கவுண்டர்
அதட்டியது.

மாதவன் விழித்தான். யோசித்தான். தன்
புத்தியை சீக்கிரம் பதில் சொல் என்று அதட்டினான்.
புத்தி பேசாதிருந்தது.

"எங்க போய்த் தொலையணும். திருச்சியா,
மதுரையா, ராமேஸ்வரமா."

"மதுரை." மெல்லிய, தேய்ந்த தோல்வியான
குரலில் பதில் சொன்னான்.

"மெட்ராஸ் போகணும்னிங்க." பின்னால்
நின்றவர் வம்புக்கிழுத்தார்.

"மதுரை போயிட்டு மெட்ராஸ் போறேன்."

"ஏன், ராமேஸ்வரம் போயிட்டு போறது.
தலையை சுத்திகூட மூக்கை தொடலாம்
தப்பில்லை." அவர் கேலிக்கு நாலு பேர் வாய்விட்டு
சிரித்தார்கள்.

வாழ்க்கையின் ஆரம்பமே கேலியாக
அமைவதை பார்த்து மாதவன் வேதனையுற்றான்.

"தயவு செய்து இதை வச்சுக்கிட்டு மெட்ராஸ்
டிக்கட் குடுங்க சார்." கேட்கலாமா, வேண்டாம்.
மறுபடியும் அவமானம் வரும். கடவுள் விருப்பம்

மதுரையெல்லாம் மதுரைக்கே போவோம்.

ஆனால் அது கடவுள் விருப்பமா. நம் குடும்ப என்று நிம்மதியா செய்ய முடியாமல் புத்தி தவித்தது விட்டதுக்குள் போக. வண்டி கிளம்பத் தயாரா இருந்தது. நீண்ட விசில் ஒலியோடு, பச்சைக்கொடி அசைந்தது.

"நஷ்டமான பயணமில்லேன்னு இந்த டிக்கெட்டை கிழிச்சுப் போட்டுட்டு, மெட்ராஸுக்கு வேற டிக்கட் வாங்கிடுவோமா."

காசு நஷ்டப்பட புத்தி ஒத்துக்கொள்ளவில்லை வண்டி நகர, மாதவன் உள்ளே தாவி ஏறினான் அவனுக்கு மதுரைக்குப் போவது பிடிக்கவில்லை ஆனால் மதுரைக்குப் பயணமானான். மறுபடி மனசை உற்றுப் பார்த்து, "நான் மதுரைக்கு போவது சரியா." என்று கேட்டான். மனசுக்குள்ளே அப்பா வாய்விட்டு சிரிப்பது கேட்டது.

"சபாஷ். எடுத்த உடனே இந்தளவு குழப்பமா. உன்னால உருப்பட முடியும்னு நினைக்கறயா. போ மதுரைக்குப் போ. எல்லா காசையும் மதுரை யிலேயே செலவழிச்சுட்டு மெட்ராஸுக்குக் கூட போக முடியாதபடி நின்னுடு. கிழிசல் சட்டையும் அழுக்கு வேஷ்டியோட திருட்டு ரயில் ஏறி திரும் தஞ்சாவூருக்கே வா. வேஷ்டியில பட்டை சாதம் கொடுப்பா. காவிரில தண்ணி இருக்கு. ஆனந்தமா திண்ணையில படுத்து தூங்கி.. தெரு நாய் மாதிரி புழுதியில அலைஞ்சு ஊரோடயே கிட.. பார் வீட்ல கல்யாணம். பார் வீட்டுல கருமாதின்னு திங்க சாத்தின்னுடு. கருமாதி சோறு திங்கக் கொடுத்த வச்சிருக்கணும். நாலு வீட்ல தொடர்ந்து சாப்பிட்டா மந்த சாவுக்கும், உன்னையே கூப்பிடுவா. சந் காட்டுக்கு கூட்டிண்டு போயி எஞ்சு பொணத்து எலும்பு எடுக்கச் சொல்லுவா. எடுத்தா இருபது ரூபா தருவா. அப்படி எடுக்கறவன் பேரு சவண்டி சவண்டி கொத்தன். அப்பா 'வைதீகம். புண்ணை சவண்டி, சபாஷ்.'

மனசு செய்த கற்பனையில் உடம்பு கிடுகிடுத்த ஆடியது. உள்ளே நகரக்கூட இடமில்லை. நல்ல கூட்டம். காலைக் கூட நகர்த்த தவங்க மாதவன் கக கூனிருக்கு அருகிலேயே உட்கார்ந்து கொண்டான் நாற்றம் குடலைப் பிடுங்கியது. மிகவும் மோசமான நிலைக்கு நான் தள்ளப்பட்டிருப்பதை உணர்ந் தான். தன்னை விதி எங்கோ இழுத்துக் கொண்டு போவதாய் வேதனைப்பட்டான். உள்ளே வேதனை



பின் விசிறலால், கேவல் எழுந்தது. "கடவுளே என் தன்னை இப்படி சோதிக்கிறீர்." என்ற ஏக்கம் படர்ந்தது. எல்லாவற்றையும் எல்லா செயல்களையும் எங்கோ ஒப்படைத்துவிட வேண்டும் என்று தோன்றியது. எதுவுமே செய்ய நான் லாயக்கில்லாதவன் என்கிற விம்மல் எழுந்தது. தன்னை லாயக்குள்ளவனாக மாற்ற யாரிடமோ கெஞ்ச வேண்டுமென்று விம்மல் எழுந்தது. இந்த வயதில் அம்மாவுடன் பாடிய அபிராமி அந்தாதி ஞாபகம் வந்தது.

'கொடியே இளவஞ்சிக்கொம்பே
எனக்கு வம்பே பழுத்த படியே
மறையின் பரிமளமே
பனிமால் இமயப் பிடியே
பிரமன் முதலாய தேவரைப்
பெற்ற அம்மே
அடியேன் இறந்து இங்கு இனிப்
பிறவாமல் வந்தாண்டுகொள்ளே.'

என்ன அர்த்தம் இதற்கு. இந்தப் பாட்டு என் இப்போது தோன்றுகிறது. ஒவ்வொரு தோல்வியும் சாவுதான். சாவு நிகர்த்த தோல்வி. மறுபடி மறுபடி தோல்வியுற்று சாகாமல், தோல்வியே ஏற்படாமல் ஆண்டருள் புரிவாய் என்று பாட்டு சொல்கிறதா. அம்மா. ஜெயகதீஸ்வரி சர்வலோக நாயகி. மீனாட்சி தாயே. எந்த வேதனையுமின்றி, தோல்வி எதுவும் சந்திக்காமல் என் பயணத்தை வெற்றியுடையதாக்கு.

உள்ளே அழுகை தோன்றியது. ஆரவாரம் குறைந்தது. மாதவன் தன் பயணத்தை கடவுளிடம் ஒப்படைத்தான். பேசாதிருந்தான்.

மீனாட்சி அந்த கெஸ்ட் அவுசில் தனி அறையில் படுத்திருந்தாள். அது அவள் அப்பாவின் கம்பெனி கெஸ்ட் ஹவுஸ். ஆறு அறைகளை அவள் தோழிகளுக்காக ஒழித்துக் கொடுத்திருந்தார்கள். அவள் அப்பா வந்து தங்கும் அறையை அவளுக்குக் கொடுத்திருந்தார்கள்.

"அப்பா இந்த ரூம்ல வேற யாரையும் தங்கவிட வேண்டாம் மேடம். ப்ளீஸ் உங்க ஃப்ரெண்ட்ஸ் யாரும் இங்க வரவேண்டாம். உங்க அப்பாவுடைய பி.ஏ. ரொம்ப பர்டிகுலரா இதைச் சொன்னார். உங்களை வேற எங்கேயும் தங்க வைக்கக்கூடாதுன்னு சொல்லிட்டார்."

சாப்பாடெல்லாம் ஒரே இடத்தில். தங்குவது மட்டும் தனி இடத்தில். அடுத்த ரூமிற்குப் போக,

நடிகத் தரும் நடத்தாக வேண்டும். அடுத்த அறையிலிருந்து பாட்டும் கூச்சலும் கேட்டன. அங்கு போய் கலந்து கொண்டால் திரும்பும்போது தோழியும் அவளுடனேயே இந்த அறைக்கு வந்துவிடக்கூடும். இந்த அறைக்கு வந்த பிறகு இங்கேயே தானும் தங்குவதாய் சொன்னாலும் சொல்லக்கூடும். மறுத்தால் வருத்தப்படக்கூடும்.

அப்பா இப்படி ஏன் சொன்னார் என்று தெரியவில்லை.

"உங்க அப்பா உங்களை காண்டாக்ட் பண்ணுவாருன்னு நினைக்கிறேன். ராத்திரி எட்டு மணிக்கு மேல ஃபோன் வரலாம். ஃபோன் வந்தா உங்களோட பேசணும்னு ஆசைப்படலாம். உங்க ஃப்ரெண்ட்ஸ்கூட நடுவில நீங்க போறது கஷ்டமாக இருக்கலாம். அதனால நீங்க இங்கேயே இருக்க."

"அப்பா எனக்கு ஏன் ஃபோன் பண்ணணும்."

"தெரியல. பண்ணுவாருன்னு நினைக்கிறேன்."

கம்பெனியின் ஜெனரல் மானேஜர், ஐம்பதுதாற வயது ஆள் குனிந்து கை கூப்பிவிட்டு நகர்ந்து போனார். அந்த மதுரை கம்பெனியில் சிறு புன் [illegible] இருந்தது. உரமத்தி பாதிக்கப்பட்டிருந்தது. அது பற்றிப் பேசுவாரோ. ஆனால் எந்த கம்பெனி பற்றியும் மீனாட்சிக்கு எதுவும் தெரியாது. தெரிந்து கொள்ள முயற்சித்தது இல்லை. சிநேகிதிகள் அங்கேயிருக்க தான் மட்டும் தனியே, இந்த ஏ.ஸி. அறையில் ஐரோப்பிய பாணி கட்டிலில் மயங்காது கிடப்பது வேதனையாக இருந்தது. ஆனால் வேறு வழியில்லை. இது பணத்தால் வரும் பிரச்சினை. பணம் சந்தோஷமான விஷயமில்லை. அது மிகுந்த கவலையைக் கொடுக்கிறது. அதைக் காப்பாற்ற எந்நேரமும் தூக்கமில்லாமல் இருக்க வேண்டியிருக்கிறது. தனிமைப்பட வேண்டியிருக்கிறது.

எங்க அப்பா ஃபோன் வந்தா நான் பேச இஷ்டமில்லைன்னு சொல்லிடுங்க என்று சொல்லி விட்டு போய்விடலாமா. தவறு. அப்பா தேவையில்லாமல் பேசமாட்டார். தேவையில்லாமல் பொறுப்பு தரமாட்டார். அப்பா எவ்வளவு செய்திருக்கிறார். அவருக்கு இங்கேயே இருந்து ஏதாவது செய்தால் என்ன, ஸ்நேகிதிகளை இங்கிருந்து கொடுத்து சமாளித்துக் கொள்ளலாம். வேறு ஏதாவது கொடுத்து தாஜா செய்து கொள்ளலாம். இப்போது அப்பாவின் ஃபோனிற்காக காத்திருப்பது



நல்லது. அப்பாவிற்கு உதவுவது சந்தோஷம். அப்பாவின் இரண்டு கம்பெனிகளை ஒருவரே நடத்துவது சிரமமான காரியம். தன் குழந்தைகளிடம் அவர் உதவி கேட்பது தவறில்லை. [illegible] அப்பா.

அவள் காத்திருந்தாள். இரவு ஒன்பது மணிக்கு டெலிஃபோன் ஒலித்தது.

"மீனுக்குட்டி." அப்பாவின் குரல் கொஞ்சலாய் கேட்டது. "எனக்கு ஒரு உதவி செய்யணும். உன் டூர் ப்ரோக்ராம் கொஞ்சம் மாத்தணும்." பேச்சு தொடர்ந்தது.

மாதவன் மதுரையில் இறங்கினான்.

## 17

வட இந்தியாவில் செய்யப்படும் ஒரு காருக்கு தென்னிந்தியாவில் அந்த கம்பெனி ஏஜென்ஸி எடுத்திருந்தது. வெறும் ஏஜென்ஸி மட்டுமில்லை. அந்தக் காருக்கு இருதயம் போன்ற உதிரி பார்ட்ஸ்களை மதுரையிலேயே செய்து, வட இந்தியாவுக்கு அனுப்பியது. விற்பனை மட்டுமில்லை சர்வீசும் செய்தது. சர்வீஸ் ஒரு குறிப்பிட்ட காருக்கு மட்டும் செய்வதில்லை. பல மாடல் கார்களுக்கும் செய்யப்பட்டன. அதில் எல்லா கார்களின் உதிரி பாகங்களும் அங்கு கிடைத்தன.

அந்த கம்பெனி பற்றி மீனாட்சியின் அப்பாவுக்கு ஒரு புகார் வந்தது. தரம் வாய்ந்த இரும்பினால் செய்யப்பட்ட உதிரி பாகங்களை வெளியே விற்றுவிட்டு, மட்டமான உதிரிபாகங்களை கம்பெனி பெயர் போட்டு கம்பெனி அதிகாரிகளே விற்கிறார்கள். வாங்கின இரண்டாம் நாளே உதிரிகள் பழுதாகி விடுகின்றன என்கிற குற்றத்தோடு உடைந்த உதிரிகள் அவருக்கு அனுப்பப்பட்டன. நம்பியவர்களே நம்பிக்கை துரோகம் செய்கிறார்கள் என்பது அவருக்குப் புரிந்து போயிற்று. அவர் நேரடியாக அந்த புகாரைப் பற்றி விசாரித்தபோது இது பொறாமையால் சொல்லப்பட்ட விஷயம் என்று அவருக்கு சமாதானம் கூறப்பட்டது. ஆனால், புகார்கள் தொடர்ந்தன.

அவர் வருகை தெரிந்த உடனேயே மோசமான உதிரிகள் ஒளித்து வைக்கப்பட்டு நல்ல உதிரிகள் பார்வைக்கு வைக்கப்படுகின்றன என்று இன்னொரு புகார் வந்தது. கம்பெனியிலுள்ளவர்களே

ஜி.எம். பின் வாங்கினார்.

"நாளைக்கு ப்ரோக்ராம் கேட்கலாம்னு வந்தேன்." தாழ்ந்த குரலில் பேசினார்.

"மதுரை மொத்தமும் சுத்தி பார்த்துட்டு நாளைக்கு மத்தியானம் குற்றாலம் போறோம். அங்க கெஸ்ட் ஹவுசுக்கு ஏற்பாடு பண்ணிடுங்க. நான் கொண்டு வந்த வண்டி கொஞ்சம் சர்வீஸ் பண்ணனும். லோக்கல்ல சுத்தறதுக்கு வேற வண்டி ஏற்பாடு பண்ணிடுங்க. உங்களை காலைல மீட் பண்றேன்."

அடுத்த நாள் சந்தேகம் வராமல் நடந்து கொள்வது எப்படி என்று யோசித்தாள். தூங்கிப் போனாள்.

வேலை செய்து முடிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தாலோ என்னவோ உள்ளுக்குள்ளே ஒரு பயம் வந்தது. அந்த பயம் இறைஞ்சுதலைக் கொடுத்தது. அந்த இறைஞ்சுதல் கனவாக வந்தது. துவாரபாலகி மாதிரி கோரைப் பற்களும், கதையுமாய், கோரமாய் ஒரு பெண் உருவம் நிற்க, அவளிடம் கை கூப்பி மீனாட்சி இறைஞ்சினாள். அப்பா சொன்ன வேலையை தப்பில்லாமல் முடிக்க வேண்டுமென்று அவளிடம் கெஞ்சினாள். அந்த உருவம் விரல்களைச் சுண்டியது. சுண்டப்பட்ட இடத்திலிருந்து ஒரு ஆள் வெளியே வந்து விழுந்தான். தோளில் பையும், கலைந்த தலையுமாய் இருந்தான். அவனிடம் ஏகமாய் அரக்கு முத்திரை குத்தப்பட்ட ஒரு பார்சலை மீனாட்சி கொடுத்தாள், கொடுக்கிறபோது அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் மாதவன் என்று தெரிந்தபோது விழிப்பு வந்துவிட்டது. கண் விழித்து, மாதவன் இருந்தால் அவன் மூலம் பார்சல் அனுப்பலாமே என்று நினைத்துக் கொண்டாள். மறுபடி தூங்கிப் போனாள்.

மாதவன் அன்று இரவு முழுவதும் பஸ் ஸ்டாண்டில் கழித்தான். பொதுக் கழிப்பிடத்தில் காசு கொடுத்து விட்டு காலைக்கடன்களை முடித்துக் கொண்டான். இரவெல்லாம் தூக்கமில்லாமல் கண்கள் எரிந்தன. தூக்கம் கண்களை அழுத்தியது. ஹோட்டல் ஹோட்டலாகத் தேடலாமா என்று நினைத்தான். எப்படியும் கோவிலுக்கு வந்துதானே ஆக வேண்டும் என்று கணக்குப் போட்டான். வழி நடையாய்ப் பார்த்து உட்கார்ந்து கொண்டான். பெரிய கதவின் மீது



தலை சாய்த்துக் கொண்டான். சிறிது நேரம் கண்கள் மூடினான். தூங்கிப் போனான். மீனாட்சி வேலை பற்றிய சிந்தனையிலேயே கோவில் வலம் வந்தாள்.

என்ன சொல்லி ஸ்டோருக்குப் போவது. யாரிடம் என்ன பேசுவது என்று மனசுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டாள். அப்பா கட்டளையிட்ட காரியத்தை முடிக்க வேண்டுமே என்ற டென்ஷனில் இருந்தாள். முகத்தில் கர்சீப்பைப் போட்டு தூங்குகிற மாதவனை எல்லோரும் தாண்டிப் போனார்கள். அது மாதவன் என்று தெரியாமல் நடந்தார்கள். அவர்கள் உள்ளே போன நேரத்திற்கு மாதவன் விழித்துக் கொண்டான். வெளியே போய் ஹோட்டல் ஹோட்டலாய்த் தேடினான். திசை தெரியாமல் அலைகிறோமோ என்று கவலைப் பட்டான். அப்பா சொன்னது ஞாபகம் வந்தது. மனசோடு பேச. அது வழிகாட்டும் என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

மாதவன் மீனாட்சி கிடைப்பாளா என்று மனசிடம் கேட்டான். 'கிடைப்பாள்' என்று புத்தி சொல்லிற்று.

"இப்பொழுது தேடவா, வேண்டாமா." என்று கேட்டான்.

"தேடு." என்று மனசு பதில் சொல்லிற்று.

கிடைக்கும் என்கிற பொருளைத் தேடுவானேன் என்கிற கேள்வி எழுந்தது. "என்ன சொல்ற சரியாகச் சொல்லு." என்று மனசை அதட்ட மனசு சுருங்கிக் கொண்டது.

தேடிக் கொண்டிருந்த மாதவனை மீனாட்சி அம்பாஸிடர் காரில் கடந்தாள். அவள் காரைத் தொடர்ந்து இன்னொரு அம்பாஸிடர் காரில் நான்கு தோழிகள் கடந்தார்கள். யாரும் மாதவனைப் பார்க்கவில்லை. கறுப்பு கண்ணாடி ஏற்றப்பட்ட காரில் உள்ளேயிருப்பது பெண்கள் என்று மாதவனுக்குத் தெரியவில்லை. மாதவனுக்குப் பசித்தது. முழு சாப்பாடு எழு ரூபாய், அளவு சாப்பாடு ஐந்து ரூபாய் என்று எழுதப்பட்ட சின்ன ஹோட்டலில் நுழைந்தான். அளவு சாப்பாடு என்று முதலில் சொல்லிவிட்டு, பிறகு முழுசாப்பாடு என்று டிக்கட் மாற்றிக் கொண்டான். இலையில் நீர் தெளித்து காய்கறிகள் போடப்பட்டன. புடலங்காய் கூட்டை எடுத்து வழித்து வாயில் போட்டுக் கொண்டான். ஹோட்டல் வாசலை மீனாட்சியின் கம்பெனி கார் கடந்தது. "டிரைவர்., டிரைவர்.."

என்று கத்திக் கொண்டே ஹோட்டல் வாசலை நோக்கி ஓடினான். கார் நாலு கட்டிடம் தாண்டி நகர்ந்து மெல்ல ஊர்ந்தது. மாதவன் பசியோடு கார் பின்னால் ஓடினான். கார் இன்னும் முன்னே நகர்ந்தது. தொடர்ந்து மாதவன் காருக்கு பின்னாடி அதன் முதுகைப் பலமாகத் தட்டினான். கார் டிரைவர் கோபத்துடன் வேகமாக வண்டியை நிறுத்த, முட்டிக் கொண்டான்.

பசியோடு ஓடி வந்ததில் வயிறு வலித்தது. சுருங்கி சுருங்கி விரிந்தது.

"எந்த சோம்பேறி கார்ல அடிக்கறது." கார் டிரைவர் கோபமாக இறங்க..

"நான்தான் சார்.." என்று கைகூப்பினான்.

• "நீதானா.. ஏன் கார்ல அடிக்கற."

"மீனாட்சி.. மீனாட்சியம்மாவ பார்க்கணும்." மூச்சிரைத்தது.

"ஏன் ஒரு மாதிரியா 'பேசற. தண்ணி போட்டிருக்கியா."

"இல்லீங்க. பசி." மாதவன் காரைப் பிடித்துக் கொண்டு லேசாய் மயங்கியபடி பேசினான்.

"வா.. வந்து வண்டில உட்கார்."

"சாப்பாடு டிக்கெட் வாங்கிட்டேங்க. சாப்பிட்டு வந்துடட்டுமா."

"நான் கம்பெனிக்கு போகணும். நம்ம வண்டி சர்வீஸ் பாத்தாங்க. அதுதான் ட்ரையல் ஓட்டிப்பார்த்தேன். டம்மு டம்முன்னு பின்னாடி சத்தம் வரவே பயந்துட்டேன். கம்பெனில சாப்பிட்டுக்கலாம் வா"

"ஏழு ருபாய் டிக்கெட்டுங்க"

"ஒழிஞ்சு போகட்டும். வா கம்பெனில சாப்பிட்டுடலாம். கம்பெனி சாப்பாடு நல்லாருக்கும். ஒரு கார குழம்பு ஊத்தினான் பாரு. செம டேஸ்ட்"

மாதவனுக்கு அதிகம் பசித்தது. வண்டியில் ஏறிக் கொண்டான்.

"மீனாட்சி எங்கே?"

"கார்ல கோவிலுக்கு போயிருக்குது. சாயந்திரம் குற்றாலம் போறோம். நீயும் வர்றியா?"

"எப்படியும் மீனாட்சி இந்த வண்டிக்கு வந்திருவாங்கள்ள.."

"வரணும். ஒருவேளை அவங்க வேன்ல போறாங்களோ என்னமோ?"

வண்டி சர்வீஸ் ஸ்டேஷனுக்குப் போயிற்று. மீனாட்சி ஸ்பேர் பார்ட்ஸ் செக்ஷனுக்குள்



நுழைந்தாள். அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷெல்பி லிருந்து பேரிங் எடுக்க ஆரம்பித்தாள். ஜெனரல் மேனேஜர் பதறினார். கம்பெனி சலசலத்தது. அதிகாரிகள் அதிர்ந்தார்கள்.

"இப்படிச் செய்ய உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?"

ஜெனரல் மேனேஜர் சீற, மீனாட்சி நிதான மாய்ப் பதில் சொன்னாள். அப்பாவின் உத்தரவை விளக்கினாள். தரம் குறைந்த பேரிங்குகள் எவை என்று சுலபமாய் அவளால் கண்டுபிடிக்க முடிந்தது. பாதிக்குப்பாதி பொய்யும், மெய்யும் கலந்திருந்தன. அவர் எதிரேயே நூறு பேரிங்குகள் மரப்பெட்டியில் அடுக்கிவைக்கப்பட்டு, மேலே இரும்பு தகடு பூட்டப்பட்டு, இரும்பு தகட்டின் மீது காக்கி பேப்பர் சுற்றப்பட்டு, காக்கி பேப்பர் மீது நூல் போடப்பட்டு, அவள் டாலரின் அரக்கு சீல் பதிக்கப்பட்டது. டெலிவரி சலானில் கையெழுத்துப்போட்டு அவள் அந்தப்பெட்டியை வேன் இருக்கும் இடத்திற்கு எடுத்து வரச் சொன்னாள். வேனுக்கருகே மாதவனைப் பார்த்து "ஹேய்" என்று கத்தினாள். அவளைப் பார்த்தவுடன் மாதவனுக்கு உயிர் வந்தது. மீனாட்சிக்கு சந்தோஷம் வந்தது.

"மெட்ராஸ் போறாயா மாதவன். ஒரு முக்கியமான வேலை சொல்றேன் செய்யறியா. மெட்ராஸ் போய் எங்கப்பாகிட்ட இந்த பார்சலைக் கொடுத்துடறயா?"

மாதவன் சந்தோஷமாய் தலையாட்டினான்.

## 18

சொடுக்கு நேரத்தில் சோதனை துவங்கி எல்லா திசைகளிலும் விரிந்து எங்கெங்கு குற்றம் இருக்கும் என்று அவள் மனதிற்குத் தோன்றியதோ அங்கெல்லாம் நிகழ்ந்து அரை மணியில் அந்த கம்பெனி முழுவதும் கலங்கி குற்றத்திற்கான தடயங்கள் பிடிபட்டு பெட்டியில் இடப்பட்டன.

பெட்டி சென்னைக்குப் போகவேண்டும். கூரியர் சர்வீஸ் குறித்து மீனாட்சிக்கு பலத்த சந்தேகம். வண்டியில் பெட்டி ஏற்றப்படும்போது மொத்தமும் மாற்றப்படலாம். தடயங்கள் அழிக்கப்படலாம் என்கிற சந்தேகம். அந்த பெண்களை அங்கேயே இருக்கச் சொல்லி விமானத்தில் சென்னைக்கு போய்விடலாமா என்கிற எண்ணம். தோழிகள் அவள் செய்கையைப் புரிந்து கொண்டார்கள்.

இதற்குப் பிறகு அங்கே தனியா இருக்க பயப்படுவார்கள்.

"லப்ளால் செக் பண்ணதான் ரூர் வரா மாதிரி வந்தியா. முன்னால சொல்லியிருந்தா நான் ரூருக்கு வந்திருக்கவே மாட்டேன்."

"ஏன்"?

"ஏதோ வெறுப்புல எவனாவது உன்னை ரெண்டு வச்சு என்னையும் அறைஞ்சானா, தேவையா இது." ஒரு தோழி கடுப்படித்தாள்.

"சரி மெட்ராஸுக்கு ரெயில் ஏத்தி விட்டுடட்டுமா" என்று மீனாட்சி கேட்டதற்கு பதில் சொல்லாது போனாள். தோழியை அடக்கி விட்டாலும் மீனாட்சிக்கும் அந்த பயம் இருந்தது. புற்றுக்குள் கைவிட்ட பிறகு பயந்து புண்ணியமில்லை. அப்பா என்கிற தடுப்பு க்ளவுஸ் போட்டுக் கொண்டதையும் மீறி பாம்பு கொத்தலாம். கொத்தாமலும் போகலாம். குறைந்தபட்சம் சீறலாவது செய்யலாம். எல்லாவற்றையும்விட முக்கியம் பார்சலை சென்னைக்கு அனுப்புவது.

மாதவன் சட்டென்று எதிரே வந்து நின்றது தெய்வச் செயல். பெரிய உதவி. இந்த மாதவனிடம் ஏதோ ஒரு நல்ல குணம் இருக்கிறது. ஆனால், ஒரு பயம். இவனை வண்டியில் அனுப்ப வேறு காரில் கம்பெனி ஆட்கள் யாராவது துரத்திப் போய் மடக்கிப் பேச்சுக் கொடுத்து பெட்டி மாற்றிவிட்டால்?

எவர் எது சொன்னாலும் இந்தப் பெட்டிதான் சென்னை போக வேண்டும் என்று கண்டிப்பான கட்டளை தரலாமா..

கட்டளையை மாதவன் நிறைவேற்றுவான். ஆனால் நடுவே எவரேனும் வன்முறை காட்டினால்..

"கொடுறா பெட்டியை" என்று தலையில் அடித்தால் தாங்குவானா? அவர்கள் வன்முறை காட்டமாட்டார்கள், வேறு வேலை செய்வார்கள். கரன்ஸி காட்டுவார்கள், பெரிய தொகை கண் முன்னே பரப்புவார்கள். மாதவன் ஏழை. பரம ஏழை. மனம் மாறலாம். மாற, எதற்கு இந்த வம்பில் மாட்டி வைக்க வேண்டும்.

மீனாட்சி தீவிரமாய் யோசித்தாள்.

"எல்லோரும் வண்டில ஏறுங்க" என்றாள். தோழிகள் உடைமைகளோடு காரில் ஏறியபின் தானும் ஏறி கதவு சாத்திக் கொண்டாள்.



"மேடம் நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்" ஜெனரல் மேனேஜர் முகம் இரும்பாய் இருந்தது.

"சென்னை"

"எந்த வழியில்?"

"ஏதோ ஒரு வழியில்"

"தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்"

"ஏன்"

வழியில் உங்களுக்கு ஏதும் ஆபத்தெனில்..? எனக்கு தெரிந்திருப்பது நல்லது.

"ஆபத்து வருமா"

'வரலாம்"

"ஏன்"

"நான் பேசுவதற்கில்லை"

"எந்த ஆபத்தையும் நான் எதிர்கொள்ளத் தயார். உங்கள் உபசரிப்புக்கு நன்றி. நான் கிளம்புகிறேன்."

வேன் மெல்ல நகர்ந்து கம்பெனி விட்டு வெளியேறி மதுரையின் தெருக்களில் ஊர்ந்து போயிற்று.

"இப்ப எங்க போகனும்மா"

ட்ரைவர் கேட்டார். மீனாட்சிக்கு பதில் சொல்ல முடியவில்லை.

தோழிகள் ப்யந்து போயிருந்தார்கள்.

'சத்யமாக இங்க நடக்கறது என்னான்னு புரியலை. புடிக்கலை."

"த்தோ பார் மீனாட்சி, நாங்க ஜாலியா ரூர் போலாம்ன்னுதான் ஜாயின் பண்ணோம். உன் கம்பெனி செக்கப்பை நீ தனியா கவனிச்சுக்க வேண்டியதுதானே. எங்க மூடை ஏன் கலைக்கறே?"

"நிச்சயமா ஆபத்து வரும்னு சொல்றது ஜெனரல் மேனேஜர்"

"என்ன ஆபத்து. அவனே பின்னால் ஆளைவிட்டு வழில மடக்கி தலைல நாலு உருட்டை கட்டையால் போட்டு பார்ஸலை புடுங்கிக்கப் போறான்."

"மெட்ராஸுக்கு கோயம்புத்தூர் வழியா சுத்திகிட்டு போனா?" வேறு ஒருத்தி கேட்டாள்..

"எந்த வழில போனாலும் ரிஸ்க் உண்டு."

"மெட்ராஸ் போறதுக்கா மதுரை வந்தோம். ச்சே குற்றாலத்துல ஜாலியா குளிக்கலாம்னு நினைச்சேன்."

"எல்லாம் போச்சு"

"பேசாத மாதவன் மூலமா அனுப்பேன்."

"அவன உதைபட்டு சாகட்டும்னு சொல்றியா. பாவம் அது."

அவர்கள் பேச்சுக்கு மீனாட்சி பதில் சொல்லாது உட்கார்ந்திருந்தாள்.

மாதவன் அவளுக்கு ஆறுதலாய் எதும் பேச நினைத்தான். அடக்கிக் கொண்டான். அவள் ஆழ்ந்து கவலையோடு யோசிப்பது அவனைக் கவர்ந்தது. கம்பெனியில் ஏதோ சிக்கல். அதை கண்டு பிடித்துவிட்டாள். அந்த ஜெனரல் மேனேஜர் கோபமாய் இருக்கிறான். பேசாமல் பயமுறுத்து கிறான் என்பது புரிந்தது.

எவ்வளவு பெரிய கம்பெனி. இது மீனாட்சிக்கு சொந்தமா அடேங்கப்பா. இதில் ஒரு வேலை போட்டுக் கொடுத்தால் எத்தனை நன்றாய் இருக்கும். கம்பெனி கூர்க்கா ட்ரிம்மாய் சலவை காக்கி சட்டையாய் இருக்கிறான்.

கேண்டீனில் சாம்பார், ரசம், தயிர் கப் கொடுத்து ஒரு ரூபாய்தான் வாங்குகிறார்கள். போதும் போதும் என்கிற வரையில் கோஸ் கறி போட்டார்கள், என்று ட்ரைவர் சொன்னான். பசிக்கிறது.

எங்கேயாவது சாப்பிடவேண்டும். மறுபடி மதுரை வந்தால் இந்த கான்டீனில் யாரையாவது காக்காய் பிடித்து ஒருவேளை சாப்பிடவேண்டும். பேய்ய் பசிக்கிறது. மீனாட்சியிடம் சொல்லலாம். கொஞ்சம் வண்டிய எங்கேயாவது நிறுத்துங்க ளேன். ஒரு வாய் சாப்பிட்டு வந்து விடுகிறேன் என்று சொல்லலாமா

வேண்டாம். மீனாட்சி ஏதோ கவலையில் இருக்கிறாள். அவள் கவலையைவிட பசி பெரிசில்லை. பசி பழக்கம்தான் தாங்குவோம்.

"ட்ரைவர் வண்டிய ஏர் போட்டுக்கு விடுங்க" மீனாட்சி கட்டளையிட்டாள்.

"ஏய் மெட்ராஸ் போறியாடி. ப்ளைட் போயிக்குமே."

"ட்ரைவர் ஏர் போர்ட் போங்க, "மீனாட்சி மறுபடி கட்டளையிட வண்டி ஏர்போர்ட் நோக்கி விரைந்தது.

"எதுக்கு ஏர்போர்ட் போற சொல்லு மீனா"

"மெட்ராஸ் மதுரை விமானம் அனேகமா டிலேயாதான் வரும். தாமதமாகத்தான் கிளம்பும். போய் பார்ப்போம்."

"அப்படி ப்ளைட் மெட்ராஸுக்கு இருந்தா இத்தனை பேருக்கு டிக்கட் கெடைக்குமா"



"வெய்ட் அண்ட் ஸீ."

"ஏய் ரொம்ப அலட்டாதடி. ஒன்பது பேருக்கு டிக்கட் தந்து ஒவர் லோட் ஏத்த அது திருவள்ளுவர் ட்ரான்ஸ்போர்ட் இல்லை"

"சும்மா பேசாதே. கொஞ்சம் ஸைலண்டா இரு"

"மூடே போச்சு உன்னால."

"கொஞ்சம் பொறுத்துக்க"

மீனாட்சி மட்டும் உள்ளே போனாள். ஆள் அனுப்பி மாதவனை மட்டும் வரச் சொன்னாள்.

"மாதவன் இதுக்கு முன்னே விமானத்துல போயிருக்கீங்களா"

இல்லை மீனாட்சி. இதான் ஏர்போட்டுக்கே முத தடவையா வரேன்.

"நான் நினைச்ச மாதிரி ப்ளைட் லேட். பத்து நிமிஷத்துல வரும். வந்து பத்து நிமிஷத்துல கிளம்பும். அந்த பார்ஸலோட என் வீட்டுக்கு போகணும். இது அப்பாகிட்ட பர்ஸனலா தரணும், நான் அப்பாவுக்கு போன் பண்ணிடறேன்."

"ப்ளைட் கொஞ்சம் பயம்." மாதவன் சந்தோஷத்திலும் பயத்திலும் தடுமாறினான். விமானத்தில் போக இந்த உடை சரியா என்று யோசித்தான். ரொம்ப சுமாரான பேண்ட் என்று வருத்தப்பட்டான்.

"ஒரு பயமும் இல்லை. முக்கா மணி நேரத்துல மெட்ராஸ் போய்டும். ஏர்போர்ட்டுக்கு கார் வரும். ஆள் அனுப்புவார் அப்பா. அந்த ஆள் உங்கிட்ட அப்பா ஸைன் பண்ணின விஸிட்டிங் கார்டு காட்டுவாரு. அத காட்டினா அந்த வண்டி ஏறி வீட்டுக்குப் போகணும்."

"காட்டலைன்னா.."

"நீங்களா வண்டி பிடிச்சு போகணும். பெட்டி ஜாக்கிரதையா எடுத்துக்கிட்டு போகணும்."

"பெட்டிய கால் கீழேயே வச்சுக்கறேன்."

"முடியாது." மீனா சிரித்தாள்.

"அது தனியா லக்கேஜோட வரும். மெட்ராஸ்ல தனியா கன்வேயர் பெல்ட்ல உங்ககிட்ட வரும்."

"பெல்ட்டா புரியலையே."

நேரா பார்த்தா புரியும். அது முக்கியமில்லை மாதவன். இந்தப் பெட்டி திறக்கப்படாத மாற்றப் படாத அப்பாகிட்ட போகணும்."

"அப்புறம் அப்பாகிட்ட போனபிறகு.." மாதவன் கேள்விக்கு மீனா திகைத்தாள். அதுபற்றி அவள் யோசிக்கவில்லை.

"மெட்ராஸ்ல உங்களுக்கு தெரிஞ்சவா யாரும் இல்லையா"

"உண்டு"

"யார்"

"நீங்கதான் மீனாட்சி"

"ஓ காட் வேற யாரும் இல்லையா"

"இல்லை"

"அப்ப, அப்பாகிட்ட நான் சொல்றேன். நான் மெட்ராஸ் வரவரைக்கும் அங்கேயே என் வீட்டிலேயே கெஸ்ட் ஹவுஸ்ல தங்கி இருங்க."

"சரி."

விமானம் வந்தது. பெட்டி எடைபோட்டு தனி லக்கேஜ் டிக்கட் கொடுத்து ஏற்றப்பட்டது. மாதவனுக்கு டிக்கட் வாங்கப்பட்டது. பெட்டி தனியே போக மாதவன் பிறகு போனான்.

"ரொம்பவே நன்றி மீனாட்சி. உங்களாலதான் முதல்ல ப்ளேன்ல ஏறிப் போறேன்."

"ஆல் த பெஸ்ட். என் வீட்டிலேயே இருங்கோ. பெட்டி பத்திரம்."

"சரி"

விமானம் கிளம்புகிறவரையில் தோழிகளோடு வேனில் அமர்ந்திருந்தாள்.

"இது பிரமாதமான ஐடியா. பெட்டியும் ஜாக்கிரதையா போயிடும். நாமும் டூர் கன்டின்யூ பண்ணலாம்."

"கொஞ்ச நேரத்துக்குள்ள நிறைய பேசிட்டீங்கம்மா. பாவம் மீனாட்சி உங்களால வேற அப்செட் ஆயிட்டா."

"கிரிமினல் புத்தடி உனக்கு. ப்ளைட் டிலே ஆகும்னு எப்படி தெரிஞ்சது"

"மாதவன் பாவம் ப்ளேன்ல வயித்த புடிச்சண்டு உட்கார்ந்துவிடும். முதல் ப்ளைட் கலக்கி தீர்த்துடும்."

"மாதவனை விட பெட்டி முக்கியம். அதுபோய் கரெக்டா சேர்ந்துரும் இல்லையா மீனா"

"ஸோ-நௌ ஸ்டெரெய்ட் டு குற்றாலம்."

தோழிகள் கலகலப்பாய் பேசி பயணம் தொடர்ந்தார்கள்.

கார் தென்காசி திசை நோக்கி பாட்டும் கூச்சலுமாய் ஓடியது. மீனாட்சி வழியில் நிறுத்தி அப்பாவுக்கு போன் செய்தாள். விவரம் சொன்னாள். மாதவன் அடையாளம் சொன்னாள்.

"அப்பா அவரை கடைசிலே.."



போன் தொடர்பு ஏனோ அறுந்து போயிற்று.

"நதோ பார் குற்றாலம் போய் பெட்டி ஞாபகமா இருந்தே கொன்னு போட்டுருவேன்." தோழிகள் பயமுறுத்தினார்கள்.

மாதவனைக்கூட நினைக்கக்கூடாது"

பேயாய் சிரித்தார்கள்.

அருவி பார்த்ததும் எல்லாம் மறந்து போயிற்று. மேலே போனார்கள். அந்த மாலையில் எவரும் இல்லாத அருவிக் கரையில் அட்டகாசமாய் குளித்தார்கள்.

மீனாட்சி மாதவன் நினைவாகவே இருந்தாள். ஆனால், வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

மாதவன் சென்னை வந்து இறங்கிக் கொண்டு பெட்டியை கன்வேயர் பெல்டிலிருந்து எடுத்துக் கொண்டான்.

ஆள் கையெழுத்திட்ட விசிட்டிங் கார்ட் காட்ட வண்டியேறினான். வீட்டுக்குள் வண்டி நுழைந்தது.

இவ்வளவு பெரிய வீடா? பயந்தான். மீனாட்சி அப்பா வெளியே வந்தார்.

"எங்க பெட்டி?"

காட்டினான்.

பெட்டி அவரோடு உள்ளே போயிற்று அவன் வராண்டாவிலேயே நின்றான்.

அவனுக்கு கடும் பசி எடுத்தது. ஆனால், அது பற்றி அங்கே யாரும் கேட்கவில்லை. வேறு எதுவும் பேசவில்லை.

## 19

மாதவன் நின்றுகொண்ட இடத்திலிருந்து ஐம்பதடி தொலைவுக்கு மரகதப் பச்சையாய் ஒரு புல்வெளி. செழுமையான சீரான புல்வெளி. பிறகு காம்பௌண்ட் சுவர், அதுதாண்டி தார் சாலை, அதையும் தாண்டி கடற்கரையில் மணல்மேடு. மேடு சரிந்து இன்னொரு மேடாய்க் கடல். அவ்வப்போது எட்டிப் பார்த்து - மாதவா, மாதவா என்று கூப்பிடும் வெள்ளலைகள் தத்திதத்தி புறங்காட்டிப் போகும் காக்கைகள், கடலும், வானும் சந்திக்குமிடத்தில் ஒரு படகு. வயிறு அடிக்கடி பசியை ஞாபகமூட்டினாலும் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்று தோன்றிற்று.

சிறிது நேரம் கடலை வியந்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மாதவன் திரும்பி வீட்டுக்

கூடத்தை எட்டிப் பார்த்தான். கூடத்திற்குள் யாருமில்லை. ஒரு சுவர்க் கடிகாரம் மட்டும் கண்ணை உருட்டி உருட்டி, இடதும் வலதுமாய் பார்த்துக் கொண்டிருந்தது. அப்படிப் பார்க்கும் கடிகாரத்தையே தொடர்ந்து பார்க்கும் ஆவலைத் தூண்டிற்று. அந்தக் கடிகாரத்தின் கண்ணசைவு ஒரு சிரிப்பைக் கொடுத்தது. இந்த வீட்டுக்கு திருஷ்டிப் பூசணிக்காய் வைப்பதற்கு பதில், கடிகாரத்திலேயே ஒரு திருஷ்டிப் பூசணிக்காய் பண்ணி வைத்து விட்டார்களோ என்று தோன்றிற்று. உள்ளே வெகு தொலைவில் மரப் பெட்டியைத் திறக்கிற சத்தம் கேட்டது. காகிதங்கள் பிரிபடும் ஓசை கேட்டது.

சட்டென்று திரைச்சேலையை விலக்கி, யாரோ காரியஸ்தர் போல வேட்டியும், கதர் சட்டையும், ஒட்ட வெட்டிய கிராப்புமாய் வந்தார்.

"நீங்க எங்கேர்ந்து வரேள்" என்று கேட்டார்.

"மதுரையிலேர்ந்து."

"உங்களுக்கு பொட்டி யார் கொடுத்தா"

"மிஸ் மீனாட்சி"

'கம்பெனியிலேயே பொட்டிய வாங்கிண்டேளா, இல்லை.."

அவர் பேசி முடிக்கும்முன் மாதவன் முந்திக் கொண்டான். சர்வ ஜாக்கிரதையாய் தனக்கிட்ட வேலையைதான் செய்து முடித்ததாய்ச் சொல்லத் துடித்தான்.

"நானே பக்கத்லேர்ந்து, கம்பெனி உள்ளேர்ந்து கொண்டுவந்தேன். ஏர்போர்ட் வரைக்கும் மீனாட்சி வந்தாங்க. நான் பிளேன்ல ஏறின பிறகுதான் வெளில போனாங்க."

அந்த காரியஸ்தர் உள் பக்கம் தலைதிருப்பி, "நீங்க சொன்னதுதான்" என்று குரல் கொடுத்தார்.

"ம்மம்.. எல்லாம் சரியா இருக்கும். அவனைப் போகச் சொல்லு" உள்ளேயிருந்து மீனாட்சியின் அப்பாவின் குரல் கேட்டது.

"நீங்க போகலாம்" காரியஸ்தர் அவனை நோக்கி கட்டளையிட்டார். மாதவன் விழித்தான்.

"என்னை இங்கே தங்கச்சொன்னா.. என்று தயங்கித் தயங்கிச் சொன்னான்.

"இங்கேன்னா, எங்கே" காரியஸ்தர் 'குரல் அதட்டலாய் இருந்தது.

"அவுட் ஹவுஸ்ல.." மென்று விழுங்கினான்.

"மீனு அவுட்ஹவுஸ்ல தங்கச் சொல்த்தாமே.."



"அதெல்லாம் தங்க முடியாது." உள்ளேயிருந்து சீறல் வந்தது. வேகமான ஆங்கிலத்தில் தொடர்ந்து காரியஸ்தருக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. காரியஸ்தர் கட்டளைகளுக்குத் தலையாட்டிவிட்டு, "இங்கேல்லாம் தங்க முடியாது ஏதாவது ஹோட்டல்ல தங்கிக்குங்க".

"ஹோட்டல்லியா. ஹோட்டல் எங்கேயிருக்கு" மாதவன் அப்பாவியாய்க் கேட்டான். காரியஸ்தர் அந்தக் கேள்விக்கு கேவலமாய் அவனைப் பார்த்தார்.

"எனக்குத் தெரியாது. நீங்க போகலாம். பெரியவர் ஏக கோபமா இருக்கார். இங்க நின்னு உதை வாங்காத ஒழுங்கா ஒரு வழியாய் போய்ச் சேருங்க."

'என்னை மெட்ராஸ்லேயே இருக்கச் சொன்னா."

"இருங்கோ.."

"அதான் எங்க இருக்கறது"

"எனக்குத் தெரியாதுய்யா, செக்யூரிட்டி இந்த ஆளை வெளில அனுப்பு."

ஐம்பதடி தொலைவிலிருந்து செக்யூரிட்டி தடதடவென்று ஓடி வந்தான். காரியஸ்தர் முதுகு பார்த்து சல்யூட் அடித்தான்.

"வாங்க சார்" மாதவனை நோக்கி அதட்டினான். காரியஸ்தர் 'உள்ளே போனார். மாதவன் செக்யூரிட்டியிடம் கெஞ்சினான்.

"ஒரு நிமிஷம் இருப்பா, கொஞ்சம் விவரம் கேட்டுட்டு வந்துடறேன்."

"வெளில போன்னு சொல்றதுக்கு முன்னாடி கேட்டிருக்க வேண்டியதுதானே. அங்கதான் நிக்கறாரு. சீக்கிரம் கேளு."

"சார் மாதவன் ஹால் நோக்கி குரல் கொடுத்தான். காரியஸ்தர் உள்ளே போனார். மாதவன் ஹாலுக்குள் காலடியெடுத்து வைத்தான். இந்த முறை சற்று உரக்க "சார்" என்று கூப்பிட்டான். திரைச்சேலை அசைய உள்பக்க சோபாவில் பெரியவர் உட்கார்ந்து கொண்டிருந்தது தெரிந்தது. இன்னும் முன்னேறி "சார்" என்று கத்தினான்.

"வாட் யூ வாண்ட்" இந்த முறை பெரியவர் எழுந்து வெளியே வந்தார். முகம் சிவந்திருந்தார். எரிச்சலும் ஏமாற்றமும், வேதனையுமாய் முகம் சுருங்கிக் காணப்பட்டார்.

"என்னை இங்க தங்க' சொன்னா."

மாதவனுக்கு சட்டென்று ஆங்கிலம்

வாயில்லை. தவிர்த்தான பேச முடிந்தது.

"வாட் இஸ் யுவர் வாண்ட்" அவர் அதட்ட, ஒரு பத்தில் நாக்கு மேல் அண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. தமிழும் பேச முடியாமல் போயிற்று. அவரு விரல் விரல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இங்க தங்கறதுக்குன்னு."

"நோ, வி டோன்ட் அலோவ் எனி ஸ்டேயிங்ட்டுல இ லஸ்ட். ஹியர் [illegible] இது திருட்டு தட்டம் [illegible] வேலையா பண்றேன். பட்டபகல் பகலைக். எதுக்கு மரம் மாதிரி நின்னுண்டிருக்கே. இழுத்துக் கொண்டுபோய்விட்டு இவனை நடத்தி பழுதுக்க பாக்கறேன். ஒரு வார்த்தை எல்லாத்தையும் ஒழிக்க கட்டிடறேன் பார்."

அவர் செக்யூரிட்டியை நோக்கி கையாட்ட, மாதவன் தாரவென்று இழுத்துப் போகப்பட்டான். இழுத்துப் போகப்பட்ட விதம் அவனுக்கு அசிங்கமாய்ப்பட்டது. அவமானமே வெளியே நடந்து வந்தான். அவமானமே கழுத்தைத் தாண்டினான். இனி என்ன செய்வது என்று யோசித்தான். அப்பா, பிரச்சினையான நேரங்களில் மனசோடு பேச என்று சொன்னது ஞாபகம் வந்தது. தலையைக் குனிந்து இப்போது என்ன செய்வது என்று மனதை நோக்கி கேட்டான்.

"முதலில் போய் ஏதாவது சாப்பிடு. சிறிதுநேரம் இளைப்பாறு. பிறகு என்ன செய்வது என்று யோசிக்கலாம்."

மனம் பதில் சொல்லிற்று. பாக்கெட்டிலிருக்கிற பணத்தை தொட்டுப் பார்த்துக் கொண்டு மாதவன் அந்தக் கட்டிடச் சாலையிலிருந்து விலகி திருவான்மியூர் நோக்கி நடந்தான். கண்ணுக்குத் தென்பட்ட உடுப்பி ஹோட்டலில் நுழைந்து இட்லிக்கும் கால் தோசைக்கும் ஆர்டர் கொடுத்து விட்டு, வாசல்பக்க கடையிலிருந்த ஒரு சின்ன பத்திரிகையைப் பார்த்தபடியே சாப்பிட்டுத் துவக்கினான். தன் வேலையை மறந்துபோய் குண்டாக இருந்த தடிகைகளையும் உற்று உற்றுப் பார்த்தான். வெளியே வந்து திருவான்மியூர் குளத்தைச் சுற்றினான். அவன் வாசலுக்கு வந்தபோது ஒரு அம்மாவிடம் வாசலிலிருந்த அந்தக் காரியஸ்தர் ஹோட்டலுக்கு எதிர் சாலைக் கல்லிலிருந்த மாவிலை கடையிலிருந்து தனியே இரண்டு பழங்களைச்



பேச்சுகளில் துண்டு துண்டான வார்த்தை வாக்குவது தெரிந்தது.

"அடப்பாவி மனுஷா. அந்த வீட்ல இருக்க போது பாம்பை பிராமணன் மாதிரி பேசினே. இப்ப கதி வாங்கிட்டுப் போறியே..." அவன் முகத்தில் அருவெறுப்பு படர்ந்தது.

ஆயினும் வெண்மையில் எங்கே தங்கலாம் என்று அவனிடம் தானே கேட்க வேண்டுமென்று எண்ணம் எழுந்தது. கதி வாங்கித் திரும்பட்டும் என்று காத்திருந்தான். திரும்பிய பிறகு கை கூப்பினான்.

"யாரு" காரியஸ்தர் கனிவோடு விசாரித்தார்.

சற்றுமுன் அவனைச் சந்தித்ததைச் சுத்தமாய் மறந்தவர் போலக் கேட்டார்.

"நான் மாதவன்"

"மாதவனா"

"மதுரையிலேர்ந்து பேரில் கொண்டு வந்தேனே."

"நீதானே அது. வராண்டால எதிர் வெளிச்சமா இருந்தது. அடுத்தி தெரியலை. என்ன"

அவர் முகம் மாறிற்று.

"மெட்ராஸ்ல சிப்பா எந்த ஹோட்டல் இருக்கும்"

"என்னையா திருப்பி திருப்பி அதையே கேட்டுண்டு. உங்க ஆபீஸ்ல எங்க தங்கச் சொன்னாளோ அங்க தங்கறது."

"ஆபீஸ்ல என்னை யாரும், எங்கேயும் தங்கச் சொல்லலையே."

"அப்ப பைய தூக்கிண்டு மதுரைக்கே போகறது"

"மதுரையில் எனக்கு யாரையும் தெரியாது."

"என்னது..."

"மதுரையில எனக்கு யாரையும் தெரியாது சார். எனக்குச் சொந்த ஊர் தஞ்சாவூர்."

"அப்ப நீ ஏன் பேரில் எடுத்துண்டு வந்தே."

"மிஸ். மீனாட்சி எடுத்துண்டு வரச் சொன்னா, எடுத்துண்டு வந்தேன்."

"மீனாட்சி எடுத்துட்டுச் வரச் சொன்னா அப்ப நீ மதுரை ஆபீஸ் இல்லையா"

"இல்லை சார். நான் எந்த ஆபீசும் இல்லை. சித்தப்பாவைப் பார்க்க மதுரைக்கு போனேன். மீனாட்சி தஞ்சாவூர்ல இருந்தபோது எங்க வீட்லதான் தங்கியிருந்தா. எங்க வீட்டுக்குப் பின்னாடி ஓடற வாய்க்கால்லதான் குளிப்பா. மதுரையில பார்த்தப்போ எனக்காக ஒரு சின்ன

வேலை பண்ணுன்னு பொட்டியோட எரோப்பிளேயில ஏத்தினா. மீனாட்சி வர்ற வரைக்கும் என்னை அந்த வீட்டு அவுட் ஹவுஸிலேயே தங்கச் சொன்னா."

"அப்போ நீ கம்பெனிக்காரன் இல்லை."

"இல்லை சார்."

"பேரில் கம்பெனிக்கும், உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை"

"ஒரு சம்பந்தமும் இல்லை சார்."

"அந்தப் பொட்டில என்ன பிரச்சனை இருக்குன்னு உனக்குத் தெரியாது"

"பெட்டியில பேரில் இருக்குதுன்னு தெரியும். பிரச்சனை என்னன்னு தெரியாது."

"சரி. மெட்ராஸ்ல யாரையாவது தெரியுமா"

"தெரியாது சார்.."

"அப்ப மீனாட்சியை எப்படித் தெரியும்"

"தஞ்சாவூர்ல என் கூட படிச்ச பொண்ணுக்கு மீனாட்சி ஃப்ரெண்ட். தஞ்சாவூர் கோவிலல சந்திக்காட்ட என் ஃப்ரெண்ட் விஜயலட்சுமி கூப்பிட்டா. அப்ப பழக்கமாச்சு."

"தஞ்சாவூர்ல என்ன பண்ணின்டிருக்கே நீ"

வினாடி நேரம் மாதவன் யோசித்தான்.

"ரூரலம் டெவலப்மெண்ட்ல கெய்டா இருக்கேன் சார்."

"கெய்டா... அப்ப பெரியவர் உன்னைத் திட்டற போது ஏன் மரம் மாதிரி நின்னே..."

"ஏன் திட்றார், எதுக்கு திட்டறாருன்னே தெரியலை சார். எங்கப்பா உன்னை நல்லா ரிஸீவ் பண்ணுவார். எங்க வீட்டுலேயே சாப்பிட்டு. அவுட் ஹவுசிலேயே தங்கிக்கோன்னு சொன்னா. இப்படி கத்துவார்ன்னு சொல்லலையே."

"அப்படியா சங்கதி. பெருசு கத்தறப்போதே நினைச்சேன். இது ஏதோ வெறுப்புல கத்தறதுன்னு. நீ சரியா பேசியிருக்கப்படாதோ அது இன்னும் கத்திண்டிருக்கு. நாய்க்கு கறி போடறவன் வரலை. அவன் கறி போட்டா தான் நாய் திங்குமா நீங்க போட்டா திங்காதா போய் வாங்கிட்டு வா. வந்து வேக வச்சு நாய்க்கு போடு. அப்படீன்னு கட்டளை. எனக்கு மன்னார்குடி. முட்டை வீச்சம் கூட தாங்காது எனக்கு. என் தலையெழுத்து கறிய வாங்கிண்டு போயிண்டிருக்கேன். நாய் ஏன் கத்தறதுன்னு என்னைக் கத்தறாரு. சரி உனக்கு கறி சமைக்கத் தெரியுமா"



"தெரியாது சார். எங்கப்பா வைதீகம். இத்தனை திட்டக்க மாமிசத்த பாக்கறது இதுதான் முதல் தடவை."

"பாக்கறது'ல ஒண்ணும் தப்பில்லை. சமையல் பண்ணுங்கறானே அதுதான் கொடுமை."

'வெறுமனே வெண்ணீல கொதிக்க வச்சட்டு கொஞ்சம் உப்பு, மஞ்சள் கலந்து போட்டா போறாதோ" மாதவன் கேட்டான்.

"போறுமா" அவர் திகைத்தபடி வினவினார்.

"போறும்னு தோணறது."

"போயி பண்ணி பார்ப்போமா.

அவர் திடுமென்று அவனைக் கூட்டு சேர்த்துக் கொண்டார். மாதவனுக்கு வேறு வழி தெரியவில்லை. சரி என்ற மிக லேசாய்த் தலையாட்டினான்.

"கார்ல முன் பக்கம் ஏறு. இந்தா இது ரெண்டுத்தையும் முன் பக்கமே வச்சுக்க. டேய்.. மணி, வீட்டுக்கு விடுறா."

பின் பக்கம் ஒயிலாகச் சாய்ந்து கொண்டார். ஒரு அசப்பில் அவர் மிகப்பெரிய பணக்காரர் போலவும், வேறொரு அசப்பில் - சாதாரண சமையல்காரரைப் போலவும் மாதவனுக்கு இரண்டாகக் காட்சியளித்தார்.

மணி என்கிற அந்த டிரைவருக்கு காரில் அமர்ந்திருப்பவர்களைப் பற்றி எந்தவித சம்பந்தமும் இல்லை போலிருக்கிறது. எனக்கு இந்த கார், இந்த காருக்கு நான் என்பதாய் அவன் முகம் வைத்துக் கொண்டான். மாதவன் அவனை நோக்கி ஸ்நேகமாய் சிரித்தபோது முகம் திருப்பிக் கொண்டான். தொலைவிலேயே கார் வருவதைப் பார்த்துவிட்டு கதவுகளை அகலத் திறந்து வைத்திருந்தார்கள். கார் வேகம் குறையாமல் வீட்டிற்குள் நுழைந்தது. வீட்டிற்கு பின்புறமாய்ப் போய் ஒட்டி நகர்ந்து கடைசியில் போய் நின்றது. மாதவன் வீட்டின் வேறொரு கோடிக்குத் தான் வந்து விட்டதை உணர்ந்தான்.

அங்கே கேஸ் ஸ்டவ் பாத்திரம் எல்லாம் இருக்கு. டக்கென்று மாமிசம் சமைச்சுடு. நான் உள்ளே ஒரு வேலை முடிச்சுட்டு வரேன்.

இரண்டு நிமிடங்கள் மாமிசம் வெறுத்து பார்த்த மாதவன் சட்டென்று சுதாரித்து சமைக்கத் துவங்கினான். ஐந்து நிமிடத்தில் மாமிச வாடை தாங்க முடியாது வீசியது. மஞ்சள் உப்பு

ஒருகுத்துமதிப்பாய் போட வீச்சம் அடங்கியது.

வெந்துவிட்டது என்று கண் பார்த்த கணிப்பில் பாத்திரம் இறக்கினான். அடுப்பு அணைத்தான்.

வெகு அருகே நாய்கள் குரைப்பது கேட்டது. எழுபது அடி தொலைவில் வீட்டின் மறுகோடியில் இரண்டு டாபர்மேன்கள் முழுவேகத்தில் ஓடி வந்தன.

## 20

எதிரே பாய்ந்து வரும் நாய்களைவிட, மாதவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்த டிரைவர் பயந்துபோய் காருக்குள் ஏறி, கதவு சாத்திக் கொண்டதுதான்.

அந்த வீட்டிற்குப் பழக்கமான டிரைவரே, அந்த நாய்களைக் கண்டு பயந்தாரென்றால் தன் கதி என்னாவது. நாய்களின் உயரத்தைப் பார்க்கும் பொழுது மூச்சு தொண்டைக் குழியில் சுருண்டு கொண்டிருந்தது. தட்டைக் கீழே போட்டு விட்டு கார் மீது ஏறி நின்றுவிடலாமா என்று தோன்றியது. மாதவனுக்கு அருகே இருக்கிற உயரமான இடம் அதுதான். ஆனால், கார்மீது தன்னால் ஏறமுடியுமா. அவ்வளவு உயரமான நாயால் கார்மீது ஏற முடியாதா.

"இறங்குடா கீழ கம்மனாட்டி" என்று மணி அதட்டுவானோ - காருக்குள்ளிருந்தபடியே கத்துவானோ. விபரம் தெரியாமல் இந்த வீட்டுக்கு வந்து விட்டோமே. "பிரகதீஸ்வரா காப்பாற்று." மனசு அலறியது.

மாமிசத் தட்டைக் கீழே வைத்தான். நாய்கள் அவனின் அருகில் மிக நெருக்கமாக நின்று கொண்டன. தொடையையும் புறங்காலையும், புறங்கையையும் வேகமாய் முகர்ந்து பார்த்தன. பயத்தில் உடம்பு வியர்த்து விறுவிறுத்தது. கோரைப்பற்கள் எந்நேரமும் உடம்பில் பதியும் என்று தோன்றியது. வாசனையாலும் நாய்கள் அவனை அந்நியன் என்று கண்டு கொண்டிருக்க வேண்டும். அவன் நெஞ்சின் மீது கால்களை வைத்து மாறிமாறி குறைத்தன. மாதவன் அம்பாஸடர் காரோடு ஒட்டி நின்று கொண்டான். என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள் என்பதுபோல மாதவன் நின்றான். நய்கள் அந்த கறித்துண்டு தட்டை முகர்ந்து பார்த்தன. அவைகளின் வால் குழைந்து ஆடத் துவங்கியது. நீண்ட நாக்கில் எச்சில் ஊறி



தரையில் சிந்தியது. மாமிசத்தை நக்கி, முகர்ந்து பெருந்துண்டாய் ஒன்று கடித்து, சுவரோரம் இழுத்துப் போயின. முன்காலால் மாமிசத்தை அழுத்தி, பல்லால் இழுத்தன. மாமிசம் இன்னும் வெந்திருக்க வேண்டுமோ தெரியவில்லை. நாய்கள் அந்த துண்டை இழுப்பதில் சிரமப்பட்டன. பிய்த்து சிறு துண்டுகளாகப் போடலாமா. மாதவன் தட்டு நோக்கி நகர்ந்தபோது, கறித்துண்டை விட்டுவிட்டு, மாதவனை நோக்கி, நகராதே என்பதுபோல் குறைத்தன. மாதவன், மறுபடியும் வண்டியோடு ஒட்டிக் கொண்டான்.

அவைகள் மாமிசம் நோக்கி ஓடின. ஒருநாய் குனிந்து கறி தின்று கொண்டிருந்தபோது, இன்னொரு நாய் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தது. மறு நாய் குனிந்தபோது, இன்னொரு நாய் உற்றுப் பார்த்தது. அவைகளுக்குள்ள காவல் கலையை மாதவன் புரிந்து கொண்டான். அவைகளுக்கு தான் அந்நியனில்லை என்று தெரிவிக்க விரும்பினான். இதுவரை, அவை ஏன் தன்னைக் கடிக்கவில்லை என்று ஆச்சரியப்பட்டான். மிரட்டலே அவைகளின் முதன்மையான பணி என்பதைப் புரிந்து கொண்டான். வதக்கிய மாமிசத்தை நெருங்கி, அங்கு குத்திட்டு உட்கார்ந்தான். ஒரு நாய் ஓடிவந்து அவன் தலையில் இரண்டு கால்களையும் வைத்தது: அதன் கனம்தாங்காமல் மாதவன் குனிந்து கொண்டான். கறியைக் கையால் பிய்த்து தரையில் போட்டான். நாய்கள் கவ்விப் போன கறித்துண்டை விட்டு விட்டு அவன் பிய்த்துப் போட்ட கறித்துண்டுகளுக்கு பாய்ந்தன. இன்னும் பிய்த்துப் போடு என்பதுபோல் நின்றன. வால் நன்றியில் சிறிது நேரம் ஆடியது. நின்றது.

கறியைப் பிய்ப்பது, அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. கார் ஷெட்டில் கத்தி இருந்தது. போனால் நாய்கள் குரைக்குமோ என்று தோன்றியது. இரண்டு கையையும் உதறி நிற்க, நாய்கள் தள்ளி நின்று அவனைப்பார்த்து உறுமின. "என்ன செய்யப்போறே, இப்ப நீ" என்பதாய் அந்த உறுமல் இருந்தது. நாய்களைப் பார்த்துக் கொண்டே பின்னடைவதைவிட சாதாரணமாய் திரும்பிப் போவதே நல்லது என்று மாதவனுக்குப் பட்டது. அப்படித் திரும்பிப் போக, பளிச்சென்று ஒரு நாய் அவன் பேண்டைக் கவ்வியது. பற்களால் பேண்டைக் கவ்விக் கொண்டு, நீ எங்கும்

போகக்கூடாது என்பது போல் அவனை இழுத்தது. இன்னொரு நாய் அவன் வழியை மறித்தது. மாதவன் காலை இழுத்துக் கொண்டே ஷெட் நோக்கி நடந்தான்.

"என் காலை விடு. கத்தியை எடுத்துண்டு வரேன்." அதோடு பேசினான். நாய் அவன் காலை விட்டு விட்டு நிமிர்ந்து பார்த்தது.

"உனக்கு சாப்பாடு கொடுக்கணுமோன்னா போய் கத்தியை எடுத்துண்டு வந்து நறுக்கி கொடுக்கறேன். வழிவிடு." என்று சொன்னான்.

"ஓய், இங்கிலீஷ்ல பேசும். அப்பதான் நாய்க்கு புரியும். நீ பாட்டுக்கு கொணகொணன்னு தஞ்சாவூர் தமிழ்ல பேசாதே" மணி சொன்னான்.

மாதவன் தன் வார்த்தையை ஆங்கிலத்தில் பேசத் தயாராகும் போது மணியின் கேலி புரிந்து விட்டது. நாய்க்கு மொழி முக்கியமில்லை. மொழியிலுள்ள த்வனி முக்கியம். எல்லா மொழிகளிலும் அன்புக்கு ஒரு த்வனியும், கோபத்திற்கு வேறு த்வனியும் இருக்கின்றன. அந்த த்வனியை மிருகங்கள் கூர்மையாய்க் கவனிக்கின்றன. மாதவன் ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டு, "வா, போய் கத்தியை எடுத்துண்டு வரலாம் வா" என்று காலுக்கருகே இருந்த நாயைப் பார்த்து சொன்னான். நடந்தான். நாய் கூடவே வந்தது. கத்தியை எடுத்து, மறுபடியும் தட்டருகே வந்து, அந்த மாமிசத்தைத் துண்டு போடத் துவங்கும்போது, இரண்டு நாய்களும் நட்பாய் முனக ஆரம்பித்தன. மாதவன் சப்பளிக்க தரையில் உட்கார்ந்து, பெரிய துண்டுகளை சிறிய துண்டுகளாக மாற்றி, அவைகளுக்கு பரிமாறுகையில், மிக ஆவலாக அவைகள் சாப்பிட்டன.

"என்ன பண்றீ நீ." எங்கிருந்தோ குரல் கேட்டது.

"உன்னைத்தான். என்ன பண்றே நீ."

குரல் சற்று உயரமான இடத்திலிருந்து வந்தது. மாடி ஜன்னலிலிருந்து, அந்தப் பெரியவர் அவனைக் கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தார்.

"உங்க காரியஸ்தர் கறி சமைக்க தெரியுமான்னு கேட்டார். அதுதான்..."

"இவ்வளவு பெரிய துண்டா போடுவே. நாய் தொண்டையில் சிக்கிண்டா செத்து போயிடுமே"

"அதுதான் சின்ன துண்டா பண்ணிண்டிருக்கேன்."

நாய்கள் அவரைப் பார்த்து செல்லமாய்



உறுமின. அவரை நோக்கி, பந்துபோல் எகிறின. வால் குழைத்து ஊளையிட்டன.

"அங்கேயே இரு, வரேன்."

அவர் ஜன்னலை விட்டு நகர்ந்தார். நாய்கள் மாதவனை நோக்கி வாலாட்டின. இன்னும் சிறிய துணுக்குகளாக மாதவன் 'மாமிசத்தை நறுக்கத் துவங்கினான்.

"அறிவிருக்கா உனக்கு. யாரை வேணா, எந்தவேலைக்கு வேணாலும் அனுப்பிச்சறதா. அவனுக்கு மட்டன் சமைக்கத் தெரியுமான்னு கேட்க வேண்டாமா."

கட்டிடத்திற்குள்ளிருந்து குரல் நடந்து வந்தது.

'இந்தாப்பா நீ எழுந்திரு."

காரியஸ்தர் அதட்டல் கேட்டது. பெரியவரும், காரியஸ்தரும் பின்வாசல் வழியாக மாதவன் இருக்குமிடத்திற்கு வந்தார்கள்.

"என்ன பண்றே நீ." மாதவன் விழித்தான். காரியஸ்தர் அவனை உறுத்து, வாயை மூடிக் கொண்டு இரு என்பதுபோல் ஒரு கட்டளையை அவனுக்குப் பார்வையின் மூலம் அனுப்பினார்.

"உன்னை யார், இந்த வேலையெல்லாம் செய்யச் சொன்னா."

மாதவன் மௌனமாக இருந்தான்.

"இதுக்கு முன்னாடி மட்டன் சமைச்சிருக்கியா நீ. இல்லைன்னு உன் மூஞ்சியே சொல்றதே."

இதற்கும் மாதவன் மௌனமாக நின்றான்.

"இந்த புள்ளை மதுரை ஆபீஸ் இல்லை. இவர் மீனுக்கு ஃப்ரெண்டாம். குரியர்ல அனுப்பிச்சா சரியாவராதுன்னு பேரிங்கை, கூடப்படிச்சவர் மூலமா அனுப்பிச்சிருக்கா போலருக்கு. இவனாவது சரியா சொல்லப்படாதோ."

"நான் நம்ப கம்பெனி ஆளுன்னுதான் கத்திட்டேன்."

பெரியவர் மிக லேசான வருத்தத்துடன் சொன்னார். "நானும் அதுமாதிரியேதான் நெனைச்சேன், அப்புறம் மட்டன் வாங்கப் போறபோது இவன் அழுதுண்டே சொன்னான். சரி, சரி, அழாதே. நான் பெரியவர்கிட்ட சொல்றேன்னு கூட்டிண்டு வந்தேன்."

"முட்டாள்தனமா, இவனை ஏன் மட்டன் சமைக்கச் சொன்னீர்?"

"இவனை பார்த்தா எனக்கு பிராமணனா தோணலை. தெரியுமாடான்னு சும்மா கேட்டேன்.

ஒருசல் பொடி போட்டு வதக்கிடலாமேன்னான். சரி பண்ணுடான்னேன். இவனுக்கு தங்கறதுக்கு வேற இடம் இல்லை போலருக்கு 'நாய்க்கு மட்டன் பண்ணி போட்டாவது ஒட்டிப்பமேன்னு உட்கொருந்துட்டான்."

காரியஸ்தர் பதிலுக்கு மீனாவின் அப்பா சிரிக்க, காரியஸ்தர் இன்னும் பெரிதாய் சிரித்தார். எஜமான் என்ன செய்தாலும் அதையே செய்கிற இன்னொரு நாய் என்பதான அபிப்பிராயம் மாதவனுக்கு ஏற்பட்டது. "அந்த துண்டெல்லாம் நறுக்கிடு." பெரியவர் அந்த மாமிசதுண்டுகளைகாட்ட, மாதவன் குத்திட்டு உட்கார்ந்து நறுக்கத் துவங்கினான். அவன் தலைக்குப் பின்னே மணியும், காரியஸ்தரும் சிரிப்பதை உணர முடிந்தது.

"இன்னும் மெல்லிசா நறுக்கலாம். இங்க கொண்டா கத்தியை." பெரியவர் அவன் அருகே குத்திட்டு உட்கார்ந்து கொண்டார். ஒருபெரிய துண்டை நறுக்கிக் காட்டினார். மணியும், காரியஸ்தரும், பெரியவர் அப்படி உட்கார்ந்திருப்பதைக் கண்டு அதிர்ந்து நாற்காலி, டேபிள், ஸ்டூல் என்று அலைந்தார்கள்.

"எப்படி மீனுவைத்தெரியும். உனக்கு" பெரியவர் கேட்டார்.

"என்னோட ப்ரெண்டுக்கு ப்ரெண்ட் சார்."

"யாரு உன்னோட ப்ரெண்ட்."

"விஜயலட்சுமி சார்."

"என்ன பண்றா அந்தப் பொண்ணு."

"எம்.எஸ்.ஸி. மேதமாட்டிங்க்ஸ் சார்."

"நீ. கி-ராஜு-வேட்டா"

"ஆமா சார். ஃபர்ஸ்ட் க்ளாஸ்."

"உங்கப்பாவுக்கு என்ன தொழில்"

"வைதீகம் சார்."

"என்ன"

"வைதீகம் சார்."

"இதுக்கு முன்னாடி மட்டன் நறுக்கியிருக்கியா"

"இல்லை சார்."

"இப்ப ஏன் நறுக்கினே."

மாதவன் மௌனமாய் இருந்தான்.

"தலையெழுத்தா உனக்கு மாமிசம் நறுக்கணும்னு."

"நான் அப்படி நினைக்கல, சார். மாமிசம் சாப்பிடறதுதான் தப்பு. நறுக்கிறதில எனக்கு ஒன்னும் ஆட்சேபனையில்லை. நாய் ரொம்ப



பசியாயிருக்குன்னு வேற சொன்னா."

"உனக்கு தங்கறதுக்கு மெட்ராஸ்ல வேற இடம் கிடையாதா"

"எனக்கு யாரையும் தெரியாது சார். இருநூற்றி எழுபதைந்து ரூபா கையில இருக்கு. ஹோட்டல்தான் தேடினேன்."

"எதுக்கு"

"தங்க சாப்பிட."

"சாப்பிட்டியா"

"இல்லை சார்."

"ஏன் இல்லை. சாப்பிட்டுட்டு கிளம்பியிருக்க வேண்டியதுதானே. மதுரையிலேர்ந்து.."

"ரொம்ப அர்ஜெண்ட், ரொம்ப முக்கியம்னு சொன்னா இந்த பார்சல். அதனால சாப்பிடாம கிளம்பிட்டேன்."

"உன் பேர் என்ன"

"மாதவன் சார்."

"என்ன உத்தியோகம் பண்ற மதுரையில"

"மதுரையும் எனக்கு புதுசுதான் சார். எனக்கு சொந்த ஊர் தஞ்சாவூர். நான் அங்கே, பெரிய கோவில் கெய்டா இருக்கேன். உங்க டாட்டர் மீனாட்சியை அப்படிதான் தெரியும்."

"கையை அலம்பு. இங்கவா. நான் இடம் காட்டறேன் வா."

பெரியவர் அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போனார். நாய்கள் அவனைப் பின் தொடர்ந்தன. வீட்டிற்குள் போய் ஒரு வாஷ்பேஷினை பெரியவர் காட்டினார்.

"அங்கே சோப்பு இருக்கு பார். அதைப் போட்டு கையை அலம்பு. ஓய், இவனை டைனிங் டேபிளுக்கு கூட்டிட்டு வாரும்." என்ன.. பேண்ட் கிழிஞ்சிருக்கு."

"நாய் கடிச்சு இழுத்தது சார்."

"அப்படியா போனா போறது நான் வேற பேண்ட் வாங்கித்தாரேன். கையை அலம்பிண்டு சாப்பிட வா."

மாதவன் கை அலம்ப, அந்தக் காரியஸ்தர் வெள்ளை வெளேரென்று துண்டு கொண்டு வந்து கொடுத்தார்.

"பெரியவர் ரொம்ப முன் கோபி. தாக்கரே முக்கரேன்னு பேசாத. ஜாக்கிரதையா நடந்துக்கோ" என்று காதோரம் கிசுகிசுத்தார்.

பெரிய கோவில் நந்தி மண்டபம் அளவுக்கு

டைனிங்ஹால் இருந்தது. ஒரு மேஜையின் நெற்றியில் பெரியவர் உட்கார, இருபுறம் தள்ளி எதிர்புறம் மாதவன் உட்கார்ந்தான். இரண்டு பேர் எதிரிலும் வெள்ளித் தட்டுகள் வைக்கப்பட்டன. வெள்ளித் தட்டின் நடுவில் வட்டமாய் ஒரு தங்கவில்லை ஒட்டப்பட்டிருந்தது. வேறெதோ கூட்டு வகைகள் வைக்கப்பட்டன. மூன்று சுபாத்திரங்கள் சாப்பிடும் வரை மௌனமாய் பெரியவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"பட்டணம் நான் தொடமாட்டேன்னு சொல்லி வேணாம் ஹதூதானே" உனக்கு தெரியாது வேலையை நீ ஏன் செய்யணும்."

"பட்டன் தொடமாட்டேன்னு எனக்கு ஒண்ணும் சங்கல்பம் இல்லை சார். சாப்பிடறது தப்புன்னு கேள்விப்பட்டிருக்கேன். அது தவிர, எனக்கு தெரியாதுன்னு சொல்லலாம். தெரிஞ்சுக்க டரை பண்ணினேன். கத்திரிக்காய், பீட்ரூட் மாதிரி தானென்று வதக்கி பண்ணினேன். சரியா வந்துடுச்சு."

"சமைப்பியா"

"அவசரத்துக்கு செய்வேன்."

"கோவில் கைநீன்னா எவ்வளவு வரும்."

"அஞ்சு, பத்து, அம்பது நூறுன்னு ஒருநாள் போல வரும்."

"கடை நீவரா"

"ரொம்ப"

"வைதீகத்ல காசு வர்தா"

"வரும் அப்பா அதிகமா வாங்கமாட்டார்."

"ஏன்."

"காசு நாம புடிச்சு வச்சுக்கணுமே தவிர, நம்மை காசு பிடிச்சுக்கக் கூடாதுன்னு சொல்லுவார்."

"பெரிய கோவில் பத்தி எப்படித் தெரியும்."

"அப்பா கல்வெட்டு படிப்பார். எனக்கும் சொல்லிக் கொடுப்பார். என்னால கல்வெட்டு படிக்க முடியும். நான் பொய் சொல்லாத கெட்டிக்காரனால கொஞ்சம் கூடவே வரும்."

"பாசலை கொடுத்துட்டு மீனா, உன்னை என்ன செய்யச் சொன்னா."

"உங்க ஜெர்மன் ஹவுசிலேயே தங்க சொன்னாங்க சார்."

"ஏன்"

"தெரியலை சார்."

"உனக்கு நாம் ஊனமா"



"இல்லை சார்."

"ஏன் விருந்து நடக்குது."

மாதவன் மௌனமாக இருந்தான்.

"ஏதாவது அடிபட்டுதோ, ஏன் விருந்து நடக்குது."

"நேத்து போலீஸ் அடிச்சா சார்."

"என்ன"

இந்த முறை பெரியவரின் குரல் பெரிதாய் இருந்தது. மாதவன் பயந்தான்.

## 21

"போலீஸ் அடிச்சானா..." அந்தப் பெரியவரின் கண்கள், புருவம், இமைகள், உதடு, ஓரம், கன்னத்தசை, முகமாய், நெற்றிச் சுருக்கம் எல்லாம் நின்று மாதவனைக் கேள்வி கேட்டன.

"எழுந்திரு... எழுந்திரு.. வேண்டாம். உட்கார். என்ன சாப்பிடற குழம்பு சாதமா, டடடன்னு முடி. கையலம்பிண்டு வாசல் பக்கம் போய் நில்லு. இந்தா... அந்த செக்யூரிட்டியை கூப்பிட்டு இவன பக்கத்துலயே நிக்க சொல்லு. வெட்... ஹிம் கோ பேக்டு ஹிஸ் ஓன் வில்லேஜ்."

வேகமாய் மிக வேகமாய் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு, இப்படி உண்ணுகின்ற உணவு செரிமானமாகாமல் கவனமாய் இரைப்பையில் அநாதையாய் நிற்கும் என்று தோன்றியது. உள்ளே அவர் வார்த்தைகளாய் மாதவனுக்கு கற்பனை ஓடிற்று. பெரியவர் அசையாது பார்க்க, மாதவனும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் ஏதாவது பொய் சொல்லியிருக்கலாம் சார். எனக்கு இஷ்டமில்லை. நான் போலீஸ்ல உதை வாங்கினது ஊர் முழுக்கத் தெரியும். நாளைக்கு யாராவது வந்து, மாதவனை போலீஸ் லாடம் கட்டினாளே அந்த பையனான்னு உங்ககிட்ட சொல்லி, நீங்க தப்பா என்னைப் புரிஞ்சுக்கறதவிட நான் இப்ப சொல்லிடறது பெட்டர். ஏன் போலீஸ் அடிச்சாங்கன்னு என்னையே கேட்டு அதுக்கு நானே பதில் சொல்றது நல்லது சார். நான் சாப்பிட்டுமா இல்லை, ஏன் போலீஸ் அடிச்சாங்கன்னு சொல்லட்டுமா."

இதையும் வெளியே சொல்லாது மாதவன் பெரியவரையே பார்த்துக் கொண்டு, தன் மனத்தோடு பேசிக் கொண்டிருந்தான்.

பெரியவர், மாதவனிடமிருந்து பார்வையை தட்டு நோக்கி திருப்பினார். கிண்ணத்திலிருந்து

கீரையை தட்டில் போட்டு சோறோடு கலந்து கொண்டார்.

நெய்விடட்டுமா, சமையல்காரன் பணிவோடு கேட்க, வேண்டாம் என்றார். அவனுக்கு போடு என்று கை காட்டினார். மாதவனுக்கு நெய்யூற்றப் பட்டது.

சாப்பிட்டு முடித்து அவருக்கு பின்னே நடந்து, வாஷ்பேஸினில் கையலம்பி அவர் ஹாலுக்குப் போய் உட்கார்ந்து கொள்ள அவன் டைனிங் ஹாலுக்கும் நடுவே உள்ள நடைபாதையில் தயங்கி நின்றான்.

"மாதவன், வா" பெரியவர் குரல் கேட்டது.

"பாக்கு போடறியா?" தட்டு நகர்த்தப்பட்டது.

"வேண்டாம் சார்"

"கால் காட்டு"

மாதவன் அவருக்கு அருகே நடந்து வலது கால் மடித்து பாதம் காட்டினான்.

"உள்ளங்கால்ல அடிச்சாளா?"

"ஆமாம்"

"ஏன்?"

"ஒரு சண்டை தேவையில்லாத என்னை ஏமாத்தி, காசு புடுங்க ஏறபாடு பண்ணினவனை அடிச்சேன்."

"எவ்வளவு காசு?"

"நாலுறு. மீனாட்சி கொடுத்தது"

"நாலுறா? எதுக்கு"

"கோவில் சுத்தி காட்டி, எங்க வீட்டு பின் வாய்க்கால்ல குளிக்க ஏறபாடு செய்தேன். அதுக்கு கொடுத்திருக்கலாம்."

"காவிரியில ஜலம் போறதா"

"சுழலா போறது"

"நிலம் நீச்ச இருக்கோ, கிராமத்துல"

"இல்லை. அக்கா கல்யாணத்துக்கு வித்துட்டோம்."

"எத்தனை பேர் குளிச்சா; வாய்க்கால"

"எல்லா லேடிஸும்"

"கால்வாய்ல ஜலம் வேகமா போகுமே."

"அப்பா காவலா இருந்தார்."

"உங்கப்பாவா"

"இழுப்பு அதிகம் அன்னிக்கு. வாழைய வெட்டி குறுக்கப் போட்டு... அவங்களை குளிக்க சொல்லிட்டு என்னை வாசலுக்கு அனுப்பிட்டார்"

"சண்டை அதுக்கு பிறகா"



"முன்னையே ஆரம்பிச்சது. மீனா இறங்கி நாலு சாத்தினாங்க. அதுல கோபம், நான் தனியா இருந்த போது என்னை தலை தட்ட சொல்லி ஆள் அனுப்பிட்டான்."

"முழுக்கச் சொல்லு"

மாதவன் விவரித்தான். அவர் மெல்ல பல் குத்தியபடியே அவனையே பார்த்துக் கொண்டிருந் தார். நடு நடுவ சிரித்தார். விமானம் ஏறியதுவரை மாதவன் சொல்லிவிட்டு, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"எதுக்கு மீனாட்சிய தேடிண்டு மதுரை போனே"

"வேலை கேட்கறதுக்கு." "என்னவேலை நாய்க்கு கறி சமைச்சப் போடறதா?"

"இல்லை சார். இது எனக்குத் தெரியாது."

"இப்பத்தான் தெரிஞ்சுப் போச்சே. இதையே செய்தா என்ன"

"வேண்டாம் சார். நாய்கள் ரெண்டும் பசியா இருக்குன்னு காரியஸ்தர் சொன்னார். அதனால்தான் எனக்கு தெரிஞ்ச வகையா செய்தேன்."

"தொடர்ந்து செஞ்சா என்ன"

"எங்கப்பாவுக்கு வேதனையா இருக்கும் சார். இது நீ செய்யக்கூடாதே. இது நல்லதில்லை யேன்னு வருத்தப்படுவார்"

"தடுக்க மாட்டார்ன்னு சொல்றியா?"

"அப்பா வேதனை பட்டாலே அது செய்ய வேண்டாம்னு தடுத்த மாதிரிதான். வேண்டாம். இதைச் செய்யாதேன்னு அப்பா வார்த்தையா சொல்லமாட்டார்."

"சரி வேண்டாம். வேற என்ன வேலை தெரியும்"

"கிளார்க் வேலை மாதிரி"

"வீட்ல எதுக்கு கிளார்க்... அதான் ஒருத்தன் நாப்பது வருஷமா இந்த வீடே, கதின்னு இருக்கானே"

"வீட்ல இல்லை. கம்பெனில.. எங்கியாவது"

பெரியவர் முகத்தில கோணலான சிரிப்பு ஓடியது.

"கிளார்க் வேலை என் கம்பெனியில் தான் தரமுடியாது. யூனியன் ப்ராப்ளம் வரும். அப்படியே வச்சாலும் உன்னை யூனியன்லே சேர்த்து, என் பேர் சொல்லி ஒழிகன்னு உன்னைக் கத்த வச்சு. கிளார்க் வேலை உனக்கு கிடைக்காது. டெக்னிக்கல் க்வாலிபிகேஷன் ஏதாவது உண்டா?"

"இல்லை"

"பர்ஸனல் டைபிஸ்டா வச்சுக்கலாம். ஷார்ட் ஹேண்ட் தெரியுமா?"

"கத்துக்கல"

"வெறும்ம டிகிரி படிச்சுட்டு வேலை கேட்டா எப்படி வேற ஏதாவது கத்துண்டுருக்க வேண்டியதுதானே."

"வசதியில்லை."

"எட்டும் பத்தும் பதினெட்டு ரூபா கட்ட முடியலையா.. மாசம்"

"பதினெட்டு எக்ஸ்ட்ரா செலவு".

"அப்ப லீவு நாள்ல என்ன செய்வே"

"சும்மா வீட்ல இருப்பேன்."

"அதான். அதான் தப்பு. கிராமத்துல இருக்கிற அத்தனை பேரும் இந்தத் தப்புதான் செய்யறீங்க. சும்மா உட்கார்ந்திருக்க எப்படி முடியும் லீவு நாள்ல ஏன் வேலைக்கு போகக்கூடாது?"

"தஞ்சாவூர் பக்கம் என்ன வேலை கிடைக்கும் சார்"

"ஹோட்டல்ல தட்டு அலம்பறது"

"பிறகு காலேஜ் போக முடியாது சார்"

"ஏன்?"

"ரெண்டு மசால் தோசை போடேன்னு பின்னால் கத்துவான் சார்"

"கத்திட்டு போறான். ஆமா நான் மசால் தோசை. தட்டு அலம்பறவன்னு சொல்லு"

"மதிப்பு இருக்காது சார்"

"நாய்க்கு கறி நறுக்கினது மதிப்போ"

"யாருக்கும் தெரியாது சார்"

"எந்த யாருக்கும்"

"என்னைத் தெரிஞ்ச யாருக்கும் சார்"

"நான்சென்ஸ், வெட்கமாயில்லை. மீசை முளைக்கறதுக்கு முன்னாலியே இரட்டை வாழ்க்கையா. திருட்டுத்தனமா. கிளார்க் வேலை செய்யத்தான் பிறந்துருக்கியா. கிளார்க்கா ஆரம்பிச்சு கிளார்க்கா சாகணுமா. வேற ஒண்ணும் செய்ய மாட்டியா. தொழிலே கத்துக்க மாட்டியா. என்ன புத்தி இது"

"மரியாதைன்னு ஒன்னு இருக்கு சார்"

"என்ன மரியாதை, எது மரியாதை. கிளார்க் வேலை மரியாதைன்னு யார் சொன்னா. உடனே தணிஞ்சு கறி சமைக்கறேன்னு மனசுல உன்னை பாராட்டிண்டு இருக்கேன். நீயும் கிளார்க் வேலைன்னு கேட்கறியே. நான் யார் தெரியுமா



உனக்கு"

"பெரிய ஃபேக்டரி ஓனர்"

"இது இன்னிக்கு. உன் வயசுல நான் சைக்கிள் கடை ஓனர். பதினாறு வயசுல நான் சைக்கிள் ரிப்பேர். ஒரு நாளைக்கு இருபது முப்பது பஞ்சர் ஒட்டுவேன். இரண்டு சைக்கிள் கழட்டி ஓவர் ஹால் செய்வேன். இது ஸ்பானர் புடிச்ச கை. நீ இல்லாட்டி நாய் பட்டினியா இருந்துடுமோ. நான் கறி வெட்டுவேன். ஒரு எலும்பு இல்லாத சுத்தம் பண்ணித் தருவேன். ஹார்ட் வேலைக்கு எப்படி வெட்கப்படலாம்?"

"நான் வெட்கப்படல சார்"

"அப்ப கத்துக்கோ"

"என்ன கத்துக்கறது தெரியலையே"

"ஆட்டோ ஓட்ட கத்துக்க வேன்"

"ஆட்டோவா?"

"யெஸ் ஆட்டோ. நான் தரேன் காசு. ஐநூறு ஆகுமா ஆயிரம் ஆகுமோ. போய் கத்துண்டு வா. லைசென்ஸ் எடுக்க நான் ஏற்பாடு பண்றேன். என்னிக்கு என் வீட்டு வாசல்ல ஒரு ஆட்டோ ஓட்டிக்கிட்டு வந்து நிக்கறியோ அன்னிக்கு லைசென்ஸ் ஏற்பாடு பண்றேன்"

"மெட்ராஸ் வீதில நடந்து போறதே.."

"முட்டாள். உழைக்கப் பயப்படற சோம்பேறி"

"இல்லை சார்"

"யெஸ் நீ சோம்பேறி. சோத்து முழுங்கி. வறுமைக்கு வெட்கப்படாதவன் ரோசம் கெட்டவன்"

"நியாயமா வாழணும்னு ஆசை சார்"

"உன்னை யார் அநியாயம் செய்யச் சொன்னது? நியாயமா வாழறதுக்கு அர்த்தம் கோவில் பட்டை சாதமா"

"எங்கப்பா அப்படி சொல்லி..."

"உங்கப்பா காலம் வேற. அவர் வளர்ந்த சூழ்நிலை வேற. அவருக்கு பட்டை சாதம் போதும். உனக்கு போதுமா?"

"போறாது சார்"

"தென்...?"

"நான் கிளார்க் வேலைக்கு லாயக்கில்லையா சார்?"

"மாதவன்..." அவர் கோபக் குரல் அடங்கியது. வேலை பேச்சு பட்டென்று நின்றது. உற்றுப் பார்த்தார்.

"மாதவன் உன்னை பார்த்த ஒரு நிமிஷம் என் இருவது வயசு ஞாபகம் வந்தது. நாமும் இப்படி வெட்கமில்லாம சைக்கிள் துடைச்சோம். சட்டையெல்லாம் அழுக்கா நின்னோம். பிராமண பையன்குடுமிவச்சக்கோ. சோறு தினம் யாராவது போடுவான்னு சொன்னதை மீறி, கிராப்பு வச்சு சைக்கிள் கடைக்குள் நுழைஞ்சோம். கடுக்கனை அடகுவச்சு இரண்டு சைக்கிள் வாங்கினோம்னு பழைய நினைப்பு வந்தது. அதனால பேசினேன். கிளார்க்தான் வாழ்க்கைன்னா எனக்கு உன்னை எங்கியாவது சேர்க்கறதுல கஷ்டமில்லை. இப்ப டிசைட் பண்ணு கிளார்க்கா, ஆட்டோவா."

'தெரியலை சார்"

"ஏன்?"

"எதுல நல்ல எதிர்காலம்னு தெரியலை சார்"

"ஆட்டோ ஓட்டு"

"மாதவன் தயங்கினான்."

"போ போய், ஆட்டோ ஓட்ட கத்துக்கோ"

"சரி சார்"

"பிடிச்சு செய்"

"பிடிக்கும்னு நினைக்கிறேன் சார்."

"ஓய்... இவனுக்கு ஐநூறு கொடும்." காரியஸ்தருக்கு பெரியவர் உத்தரவிட்டார் வளைந்த மரம் மாடி படியேறி போனார்.

ஐநூறு தரப்பட்டது.

மாதவன் புல்வெளிக்கு நடுவே நடந்தான். நாய்கள் ஓடி வந்தன. இவனைச் சுற்றி சுற்றி முகர்ந்தன."

"நான் வரட்டுமா" அவைகளைத் தடவினான். அவை எகிறி அவன் கழுத்து வளைவை முகர்ந்தன.

மாதவன் வாஞ்சையோடு சிரித்தான். சட்டென்று உள்ளே ஒரு பொறி தட்டியது. இப்போது நாய்களிடம் பயமே இல்லையே ஏன்?

"பழக்கம்... பழக்கம். பழக்கம் மனசு மறுபடி மறுபடி சொல்லியது. அப்படியானால் ஆட்டோ. அதுவும் பழக்கமாகும். பயம் விலகும்.

எல்லாவற்றையும் பற்றிய பயம் விலகும் என்று தோன்றியது.

## 22

"ஆட்டோ ஓட்டத்தான் பட்டணத்துக்கே வந்தியா. இங்கண வண்டி ஓட்டகத்துக்குனு இங்கனயே பிழைக்கற மாதியா... இல்லை



தஞ்சாவூர் போய்டுவியா. தஞ்சாவூர்ல எவன் ஆட்டோல போறான். எல்லாம் தொடைக்கு மேல துணிய கட்டிக்குனு படக்கு படக்குன்னு நடந்துகு வானுங்க. இரண்டு மாசம் வண்டில சொம்மா உக்காந்துட்டு பட்டணம் பாக்க வந்துருவே"

"உன்னையே மாதிரி படிச்ச புள்ளைங்கெல்லாம் ஆட்டோ ஓட்ட வந்துட்டா என்னை மாதிரி படிக்காதவன் கதி என்னாவறது. நாங்க எங்கனா கொள்ளை அடிக்கப் போவேண்டியதுதான்."

"ஆட்டோ ஓட்டக் கத்துக்காதே. இத ஒரு தடவ புடிச்சவன் வேற எந்த தொழிலுக்கும் போக முடியாது. உன் தலையெழுத்து ஆட்டோதான்னா யார் என்ன பண்ண முடியும். எனக்கு தெரிஞ்சத சொல்லிட்டேன்.

ஆட்டோ ஓட்ட எங்கே கற்றுக் கொடுப்பார்கள் என்று ஒரு ஸ்டாண்டில் விசாரிக்க பல் குத்திக் கொண்டும், பேப்பர் படித்துக் கொண்டும் இருந்த ஆட்டோ டிரைவர்கள் விதம்விதமாய் மாதவனுடன் பேசினார்கள்.

இந்த மாதிரி மொட்டப்பசங்க ஆட்டோ கத்துக்குவானுங்க. ஆட்டோ ஓட்டறதுக்கு அம்புடாது. நைட்டூட்டிப் பண்றேன்னு வண்டி எடுப்பானுங்க. சவாரி அம்புடாது. சவாரி அம்புடலைன்னா துட்டு போறாது. துட்டு பார்க்க மொள்ளமாறி முடிச்சு அவுக்கி ஆளுங்களோட கூட்டு சேருவானுங்க. கொள்ளை, கொலை, செயின் அறுப்பு, பொம்பளை கடத்தல்னு போவானுங்க. அவ்வளவுதான் ஊர்ல இருக்கிற எல்லா ஆட்டோ டிரைவர்களையும் கெட்டுப் போன குடும்பத்லேர்ந்து வந்தவன் மாதிரி ஜனம் பேச ஆரம்பிச்சுடும். வீட்ல குடிக்கத் தண்ணி கேட்டா கொடுக்க மாட்டேன்றாங்கப்பா. தெரியுமா. இரண்டு ருவா மீட்டருக்கு மேல கொடுத்தேனே, போய் சோடா குடிக்க வேண்டியதுதானேன்றா ஒரு பொம்பளை. வெறுத்துப் போச்சு எனக்கு. இனி உயிரே போனாலும் ஒரு வீட்டுப்படியேறி குடிக்கத் தண்ணி கேட்கமாட்டேனே. இது மானங்கெட்டத் தொழிலு தம்பி. உனக்கு வேணாம். ஊர் நாட்ட பாக்கப்போ."

மாதவன் விதம் விதமாய் அறிவுறுத்தப்பட்டான். இதுவும் கஷ்டமான தொழில்தானா என்று வியந்தான். யாரோ ஏதோ விலாசம் சொன்னார்கள். போய் நிற்க அது கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கும் இடம் என்று தெரிந்தது. நாலு நாட்கள் எட்டு மணி

நேரம் கழிச்சுக் கொடுக்க எழுநூறு ரூபாய் என்றார்கள்.

"கொஞ்சம் குறைச்சுக்க முடியாதா சார்"

"ஏன் குறைச்சுக்கணும்" ஐம்பது வயசு ஆள் கேட்டார்.

"எங்கிட்ட ஐநூறுத்தான் இருக்கு"

"அப்ப ப்ரேக் போட சொல்லி தரமாட்டேன் சரியா" பெரிய மீசையை உருவியபடி பேசினார்.

"சரி சார்"

"என்ன சரி சார்"

"ப்ரேக் போட நானே கத்துக்கறேன் சார்"

"ப்ரேக் எங்கே இருக்கு கால்ல"

"கால்பக்கம்தான் சார்"

"அடட கால் பக்கம்தான் ப்ரேக்கா. அப்ப இது என்னான்னு நினைக்கிறே"

"அது சடன் ப்ரேக் போடறது சார்"

"கெட்டிக்காரன். கால் பக்கம் மூணு பெடல் இருக்குது கண்ணா. எது ப்ரேக்"

"மிச்ச ரெண்டு சொல்லி கொடுத்திட்டீங்கன்னா மூணாவது ப்ரேக்தானே சார்"

"எந்த ஊர் உனக்கு"

"தஞ்சாவூர்"

"அறிவுக் கொழுந்து. வண்டியில உட்கார். ஐநூறு எடு. மீதி இருநூற்றுக்கு வேலை செய்யறியா"

"செய்யறேன் ஐயா"

"என்ன ஐயான்றே திடீர்ன்னு"

"மரியாதைப் பட்டவங்களை ஐயான்னு கூப்புடறது. எங்க பக்கத்து வழக்கம்"

"அப்ப கொஞ்ச முன்னாடி என்னை சார்ன்னு சொன்னியே. அது கெட்ட வார்த்தையா"

"இல்லீங்க சார்ன்னா மரியாதை கொஞ்சம் தொலைவா இருக்கும். ஐயான்னு அன்போட பாசத்தோட..."

"பேசக்கத்துக்கினிங்கடா எல்லோரும். ஊர்ல என்ன வேலை செய்திட்டிருந்தே"

"ஒண்ணுமில்லைய்யா"

"உங்கப்பனுக்கு என்ன வேலை"

"அது மரியாதை இல்லீங்கய்யா"

"மரியாதை இல்லாத வேலையா"

"அது இல்லை அப்பன்னு சொல்றது"

"அப்பனை அப்பன்னு கூப்புடாத வேற எப்படி கூப்புடறது."



"ஐயான்னு கூப்புடுங்க"

"அடட நீ அப்படி வரையா. உங்கய்யனுக்கு என்னா வேலை"

"புரோகிதம்"

"நீ பாப்பானா"

"ஆமாங்க"

"உன்னைப் பாத்தா தெரியலையே"

"உங்களைப் பார்த்தாலும்தெரியலிங்கய்யா"

"என்ன தெரியலை"

"நீங்க என்ன ஜாதி, என்ன மதம் எதுவும் தெரியலை"

"இறங்குடா.. இறங்குடா.. கீழே"

"ஐயா"

"நக்கலா பண்றே. நான் தேவண்டா"

"தேவரய்யா எதுக்கு கோச்சுக்கறீங்கன்னு தெரியலையே" மாதவன் வண்டியை விட்டு இறங்கினான்.

அந்த ஆள் மாதவன் பவ்யத்திற்கு வாய்விட்டு சிரித்தார். மறுபடி மாதவன் வண்டிக்குள் உட்கார வண்டி நகர்ந்தது.

"எனக்கு தெரியலை. என் ஜாதி கேட்டேன்னு தெரியலை"

"பழக்கமாயிடுச்சய்யா"

"என்ன பழக்கம்"

"பேர் கேட்கறதுக்கு முன்னாடி ஜாதி கேட்கறதும்"

"உம் பேர் என்னா"

"மாதவன்"

"மாதவன் ஐயர். அப்படித்தானே"

"இல்லீங்க. மாதவன். எம் பேர் மாதவன்"

"ஜாதி வித்தியாசம் இல்லைங்கறியா"

"இல்லைங்கய்யா"

"என்னோட டீ சாப்பிடுவியா"

"நான் வாங்கித் தரேங்க டீ"

"தோடா... நாங்க வாங்கினா சாப்பிட மாட்டீங்களா"

"குருவுக்கு ஒரு டீ வாங்கி கொடுத்து வண்டி கத்துக்கலாம்னு சொன்னேங்கய்யா"

"இந்த உலகத்துலியே எடுபட்ட குரு நான்தான்னு நினைக்கிறேன். இருபத்தி எட்டாயிரம் ரூபாய் பியட் வண்டியை உன்னை நம்பி கொடுக்கறேன். எனக்கு டீ காணிக்கை தேவைதானா"

"வசதி வந்தா பாயசம் வச்சு..."

"ஒரு படையல் வச்சுடுறேன்ற. ஒரு புல் பாட்டில் பிராந்தின்னு வாய் குளிர சொல்லேன்."

மாதவன் பேசாதிருந்தான்.

"என்ன வாயே திறக்கலை? குடிக்கறது தவறுன்னு சொல்லப் போறீங்களா?"

"தவறே இல்லை?"

"அப்புறம் என்ன தயக்கம்?"

"இப்படி எல்லார் கிட்ட்யும் புல்பாட்டில் காணிக்கை கேட்டீங்கன்னா?"

"பரலோகம் போய்டுவேன்றியா?"

"எல்லோருக்கும் ஒரு நாள் போக வேண்டியதுதான், நோய் நொடியில்லாத.. தப்பு தகராறு இல்லாத..."

"சபாஷ்.. உன் வயசுக்கு மீறின பேச்சு இது. நான் குடிக்கிறதில்லை கண்ணு. வண்டி ஓட்டறவன் குடிக்கக்கூடாது இது எம் பாலிஸி. ஆனா இது பேஜார் வேலை. குஷன் ஸீட்ல உட்கார்ந்து குளு குளுன்னு ஓட்டறதா வெளிப்பார்வைக்கு தோணும். ஆனா உடம்பும் புத்தியும் நொந்து போற வேலை யிது. கண்ணை மூட ரோடு ரோடா வரும். மரமா வரும். தூக்கம் வராது. வண்டி ஓட்டறவன் கனவு காணாத தூங்க முடியாது. தூங்க மருந்துன்னு குடி. குடிச்சுட்டு இதுல மாட்டிக்கிறவன் அதிகம். உள்ளே வா. உட்கார். இன்னிக்கு இரண்டு லேடிஸுக்கு வண்டி சொல்லித் தரப்போறேன். அவங்க கிளாஸ் முடிஞ்ச பிறகு உன் பாடம் ஆரம்பம்.

"ஐயா. இது ஐநூறுங்க.."

"சந்தோஷம் பாக்கெட்ல வை."

மாதவன் அவர் காலை தொட்டான்.

"அடட எதுக்கு தம்பி புரோகிதம் செய்யறவர் புள்ளை என்கால் தொட்டுகிட்டு"

"தொழில்ல உயர்வு தாழ்வு இல்லீங்கய்யா. நேர்மையா செய்யறவங்க உயர்ந்தவங்க."

"போய் டீ வாங்கிக் கொடு மேன்"

வண்டி டீக்கடையோரம் நிற்க, மாதவன் டீ வாங்கிக் கொண்டு வந்தான்.

காலி கிளாஸ் கொண்டு போய் கொடுத்தான். வண்டி தார் சாலையில் வேகமாய் பறந்தது. மாதவன் பட்டணத்தை வியப்பாகப் பார்த்துக் கொண்டு வந்தான்.

சரேலென்று வண்டி இடது பக்கம் ஒதுங்கி குலுங்கப் ப்ரேக்குடன் நின்றது.

"சாமர்த்தியமா பேசிட்டா போதும். பட்டணத்



தல புடுங்கிடலாம்ன்னு நினைக்கிறயாடா"

"ஐயா"

"உடம்புல பயம் இருக்கு உனக்கு"

"நான் ஒண்ணும் செய்யலீங்களே"

"ஒண்ணும் செய்யாதவன் என் வண்டில எதுக்குடா வர"

"ஐநூறு கொடுத்துட்டேனே"

"எதுக்கு கொடுத்தே சாஞ்சுட்டு பராக்கு பார்க் கவா. நான் வண்டி ஓட்டறத கவனிச்சியாடா நீ"

"தப்பு தாங்க"

"இன்னொரு தடவை பராக்கு பாத்தே மூஞ்சில குத்துவேன்"

"சரிங்கய்யா"

"இது கிளட்ச். இது ஆக்ஸிலேட்டர். இதுப்ரேக்"

"அது என்னங்க"

"செருப்பாலே அடிப்பேன் உன்னை. எதுக்கு கிளட்ச்ன்னு கேட்டியா

"கேட்கலை"

"அப்புறம் என்னா அது என்னான்னு கேள்வி. சொல்றத மனசுல வாங்குடா. இது கிளட்ச். இது ஆக்ஸிலேட்டர். இது பிரேக்."

பாடம் துவங்கியது. வண்டி ஓட்டுவதின் அடிப் படை புரிந்தது. ஆனால் அவன் குருவைத்தான் அவனுக்குப் புரியவேயில்லை.

நாற்பது வயசு பெண்மணிகள் இருவரின் வீட்டிற்குப் போய் அவர்களை ஏற்றிக் கொண்டு வண்டி வேளச்சேரி சாலையில் ஓடியது. தேவர் பெண்களிடம் மிக மரியாதையாய் பேசினார். பல நூறு முறைகள் கியர் போடுவது பற்றி விளக்கினார்.

"தாயே கார் ரோட்லதான் போவணும். பிளாட் பாரத்துல ஜனங்க போவணும். நீங்க இரண்டையும் குழம்பிக்கிறீங்க." கோபமில்லாது பேசினார். வண்டியை நடைபாதைவிட்டு இறக்கினார். வேக மாய் வந்த தாம்பரம் பஸ் ஒரு அடி தொலைவில் ப்ரேக் போட்டு கார் எதிரே நின்றபோது, ஸ்டியரிங் விட்டு, கார் ஓட்டியவள் முகம் பொத்திக் கொண்டாள்.

"சொர்க்கம் வந்துடுச்சு இறங்கும்மா" தேவர் சிரிக்காது சொன்னார்.

"என்னா சொல்றீங்க" பெண்மணி வியந்தாள்.

"வண்டில இருந்தவங்க எல்லோரும் செத்துட் டோம். கண் சிமிட்டற நேரத்துல சொர்க்கம் வந்துட்டோம்."

"மிஸ்டேக் ஆயிடுச்சா"

"ஒரு மிஸ்டேக்கும் இல்லை. இது உலகத்துல நடக்கறதுதான்."

"புரியலையே"

"பஸ் மோதி கார் பயணிகள் மரணம். புதுசா யல்லா நீங்க வாங்க"

அடுத்த பெண்மணி அதைவிட மோசம். வண்டி வேகமாய் போனால் தானே ஆக்ஸிடெண்ட் ஆகும். மெல்ல போனால் உயிர் சேதம் ஆகாது என்று நம்பினாள்.

"இதுக்கு முன்னாடி ராக்கெட் ஓட்டக் கத்துகிட்டீங்களாம்மா" தேவர் சிரிப்பதேயில்லை போலும்.

"எங்க"

"அதுலதான் செவ்வாய் கிரகம் போக ரெண்டு வருஷம் மூணு வருஷம்னு பயணம் பண்ணு வாங்களாம். எனக்கு என்னவோ செவ்வாய் தாண்டிவந்துட்டோன்னு ஒரு அச்சம்."

மாதவன் வாய்விட்டுச் சிரிக்க திரும்பி கோபமாய் முறைத்தார்.

"சிரிக்கறீங்களா சிரிங்க. நீங்க ஸ்டியரிங்கல உட்கார போது சிரிப்பா சிரிக்கப் போறீங்க. அது கவனத்துல இருக்கட்டும்"

ஆனால் அது இவ்விதம் இல்லை. மாதவனுக்கு அந்த இரண்டு பெண்மணிகளின் தவறுகள் பேருதவியாய் இருந்தன. தேவரின் அதட்டலில் மனச ஒரு முகப்பட்டு அவர்கள் வண்டி ஓட்டு வதையே பார்த்துக் கொண்டிருந்தது நல்ல தாயிற்று. அவன் உட்கார கையும் காலும் அளவோடு இயங்கின.

வளைவுகள் திரும்புவதில் அளவு தெரிவதற்கு சிறிது சிரமப்பட்டான். ஆயினும் தவறு செய்யாது ஓட்டினான்.

"நல்லா ஓட்டறேன்னாய்யா"

"இது கேட்காத வரைக்கும் நல்லா ஓட்டினீங்க. கேட்டுட்டீங்க இல்லே... இனிமே சந்தேகம் தான்..."

"எங்க"

"எனக்கு தெரியும்னு நினைக்கிறவன்தான் தப்பு பண்றான். அகம்பாவம் தான் அழிவுக்கு ஆரம்பம். அதனால அலட்டாத ஓட்டுங்க"

பெண்மணிகள் வழியில இறங்கிக் கொண்டனர். வண்டி ஷெட்டுக்கு வந்தது.

"ஐயா நாளைக்கு எப்ப வாறது"



"மீதி இருநூறுக்கு எவன் வேலை செய்வான். கந்தை துணி தரேன் கார் துடைக்க ஆரம்பியுங்க"

மாதவன் வண்டி துடைத்தான். நாலு நாட்களும் ஷெட்டில் அவரோடயே இருந்தான். காருக்குள்ளேயே படுத்துக்கொண்டான். பொதுக் கழிப்பிடத்தில் காசு கொடுத்து குளித்தான். நாலாவது நாள் அண்ணா சாலையிலிருந்து அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் பயமின்றி பல ஓவர் டேக் செய்தான். மோட்டார் கார் ஓட்டுதல் அவனுள் நெஞ்சு ஆழத்தில் மூச்சு விடுதல் போல இயல்பாய் படிந்து போயிற்று.

## 23

"உன்னையதான் வெளியே போடா வராதேன்னு துரத்தினாங்களே. ஏன் மறுபடியும் வந்து தொந்தரவு பண்றே. பெரியவர பார்க்கணுமா. அவரு ஊர்ல இல்லே. வாறதுக்கு ஒரு வாரம் ஆகும். நிக்காத. போயிரு"

ஆறு நாட்கள் கழித்துப் போனபோது திருவான்மியூர் பங்களா வாசலில் உள்ளே விட மறுத்தார்கள்.

"இல்லீங்க என்னைய ஒரு வேலையா வெளிய அனுப்பினாரு. அது முடிச்சுட்டு வரேன். அவரண்ட சொல்லணும் மாதவன் கெஞ்சினான்.

"எனக்குத் தெரியாது. வெளிய அனுப்புன்னு என்னாண்ட சொல்லி நான் உன்ன தாதான்னு இழுத்து வெளியே போட்டேன்."

"அப்புறம் உள்ள வந்துடலியா. நாய்க்கு சாப்பாடு போடலியா. பெரியவரோடு உட்கார்ந்து சாப்பிடலியா"

"த்தோடா, நீ பெரியவரோட ஒரே பந்தில சாப்பிட்டியா என்னா கதை இது

"ஆமா, அவரோடு சாப்ட்டேன். அவரு ஒரு வேலையா..."

"எனக்குத் தெரியாது. உன்னைய உள்ளே விடமாட்டேன்."

அந்த வீட்டில் எப்போது போய் நின்றாலும் ஒரு அவமானம் வந்து ஏன் வழிமறிக்கிறதென்று மாதவனுக்குப் புரியவில்லை.

"டிரைவர் மணிய கேளுங்க அவருக்குத் தெரியும் என்னைய பத்தி."

"அவர் வரச்சொல்லக் கேட்டுக்கறேன். இப்ப நகர்ந்துரு."

"உள்ள மணி இருக்காரா"

"எனக்குத் தெரியாது."

"போய் பாரேன்."

"என் வேலை அது இல்லை."

"என்னய்யா, என்னையும் வுடமாட்டேன்ற. நீயும் கேட்கமாட்டேன்ற."

"நீ மரியாதையா போறியா இல்லையா"

"சரியான பைத்தியக்காரனா இருப்ப போலிருக்கே"

சட்டென்று அந்த செக்யூரிட்டி பாய்ந்து மாதவன் சட்டைக் காலரைப் பிடித்தான். இழுத்தான். இருபதடி இழுத்துக் கொண்டு போய் வாசற் கதவுக்கு அப்பால் தள்ளினான். எதிரே கடல் குதித்துக் கொண்டிருந்தது. காக்கைகள் கடல் காற்றுக்கு எதிரே பறந்து பறந்து அமர்ந்தன. காற்றோடு சில சமயம் பறந்தன. மாதவனுக்கு மேற் கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை.

பெரியவர் காசு கொடுத்து ஆட்டோ கற்றுக் கொள்ளச் சொன்னார். கார் கற்றுக் கொண்டு விட்டோம். இதைச் சொல்ல வேண்டாமா. லைசென்ஸ் வாங்க உதவுகிறேன் என்றார். உதவி கேட்க வேண்டாமா. இங்கு நின்று மன்றாடுவதற்கு பதில், பேசாமல் தேவர் கார் டிரைவிங் சென்டர் போய் விடலாமா. அங்கே வேலை செய்து லைசென்ஸ் வாங்க முயற்சிக்கலாமா.

ஆறு நாட்களாய் தினம் காலையில் கார் ஓட்டிவிட்டு, இன்று ஓட்டாதது என்னவோ போல் இருக்கிறது. கையும் காலும் கார் ஓட்டும் செயலுக்கு ஏங்குகின்றன. திருவான்மியூருக்கு பஸ்ஸில் வந்தபோது ஓட்டுனர் இருக்கைக்கு அருகே அமர்ந்து அவர் ஓட்டுவதையே பரவசத்துடன் பார்த்துவந்தான். இந்த வீடு நெருங்கியதும் கலவரம் உணர்ந்தான். எதற்கு இங்கு வருகிறோம். தேவைதானா? இங்கு வேலை செய்ய முடியுமா பேசாமல் தஞ்சாவூர் போய் அங்கே லைசென்ஸ் எடுத்து, அங்கே யார் வண்டியாவது ஓட்டினால் என்ன, பட்டணத்தில் உள்ள வாய்ப்பு போல தஞ்சையில் உண்டா. என்ன செய்வது இப்போது. தேவர் இடம் சொர்க்கமாய் இருந்தது. ரெக்ஸின் ஸீட்டில் படுத்து நாயர் கடையில் சோறு சாப்பிட்டு, பொதுக் கழிப்பிடத்தில் குளித்து நாட்கள் நகர்ந்தன. கார் ஓட்டப் போகிறோம் என்று மனசு குதித்ததில் மற்ற கஷ்டங்கள் தெரியவில்லை.



"மணி இருக்காரப் பாரேன்" மாதவன் மறுபடி கெஞ்சினான்.

"நீ உதைபடப் போற எங்கிட்ட"

தொலைவில் கார் சப்தம் கேட்டது செக்யூரிட்டி எட்டிப்பார்த்தான் 'நவுறு. நவுறு.' என்று அதட்டினான்.

கார் தெருமுனை திரும்பியது. முழுவேகத்தில் எதிரே வந்தது. மணி ஓட்டிக்கொண்டு வந்தான். கதவருகே நிறுத்தினான். இறங்கி போர்டிகோ நோக்கிப்போனான். வெளியே காரியஸ்தர் வருவது தெரிந்தது. அவர் ஏதோ கேட்க மணி, உரக்க பதில் சொல்வது கேட்டது.

'வண்டி வந்து இரண்டுமணி நேரமா ஸ்டேஷன் முழுக்கத் தேடிட்டேன் காணோம்."

"முட்டாள்டா நீ. ஒரு வேளைக்கு லாயக்கில்லை."

"அவ வரலைன்னா நான் என்ன பண்ணட்டும்."

"வரலைன்னா புழைச்சே. வந்து எங்கியாவது நின்று அவ அப்பாவுக்கு ஃபோன் பண்ணினா, பெரியவர் உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவார்."

மீனாட்சி வருகிறாளா... மாதவன் முகம் சந்தோஷமாயிற்று. ஸ்டேஷனில் கண்டுபிடிக்கவில்லையா. அப்படியெனில் எவ்விதம் வீடு வருவாள். ஆட்டோவா. பஸ்ஸா இருக்காது. வேறு யாரும், தோழிகளின் காரில் வரலாம். மீனாட்சி வருவது உறுதியெனில் இங்கேயே இருப்பது நல்லது. காரியஸ்தர் உள்ளே மறைந்தார்.

"மணி.. மணி..." வாசலிலிருந்து கத்தினான்.

அவன் திருப்பி முறைத்துவிட்டு இவனைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டான்.

"மணி ப்ளீஸ், இங்கே வாயேன்."

"என்னடா" மணி வெகுதொலைவிலிருந்து கேட்டான்.

"ப்ளீஸ் வாயேன்"

நிதானமாய் மணி வந்து எதிரே நின்று என்ன என்பது போல் பார்த்தான்.

"மீனாட்சி வராங்களா"

"ஏன், உனக்கென்ன"

"அவங்களைப் பார்க்கணும்."

"ஓட்டாதே, இங்க ஓட்டினா உருப்பட மாட்டே. பேசாம ஊர் பார்க்க போய் சேரு. ராத்திரி இரண்டும்ணி வரைக்கும் வண்டி ஓட்டியிருக்கேன்.

காத்தால நாலு மணிக்கு எழுப்பி ஸ்டேஷன் போகச் சொன்னான் கிழவன். டிரைவர் ஷணுடைன்தானே, தாத்தெதி... எங்கியாவது சிரைக்கப் போலாம்." கடைசி வரியை செக்யூரிட்டியைப் பார்த்துப் பேசினான்.

"நான் கார் கத்துண்டேன் மணி."

மணி கோணலாய் சிரித்தான். எதுவும் சொல்லாது வீட்டின் பக்கவாசல் வழியே மறைந்து போனான்.

இவனுக்கு என்ன கெடுதல் செய்தேன். ஏன் இத்தனை அலட்சியம் செய்கிறான். இவன் லட்சியம் செய்யும் அளவுக்கு தன் தவறென்ன. மாதவன் குழம்பினான்.

"கத்திப் பாத்தூட்டே உள்ளே உன்னை யாரும் கூப்டல. நான் உன்னைய வீட்டுக்குள்ள விடாதது எவ்வளவு நல்லதா போச்சு பாத்தியா. வுட்டிருந்தா என் கதி என்ன"

மாதவன் அந்த வாசல் காவலாளியை கூர்ந்து பார்த்தான். அவனுக்கு கோபம் வரவில்லை. இவன் முட்டாள் வேலைக்காரன். 'திற' என்றால் திறந்து. 'மூடு' என்றால் மூடும் புத்தி கொண்டவன். இவனால் இதற்கு மேல் யோசித்து செயல்பட முடியாது. ஆனால் மணி கர்வி. கட்டுமரத்தின்மீது நின்று கடலில் தத்தளிக்கிறவனை அலட்சியமாய் பார்க்கிறவன். கட்டுமரம் கவிழும் வரைக்கும் கம்பீரமாய் காட்டிக் கொள்வான். அந்த காரியஸ்தருக்கு சொந்த புத்தியில்லை. எஜமான் முகம் எங்கு போகிறதோ, அங்கு பார்க்கும் நாய் புத்தி. 'என்னய்யா செடியில பூவா இருக்கு' என்றால், 'தப்புதான் ஒரு பூக்கூட பூக்காத செடி வளர்க்கறேன்' என்கிற அடிமைஜாதி.

இதுதான் வேலைக்காரன் லட்சியமோ இப்படித்தான் வேலையாட்கள் இருக்க வேண்டுமோ பொய்யாய் பதறி, பொய்யாய் வியந்து, எஜமான் புன்சிரிப்புக்கு மகிழ்ந்து வேறுவிதமாய் செய்பவர் இருக்கலாகாதோ இங்கு இந்த வீட்டில் வேலை செய்ய முடியுமா. இங்கு வேலை செய்தால் இவர்களைப் போல் மாறுவேனோ. வேலையாளுக்கு என்ன வேண்டும், உண்மை. அது காரியஸ்தரிடம் இல்லை மணியிடம் இல்லை. காவலாளியிடம் இல்லை. இந்த வேலையின் மீது மணிக்கு மரியாதையில்லை. மற்றவரை இழிவுபடுத்தி தன்னை உயர்த்திக் கொள்கிறான். அந்த



காரியஸ்தருக்கு எப்படியாவது ஒட்டிக்கொள்ள வேண்டும் என்கிற நிலை. தான் கெட்ட பெயரே வாங்கக்கூடாது என்கிற தன்மை.

ஒருவேளை பெரியவர் பொய்யோ. வேலையாளை நடுங்க வைத்துப் பார்க்கும் விதமோ. உன்னைப் பதற அடிக்கிறேன் பார் என்கிற புத்தியோ. வாழ்வின் தாழ்ந்த நிலையிலிருந்து வந்ததால் அடிமனதில் அவருக்கும் தெரியாமல் வதைப்படுத்தும் விக்கிரம் ஒளிந்திருக்குமோ.

என்ன இந்த வீட்டின் விஷேசம். இந்த வீட்டின் மற்ற நபர்கள் யார். எங்கிருக்கிறார்கள். இங்கே மீனாட்சிக்கு என்ன உரிமை. எவ்வளவு செல்வம். என்னவித அதிகாரம். சீ, நான் ஏன் இந்த வீடு குறித்து இத்தனை யோசிக்கிறேன். உலகம் பெரியது. என் வேலை உண்மையாய் இருப்பின் எங்கும் செல்லுபடியாகும். தேவரிடம் வண்டி கற்பது கடினம் என்று நினைத்தோம். அது எளிதாய் மாறவில்லையா. மற்றவர்களைவிட திறமையாய் செய்யவில்லையா.

"ஊரு சுத்தி பார்க்கறியா. இல்லை ஷெட்டு லியே இருந்து கார் பத்தி தெரிஞ்சுக்கறியா"

"கார்தான் தேவரய்யா முக்கியம்." யோசிக்காமலேயே பதில் வந்துவிட்டது. கற்பதில் கவை வந்துவிட்டது. செய்வதில் சுகம் தெரிந்துவிட்டது. ஈடுபாட்டுடன் செய்த போது நல்ல பெயர் கிடைக்கிறது. இங்கும், இந்த வீட்டிலும் இப்படி செய்ய முடியாதா."

"எதுக்கு கிளார்க் வேலை. ஏதாவது கத்துக்கோ."

கார் கற்றுக்கொண்டாகிவிட்டது. ஆயிரம் ரூபாய் சம்பளம் எப்பவும் உண்டு. வாடகை வண்டி ஓட்ட இன்னும் வரும். என்கென்று ஒரு வண்டி வாங்கி, ஊர் ஊராய் போகிறவர்களுக்கு வண்டி ஓட்டி, உபகாரமாய் இருந்து, சம்பாதிக்க முடியாதா. கார் ஓட்டுவதை கனிவோடு செய்ய இயலாதா. இங்குதான் வேலை செய்ய வேண்டும் என்று என்ன தலையெழுத்து. தூத்தத் தூத்த ஏன் இங்கே ஒட்டிக்கொள்ள வேண்டும்.

தேவரிடம் போகலாம்.. தேவர் யாரிடமாவது சேர்த்துவிட்டால், அங்கு மாடாய், உண்மையாய், உவப்போடு வேலை செய்யலாம். மெல்ல மெல்ல காசு சேர்த்து லைசென்ஸ் வாங்கலாம். அப்படி வாடகை வண்டி ஓட்டுகிறபோது, தஞ்சாவூர் போய்

ஒரு நிமிடம் வீட்டு வாசலில் நின்று, அப்பாவை தலைவணங்கித்துவிட்டு வரலாம்.

அப்பா மனசோடு பேச என்கிறார். மனசோடு பேசுவதுதான் சரி. இப்போது என்ன செய்கிறேன். மனசோடு பேசுவதுதானே இது. பிறரை, என்னை என்னுள்ளே எந்தக் கோபமும் இன்றி எடை போட்டுப் பார்க்கும் வித்தைதானே இப்போது நான் செய்வது. இனி என்ன என்று ஆழமாய் யோசிப்பது தானே மனசோடு பேசுவது. நொந்து கொள்ளாமல், புலம்பாமல் சூழ்நிலையை மௌனமாய் பார்ப்பதுதானே மனசோடு பேசுவது.

அடடா, அப்பா, இதுதானா சொல்லிக் கொடுத்தாய் சபாஷ். புரிந்துவிட்டது. உள்ளே தெளிவு மாதிரி ஒன்று வருகிறது. வெரிகுட். உள்ளே பதறாமல் யோசிப்பது என்னவென்று புரிந்துவிட்டது. அப்பா தேங்க்யூ.

திடுமென்று எல்லாம் தெரிந்த மாதிரி ஒரு புன்னகை ஓடியது.

"அப்ப வரேன்." காவல்காரனிடம் கை கூப்பினான்.

"என்னிய கோச்சுக்காத தம்பி. நான் அதிகாரமில்லாதவன்."

"அடடா ஒரு கோவமும் இல்லை"

"நான்கூட பலநாள் இங்கு நின்னு விரட்ட விரட்ட பலமுறை வந்த அப்புறம்தான் வேலை கிடைச்சது. உனக்கும் வேலை கிடைக்கணும்."

"அதனால பரவாயில்லை. உங்க வேலை தூத்தறது. என் வேலை நின்று பார்க்கறது."

"செக்யூரிட்டி வேலைக்குப் போறியா. மவுண்ட் ரோட்ல எனக்கு தெரிஞ்ச இடம் இருக்கு. அங்க பதிவுபண்ணா எங்கியாவது வேலைக்கு அனுப்புவாங்க போறீங்களா"

"நன்றி. எனக்கு கார் ஓட்டற வேலை எங்காவது கிடைக்கும்."

"இப்பதான் கத்துக்கிட்டீங்களா"

"ஆமாம்"

"லைசென்ஸ்"

"எடுக்கணும்"

"எடுத்துடுங்க. இங்கியே வேலை கிடைச்சாலும் கிடைக்கும். மணி ரொம்ப நாள் தங்க மாட்டான்"

"ஏன்"

"திருடன். அரிசி, பருப்பு திருடன். தினம் பொட்டலம் போட்டு எடுத்துட்டுப் போறான்.



கேட்டா எதுனா பொய் சொல்றான் சார். அம்மா வராங்க அம்மா வராங்க."

ஒரு பழைய ஆட்டோவில் மிகப் பெரிய சூட்கேஸுடன் மீனாட்சி இறங்கினாள். மாதவன் வணக்கம் சொன்னான்.

"ஏன் யாரும் ஸ்டேஷனுக்கு வரலை" சீறலாய் கேட்டாள்.

மாதவன் பேசாது நின்றான். செக்யூரிட்டி பெட்டி இறக்கினான். அந்த பெட்டி தானாய் வரும் என்கிற மாதிரி ஆட்டோகாரனுக்கு நூறு ரூபாய் நோட்டை உருவி கொடுத்துவிட்டு. மீனாட்சி உள்ளே போனாள். திரும்பி மாதவனைப் பார்த்து, வாங்க என்றாள்.

## 24

"பெட்டி எடுத்துண்டு வர வேண்டாமா"

அவ்வளவு அழகான பெட்டியை அதில் உள்ள உடமைகளை, சாதாரணமாய் வீட்டு வாசலில் விட்டுட்டு போவது மாதவனுக்கும் பொறுக்க வில்லை. என்னதான் காவல்காரன் இருந்தாலும் நிமிட நேரத்தில் யாராவது அதை அபகரித்துக் கொண்டு போய்விடலாம். உடமையில், இத்தனை அலட்சியம் காட்டி போகிறவளை வியப்போடு பார்த்தான்.

"வேணா... பெட்டிய நான் எடுத்துண்டு வந்துரட்டுமா"

"வேண்டாம்... அது இருக்கட்டும். மெட்ராஸ் சுத்தி பார்த்தேளா. என் அப்பாவோட பேச முடிஞ்சுதா"

"ஹாங்க... சுத்தி பார்த்தேன். உங்க அப்பேர்வோட பேசினேன்."

'எங்க வீட்டு சாப்பாடு எப்படி இருந்தது"

அட இவள், நான் இங்கே தங்கியுள்ளதாய் நினைக்கிறாளா. விருந்தாளியாய் இருந்தேன் இத்தனை நாள் என்று இப்படி பேசுகிறாளா. இல்லையென்பதை எப்படிச் சொல்வது

"ரொம்ப காரமா"

"இல்லை, நல்லா இருந்தது."

"எப்ப ஊருக்குப் போகணும். இன்னும் இரண்டு நாள் இருக்கலாமில்லையா"

கடவுளே ஊருக்கு அனுப்பறதப் பத்தி பேசறாளே. இங்க வேலை தேடி வந்ததைப் பத்தி

நான் இன்னும் இவகிட்ட சொல்லலையே. எங்கியாவது தனியா உட்கார்ந்து பேச வாய்ப்பு கிடைச்சா ஆதியோட அந்தமா சொல்லலாம். சுருக்கருக்னு நடந்து போயிண்டே எத்தனை பேச முடியும்

மாதவன் உள்ளே புழுங்கி அவளைப் பின்தொடர்ந்த போது - வராண்டாவில் நாய்கள் உறுமத் துவங்கின. மாதவன் ஒரு விநாடி மறுபடி பயந்தான். அவை எகிறின போது சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதை பார்த்தான்.

மீனாட்சி படியேறினாள். உள்ளே நுழைந்தாள். மாதவன் வராண்டாவுக்கு வர, நாய்கள் அவனைப் புரிந்து கொண்டு வால் குழைத்தன.

பெரியவர் மாடியிலிருந்து இறங்கிக் கொண்டே மகள் நோக்கி குரல் கொடுப்பது தெரிந்தது. மகள், அப்பாவை நோக்கி ஓடும் சப்தம் கேட்டது. மாதவன் ஹாலுக்குள் தயங்கி தயங்கி நுழைந்தான்.

"என்ன, எப்படி இருந்தது டிரிப்"

"களான், ஒரு பிரச்சனை கூட இல்லை."

"அப்பா நடுவுல பூந்து சிரமப்படுத்திட்டேனா"

"இல்லையே. நீங்க சொன்ன மாதிரியே சப்ளை செக் பண்ணினேன். நீங்க யாரு இப்படி செக் பண்ணன்னு அந்த ஜெனரல் மேனேஜர் கேட்கறாம்பா."

இனி கேட்கமாட்டான்."

"ஏன்"

"நேத்திக்கு சிவைன் பண்ணிட்டான். எல்லா ஸ்டாக்கும் மறுபடி எடுக்கச் சொல்லியிருக்கேன். சிவைன் பண்ணா முடிஞ்சாச்சு. தப்புக்கு பதில் எங்க இருந்தாலும் சொல்லணும்னுன்னு சொல்லி யிருக்கேன். நான் போயிருந்தா மறைச்சுருப்பாங்க நீ போனதுனால கண்டுபிடிக்க முடிஞ்சது."

"கண்டுபிடிச்சது கஷ்டமில்லைப்பா. கண்டு பிடிச்ச தப்பு பேரிங்க எப்படி அனுப்பறதுன்னு புரியவேயில்லை. நல்ல வேளை, மாதவன் ஹெல்ப் பண்ணார்."

"வெல். நான் அவரைச் சந்திச்சேன்."

"சந்திச்சேன்னா.. நேத்தி, இன்னிக்கு பார்க்கலையா"

"இல்லை. ஆட்டோ ஓட்ட கத்துக்க சொன்னேன்"

"ஆட்டோவா ஆட்டோ ரிக்ஷாவா எதுக்கு"

"கம்பெனில வேலை கேட்டான் வெறும்



எஸ்.எல்.சி. வேற எதுவது படிக்கக்கூடாதா. சுயமா முன்னேறக் கூடாதான்னேன். ஆட்டோ ஓட்டறது பிட்டேன்னேன். சரின்னு போனான்."

"போனாரா. இங்க இல்லையா அவர்."

"இங்க எப்படிம்மா"

"இங்கதானே தங்க சொன்னேன்"

"அவன் அப்படி சொல்லலையே"

"ஏன், உன் கூட சாப்டேன்னார்."

"அது போன வாரம் நாய்களுக்கு சாப்பாடு போடறவன் வரலை. மாதவன் கறி கொத்தி குக்கிப் போட்டான்."

"நோ, அவர் ப்ராமின்பா. அவங்க அப்பா வைதீகம்."

"சரி இப்ப என்ன"

"நான் உங்களுக்கு போனல அவரை இங்க தங்கவைன்னு சொன்னேனே"

"சொல்லலையே."

"சொன்னேன்பா."

"சொல்லலையம்மா"

"அப்ப எங்க தங்கினார்."

"தெரியலையே."

"மாதவன்."

"அவர் இங்கில்லையம்மா."

"வாசல்ல இருக்கார், மாதவன்."

ஒரு செடி நட இரண்டு பேர் முயற்சி செய் கிறார்கள். செடி நடுவில் அந்த இரண்டு ஆட்களுக் குள் சண்டை வருகிறது. செடியை எங்கே நட வேண்டும் என்று அபிப்பிராய பேதம் வருகிறது. அந்த சண்டையில் செடி உருவி உடைத்துப் போடப்பட்டது போன்ற நிலைக்கு வந்தால் எப்படியிருக்கும்? செடி மீது உண்மையான அன்பு, இரண்டு பேரில் எவரேனும் ஒருவருக்கு வந்தால், அந்த யுத்தம் உடனே நிறுத்தப்படும். இங்கே இந்த பேச்சு தன்னை என்ன செய்யும்? எங்கே கொண்டு போய்தள்ளும். மாதவன் பயந்தான். மீனாட்சியின் அழைப்புக்கு உள்ளே நகர்ந்து போனான்.

"நீங்க இங்க தங்கலையா?" அவள் பேச்சில் ஒரு கோபம் இருந்தது.

"இல்லை மீனாட்சி."

"ஏன்"

"ரொம்ப நாளா கார் கத்துக்கணும்னு ஒரு ஆசை. அப்பா உட்கார்ந்து பேசும்போது இதே மாதிரி சொன்னா. இதுநூறு ரூபா கொடுத்தா. சரின்னு போய்

நாமிச் பண்ணினேன். அங்க கார் கத்துக் கொடுத்தவர் கூடவே இரேன் சீக்கிரம் கத்துக்கலாம்னார். நாலுநாள் அங்கே இருந்தேன்."

"இங்க யாரும் உங்களை நாத்தலையே?"

"ச்சே, ச்சே, அப்பாவோட சாப்பிட்டேனே."

"அது என்ன நாய்க்கு சாப்பாடு? மட்டன் வெட்டினிங்களா?"

"அப்படியில்லை. காரியஸ்தர் ஆள் இல்லாத அவனை பட்டுக்கிட்டு இருந்தார். நான் ஹெல்ப் பண்ணேன்."

"அவ்வளவுதானே. யாரும் உன்னைப் போன்னு சொல்லலையே."

"ச்சே ச்சே" அவன் மறுக்க, பெரியவர் அவன் சமளிப்பை கவனித்துக் கொண்டார்.

"கார் வரலை ஸ்டேஷனுக்கு. உங்களுக்கு தெரியுமா அப்பா?"

"காரியஸ்தர் அனுப்பினாரே. மணி போனது பார்த்தேனே."

"வரலை"

"ஓய்" பெரியவரின் குரல் அதட்டலாயிற்று.

"மணிய இப்ப கேட்டேன். ஸ்டேஷன் முழுக்கத் தேடிப்பார்த்தேன். காணம். வரலையேன்னு நினைச்ச திரும்பிட்டேன். பெரியவர் ஆபிஸ்க்கு போனுமேன்னு கவலையா இருந்ததுன்னான்."

"வண்டி லேட். இருந்து கூட்டிகிட்டு வர வேண்டாமா? எல்லோருக்கும் கார் வந்தது. நான் ஆட்டோல வந்தேன்."

"யார் கார்லயாவது வரவேண்டியதுதானே மீனாட்சி?"

"ஏன் வரணும்? என் வீட்ல எழுபத்தியெட்டு கார் இருக்கிறபோது இன்னொருத்தர் கார்ல ஏன் வரணும்? எனக்கு கார் வரும் போங்கடின்னு காத்திருந்து எல்லோரும் போன பிறகு ஆட்டோல வந்தேன்."

"மன்னிச்சுக்கணும். மணி தப்பு பண்ணிட்டான்." காரியஸ்தர் கைகூப்பினார்.

"இங்க வேலைக்கு ஆள் இருக்காங்கப்பா. யாரும் சின்சியரா இல்லை. மதுரைல ஆயிரத்து நானூறு பேர் வேலை செய்யறாங்க. யாரும் சின்சியரா இல்லை. மதுரையை தாண்டி போய் விடுவியாங்கற மாதிரி பார்க்கறான். ஏமாத்தறாங்கப்பா, எல்லோரும் உன்னை ஏமாத்தறாங்க."

"இது பெரிய வார்த்தை தாயே. எல்லாம் மாதிரி



என்னையும் நினைச்சுடாதே. நான் அலாரம் வச்சு எழுந்து மணிய அதுக்கு மணிக்கு உடனே அனுப்பினேன்."

"என்ன பிரயோஜனம் வண்டி கரெக்ட் டைமா லேட்டான்னு தெரியாத டிரைவர் நமக்கு எதுக்கு போனேன். காணம். வந்துட்டேன்றவன் எதுக்கு உபயோகம்"

"அந்த மணி சரியில்லை ஓய்..." பெரியவர் கத்தினார்.

"இரண்டு வருஷமா இருக்கான். கம்பெனி போர்டுல சேர்ந்துட்டான். அனுப்ப முடியாது. யூனியன் ப்ராப்ளம் வரும்."

"டிரைவர் யூனியன்ல சேர்ந்தா இப்படித்தான் அலட்சியமா இருப்பான். விடு நிறைய மாடு. ஒரு குவளை பால்கூடு கிடையாதுங்கற மாதிரி ஆகும்."

"இனிமே நானே வரேன் தாயே. உள்ள போய் ரெஸ்ட் எடுத்துக்கோ."

"என் பெட்டி வாசல்ல இருக்கு."

"எடுத்துண்டு வரேன்."

"நீங்க ஏன் எடுக்கணும் காரியஸ்தர். வேற ஆள் கிடையாதா"

"மணி அந்தப் பெட்டி எடுத்துண்டு வா" காரியஸ்தர் கத்தினார்.

"அப்பா மாதவன் வீட்ல எனக்கு ரொம்ப மரியாதை. அவர் அப்பா எங்களுக்கு கால்வாய்ல குளிக்க ஏற்பாடெல்லாம் பண்ணினார்."

"சொன்னான்."

"மாதவன் ரொம்ப நல்ல டைப்."

"வேலை கேட்டான். கம்பெனில வேலை உடனே கிடைக்கறது கஷ்டம்னேன்."

"பேரிங் கேஸ் என்னாச்சப்பா"

"என்கொய்ரிக்கு மெட்ராஸ் ஹெட் ஆபிஸ்லேர்ந்து ஆறுபேர் அனுப்பிருக்கேன்."

"ஏமாத்து வேலைதானே"

"அறுபது எழுபது லட்சம் ஏமாத்து வேலை"

"ரொம்ப சீப் ஆக இல்லை. இதெல்லாம் பார்க்கற போது இத்தனை சம்பளம், இவ்வளவு வசதி கொடுத்தும் ஏமாத்தறாங்கன்னா... கஷ்டமாயில்லை."

"ஆல் இன் த கேம். தேனை நக்கினவன்..."

"புறங்கையை வெட்டிடணுப்பா. கடுமையா இருக்கணும்."

"அதைஎன்கிட்ட விடு தாயி."

"உனக்கு ஒரு வலம்புரி சங்கு வாங்கிண்டு வந்தேன். பொட்டி வரலையா"

'மணி, பொட்டி எங்கே" மறுபடி காரியஸ்தர் குரல் கொடுத்தார்.

எதிரே ஏதோ முணுமுணுப்பு கேட்டது.

"என்னடா சொல்றே"

"இது என் வேலை இல்லை ஸார். பொட்டியெல்லாம் நான் தூக்க முடியாது" மணி பதிலுக்கு குரல் கொடுத்தான்.

'ராஸ்கல் என்ன சொல்ற நீ"

"யோவ் நிதானமா பேசு. வயசுக்குண்டான மரியாதையைக் கெடுத்துக்காதே"

"பொட்டி எடுக்கப் போறியா இல்லையா"

"நான் ட்ரைவர். எடுக்க மாட்டேன்."

காரியஸ்தர் வெளியே ஓடினார். பொட்டிய தூக்க முடியாது தூக்கி வந்தார். மீனாட்சி திரும்பி அப்பாவைப் பார்த்தாள். பெரியவர் முகம் சிவந்திருந்தது.

"வீட்ல இருக்கிற ஆளே, உன் எதிர்க்க வேலை செய்யறவனே சரியா நடக்கலை. எங்கியோ மதுரைல சரியா நடக்குமா. தப்புதான் நடக்கும்."

மீனாட்சி நிதானமாய் பேசினாள்.

"ஓய் மணிய பர்சேஸ் ட்ரக் ஓட்டற இடத்துக்கு ட்ரான்ஸ்பர் பண்ணுங்கோ."

அதுக்குத்தான் அவன் காத்திண்டிருக்கான்."

"ஏன்"

"இங்க வீட்ல இருபத்தி நாலுமணிநேர வேலை. ஆபீஸ் போயிட்டா எட்டு மணி நேர வேலை. மாத்தனும்தான் இப்படி முரண்டு பண்றான்."

"மதுரையில உள்ள கம்பெனி பர்சேஸுக்கு ட்ரக் ஓட்ட மாத்திருங்கோ"

"நமக்கு ஆள் வேணும்."

"வேண்டாம். என் வண்டிய நான் ஓட்டிப்பேன்."

"வீட்டுக்கு டிரைவர் வேணும்."

"வேற ஆள் போட்டுக்கலாம்."

மாதவனுக்கு எல்லாம் நாடகமாய் தெரிந்தது. மாறி மாறி எதிரே உள்ளவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எனக்கு ட்ரைவிங் தெரியும் சார்."

"ட்ரைவிங் தெரிஞ்சா போறுமா. உனக்கு லைசென்ஸ் இருக்கா. எக்ஸ்பீரியன்ஸ் இருக்கா. சும்மா குறுக்கப் பேசாதே" காரியஸ்தர் கத்தினார்.

மீனாட்சி அவர் கத்தலுக்கு வெருண்டாள்.



"எனக்கு ட்ரைவர் வேணும். நான் மாதவனை அப்பாயிண்ட் பண்ணிக்கிறேன். மாதவன் பொட்டிய எடுத்துண்டு மேல வாங்கோ."

மாதவன் கனமான சுமையோடு படியேறினான்.

## 25

எதனால் வாழ்க்கையில் மனிதருக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியவில்லை. வெற்றிக்கோ, முன்னேற்றத்திற்கோ சந்தர்ப்பங்கள் எவருக்கும் ஏற்படாமல் இராது. அவை ஏற்படும்போது இது வெற்றிக்கான விஷயம் என்று தெரிவதேயில்லை. நல்ல வாய்ப்பு என்று ஒரு வேலையின் ஆரம்பம் காட்டுவதேயில்லை. பலனை எதிர்பார்க்காதே கடமையைச் செய் என்பதற்கு அர்த்தம் மாதவனுக்கு மெதுவாகப் புரிந்தது. எதிர்பார்த்து செய்கிறபோது வேலையில் கரிசனம் போய் விடுகிறது. தடுமாற்றம் வந்து விடுகிறது.

தஞ்சாவூர்லேர்ந்து மீனாட்சியத் தேடி வேலைக்காக வந்து, இங்கே மாமிசம் நறுக்குகிறேனே என்று தோன்றவேயில்லை. இதுவா என்வேலை என்று வெட்கப்படவேயில்லை. அன்று அங்கு ஆள் இல்லை. தடால் என்று வேலை வந்தது. கொண்டா கொண்டா என்று செய்தோம். நாய்களுக்கு பசிக்குமே என்று மாமிசம் நறுக்கினோம். அதுதான் டர்னிங் பாயிண்ட். வீட்டுக்குள் நுழைய எனக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம். என் ஜாதி, மதம், என் குலத்தொழில், அனுபவமின்மை, கௌரவம் எதுவும் தோன்றவில்லை. கத்தரிக்காய், பீட்ரூட் என்று வதக்கினோம். ஏன் அப்படி நேர்ந்தது எதனால் கூச்சமின்றி மாமிசம் நறுக்கினேன். இதுவரை தொட்டே அறியாத பொருளை எப்படி எந்தக் கூச்சமும் இன்றி, உண்ணும் உணவாக தீர்மானித்தேன். இந்த வேலை கிடைக்குமென்றோ... மாமிசம் வெட்டினால் கார் டிரைவர் ஆகலாம் என்று யார் சொன்னார்கள் அப்போது.

மாதவன் யோசித்தான். என்னால் வேலை செய்யாது இருக்க முடியவில்லை. கறிவெட்டுபவன் வரவில்லை என்பதால் நான் அதை எடுத்துக் கொள்ளவில்லை. கக்கூஸ் கழுவுபவன் வராது அந்த வேலைக் கிடைத்திருந்தாலும் செய்திருப்பேன். வேலை ஒரு சந்தோஷம். எந்த வேலையாய் இருப்பினும் அது சந்தோஷம் யாருக்கான

வேலையாய் இருப்பினும் செய்வதில் ஒரு நிறைவு.
அதுதான் ஏன். தருணையில் வேலை எதுவுமின்றி
வெறுமே மணிக்கணக்கில் திண்ணையில் அமர்ந்து.
பார்த்த இடத்தையே பார்த்துக்கொண்டு. பார்த்த
மனிதர்களையே பார்த்துக்கொண்டு பேசினதையே
பேசிக்கொண்டு. கடவுளே எத்தனைக் கொடுமை
அது. திடீரென்று பரக்க பரக்க ஏதோ செய்ய
வேண்டும் என்றதும் சந்தோஷமாகிவிட்டது போ.
போய் ஆட்டோ ஓட்டக் கத்துக்கோ என்று
பெரியவர் விரட்டியதும் வெரிகுட் என்ற ஆவலுடன்
இடம் தேடி ஓடும்படி ஆயிற்று. ஆட்டோவை விட
கார் கற்றுக் கொண்டது ஒரு சந்தோஷம்.
அதிர்ஷ்டம். தேவர் ஐயா... நட்பு ஒரு
கொடுப்பினை. அங்கும் வேலை சந்தோஷமாய்
இருந்தது. நாலு வண்டிக்கும் ரேடியேட்டர்
தண்ணீர் பாரு என்றதும் 'பக்கெட்' ஜலத்தோடு கார்
காராய் ஊற்றுவது உவப்பாய் இருந்தது.

ஒருவேளை நீ புதுத் துடைப்பமோ, மாதவா. புதுத் துடைப்பத்தில் பெருக்குவதில் ஒரு சுகம் புதுத் துடைப்பம் நகரும். உனக்கும் கிட்டும். புதுமாதிரி துடைப்பம் நகரும். உனக்கும் வேலை போர் அடிக்கும் நாள் வருமா. வராது வரக்கூடாது.

வெறுமே உட்கார்ந்திருப்பது வேதனை. ரவா தோசையை, ஏதாவது ஒரு பெண்ணை, ஏதாவது ஒரு சினிமா ஹீரோவை நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது கொடுமை. இல்லாததை இருப்பதாய் கொள்ளும் கனவு. கனவு பழக்கமாக நனவு மனிதர்களை மறக்கும்படி நேரிடும். உண்மை புரியாது போகும். முதல்நாள் வெள்ளித் தட்டில் தங்கம் மாதிரி ஏதோ பதித்தத் தட்டில் சாப்பாடு. மறுநாள் தேவர் ஷெட்டில் மந்தாரை இலையில் இட்லி, சட்னி, தடேல் தடேல் என்று மாறிற்று. வசதி ஏறி, இறங்கி மிரட்டிற்று. ஆனால், மனசு, உணவில் செல்லவேயில்லை.

கறி கொத்தும் போதுகறி. கார் ஓட்டும்போது கார் கூடவே ஓட்டிக் கொண்டிருந்த பெண்கள் மீதுகூட மனசு போகவில்லை. கூட இருந்த போது அவர்கள் செய்கைகள் வியப்பாய் இருந்தன. இறங்கியதும் பறந்துவிட்டது. மீனாட்சிகூட கிறக்கமாய் இல்லை. நிறைய வியப்புதான். இது பெரிய விடுதலை. பெண் உண்மை கலவரமாய் பையன்களுக்கும் போய்விடுகிறது. கல்லெறிந்த இரண்டு பையன் களுக்கும், உப்புப்பட்ட கலவரம்தான். பெண்கள்



அவர்களுடைய புத்தியில் முக்கியமாய் போய் விட்டார்கள். அவர்களை நாடுவதும், அதில் சந்தோஷமும் பெரிய வேலையாய் போய்விட்டது.

எனக்கு ஏன் இல்லை அக்கா இரண்டுபேர் இருந்தது காரணமா. டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் போக அவள் பவுடர் பூசிக்கொள்ளும்போது. தனக்குத் தோன்றிய பயம் காரணமா. எதுக்கு இத்தனை சிங்காரம் என்று அவளை மனசுக்குள் திட்டியது காரணமா. பெண் சிங்காரித்துக் கொள்ளாது என்ன செய்வாள்.. எதற்கு ஆண் அவள் பின்னே போக வேண்டும் என்று பொருமிய நாட்கள் காரணமா. லவ்..லவ்.. என்று அக்காவைச் சுற்றிய வனைக் கண்டு வெறுப்படைந்தது காரணமா. நான் மற்ற இளைஞர்கள் போல் இல்லையே. காதல் காமம் எனக்கு ஏன் முக்கியமாகப்படவில்லை. வேலை.. வேலை என்று ஏன் அலைகிறேன்.

வறுமை. வறுமைதான் காரணம். பெண்கள் பின்னால் அலையாது இருந்ததற்கும் வறுமைதான் காரணம். வறுமை தந்த கூச்சம் காரணம். உணவே கேள்விக்குறியாக போய்விட்ட நேரத்தில் உல்லாசம் செய்ய எப்படி மனசு போகும். கல்லெறிந்த வர்களுக்கு சோறும், உடையும், வசதியும் இருந் தன. அதனால் அடுத்தபடி பெண் சிநேகிதம் தேவைப்பட்டது. எனக்கு உணவு உடை இருந் திருப்பின் நானும் எவளையாவது பார்த்து ஐ லவ் யூ என்று மனசுக்குள்ளாவது சொல்லியிருப்பேன்.

அப்படியானால் வறுமை ஒரு வசதியாய் போய்விட்டதா. கார் கற்று கொள்கிறவரை அந்த வறுமை வேலை கொண்டு வந்துவிட்டதா, கார் கற்றுக் கொண்ட மூன்றே நாளில், ஒரு பெண் ணுக்கு டிரைவராய் வேலை கிடைத்துவிட்டதா?

லைசென்ஸ்தானே வேணும். போன் பண்ணி வர வழைக்கிறேன். உன் பெயர், உன் அப்பா பெயர், டேட் ஆப் பர்த். பெர்மனன்ட் அட்ரஸ் எல்லாம் எழுதிக் கொடு. மீனாட்சி கூறினாள்.

"எங்க ட்ராபிக் ஆபீஸுக்கு போகணுமே"

"வேண்டாம்."

"கேள்வி கேட்பாங்க, ஓட்டச் சொல்லி பக்கத்துல உட்கார்ந்து பார்ப்பாங்கன்னு கேள்விபட்டேனே."

"நான் பார்த்தேனே, போதும்."

"நான் நல்லா ஓட்டறேனா."

"ஓ.கே. நெர்வஸா இருக்கே. போகப் போக

சேட்டு போலிருப்ப."
"ஒரு கேள்வி, மீனாட்சி."
"என்ன"
"எனக்கு யார் பயம்"
"ஏன்"
"காரியஸ்தர், உங்கப்பாவா, உங்க அண்ணாவா, மன்னியா, வீட்ல நிறையபேர் இருக்காளே..."
"நான்தான் பயம்... நான் சொன்னா அவாளுக்கு ஓட்டலாம்."
"தேங்க் யூ."
"அப்பாவுக்கு லெட்டர் எழுதிட்டியா மாதவன்."
"இன்னும் இல்லை."
"ஏன்"
"அப்பாவுக்கு நான் டிரைவரா இருக்கிறது பிடிக்குமோ, பிடிக்காதோ தெரியலை."
"உனக்கு பிடிச்சிருக்கா"
"ரொம்ப."
"கிளார்க் வேலைக்கு போகணும்னு தோணலையா"
"ஐயோ வேண்டாம்."
"ஏன் அத்தனை வெறுப்பு கிளார்க்னு.."
"உங்கூட சுத்தறபோது நாலு இடம் நாலு ஜனங்க தெரியறது. யாரோ ஒருத்தருக்கு நம் தேவையா இருக்கோம்ங்கறது சந்தோஷமா இருக்கு. யாருடைய நம்பிக்கையும் சம்பாதிக்காம இருக்கறது பிடிக்கலை. கூட்டத்தோட கூட்டமா இருக்கறது பிடிக்கலை."
"ஐ லவ் திஸ் ஜாப்"
"வெரிகுட். இன்னும் ஏதாவது வேலை கூட எனக்குத் தரலாம்."
"என்ன வேலை"
"உன் வேலை எதுவா இருந்தாலும்."
"நான் மதுரை ஆபீஸுக்கு ஜாயிண்ட் டைரக்டரா போறேன்."
"வெரிகுட். கங்கிராஜுலேஷன்."
"தேங்க் யூ."
"எனக்கு செக்யூரிட்டி மாதிரியும் நீ தேவைப்படலாம்."
"கொன்னுடுவேன்."
"என்னது"
"யாராவது உங்கிட்ட வந்தா கொலை பண்ணிடுவேன். ஐ மீன் தப்பா..."



மீனாட்சி சிரித்தாள்.
"அப்புறம் ஒரு விஷயம், மாதவன்."
"நான்கூட ஒண்ணு கேட்கணும் மீனாட்சி."
"என்ன"
"உன்னை எப்படி கூப்பிடறது. நாலு பேர் முன்னாடி மேடம்னா..." மாதவன் கேள்விக்கு மீனாட்சி யோசித்தாள்.
"எதுவுமே கூப்பிட வேண்டாமே... அட்ரஸ் பண்ணாத பேசலாமே."
"அது கூட சரியா வருமான்னு தெரியலை."
"ட்ரை பண்ணு"
"மதுரைல எப்ப ஜாயின் பண்றாப்பல."
"நாளை மறுநாள்"
"அப்பா வருவாரே."
"ஆமாம் டெஃபனட்."
"அப்ப ட்ரஸ், வாஷிங் பாக்ஸ் நான் எடுத்துண்டு நாளை நைட்டே கிளம்பட்டுமா."
"சரி. பிஸ்லெரி பாட்டில் எப்பவும் வேணும்."
"சரி."
"இப்ப நாம அட்ரஸ் பண்ணாதியே பேசினோம்."
"புரிஞ்சது. அப்படியே பேசறேன்."
"மறுபடி கேட்கறேன் பிடிச்சுட்டு... கார் டிரைவரா"
"மறந்துடலாம். எனக்குப் பிடிச்சிருக்கு."
"தஞ்சாவூர் போய் அப்பா பார்த்துட்டு, மதுரை வர மாதிரியா"
"இல்லை. அப்பாவுக்கு லெட்டர் போட்டுடறேன். மெட்ராஸ் - மதுரை எட்டு மணிநேரம். கார்த்தால ஏர் போர்ட்ல வண்டி நிற்கும். எத்தனை மணிக்கு ஃப்ளைட் வருது"
"ஒன்பதரை."
"சரி. வண்டிய ஒரு தடவ செக் பண்ணிட்டு வந்துடட்டுமா தேவர் ஆட்டோ மொபைல்னு ஒரு இடம் எனக்கு தெரிஞ்ச இடம். சர்வீஸ் நல்லா இருக்கும்."
"செய்."
அவர்கள் பரஸ்பரம் எந்த அழைப்பும் இன்றி பேசிக் கொண்டார்கள். அவரவர் வேலையைச் செய்தார்கள். ஆனால் உலகம் ஒழுங்காக வேலை செய்பவனை சந்தேகிக்கும். ஏன் நீ மட்டும் உண்மையா இருக்கே. இது நடிப்பா, நிஜமா என்று கேள்வி கேட்கும்.
"அண்ணா.." காரியஸ்தர் பெரியவரிடம்

பேசினார்.

"என்னய்யா"

"பஞ்சம் - நெருப்பும் பக்கத்து பக்கத்துல இருக்கலாமா"

"கூடாது."

"அந்த ட்ரைவர் பையன் சின்னவன். நம்ம குழந்தையும் சிறுசு."

"ம்ம" சிறவாய் பெரியவர் திரும்பினார்.

"அவனை எனக்கு டிரைவரா போட்டுண்டு வயசானிய மீனுவுக்கு போட்டா தப்பா"

"வேண்டாம்."

"பஞ்சம் நெருப்பும்"

"மீனா நெருப்பு. உனக்கு தெரியாது."

இந்தப் பேச்சுத் தெரியாது மாதவன் மதுரை ஏர்போர்ட்டில் மீனாவுக்கு காத்திருந்தான். காத்திருந்த நேரத்தில் தன்னைப் பற்றி யோசித்தான்.

விமானம் தரை இறங்கியது.

பிஸ்லரி பாட்டில் தயாராய் கையில் வைத்துக் கொண்டான். மீனா இறங்கியதும் தண்ணீர் கேட்பாள் என்று மாதவனுக்குத் தெரியும்.

## 26

"என்னம்மா இவனை இங்கே கூட்டிண்டு வந்திருக்கே..." பெரியவர் பாட்டிலோடு நிற்கும் மாதவனைப் பார்த்தவுடன் ஒருகணம் கோபப்பட்டு மறுகணம் கோபம் அடக்கி, மீனாட்சியைக் கேட்டார்.

"எனக்கு வண்டி வேண்டாமா"

"கம்பெனில இல்லாத வண்டியா"

"நான் அந்த கம்பெனிய நம்பமாட்டேம்பா. முழுக்க முழுக்க டாப் டு பாட்டம் ரௌடிக் கும்பல்."

"நோ, நோ. காசுக்கு ஆசைப்பட்டு திருடியிருக்கான். அவ்வளவுதான்."

"திருடறவன் எந்த எல்லைக்கு வேணா போவான். திருட்டு வெளியே வரக்கூடாதுங்கறதுக்கு எது வேணா செய்வான்."

"இவன் வண்டியக் கொண்டு வந்துட்டா, எல்லா ஆபத்தும் போயிடுமா"

"மினிமம் ஒரு பாதுகாப்பு."

"யார் இந்த நோஞ்சானா"

"நோஞ்சான்தான். நம்பிக்கையானவன்."

"நானும் இப்படித்தான் பார்த்துப் பார்த்து வேலைல சேர்த்தேன். நாலு வருஷம் பொறுத்து



அவனுக்கு வேற மூஞ்சி, வேற பேச்சு."

"அது சரி. திருடறவன்னு தெரிஞ்சா சேர்த்திருப்பேளா. இந்தக் கம்பெனில இவ்வளவு தெளிவா, தைரியமா திருடறதுக்கு வேற ஏதோ காரணம் இருக்கு."

"நாம அடிக்கடி செக் பண்ணாத குறைதான்."

"இல்லப்பா இது கேஷ் ஆபரேஷன். அறுவது பேராவது இதுல இன்வால்வ் ஆயிருக்கணும். யாரோ ஒரு ஆள் முன்னே நின்னு நடத்தியிருக்கணும். ஒரு ஜெனரல் மானேஜருக்கு இத்தனை தைரியம் எப்படி வந்ததுன்னு எனக்கு ஆச்சரியம். மட்டமான பேரிங்க வெளிய பண்ணி, நம்பெனிக்குள்ள வந்து கம்பெனி சீல் போட்டு, கம்பெனி பாக்ஸ்ல சுத்தி, கம்பெனியே அதை விக்கிறது என்ன அயோக்கியத்தனம்!"

"இன்னிக்கு ஒழிச்சுடறேன்"

"அது சுலபமாப்பா."

"நான் வெச்ச ஆட்கள், நான் தூக்க முடியலைன்னா அப்புறம் எனக்கு எதுக்கு கம்பெனி இழுத்து மூடிடுவேன்."

"மூட முடியாது. லேபர் ப்ராப்ளம் வரும். மூட முடியாதபடி கோர்ட் ஆர்டர் வரும்."

"அதையும் பார்ப்போம்."

"ஜெனரல் மானேஜரை யாரோ சப்போர்ட் பண்ணறாங்க."

"யார்"

"அண்ணாவா இருக்குமோ"

"சுப்ரமணியனா. தெரிஞ்சா கொன்னுடுவான். அதுவும் தவிர அவன் டெல்லில லயசனா இருக்கிறவன். இங்கே அவனுக்கு இன்ட்டரஸ்ட் இல்லை."

"இதுக்கு நேரா வரணும். நிக்கணும்னு அவஸ்யம் இல்லப்பா. டெல்லிலேர்ந்து நூல்கட்டி மதுரை கம்பெனிய ஆட வைக்கலாம். ஜெனரல் மானேஜர் என்ன பண்றார்னு ரகஸ்யமா ஆள் போடலாம்."

"இது என் கம்பெனி. என் புள்ளையே அழிப்பானா"

"இந்த கேள்வி எனக்கும் வந்தது. அதனால் நான் ஒரு முடிவுக்கு வரமுடியாம தவிக்கிறேன்."

"சரி. நீ பேசறது புரியறது. ஆனா இந்தப் பையனை ஏதோ பாதுகாப்புன்னு வண்டிய மதுரை வரைக்கும் கொண்டு வரச் சொல்லியிருக்கியே. அதான் சிரிப்பா இருக்கு. நான் இருக்கேன் உங்ககூடங்கறது மறந்துட்டே."

வைக்காதேப்பா."

"என்கிட்ட உனக்கு பயம் என்ன அண்ணா"

"முட்டாள் மாதிரி நூத்தி நாப்பது பேரிங் எடுத்துண்டு போயிருக்கியே. எக்ஸைஸ் ட்யூட்டி எவன் கட்டுவான். என்ன கணக்கு"

"அது ரிஜெக்டட். லேப் டெஸ்டுக்கு அனுப்பறோம்னு டெலிவரி சலான் போட்டது."

"அதுக்கும் எக்ஸைஸ் ட்யூட்டி கட்டணும்."

"கட்டு"

"தேவையில்லாத பேரிங் வெளிய போகக் கூடாது. எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட் சந்தேகப்படும்."

"அதுனால திருட்டை அப்படியே விட்டுடணுமா"

"என்ன திருட்டு"

"மட்ட பேரிங் வெளியே பண்ணி நம்ம கம்பெனி ஸீல் போட்டு. நம்ம கம்பெனி பேக்கிங்கில நம்ம கம்பெனியே விக்கறாங்க."

"யெஸ். என்ன அதுக்கு"

"எப்படி செய்யலாம்"

"நான் செய்யச் சொன்னேன்."

"மை காட்."

"உனக்குப் புரியாது. மீனா நீ வெளியே போ."

"எனக்குப் புரியணும்."

"என்னடா இது. என்ன சொல்றே" அப்பா இடையில் புகுந்து கத்தினார்.

"எல்லா ப்ராடெக்ட்டுக்கும் டூப்ளிகேட் வர காலம் இது. குறிப்பா பேரிங் எல்லாத்திலியும் டூப்ளிகேட் உண்டு."

"அதுனால"

"வேற எவனோ நம்ம பேரிங் ஸீல் போட்டு டூப்ளிகேட் விக்கறதுக்கு பதிலா, நாமே ஸெகண்ட் ரேட்டட் பேரிங் வித்தா. அந்த டூப்ளிகேட் மேக் சரியும். மத்தவன் பண்றது குறையும்."

"நியாயமாடா இது

"அநியாயத்தை ஒடுக்க இது தவிர வழியில்லை."

"நீயே இதை செய்தியா"

"நான் சொல்லித்தான் இது செய்யப்பட்டது."

"என் என்கிட்ட சொல்லலை"

"சொன்னா ஒத்துக்கமாட்டே. இது தம்பும்பே. நஷ்டம் வரும். இப்போ நல்ல பேரிங்லயும் லாபம், மட்ட பேரிங்லயும் லாபம்."

"பேர் கெட்டுப் போகாதா"

"எவனோ பண்ணி நம்ம ஸீல் போட்டாலும் பேர்



கெட்டுப் போகும்."

"இது சரியில்லை."

"அதனாலதான் உன்கிட்ட சொல்லலை."

"இது தப்பு."

"இதுதான் சரிப்பா. இது ஒரு தந்திரம். இல்லேன்னா இன்னி தேதிக்கு டூப்ளிகேட் மார்கெட் நம்மை ஒழிச்சுடும். ஒரு பேரிங் ஒரிஜினல் நானூறு ரூபாய். டூப்ளிகேட் முன்னூறுக்கு விக்கிறோம். நானூறுல ப்ராஃபிட் நூறு. முந்நூறுல்ல ப்ராஃபிட் எவ்வளவு தெரியுமா இருநூறு."

"நாணாவட்டத்துல பேர் போகாதா"

"டூப்ளிகேட் வாங்காதீங்க. ஒரிஜினல் நல்லதுன்னு சொல்வோம். அப்பவும் நமக்குத்தான் ப்ராபிட்."

"இது வழியில்லை அண்ணா. டூப்ளிகேட் பண்றவனை வழக்குப்போட்டு உக்கார வைக்கணும்.

"அது இப்போதைக்கு முடியாத காரியம். நான் விக்கலைன்னு சொல்வான்."

"ஒரிஜினல் பத்தி அவேர்னஸ் கொண்டு வரணும்."

"ஜனங்ககிட்ட காசு கம்மி. நானூறு ரூபா பேரிங் முன்னூறுக்கு கிடைக்கறதுன்னா, அதுக்குத்தான் போவான்."

"வண்டி உடைஞ்சு குப்புற சாஞ்சா போட மாட்டான். நூறு ரூபாய்க்கு கணக்குப் பார்த்து ஆயிரத்துல நஷ்டமாக மாட்டான்.

"இது முட்டாள்தனம்" மீனா சீறினாள்.

"நீயே இது பண்ணுவேன்னு நினைக்கலைடா. எங்கிட்ட மறைச்சது எனக்குப் புரியலை.."

"நீ ஒதுங்கிக்கோப்பா. உனக்கு வயசாகலையா. நான் பார்த்துக்க மாட்டேனா"

"என்கிட்ட கேட்காதது தப்பு."

"கேட்டா ஒத்துக்கமாட்டே. நஷ்டம் எனக்குத்தான்."

"என்ன பேச்சு இது கம்பெனி உன்கிட்ட இல்லை. இது என் கம்பெனி" அப்பா கத்தினார்

"உனக்கு பிறகு நஷ்டத்துல ஓடறதை என் தலைல கட்டப் போறியா"

"இதுல மீனாவுக்கு பங்கு உண்டு."

"தரேன். வருஷா வருஷம் கணக்குக் காட்டி லாபம் தரேன்."

"நான் டம்மியா இருக்க முடியாது."

"சும்மா இருடி."

"டீ போட்டு பேசாதே."
"ஏய் மீனா"
"அப்பா நான் இங்க டைரக்டரா இல்லையா"
"நீ இல்லை. நீ இருந்தா நான் இல்லை."
"சுப்பிரமணி, நீ அதிகமாக போற."
"இனி இது என் கம்பெனிப்பா. இதை நான் எங்க இருந்தாலும் க்ளோசா வாட்ச் பண்றேன். இதை என்கிட்ட விட்டுடுங்கோ. யாரையும் எதுவும் கேட்க வேண்டாம்."
"இது சரியில்லை."
"இதை என்கிட்ட விடுங்கோ."
"இது தப்பு."
"உங்க காலம் வேற, என் காலம் வேற. இது என் வழி. டூப்ளிகேட் மார்க்கெட்டை நானே உருவாக்கி நானே அழிப்பேன். லீவ் இட் டு மி."
"இதுல என் இடம் என்ன அண்ணா?"
"நத்திங். அப்படி உனக்குன்னு ஒண்ணு வேணும்னா மெட்ராஸ் கம்பெனி பார்த்துக்கோ."
"அவளை டைரக்டரா போடறதுல என்ன உனக்கு இடைஞ்சல்"
"அப்ப என் வொய்ஃப் என் பொண், என் மச்சினி டைரக்டர். ஒண்ணுங் கீழே பத்துதான் இவ பங்கு."
"நான் வரலை."
"போ."
"அப்பா நான் போறேன்"
"மீனா இரு."
"உனக்கே மரியாதையில்லை. நான் எப்படி இருக்கிறது"
"மீனா எங்க போறே"
"தெரியலை அப்பா."
"மெட்ராஸ் போ."
"நான் ஐம்பது பர்சென்ட் ஷேர் ஹோல்டரா இல்லையா?"
"இல்லை. நெவர்."
"நீ சொல்லாத அண்ணா."
"யோசிக்கலாமா."
"யோசிச்சு சொல்லுப்பா. அப்ப வர்றேன்."
"எங்க போற"
"தெரியலை."
மீனா வெளியே வந்தாள். ஜெனரல் மேனேஜர் பின் தொடர்ந்து வந்தார்.
"மேடம், இதைத்தான் நான் சொல்லணும்னு நினைச்சேன். இது என் வேலையில்லை. உங்க பாதர்



சரியம்'ன்னு சொல்றதுக்குள்ள பேசில் அனுப்பிட்டேன். நான் உங்க பாதர்கிட்ட பேசறேன். நீங்களே டைரக்டரா இருங்க."
"மிஸ்டர், உங்களை அப்பா எங்கண்ணா வளர்த்திருக்கார். அதுனால திமிரா பேசறேன். இதோட போறும்."
"மீனா நான் உங்களுக்கு துணையா இருந்தா?"
"ஷட்டப். இரண்டு பேர்க்கு நடுவே மூட்டி விட்டு குளிர் காயலாம்னு பாருங்க. நான் உள்ள வந்தா உங்களுக்கு வேலை இருக்காது."
"அப்ப நீங்க உள்ள வரமுடியாது. மீனா, நான் என் கம்பெனியா நினைச்சு வளர்த்திருக்கேன் மீனா."
"நீ திருடன்."
"எல்லா வியாபாரியும் திருடன்தான். இது என் வீட்டு நெம்பர். எனக்கு ஃபோன் பண்ணுங்க."
"போடா ராஸ்கல்."
அந்தக் கார்டை அவள் தூக்கிப் போட்டாள்.
வண்டிக் கதவு மாதவன் திறக்க, உள்ளே உட்கார்ந்தாள்.
"எங்க போகணும்"
முதல்ல வெளியே போலாம். இந்த இடம் நாத்தமா இருக்கு."
வெளியே வண்டி வந்தது.
"எங்க போகணும்"
"உங்க ஊருக்குப் போ மாதவா. உங்க வீட்டுக்குப்போ. எனக்கு கொஞ்சம் நிம்மதியா யோசிக்கணும்."
வண்டி மதுரையிலிருந்து தஞ்சைக்குத் திரும்பியது. மாதவன் சந்தோஷமாய் வண்டி ஓட்டினான்.

## 27

விசுவாமித்திரரோடு ராமலட்சுமணரை காட்டுக்கு அனுப்பி கவலையோடு காத்துக் கொண்டிருந்த தசரதன், ராமன் மிதிலை போனதும், அங்கே வில் ஒடித்ததும், ஜானகி மாலையிட்டதும் கேட்டு மகிழ்ந்து போனார்.
மிதிலையில் வெற்றி பெற்ற வீரனாய் ராமர் நிற்பதைப் பார்த்து, மறுபடி மகனைப் பார்த்த சந்தோஷத்தில் கை விரித்து ராமனை அருகே அழைத்து ஆரத்தழுவிக் கொண்டாராம்.
அப்பா மாதவனை அப்படித்தான் வரவேற்றார்.
"கண்ணு துடிக்கறதுடா. மாதவன் கிட்டேர்ந்து

அப்புறம் வெட்டா வாணம்."

"வரும். எதுக்க கன நடக்கறது. இடதா... வரதா..."

"கனவுக்குள்ள நடக்கறது. நிறுத்தி நிறுத்தி நமளது நமளதுக்கு மாதிரிதான் யாரு. கன நடக்கறது. இருந்தாலும் வெட்டா காணோமேன்னு ஒரு கவலை."

"போ போய் பழைசக்கலோன்னு குழந்தைய வெளிய தாத்திட்டு பாம்புபாளேன்."

"இங்க உட்காந்து பட்டை சோறு திங்கறதுக்கு வெளியே போவேனுறான்."

"வெளிய அதுவா கிடைக்கறதோ இல்லையோ"

"அவன் வெட்டக்கான். கிடைக்கும்."

அப்படியில்லை. அவனை ரெண்டும் வெட்டானை யாரந்திருக்கோம். இது சரி. இது தப்புன்னு எகவ சொல்லி குழப்பிருக்கோம்."

"உட்கார வாச சொல்லிக் கொடுக்கறதுல ஒண்ணும் புரிஞ்சுக்க முடியாது இயலே. உலகம் நிறைய சொல்லித்தரும்."

"ஆனா வெட்டரே வாவை."

"அதுதான் எனக்கும் கவலை."

கார் நின்றது. வாசலுக்கு நேரே தெருவையடைத்து வீட்டை மறைத்து வெள்ளையாய் நின்று வீட்டுக்குள் வினோதமாய் காரின் உடம்பு வெளிச்சம் பிரதிபலித்தது.

மாதவன் தெருவுக்குள் நுழையும் போது படபடப்பாய் இருந்தான். வேணாம் துள்ளாதே நீ பணமா. உன் முதலாளி துக்கத்துல இருக்கா. அது புரியாத அலட்டாதே. மீனாட்சி முக்கியம். அவன் உன் வீட்ல என்ன சாப்பிட முடியும். எங்க தூங்க முடியும். யோசி."

எட்டென்று மனம் அடங்கிற்று.

"மாதது வா" அம்மா எழுந்தாள். அப்பா எட்டிப் பார்த்தார்.

"அந்தப் பொண்ணு மீனாட்சியில்லையோ... மாதவன், மாதவன் வந்திருக்கான்டி" சாய்வு நாற்காலியிலிருந்து எழும்பினார்.

"இருக்கட்டும். எதுக்கு கூச்சல். என்ன காரியமா வாரானோ. பெரிய இடத்துப் பொண். தடதடன்னு போய் நிக்க வேண்டாம்." மனசு அடக்கினாள்.

"வாங்கோ. வாப்பா."

அந்தப் பெண் மெல்லிய புன்சிரிப்புடன் கூடத்துக்கு வந்தது. சாய்வு நாற்காலியை வாசலுக்கும்



சொல்லை பரத்துக்கும் இடையே காற்று உடக்கும் இடமாய் பார்த்து போட்டாள்.

"உட்காரம்மா."

"அப்பா நான் நமஸ்காரம் பண்றேன். இவாகிட்ட எனக்கு டிரைவர் வேலை கிடைச்சுடுத்து. நானே மெட்ராஸ்லேர்ந்து கார் ஓட்டிண்டு வந்தேன். ரொம்ப சீக்கிரம் கார் கத்துண்டேன்ப்பா. நமஸ்காரம் பண்றேன். அம்மா நில்லுங்கோ."

தகப்பனும், தாயும் நிற்க பிள்ளை தரையில் நீண்ட கொம்பு போல விழுந்து பாதம் தொட்டான். சிரசை நகர்த்தி அவர்கள் பாதங்களில் பதிய வைத்தான். எழுந்தான்.

தகப்பனும், தாயும், கைகூப்பி, சிவனை தியானம் செய்தார்கள். மறுபடி மகனை பார்க்க முடிந்ததே என்று கடவுளுக்கு வந்தனம் சொன்னார்கள்.

"எப்படி மாதவா இருக்கே"

"சௌக்கியமா, சந்தோஷமா இருக்கேம்பா. எத்தனை கஷ்டம் வந்தாலும் உங்க பேச்ச மனசுல நினைச்சுண்டா எல்லாம் சுலபமா தீர்ந்து போறது."

தகப்பன் கைவிரித்து நிற்க, பிள்ளை அருகே வர பிள்ளையை தகப்பன் ஆரத்தழுவிக்கொண்டார். அம்மா அவன் முதுகு தடவினாள்.

"நல்லவனா இருக்கியா"

"இருக்கேம்பா."

தகப்பன் பிள்ளையின் தலையைத் தடவினார் உச்சி முகர்ந்தார்.

மீனாட்சியின் அடிவயிற்றில் ஒரு சந்தோஷமும், வேதனையும் படர்ந்தன. இப்படி யாரும் அவளை அணைத்துக் கொண்டதேயில்லை. இப்படி யாரும் அவள் தலையை வருடியதேயில்லை. எப்படி இருக்கே நல்லவனா இருக்கியா என்று அக்கறை பட்டதில்லை.

உன் ஊரை மாற்றி, என் கம்பெனிக்கு போய் இதைக் கண்டுபிடி என்று அவசரப்படுத்தி இருக்கிறார்கள். நீயும் டைரக்டராயிடு என்று உள்ளே இழுத்திருக்கிறார்கள்.

டைரக்டரா நீயா. இது என் கம்பெனி என்று மிரட்டல் வர - எதுவும் போதாது இருந்திருக்கிறார்கள்.

இங்கே பிரியம் பொங்கி வழிகிறது. வயசுப் பிள்ளையை இறுக்கித் தழுவி உச்சி முகர்கிற அன்பு தெரிகிறது. ஒருவேளை இதுதான் வீடா.

இப்போது இங்கே வந்தது சரியில்லையோ. இவர்கள் இன்னும் பொங்கி அன்புகாட்ட முடியாது நான் இடைஞ்சலாய் உட்கார்ந்திருக்கிறேனோ.

"அப்பா, இவாதான் நம்ம வீட்டுக்கு போகலாம்னு சொன்னா. மெட்ராஸ்லேர்ந்து மதுரை, மதுரையிலேர்ந்து இங்க வரோம். இவாளுக்கு ரெஸ்ட் வேணும். நம்மாத்துல வசதியா தெரியலை."

"தாராளமா தங்கலாம். என்னால முடிஞ்ச வசதி பண்ணித் தரேன். காப்பி சாப்பிடுவாளா?"

"பசிக்கறது. சாதம் இருக்குமா" மீனாட்சி கேட்டாள். மாதவன் பயந்தான். என்ன இருக்கும் இந்த நேரத்தில், கவலைப்பட்டான்.

"நல்லவா. இருக்கு. குழம்பு பண்ணியிருக்கா. குழம்பு சாதம் பிசைஞ்சு கைல போட சொல்லட்டுமா. தோட்டத்து கீரை கடைஞ்சு வச்சுருக்கு."

"நீங்க சாப்பிட்டேளா"

"இனிமேதான். கார்த்தால ஒருத்தர் வீட்டுக்கு குத்தம் சொல்லப் போனேன்.. ஒருபடி அரிசியும், அஞ்சு ரூபாயும் கொடுத்தா. சாப்பிடலாம்னு நினைச்சுண்டே இருந்தோம். கார் சத்தம் கேட்டது."

"எனக்கு போதும். சாப்பிட்ட பிறகு கொஞ்சம் தூங்கணும்."

"கொல்லைல கயித்துக் கட்டில் போடறேன். வாய்க்கால் தண்ணில காத்துப்பட்டு சிலுசிலுன்னு வீசும்."

வீடு பரபரத்தது. சிலீர் சிலீர் என்று முகத்தில் தொட்டி நீர்பட, பாதி களைப்பு போயிற்று.

எல்லாம் கிடக்க இங்கே தன் வீட்டுக்கு வந்து குழம்பு சோறு போடும்படி ஏன் கேட்கிறாள். அப்படி என்ன காயம். முகம் ஏன் வாடிக் கிடக்கிறது மீனாட்சிக்கு. எதனால் ஒரு சோர்வு நடையில். யார் என்ன சொன்னார்கள். என்ன ஆயிற்று அங்கே. தெரியவில்லை. ஒரு டிரைவருக்கு எல்லாம் தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. அம்மா உருட்டி உருட்டி போட, தரையில் உட்கார்ந்து, மீனாட்சி பல்வேறு விதமாய் கால்களை மடக்கி மடக்கி, சாதம் சாப்பிட்டது வேடிக்கையாய் இருந்தது.

"ரொம்ப தன்னாருக்கு மாமி. கடைசி வண்டல் எனக்கு மாதவா" கை நீட்டி கேட்டு சாப்பிட்டது ஆச்சர்யமாய் இருந்தது.

கொல்லையில் கட்டிலில் அமர்ந்து ஓடும் வாய்க்காலை பார்த்துக் கொண்டிருந்தாள். துண்டு சுற்றிய உறையில்லாத தலையணையில் மெல்ல



சாய்ந்து தூங்கிப் போனாள்.

அப்பா கொல்லைக் கதவை ஒருக்களித்து சாத்திவிட்டு கூடத்துக்கு வந்தார்.

"பெரிய்ய இடத்துப் பொண்ணுன்னு சொன்னியே"

"ரொம்ப பெரிய இடம்பா. வீடே மிரட்சியா இருக்கு. நம்ம அக்ரஹாரத்து எட்டு வீடு சேர்த்தா அவா ஒரு வீடு."

"அதான் கஷ்டம். மூலைக்கொருத்தரா இருக்கும்படி ஆயிடும்."

"அப்படித்தான் இருக்கா."

"என்ன ஆச்சு, எப்படி இவாளை மறுபடி பார்த்தே"

மாதவன் விவரம் முழுவதும் சொன்னான். மதுரையிலிருந்துகோபமாய் திரும்பியது சொன்னான்.

"என்னமோ காயம்பட்டிருக்கும் மனசுல. சொல்ல முடியாதபடி வேதனை இருக்கலாம் மீனாட்சி நெஞ்சுல."

"நான் கேட்கலை."

"கேட்க வேண்டாம்.. மனசு மாறுதலுக்கு வந்திருப்பா. அடுத்தது என்ன பண்ணலாம்னு யோசனை செய்ய வசதியா இங்க வந்திருக்கலாம். இங்க இருக்கற வரைக்கும் சௌக்கியமா வச்சுப் போம்."

"நாளைக்கு சமையலுக்கு ஏதாவது பண்ண வேண்டாமா"

"அஞ்சு ரூவா இருக்கு."

"என்கிட்ட காசு இருக்குப்பா. என் செலவுக்கு கொடுத்தது." இருநூறு எண்ணி அப்பாவிடம் கொடுத்தான்.

அப்பா காசு வாங்கி வெளியே போனார். அம்மா அரிவாளால் சவுக்குக் கட்டை பிளக்க ஆரம்பித்தாள். கார் ஓட்டிய களைப்பில் மாதவன் ஹாலில் உடம்பு சரிக்க, கண் விழித்தபோது மாலையாகியிருந்தது. அப்பா காப்பி டம்ளருடன் கொல்லைப்புறம் போவது தெரிந்தது.

"நான் வரட்டுமாப்பா"

"வேண்டாம். நீ எழுப்பினா வெட்கப்படுவா."

மாதவன் வாசலுக்கு வந்து கார் துடைக்க ஆரம்பித்தான். பிளாஸ்டிக் வாளியில் முற்றத்து தொட்டியிலிருந்து நீர் எடுத்து வந்து வண்டியின் மீது வீசி அடித்தான்.

# 28

சொல்லி. அப்பா பொண்ணோட நாடிபுடிச்சு பார்த்து பையன்தான் பிறப்பான்னு சொல்ல, இரண்டு குடும்பத்துக்கும் ரொம்ப சந்தோஷம். பிள்ளை பொறந்தது. அப்பாவுக்கு ஆறு பசு கொடுத்தார். இரண்டு காணி நஞ்சை கொடுத்தார்."

"இப்படி கொடுக்கறவங்க கோபிக்கவும் செய்வாங்க இல்லை."

"அப்பா கோபப்படறமாதிரி நடந்துக்க மாட்டார் மீனாட்சி. அந்தப் பொண் வாழ்க்கைப்பட்ட இடத்துல சொத்து பிரிக்கற தகராறு வந்தது. அப்பாவ மத்தியஸ்தத்துக்கு கூப்பிட்டா. அப்பா போகலை. நான் உங்க குடும்பங்களுக்கு துணையா இருக்க வந்திருக்கிறவன். நான் மத்யஸ்தம் பண்ணா தப்பா படும்ன்னுட்டார். மத்யஸ்தம் பண்ணா மதிப்பு... வருமானம் வரும். முடியா துன்னுட்டார் அப்பா. அப்படி சொன்னது கேள்விப்பட்டு பொண்ணை பெத்தவர் நூறு ரூபா அனுப்பினார். அன்னிக்கு நூறு ரூபா இன்னிக்கு பத்தாயிரத்துக்கு சமம்.

"மந்திரி மாதிரி இருந்தார், இல்லையா."

"கிட்டதட்ட அப்படித்தான்"

"நீங்க யாருக்கும் மந்திரியா இல்லையா."

மாதவன் அப்பா சிரித்தார்.

"காலம் தடேர்ன்னு மாறிபோச்சு தாயே. நல்லவா பேச்சு எடுபடாத காலம் இது. இந்த வருஷம் மழை அதிகம். கரும்பு அதிகம் போட்டு நெல்லு குறைவா போடலாம்னு யோசனை சொன்னோம். எப்படி என் போட்டா என்னா. எல்லாரண்டையும் இதுதானே சொல்றீங்க. எல்லோரும் கரும்பு போட்டா விலை குறையும். நான் நெல்லு போடப்போறேம்பான். அதனால சொல்றதில்லை. உட்கார்ந்து மந்திரம் சொல்றாகு. அவ்வளவுதானே. இதுக்கு என் நூறு ரூபாய்ன்னு கேட்பான். போறதேயில்லை."

"மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்ங்கற மாதிரியா."

"வசிஷ்தவம்."

"மதிக்க கேட்டா சொல்வேளா."

"கேட்கறதில்லை யாரும்."

"நான் கேட்டா."

"எனக்குத் தெரிஞ்சது சொல்றேன் தாயே. பேரிவ் பத்தி எனக்கு ஒன்னும் தெரியாது."



"எனக்கு என் வீடு பிடிக்கலை."

"காப்பி சாப்பிடு."

"நீங்க"

"நான் சாப்பிடறதில்லை. நெல்லி முள்ளிய முதல்நாள் ஜலத்துல போட்டு அதரெண்டு டம்ளர் குடிப்பேன். ஏன் உனக்கு. உன் வீடு பிடிக்கலை."

"ஏமாத்தறாங்க. என்னை வளர விடக் கூடாதுன்னு நினைக்கறாங்க."

"யார்"

"எங்கண்ணா"

"ஏன்"

"நான் போட்டியா வருவேன்னு பயம். திருட்டுத் தனம் பண்ண உதவியா இருக்க மாட்டேனு பயம்."

"உன் அப்பாவோட நிலை என்ன"

"அவர் அண்ணாவை பகைச்சுக்க பயப்படறார்."

"காரணம்"

"அண்ணா வளர்ந்துட்டான். அவன் செல்வாக்கு அப்பாவுதவிட பெரிசாயிடுத்து. சரியான திருட்டு குரூப்பை கம்பெனில சேர்த்துட்டான்."

"நீ என்ன பண்ணப்போறேம்மா?"

"வெளியே வரப்போறேன்."

"கம்பெனியா விட்டா"

"வீட்டை விட்டு"

"எதுக்கு வரணும். வீட்டைவிட்டு. அழகா போகணும். அப்பத்தான் உனக்கு எங்க போனாலும். மதிப்பு இருக்கும். தன்னிச்சைய இருக்கணுங் கறியா.."

"அடங்கியிருக்க முடியாது மாமா. இதை அலட்டலா சொல்லலை. இத்தனை காசோட நான் அடங்கியிருந்தா அது கிட்டதட்ட தற்கொலை. யாருக்கு அடங்கறதுன்னு தெரியாத அடங்க வேண்டியிருக்கும்."

"அந்தப் பொண்ணுக்கும் அப்படி நிலைமை வந்தது."

"என்ன நிலமை"

"இதே கரும்பு நெல்லு விவகாரம்தான். அவளுக்குன்னு அவங்க வீடு கொடுத்த நிலத்துல என் அப்பா வாழை போடச் சொன்னார். அவளுக்குன்னு அனுப்பினவா வாழை போட்டா. வராது வராதுன்னு ஊர் சிரிச்சது. ஆனா குலை குலையா பழம் பார்த்ததும் எல்லாரும் திகைச்சு போயிட்டாங்க. நெல்லு அப்படி வரலை. ஒன்னுக்கு

முக்காநான் தெரிந்து. பழம் எங்க விலை போகும்னு பயந்தாங்க. அப்ப ரெயில் போட்ட நேரம். அப்ப பெட்ரோலுக்கு ஆள்போட்டு ஆயிரம் நார் அறுப் பிளாட். ஏக காசு. பொண்ணுக்கு மதிப்பாயிடுத்து. மச்சினர்களுக்கு வருத்தம். தொந்தரவு பண்ணினான். சொத்து பிரிக்கும்படியா ஆயிடுச்சு."

"பிரிச்ச பிறகு."

"ராணி மாதிரி ஆயிட்டா. நீ சொன்ன மாதிரி அப்பாதான் மந்திரி."

"நான் பிரிஞ்சு வந்துடட்டுமா மாமா."

"கல்யாணம் செஞ்சுண்டு புருஷனை விட்டோட இருக்க வைக்கலாமா."

"புருஷன் வீடு கம்பெனிக்குள்ள வரும்."

"வரட்டும்"

"அண்ணா வரவிடமாட்டான். அது எனக்கு அங்கே தலை குனிவைத் தரும்."

"உன் புருஷனுக்குன்னு தொழில் இருக்குமே."

"இருக்கும். இருந்தாலும் இதுல என்ன பங்கு. இதுல என்ன பதவின்னு கேட்கத்தோணும். உள்ளவிட மறுத்தா வீம்புக்கு அதே தொழில் போட்டியா ஆரம்பிப்பா."

"அதனால..."

"நான் புருஷன்னு ஒருத்தன்கிட்ட போறதுக்கு முன்னே, மதிப்போட போகணும். பணக்கார வீட்டு பொண். நிறைய சொத்து இருக்கற பொம்பளைன்னு போகக்கூடாது. இது என் கம்பெனி. நான் டைரக்டர்ன்னு."

"எனக்கு உன் வீடு பத்தி தெரியாதே."

"என் வீட்டுக்கு வரேளா"

"என்னை மந்திரியாக்கறியா."

"எனக்கு உங்களை மாதிரி ஒருத்தர் வேணும் மாமா."

"இரண்டு நாள் இரு. என்னை புரிஞ்சுக்கோ. நானும் உன்னை தெரிஞ்சுக்க முயற்சி பண்றேன். மாதவன் நல்லபடி வேலை செய்யறானா"

"ஜெம்"

"கெட்ட பழக்கம் எதுவும் இல்லை அவனுக்கு."

"அதுமட்டுமில்லை. இங்கிதம் தெரியறது. எப்ப பேசணும்னு தெரியறது. எப்ப பேசக்கூடாதுன்னு புரியறது."

"உனக்கு இதை என்னால சொல்லித்தர முடியும்"



"இது சொல்லிக் கொடுத்து வருமா மாமா"

"உலகத்துல எல்லாமே சொல்லி தெரிஞ்சுக்கிற விஷயம்தான் மீனாட்சி. தெரிஞ்சுக்கிற ஆர்வம் பொறுத்து தெளிவுவரும். ஆர்வம் வரணும்னா எண்ணத்துல நாட்டம் வேணும். எது நாட்டம்"

"தெரியலை மாமா"

"யோசனை பண்ணு. தெரிஞ்சு சொல்லு. என்ன சமையல் உனக்குப் பிடிக்கும்."

"எதுவானாலும்."

"எதுன்னு சொல்லும்மா."

"சாப்பாடு முக்கியம் இல்லை. மாமா உங்களோட பேசணும்."

"சபாஷ் இதுதான் ஆர்வம்."

அவர் அவளைக் கூர்ந்து நோக்க, மீனாட்சி மலர்ச்சியுடன் அவரைப்பார்த்து சிரித்தாள். பாடம் அங்கே துவங்கியது.

## 29

சிலருக்கு சில நேரம் மிக நல்ல வழிகாட்டி கிடைத்துவிடும். எந்த முயற்சியும் செய்யாமல் எந்த தேடலும் நடத்தாமல் தானாய் எதிரே உதவி செய்ய ஆள் கிடைத்துவிடும். அப்படி கிடைத்த உதவியை இழிவாக்காமல் தக்க வைத்துக் கொள்ள சாமர்த்தியம் வேண்டும். உதவியா இது என்று சந்தேகம் கொள்ளாமல் உவப்பாய் உறவாட வேண்டும்.

முற்றி முதிர்ந்து வாழ்க்கையை சந்தோஷமாய் அனுபவித்து அனுபவத் தெளிவோடு அடங்கி அமைதியாய் இருக்கிற அறுபது வயது பெரியவரை இருபது வயது இளைஞனோ, யுவதியோ நெருங்கி பேச விரும்புவதில்லை. அப்படிப் பேசினால் அவர்கள் பேச்சு அங்கே எடுபடுவதில்லை. ஹீரோவாய் அந்த அறுபது வயது முன்பு உட்கார முடிவதில்லை. உடனே கோபம் வந்துவிடுகிறது. கிழம் கேலி செய்கிறதே என்கிற புறக்கணிப்பு வந்துவிடுகிறது. அந்தப் புறக்கணிப்பால் கிழம் ஒரு முட்டாள் என்கிற விமர்சனம் வந்து விடுகிறது. கண்டிப்பு கசப்பதால் காழ்ப்பு ஏற்பட்டு விடுகிறது.

ஏன் இடக்கு பேசுகிறது கிழம்... ஏன கண்டிக்கிறது இது என்று சில கணங்கள் யோசித்தால் புரிபட்டுவிடும்.

இதனாலேயே எல்லாம் சொல்லித்தர முடியாது. சில சமயம் கடுமையான வார்த்தைகள் உதவி

செல்வியை உபயோகிக்க அது பொருட்படுத்தாது இருக்க பக்குவம் வேணும்.

"குளிச்ச கல்ல தண்டுன்னு வர வீட்டுக்கு வேற உருப்படி இருக்கா. அசைஞ்சுல அலாரம் விடுவியா?"

மீனாட்சி தலையசைத்தாள். பெட்டியை எடுத்துக் கொண்டு கொல்லை கதவு சாத்திக் கொண்டாள்.

மாதவன் அப்பா சமையல்கட்டை எட்டிப் பார்த்துவிட்டு மாதவனைத் தேடி வெளியே வந்தார்.

கதவு திறக்க மாதவன் யாரிடமோ இரண்டு இளை ஞர்களுடன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. சண்டை போட்ட ஆட்கள் அல்லவா இவர்கள்... கொஞ்சம் மனம் கலவரம் வந்தது. முழுமையாய் கதவு திறக்காமல் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தார்.

"ஒரு பொறுமையைதாங்க அப்படி ஆயிடிச்சு. எண்ணட்ட நரம கூடத்தான் வேலையில்லாத இருக் கம்... நாமகூடத்தான் அஞ்சறுமாசத்து வழியில்லாத இருக்கம். நமக்கு சம்பாதிக்க வக்கில்லே. நீங்க சம்பாதிக்கிறதனாலதான் கோபம்."

"கல்லூரியிலே மனசுல ஜாலியா எடுத்தாங்க. போலீஸ்ல பேசி தண்டனைதான் கேரண்டி சொன்னாங்க. சொம்ப வெட்கமாபோச்சு. அப்பா வரலை.. அண்ணன் வரலை. கல்லூரியில் மன்னிப்பு எடுக்கறாங்களேன்னு வெட்கமாயிடிச்சு."

"மனசுல உங்களைப்பத்தி உயர்வா பேசறாங்க."

"அவருக்குத்தெரிஞ்சது உனக்குத் தெரியுமா. அவரு பெரிய கோயில் பத்தி எத்தினி தகவல் சொல்றாரு... தஞ்சாவூர் பத்தி சரித்திர பூர்வமா எத்தினி தகவல் சொல்றாரு. அந்த மாதிரி உங்கிட்ட எதுனா இருக்கா.. இது தெரியும் எனக்குன்னு ஏதாவது சொல்லு.."

"இவன் நூலையில்லாத சினிமா பத்தி கேளுங்க, சொல்லிடுவான். கிரிக்கெட் கேளுங்க."

"சினிமா தெரிஞ்சுகிட்டு என்ன செய்யப்போற.. வளத்துப்பாட்டுக்கு எப்படி உதவும். அதுன்னு கேட்டாங்க. பதில் சொல்ல முடியலை."

"சினிமா தெரிஞ்சுக்கறது தப்பு. தேவை யில்லைன்னு சொல்லலை. அது ஒரு கலை சாதனம். தெரிஞ்சுக்க விருப்பம் இருக்கறதுன்னா தாராளு



கு. பொட்டலம் போல சினிமால சேருங்களாக. இவன் வசூலாம் பொட்டல போறான். ஓட்டும் போறான். எங்க வீட்ல விட்டுட்டேன். இவன் டாக்க. இவன் போல் பெட்டில் ஆயிட்ட நானும் சினிமாவுக்கு போயிடுவேன். அதனைக்கும் மனசுல லைப்ரரி பார்த்துக்கப் போறேன். மனசும் தாண்டிதான் கார் போச்சு."

"பாருங்கடா தம்பிகளா, நம்ம ஊர்ல மாடு கூட பிடிக்கத் தெரியாதவரு காரு ஓட்டிக்கிட்டு போறா ருன்னாங்க. எட்டிப் பார்த்தோம். போலீஸ் கேஸ் பண் ணிக்க. தப்புன்னு மன்னிப்பு கேட்டுக்க. பொட்டலல அவரு உனக்கு துணையா இருக்கலாம். தேவைப் பட்டபோது அந்த பத்து அவருகிட்ட கேட்டுக்க லாம். வெக்கப்படாத மன்னிப்பு கேளுங்களாக. அதான் வந்தோம்."

மூட்டுதலைத் தாண்டி வெளி வந்த வெகுளித் தனம் அழகாய் இருந்தது. உபயோகப்படுத்தப் படாத அறிவாள் போல இருந்தவர்களை கல்லூ ரியிட்டு மனசும் அடைத்து நாக தட்டியிருக்கிறது.

மாதவன் தலை குனிந்து சிரித்தான்.

"தம்பூர் ஆளு பொட்டலல தவிச்ச கல்லா பாத் துண்டு இருக்க முடியாதுதான். அதே சமயம் அதிகமா எண்ணையும் ஒண்ணும் செய்ய முடியாது. நானே இன்னும் கல்ல வளாத இருக்கேன். எப்ப சுல்ல நான் தெண்பட்டாலும் கூப்பிடுங்க. என்னால முடிஞ்சது செய்யறேன். நானும் ஒரு ஆத்திரத்துல சண்டை போட்டுட்டேன். மன்னிக்கணும்."

"அட... என்னாங்க நீங்க... தப்பு செஞ்சது நாங்க தான்... நீங்க என்னாத்துக்கு மன்னிப்பு கேக்கணும்."

"மாதவா..."

கதவு திறக்காமல் அவன் அப்பா குரல் கொடுத்தார். மாதவன் வணக்கம் சொல்லி விட்டு உள்ளே வந்தான். அப்பா அவர்களை கவனிப்பது பார்த்துச் சிரித்தான்.

"என்ன மாதவா"

"ஒரு விதத்துல இவங்களுக்கு நன்றி சொல்லணும் அப்பா... இவங்களோட சண்டை போட்டு போலீஸ் ஸ்டேஷன் போகாத இருந்தா எனக்கு கார் விட்டே போகணும்னு தோணி யிருக்காது."

"எதிரிகள்தான் தம்மை வளப்படுத்துகிறவர்கள்னு ஒரு பழமொழி உண்டு."

இருக்கட்டும் வா உள்ளிட்ட கொஞ்சம் போறும்."

மாதவ உள்ளே வர நாங்கள் தங்கியுற அவனையும் உட்கார்ந்த கொண்டார்கள்.

"மதுரைல என்ன நடந்தது என அந்தப் பெண் இந்தளை வேதனைய இருக்கா...அவ வீட்ல வேறயாருமே யார்"

"அந்த வீட்ட கொஞ்சம் ஆச்சரியப்பட்டா. அப்பா எங்க இருக்கா, இப்ப போவாமான்னு வேணும் கிட்டதான் கேட்கணும். மகன் வேணும் சொன்னாதான் அப்பா வைப் பார்க்கணும்."

"சரி பெரிசோ..."

"உடல."

"பொண்ணுக்கு அம்மா இல்லையா"

"இருக்கா. ரத்த பொண்ணுக்கு நாளைய தோழன் போயிருக்கா."

"மத்த உறவுகள்"

"மாமா மாமின்னு சில ஆட்கள் பேர் காதுல விழுந்தது. எல்லாம் பெரிய இடம். பணம் உள்ள இடம்."

"நீய தனியாதான் இருக்கணுமா வீட்ல"

"தனி என்ன நிறைய வேலைக்காரா இருக்கா."

"நீய அண்ணாவுக்கு இப்ப பெரிய ஆளா வாரத பிடிக்கலையா"

"நனக்கு சீப்பு இருக்கணும்னு பார்க்கறா போல இருக்கு."

"பெரியவருக்கு பெண்ணை பிடிக்குமோ..."

"பிடிக்கும். ஜுஞ்சில ஒரு மலர்ச்சி மீனாட்சி மையம் பார்த்ததும் வரும். எனக்குத் தெரிஞ்ச அதிக நிமிஷம் சேர்ந்தாப்பல பெரியவர் பேசுறத இவா கிட்டதான்..."

"வேணாம் எப்படி"

"பெரியவர் மேல ரொம்ப விஸ்வாசம். பெரிய வருக்கு அப்புறம்தான் மத்தவா."

"ராஜாங்கமது சொல்லு."

"அப்படித்தான்."

"இது எங்கறதே..."

"இவளும் பத்து பதினைஞ்சு வருஷத்துல அப்படி வந்துருவாப்பா"

"சிலருக்கு முடியாது."

"ஏது"

"ரொம்ப வியாதி இருக்கா..."

"ஒட்டு இருக்க இடம் இல்லை. அதான் பிரச்சனையாயிடும்..."



"அப்படி நட்ட நேரம் இவளைவ அந்த வேலைக்கு போனப்பா...விட்டிருவா..."

"உன் கிட்ட மீனாட்சி என்ன சொன்னாப்பா."

"சொல்லித் தானுமாம்."

"ஏது"

"வாழ்க்கை."

"நிறைய காசு...வாழ்க்கைல எந்த குறையும் இல்லை."

"அப்படியிருக்கும் மாதவா...காசு மட்டும் வாழ்க்கை இல்லை."

"எனக்குப்பா இது...நாம எப்படி சம்பாதிச்சுத் தவிச்சிருக்கோம். என நமக்கு மட்டும் இந்தளை காசு கஷ்டப்பட்டு வேதனைப்பட்டிருக்கோம்."

"வேதனைப்பட்டது நீ. நானில்லை. ஏது நமக்கு இல்லையோ...அதுக்கு ஏன் ஏங்கும்...இந்தப் பொண் நட்டுக்கு எங்கறா நாதி."

"ஏதுமே தெரியலைப்பா...தெரிஞ்சா காசு ஆசை வந்திரும்."

"அப்படி சொல்றதுக்கில்லை. இது போதும்னு சின்ன இடமா கிடைச்சா அது உட்கார்ந்துடும்."

"என்ன சொல்லித்தரப் போற..."

"அவளை அவளுக்கு புரிய வைக்கணும்."

"எப்படி"

"என்ன உனக்கு தேவைன்னு அவளையே அவள் கேட்டு தெரிஞ்சுக்க வைக்கணும்."

"வெறும் பேச்சுல தெரிஞ்சுருமா"

"பேசிப்ப நான் செய்யறது ஆரம்பம். அப்புறம் போகப் போகத் தெரிஞ்சுட்டா செய்யற காரியத்துல நடமாட்டம் இருக்கும்."

"காசு முக்கியமில்லைன்னு சொல்லித் தரப் போறியா"

"காசு எதுக்கு முக்கியம்...எப்ப முக்கியம்...எப்ப முக்கியமில்லைன்னும் சொல்லித்தரப் போறேன்."

"காசு முக்கியமில்லாத நேரம் உண்டா?"

"உண்டு."

"என்னை சம்பாதின்னு வெளிய தாத்திலே..."

"அப்ப உனக்கும் சேர்த்தே சொல்லித் தரேன்."

"என்னது"

"காசு எப்ப முக்கியமில்லைன்னு."

"எனக்குப் பிடிக்கலை."

"ஏன்"

"[illegible] [illegible] இருக்கு"

"கார என் முக்கியம் மாதவா"

"கார் வாங்கலாம்."

"ருசி கண்டு போச்சு உனக்கு"

"தப்பா"

"கார் வாங்க பெத்தவனை கொலை பண்ண முடியுமோ"

"என்ன கேள்வியப்பா இது"

"அப்படி ஆயிடும். ருசி அதிகமானா அப்படி நேரும்."

"இதுக்கு என்ன செய்யணும்கற."

"அப்பாவைக் கொலை பண்ணிட்டு கார் வாங்கிப் பார். அப்ப கார் எத்தனை வேதனையா இருக்கும்னு தெரியும்."

"நான் அப்படித்தான் வாங்கணும்னு சொல்லலையே..."

"கார் கார்னு மனசு பறக்கறபோதே ஒரு லட்சியம் நோக்கி போறபோதே இழப்பு என்னன்னு தெரியணும்."

"இழப்பு இல்லாம லட்சியம் போக என்ன வழி"

"மீனாட்சி வரட்டும்."

"நான் போய் கூட்டிண்டு வரேன்."

"உட்கார்."

"ஏம்ப்பா"

"யாரையும் விரட்டாதே. அதுல வெறுப்பு வரும்."

"சீக்கிரமா வரச் சொல்லத்தான் ட்ரை பண்றேன்."

"உனக்கு சீக்கிரமானது அவளுக்கு முக்கியம் இல்லாமல் இருக்கலாம்."

மாதவன் குழம்பினான்.

ப்பாடம் கேட்க இரண்டு பேர் இருப்பது அவருக்கு சௌகரியமாயிற்று.

## 30

சொல்லிக் கொடுப்பதில் எந்த சிரமமில்லை. ஆனால் சொல்லிக் கொடுத்ததை, சொல்லிக் கொடுத்த விதத்தில், புரிந்து கொள்ளத்தான் சிரமப்பட வேண்டியிருக்கிறது. சொல்லி கொடுப்ப வன்மீது முழு கவனமாக கற்றுக்கொள்பவன் இருக்கவேண்டியிருக்கிறது. அப்படி ஒரு கவனம் வர, ஆர்வம் தேவையாய் இருக்கிறது. இந்த ஆர்வத்திற்கு அப்பால், சொல்லிக் கொடுப் பவனுக்கு விஷயம் தெரியும்



என்ற நம்பிக்கை, கற்றுக் கொள்பவனுக்கு தேவைப் படுகிறது. கற்றுக்கொள்ள ஒரு நல்ல சூழ்நிலை தேவையாய் இருக்கிறது. கற்றுக்கொள்ள நல்ல நேரம் தேவைப் படுகிறது. எனவே தான் இந்த காவேரிக்கரை, வாய்க்கால் ஓரம், நீரும் பசுமையும் சூழ்ந்த சூழ் நிலையில், கதிரவன் மரங்களுக்கு பின்னே மறைந்து கொண்டேயிருக்கும் இந்த மாலையில் பேச ஆரம்பித்தேன்.

நீங்கள் இருவரும் நான் சொல்வதை மிகக் கவனமாக கேளுங்கள். உங்கள் கவனம் குறைந் தால் நஷ்டம் எனக்கில்லை. எல்லாப்படிப்பும் ஒன்றின் தொடர்ச்சியாய் ஒன்று என்று போவது. ஒரு இடத்தில் கவனம் குறைய, ஒருபள்ளம் விழுந்துவிடும். மற்ற விஷயங்கள் தொடர்ந்து புரியாமல் போகும். எனவே மனசு சிதறாமல் நான் சொல்வதையேக் கேளுங்கள்.

மாதவனும், மீனாட்சியும் எதிரே உட்கார்ந்து கொண்டி ருக்க, மாதவனின் அப்பா கம்பீரமாய் பேச ஆரம்பித்தார்.

மீனாட்சி அவரை ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தாள். அவர் கண்களின் கீழ் இரப்பைக் கடியே மெல்லியக் கோடுகளாய் சுருக்கங்கள் விழுந் திருந்தன. கண் விளிம்பு சிவந்திருந்தது. அவர் பார்வையில் ஒட்டுதல் இல்லாது, ஒரு விலகல் தெரிந்தது. சகலமும் தெரிந்த சாந்தம் மின்னிற்று.

மீனாட்சி தன்னையும் மீறி அவரை நோக்கி கை கூப்பினாள். விலகலாய் இருந்த அவர் பார்வை சட்டென்று மாறி கனிவோடு பார்த்தது. உதடுகளில் புன்னகை அரும்பிற்று. அந்த கை கூப்பலை ஏற்றுக் கொண்டு அவளை நோக்கி தலை அசைத்தார். சில கணங்கள் ஊடுருவிப் பார்த்தார். தலை தூக்கி வானம் பார்த்து பிறகு கீழிறக்கி நீண்ட பெருமூச்சு விட்டார். கண்களை மூடிக்கொண்டார். பேசத் துவங்கினார்.

எவனொருவன் என்னையே நினைந்துக் கொண்டு இருக்கிறானோ, அவன் தினசரி யோக க்ஷேமத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்.

இது கீதை.

இது கீதையில் உள்ள முக்கியமான ஸ்லோகம். மனிதர்களுக்கு கடவுள் நம்பிக்கை அவசியம் தேவை என்கிற ஸ்லோகம். உன்னைப் பற்றிய அக்கறையை என்னிடம் கொடுத்துவிடு என்று

உறுதியாகச் சொல்கிற ஸ்லோகம். இந்த வாக்கியத்தை வேறுவிதமாகப் பார்க்கலாம்.

உன்னை, உன்னைப்பற்றிய காரியத்தை கடவுளிடம் கொடுத்துவிடு. அப்படிக் கொடுத்துவிட கடவுள் உண்டு என்று நம்பு. கடவுள் நம்பிக்கை இல்லாதபோது தான் பல சிக்கல்கள் வந்து சேருகின்றன. அகங்காரத்தின் உச்சகட்டம் தான் கடவுளை மறுப்பது.

இன்னொரு விதமாய் சொல்கிறேன். கடவுள் நம்பிக்கை ஒரு வசதி என்று தெரியாதபோது சிரமம் அதிகமாகிறது. நமது எண்ணங்களை உற்றுப் பார்க்க, அது போடுகிற கோடுகள் நமக்கு தெளிவாய் தெரியும். நான் வலிமையுள்ளவன், நான் திறமையுள்ளவன், நான் காசு உள்ளவன், நான் கவிதையில் சிறந்தவன், என்று ஏதேதோவாய் நம்மை நினைத்துக் கொள்ள நம் பலத்தின் கன பரிமாணங்கள் பற்றிய அக்கறையே நம்மை ஆக்ரமித்துக் கொள்கிறது.

ஒரு உதாரணத்தோடு சொல்கிறேன். என்னை நான் கவிஞன் என்று நினைத்துக் கொள்ள, என்னை நீங்கள் கவிஞர் என்ற அடைமொழியோடு கூப்பிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அப்படி கூப்பிட வேண்டும் என்பதற்காகவே தினம் பத்து பதினைந்து கவிதைகள் எழுதுகிறேன். அந்தக் கவிதைகள் நன்றாக இருக்கிறனவா என்று கவலைப் படுகிறேன். உங்களைக் கேட்கிறேன். நீங்கள் இதைவிட நல்ல கவிதை அவர் எழுதுகிறார் என்று எவரையோ குறிப்பிடுவீர்கள். உடனே பதறி விடுகிறேன். அவர் தன்னை 'கவியரசு' என்று சொல்லிக் கொள்வதை அறிகிறேன். உடனே என்னை 'கவிச்சக்கரவர்த்தி' என்று பிரகடனப் படுத்துகிறேன். நீ எப்படி அவரைவிட பெரிய ஆள் என்று எவரோ கேட்பார்கள். இப்படி எவரோ கேட்டதற்கு வேறு எங்கோ, வேறு எவரிடமோ பதில் சொல்கிறேன். பதில் சொல்லலோடு நிற்காது கவிச்சக்ரவர்த்தி என்று காட்டுவதற்காக கவிதைகள் எழுதுகிறேன். அந்தக் கவிதைகள் மற்ற எல்லா கவிதைகளையும்விட உயர் வானவை என்று கூறி விற்கிறேன். வாங்கும்படி வற்புறுத்துகிறேன். கவிதை எழுதுகிற ஒரு மனோ நிலையைவிட, கவிதைகளை உற்பத்தி செய்து, விற்கிற தந்திரமே முன்னே நிற்கிறது. 'விற்பனையில் புத்தி' போக,



வாழ்வில், கவித்துவம் குறைகிறது. வாழ்வில் கவித்துவம் குறைய, கவிதையின் பலமும் குறைகிறது. பிரகடனப்படுத்திக் கொண்டதால் கீழிறங்கவும் முடியவில்லை. மேலே போகவும் முடியவில்லை. அகங்காரப்பட்டதால் ஆறுதல் செய்யமுடியவில்லை.

உங்கள் இருவருக்கும் வாலிபம் வந்துவிட்டது அதனால் சொல்கிறேன் வெட்கப்படாமல் கேளுங்கள். வாத்ஸ்யாயனரின் காமசூத்திரத்தில் ஒரு ஸ்லோகம் உண்டு.

எவனொருவன் எப்போதும் காம நினைப்பாக இருக்கிறானோ, அவனால் போகத்தை பூரணமாக அனுபவிக்க இயலாது. மிகவும் சூட்சமமான ஸ்லோகம் அது. ஒன்றில் ஆறுதல் வேண்டுமெனில் என்னேரமும் அதைக் குறித்தே எண்ணிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. கவிதையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவன் நல்ல கவிஞனாவதில்லை. வெறும் வார்த்தைகளை பிரசவிக்கிறவனாகிறான். உலகத்தின் பல்வேறு விஷயங்களில் ஈடுபட்டு மிதந்திருக்கும்போது, ஏதேனும் ஒரு இடம் வேகமாய் தாக்கி உங்களிடம் கவிதையை கொண்டு வந்துவிடும். அதாவது நீங்கள் இன்னார், இன்ன விதம் என்று முடிவு செய்து கொள்ளாமல், எந்த கிரீடமும் சூட்டிக் கொள்ளாமல், வாழ்கிறபோது சாதாரணமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

அதாவது கர்வமற்று இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அகங்காரப்படுவதால் மற்ற விஷயங்களைப் பார்ப்பது, மற்ற மனிதர்களை அறிவது குறைபாடாய் போய்விடும். அறிய வேண்டியதை அறியாமல், தவறாய் புரிந்து கொள்ள நேரிடும். எனவேதான், இந்த கர்வம் வாராதிருக்கும் பொருட்டுதான், கடவுள் நம்பிக்கை என்ற சுமைதாங்கியை ஏற்படுத்திக் கொள்வது. இந்த நம்பிக்கை உள்ளே இருக்க, என் வெற்றிக்கு நான் மட்டுமே காரணமல்ல என்ற எண்ணம்வர, நம் வெற்றியைக் குறித்து ஓர் அதிசயமும், வெட்கமும் தோன்றும். என்னை மாதிரி எத்தனையோ பேர் ஜெயித்திருக்கிறார்கள் என்கிற அடக்கம், அந்த வெட்கத்தினால் ஏற்படும். அப்போது இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். வெற்றியின் மமதையில் மனிதர்களிடம்

இருந்து விலகாது. மனிதர்கள்மீது இன்னும் பிரியம் ஏற்படும். மமதை இல்லாதபோது நிர்ப்பந்தங்களும் இல்லை. கவிஞன் என்கிற பட்டம் இல்லாதபோது, கவிதை எழுதவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை. ஆனால் கவிதை தன் பாட்டிற்கு இயல்பாய் வந்து கொண்டிருக்கும்.

நான் கவிதை எழுதுவது புத்தியின் முயற்சியால் என்று தோன்றும்போதே, அந்த புத்தியின் முயற்சிக்கு தூண்டுவது யார் என்ற கேள்வியும் வரும்.

தன் முயற்சியைத் தூண்டும் சக்திக்கு தலை வணங்கத் தோன்றும். அதைக் கடவுள் என்று மனசு குறித்துக்கொள்ளும். வெற்றிக் கொள்ளவே பிறந்திருக்கிறோம் என்ன மமதையில் இருந்து விடுபடும். மமதை இல்லாத இடம் அமைதியான இடம். அமைதியான இடம்தான் கவிதைகளின் ஊற்று, செயல்களின் ஆரம்பம்.

இந்த அமைதி கொடுக்கும் நேசிப்பு நம்பிக்கை அலாதியானது. சக மனிதர்கள்மீது அன்பும், ஆர்வமும் ஏற்பட்டு விட்டால் வாழ்க்கை உவப்பானதாகும்.

மிக அற்புதமான கவிதை என்று பிறர் பாராட்டும் போதே அப்படியா என்று கேட்கத் தோன்றும். கவிதை அற்புதமாக இருந்தால் போதுமா? படிப்பவர்களும் அற்புதமாக இருந்தால்தானே, கவிதைக்கு மதிப்பு என்று பதில் சொல்லத் தோன்றும். பாராட்டியவரை பாராட்ட ஆர்வம் வரும்.

அந்த நிலையில் கவிஞனும், கவிதையும், வாசிப்பவனும், ஒரே சமதளத்தில் இருக்கிறார்கள். இந்த மூன்றின் தொடர்பும் இறுக்கமானதாகிறது.

இதை மறந்துபோய், ஒரு கவிஞன் கர்வப் பட்டானேயானால் அவன் கர்வத்தால் வாசிப்பவர் களை இழந்து கீழே போக, அந்த வாசிப்பவனுக்கும் கீழே கவிதை போய்விடுகிறது.

இன்னொரு விஷயம் முக்கியம், கர்வமற்று இருத்தலை போலியாக செய்துவிடுதல் ஆகாது. இதைவிட கர்வப்பட்டு கிடப்பது உத்தமம்.

தன் முயற்சிகளுக்கு ஆதாரமாக இருக்கின்ற, தன் நெஞ்சின் அடி ஆழத்தில் இருக்கின்ற, ஒரு மகோன்னத சக்தியை உணர்ந்து நிற்றலே கடவுள் நம்பிக்கை. மற்ற படி கோவில், குளம், மூலவர், உற்சவர் திருவிழா, தீமிதி, பண்டிகை, உயிர்ப்பலி,



கட்டிடங்கள், மதச்சின்னங்கள் எல்லாம் வெறும் கடவுள் நம்பிக்கையின் ஆரவாரம். குழந்தைத் தனம்.

பெரிய நிலவு உதயமாகிக் கொண்டிருக்க, ஐந்து வயசு குழந்தை அதோ நிலா அதோ நிலா என்று கத்துகிற குழந்தைத்தனம். எல்லோருக்கும் நிலவு தெரிகிறது. ஆனாலும் குழந்தை கத்துகிறது.

எல்லோர் நெஞ்சிலும் கடவுள் உண்டு. அது பற்றி தனக்குத்தான் அதிகம் தெரியும் என்கிற குழந்தைத்தனம் தான் மதவெறி. தன் மனோ சக்தியை சரியாக உணராது, உணர்கின்ற அமைதியை வளர்க்காது, மனோசக்தியை உணர்ந்தவர்கள் சொன்னதைக் கேட்டு உணராது கத்துவது மதவெறி.

எல்லா மனிதர்களும் அந்த மனோசக்தியை உணர்வது மிக முக்கியம். இப்படி செய்ய, செய்கிற வேலையின் மீது முழு ஈடுபாட்டுடன் இருக்கலாம். கர்வத்தால் கலைக்கப்படாமல் இருக்கலாம். ஒருவன். இளம்வயதில் கடவுள் நம்பிக்கையை சரியாக புரிந்து கொண்டுவிட்டால் வாழ்க்கை அவனுக்கு மிக எளிதாக இருக்கும். இந்த காசு, பணம், கை, கால், மூக்கு, காது, வாழ்க்கை எல்லாமுமே கடவுள் கொடுத்தது என்று தோன்றும். கொடுக்கப்பட்டதை வைத்து முன்னேறத் தோன்றும். உடனடியான ஜெயங்களுக்கு உற்சாகம் கொள்ளாமல், அந்த ஜெயத்தை அர்ப்பணிக்கத் தோன்றும். வேலையில் முழுகவனம் இருக்கும். பலநேரங்களில் கவனம் சிதறுவதற்கு கனவும், கர்வமும்தான் காரணம். கனவு ஏன் வருகிறது? கர்வப்படுகிற வனைப் பார்த்து காப்பி அடிக்கிறவனுக்கு கனவு வரும்.

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் என்பதற்கு நீங்கள் வேறு அர்த்தம் செய்து கொண்டு இருப்பீர்கள். கர்வப்படுகிறவனின் மூக்குக்கு அருகே, அதாவது மண்டையின் வாசலுக்கு அருகே போய் விடாதே. மதியாதார் என்பது உன்னை மதிக்காதவன் அல்ல. தன் மனோசக்தியை மதிக்காதவன், கடவுளை மதிக்காதவன். அவன் மூக்கு தலைவாசல் வெப்பமாய் இருக்கும். இடைவிடாத பொறாமையால் சூடாய் இருக்கும். மூக்குடாணவர்கள் கண்கள் சிவந்து அடிக்கடி மேலே சொருகியும், உதடுகள் கீழ்நோக்கி இழிந்தும் காணப்படும். கோணலான சிரிப்பு ஏற்படும். அந்த மனிதன் தன் நடையழகை கவனித்துக் கொண்டே

[illegible]

சத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன் முக்தி:

நல்ல சகவாசத்தால் நல்லகுணங்கள் உறுதி படுகின்றன. நல்ல குணங்கள் உறுதிப்பட்டால் ஆசையில் இருந்து விலகி வர முடிகிறது. [illegible] அமைதி உண்டாகிறது. [illegible]

[illegible]

பொம்மைகள் கடவுள்கள் அல்ல. [illegible] கடவுள் அல்ல.

உருவம் கடவுள் அல்ல. [illegible] கடவுள் அல்ல. உன்னை நீ உருவமாக [illegible] உருவமாக



[illegible]

அன்போடு, அன்புமயமாய் இருக்கிற சித்தத்தில் ஆவேசமில்லை. ஆவேசமில்லாத போது துக்கமும் இல்லை.

இதை இன்னொரு உதாரணத்தின் மூலம் சொல்கிறேன்.

## 31

ஜெயிக்கின்ற எல்லோரும் கர்ப்பிணியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நிறைமாதக் கர்ப்பிணியாய் இருக்க வேண்டும்.

நிறைமாத கர்ப்பிணிக்கு தன் கருவின் மீது அபார நம்பிக்கையும், அதனால் அதன் மீது ஒரு அன்பும் ஏற்படும். தான் சுமக்கின்ற கரு மீது ஏற்பட்ட அன்பு தன் மீதும் பரவி, தன்னைத்தானே நேசிக்கின்ற ஒரு ஆதாரமாக அந்த கர்ப்பிணி இருப்பாள். அதே சமயம் தான் சுகப்பிரசவம் அடைய வேண்டுமே என்ற கவலையும் அவளுக்கு இருக்கும்.

கருவின் மீது கொண்ட அன்பால், கவலையால், கர்ப்பிணி அதிர்ந்து நடக்க மாட்டாள். ஆவேசம் கொள்ளமாட்டாள். அப்படிச் செய்ய நஷ்டம் அவளுக்கே. மாறாய் கர்ப்பிணி ஒவ்வொரு அடியும் கவனத்துடன் எடுத்து வைப்பாள்.

அதுபோல,

நீ செய்து முடிக்க வேண்டிய காரியத்தை, ஏதோ ஒருவிதமாக ஆளாக வேண்டிய விருப்பத்தை, ஏதோ ஒரு கர்ப்பிணிப் பெண் தாங்குவதைப் போல் தாங்கு. எல்லா நேரமும், எதைச் செய்தாலும், கர்ப்பிணியின் சிந்தனை கருவிலே இருப்பதைப் போல, உன் உயர்வு குறித்த சிந்தனை உன்னிடம் இடைவிடாது இருக்க வேண்டும். ஒரு கவலைப் போல இருக்க வேண்டும்.

வீண் வம்பிலோ, வழக்கிலோ ஈடுபட விரும்பாது, எங்கேனும் சிக்கினாலும், நகர்ந்து கொள்கிற கர்ப்பிணியாய் நீ இருக்க வேண்டும். கர்ப்பிணி ஆவேசமுற்றால் பிரச்சினை கருவுக்குதான். நீ ஆவேசமுற்றால் பிரச்சினை உன் உயர்வுக்கு தான்.

இப்போது நான் சொல்வதை நன்றாய் உற்றுக்கேள். உள் வாங்கு.

கர்ப்பிணி தன் கருவினை நேசித்து, அதைத் தாங்கும் தன்னை நேசிப்பது போல, உன் இலட்சியத்தையும், உன்னையும் நேசிக்கக் கற்றுக்கொள். உன்னை நேசிப்பது எப்படி வெளியே வரும் உன் உடையழகில், உன் நடையழகில், உன் பேச்சழகில், உன் செயலழகில் வரும்.

குளித்து சுத்தமாய் உடுத்திக் கொள். அழுக்காய், நாற்றமாய், அருவருப்பாய் இருக்காதே. நிற்பதும், நடப்பதும், எழுவதும், அமர்வதும் ஆரவாரமில்லாமல் இருக்கட்டும். அதாவது நீ கர்ப்பிணி. இலட்சியமுள்ளவள். ஒருபோதும் துள்ளாதே. மக்கு ஆடுகள் தான் காரணமின்றி துள்ளும். வெறி தங்களுக்குள்ளே முட்டிக் கொள்ளும். ஆடுகள் முட்டிக் கொள்வதை போல்



நாசம் உலகத்தில் ஏதுமில்லை.

இதற்குப் பிறகு பேச்சு. மிகப் பணிவாகவும், தெளிவாகவும் பேசு. சின்ன வாக்கியங்களாய் நிதானமாய் பேசு. இன்றைக்குள்ள இளைஞர்கள் நிறையப் பேருக்கு பேசத்தெரியாது. காரணம் உச்சரிப்பு சரியில்லை. இதற்குக் காரணம் மொழியோடு பரிச்சயமில்லை. இதற்குக் காரணம் புத்தகங்களோடு தொடர்பின்மை. தினம் நாற்பது திருக்குறள்களை சத்தம் போட்டுச் சொல். அந்த திருக்குறளின் அர்த்தத்தை உள்வாங்கு. உன்னால் தெளிவாகப் பேசமுடியும். அந்த திருக்குறளில் சொல்லி இருப்பதைப் போல் நடக்க முற்படு. நிதானமாக பேச முடியும். உன் மொழியில் உள்ள நல்ல நூல்களோடு உனக்கு பரிச்சயம் உண்டெனில், உன் வாழ்க்கை சுகமாக ஆரம்பிக்கும். நீ தெளிவாகப் பேச, எதிராளிக்கு உன்னைத் தெளிவாகப் புரிய, ஆரம்பத் தொடர்பு நல்ல முறையில் இருக்கும்.

இப்போது செயலைப் பற்றிச் சொல்கிறேன் கேள். நீ குளிக்கிற இடம், உடை வைத்திருக்கும் பெட்டி, புத்தக அலமாரி, இந்த சூழ்நிலைகளை மிகச் சுத்தமாய் வைத்திருப்பது உன் செயலில் நேர்த்தி வர ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்.

Perfection மிக மிக முக்கியம். செருப்புக்கு பாலீஷ் போடுவதை, ஓவியத்திற்கு வர்ணம் தீட்டுவது போல் செய். உன் வேலைகளுக்கு இன்னொருவரைக் கட்டளையிடாதே. நீயே செய். மிக முக்கியமான உதாரணம் ஒன்று தருகிறேன். தரையில் சாய்ந்துவிட்டு தலகாணி இருக்குமா என்று கேட்காதே. நீயே எழுந்து போய் உன் தலைகாணியை நீயே கொண்டுவா. உட்கார்ந்து சாப்பிடும்போது உப்புக் கேட்காதே. நீயே கொண்டுவா. முழுமையாய் வேலை செய். விருப்பமாய் வேலை செய். திருத்தமான வேலை செய். விருப்பமாய் வேலை செய்கிற போது, வேலைகள் நிறைய சேரும். வேலைகள் நிறைய சேர்ந்தால் வீண் பேச்சு குறையும். வீண் பேச்சு குறைவான இடத்தில் சச்சரவே எழாது.

ஆனால் மாதவா, மீனாட்சி, வாழ்க்கை என்பது அத்தனை சுலபமில்லை. நீ சரியாக இருந்து விட்டால் எல்லாம் சரியாகி விடாது. நீ சரியாக இருக்கிறாய், அல்லது சரியாக இருக்க முயற்சி செய்கிறாய் என்பது தெரிந்தால் போதும்.

உன்னைக் கலக்க பல மிருகங்கள் வரும்.

தன் வாழ்க்கையைச் சரியாக அமைக்காத நான் தோன்றிகள், திருடர்கள், பொய்யர்கள், சூதாடிகள் உன்னைக் கவிழ்க்க வருவார்கள். இப்படிப் பட்டவர்கள் உறவு என்கிற பெயரிலோ, நட்பு என்கிற பெயரிலோ நெருக்கமாய் இருப்பார்கள். அவர்களிடமிருந்து அப்பால் போக முடியாத சூழ்நிலை இருக்கும்.

தன் தேவையையும், தன் பலத்தையும் முற்றும் உணர்ந்தவன் இவர்களை அமைதியாக சமாளிப்பான். இவர்கள் பக்கமிருந்தும், இவர்களிடமிருந்து விலகி இருப்பான். இவர்களோடு பேசி சிரித்தாலும், இவர்களோடு ஒட்டாது இருப்பான். சமயம் வரும்போது முழுமூச்சாய் எதிர்ப்பான்.

மறுபடியும் சொல்கிறேன் கேள். திருடன், கோள் சொல்லி, வஞ்சனை செய்பவன் வாழ்ந்ததாய் சரித்திரமேயில்லை. இது சத்தியம். தயவு செய்து புரிந்துகொள். ஆரம்ப வெற்றியும் பளபளப்பும் இருப்பினும், அவன் வெற்றிகளே அவனை படுகுழியில் தள்ளும். அவன் பளபளப்பு அவனுக்கு குஷ்டம் என்பதைக் காட்டும். திருடர்களின் ஆரம்ப வெற்றியைக் கண்டு திகைத்துவிடாதே. நாமும் திருடினால் என்ன என்று கணக்குப் போடாதே.

திருடர்கள் தூங்குவதேயில்லை. தொழில் காரணமாய் அல்ல, பயம் காரணமாய். ஒரு திருடன் தான் ஜெயித்துவிட்டதாய், பெரிய பணக்காரனாய் உயர்பதவி வகிப்பவனாய், சீரும் செல்வாக்குடன் இருப்பதாய் காட்டுவான். திருப்பத் திரும்பக் காட்டுவான். பறையறிவிப்பான். நிறைய அரசியல் வாதிகள் படாடோபமாய் இருப்பதற்குக் காரணம் திருட்டுத்தனத்தின் வெளிப்பாடுதான். உனக்கு உள்ளது உன்னுடனே இருக்கும். அழியாது.

சண்டை போடுகிற தகப்பன், ஏமாற்றுகிற தமையன், கட்டிப்போடு என்கிற தாய், சமக்கா சொல்கின்ற தங்கை, ஏளனம் செய்கின்ற காதலி இங்கிதம் இல்லாத நண்பன் என்று உலகத்தில் பல வேதனைகள் உண்டு. மறுக்காதே ஏற்றுக்கொள்.

இவர்களை விட்டு எங்கும் விலகமுடியாது. நீ எங்கு போயினும் இதுபோல் எவரோடும் வாழத்தான் வேண்டும். இந்த நாய் இல்லையெனில், வேறு எந்த நாயாவது உன்னை முகர்ந்து பார்த்து விட்டுத் தான் போகும். முகரும் நாய்களில் எந்த நாய் உத்தமம் என்று நீ தேர்ந்தெடுக்கத்தான் வேண்



டும். நாய்கள் குலைக்கும், கவ்வும் பயப்படாதே.

உன்னைப்போல உண்டா என்று அவர்களுக்கு தீனி தூக்கிப்போடு. தினமும் அளவுக்குப் பாராட்டு. ஆனால் மனதிற்குள்ளே விலகியிரு. உன் வேலைகளை கவனித்தபடி இரு.

உலகம் மூன்றுவிதமாய் உன்னைத் தாக்க துவங்கும், புதிதாய் ஒரு முயற்சியில் இறங்க உன்னை கேலிசெய்யும். உதாரணமாய் நீ நாவல் எழுதத் துவங்குகிறாய் என்று வைத்துக்கொள். நீ பெரிய கதாசிரியனா, நாலுவரி கடுதாசி எழுதத் தெரியாது நாவல் எழுதத் தெரியுமா, என்று இளக்காரம் செய்யும்.

இந்த இளக்காரம் தாண்டி கடும்பயிற்சி செய்து இரண்டு சிறுகதைகள், அல்லது குறுநாவல் எங்கேனும் நல்ல பத்திரிகையில் வெளிவந்து விட்டால்...

சரி, என்னமோ செய்யறே. இதைய தொழிலா வெச்சுக்காதே, என்று அங்கீகரித்து அறிவுரை சொல்லும். உன் எழுத்து மிகச் சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கு இரண்டு லட்ச ரூபாய் பரிசு கிடைத்தாலோ, அல்லது பிற்பாடு ஒரு காலக் கட்டத்தில் ஊர் உலகம் உன்னை நாவலாசிரியன் என்று ஏற்றுக் கொண்டாலோ உன்னை எதிர்த்துக் குரைத்த நாய்கள் வாலாட்டி வரும்.

அவனை சின்ன வயசிலிருந்து எனக்குத் தெரியும். அவன் வளர்ந்ததே என்னாலேதான் என்று நைச்சியம் பேசும் நாய்களை நாய்களாகவே நடத்து. நகர்ந்தே நில்.

மாதவா, மீனாட்சி அதே சமயத்தில் நல்லவர்களும் உண்டு. இந்த உலகத்தில் அவர்களைத் தாங்குவதும், தாக்கப்படாமல் தடுப்பதும் நம் வேலை. யார் நல்லவன்? ஒரே வரியில் பதில் சொல்லலாம். எவன் தன்னைப் போல் பிறரை நினைக்கிறானோ, அவனே நல்லவன் இப்படிப் பட்டவர்களால் மழை பெய்கிறது. இது விஞ்ஞானத்திற்கு பொருத்தமாய் இல்லை என்று நினைக்கிறாயா. உன் விஞ்ஞானம் கையளவு. அது பூமியின் இரகசியங்களைக் கூட கண்டறியவில்லை. அதற்குள் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டு பிரபஞ்சத்திற்கு போய்விட்டது. இதுவெறும் அதிகப் பிரசங்கித்தனம். எல்லா அதிகப்பிரசங்கித் தனமும் அழிவில்முடியும். தன் தலையால் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும். பஸ்மாசுரன்தான்

விஞ்ஞானம்.

தன்னைப்போல் பிறரை நினைக்கும் ஒரு மனிதன் இருப்பின், அவன் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை மாற்றுவான். பிறர் மீது அக்கறை கொள்ளும் மனோநிலையை மனிதர்களிடம் வளர்ப்பான். ஒரு பகுதி மக்களின் மனோநிலை மாற அந்த பகுதியின் தட்பவெப்ப நிலை மாறும். இனிமையும், ஈகை குணமும்வளரும். இனிமையும், ஈகைகுணமும் வளர பூமியின் அந்தப்பகுதியில் சுகமான சீங்காரம் அதிகரிக்கும். மழை பொழிதலும், மண்வளம் பெருகுதலும், தாவரங்கள் குதூகலம் ஆகுதலும், கறவைகளும், பறவைகளும் பலம் பெருவதும் நடக்கும்.

இங்கு எல்லாம் ஏதேச்சையாக நடப்பதாக நினைக்காதே அப்படி நினைப்பவன் நிர்மூடன். இங்கு எல்லாம் மிக துல்லியமானக் கணக்கில் நடைபெறுக் கொண்டிருக்கிறது. Wherever there is an action there is an equal reaction என்கிற நிரூபிக்கப்பட்ட வாசகத்தை நம்பினால், இதையும் நம்பித்தான் ஆகவேண்டும்.

நீ நல்லது நினைத்தால் நல்லதும், நீ கெட்டது நினைத்தால் கெட்டதும் நடக்கும் என்பதை நீ நம்பித்தான் ஆக வேண்டும். அதனால்தான் சொல்கிறேன். விஞ்ஞானத்தைச் சரியாகப் புரிந்து கொண்டவன் கடவுள் நம்பிக்கை உள்ளவனாக இருப்பான். இன்னும் தன்னால் உணரவேண்டியது, இன்னும் தன்னால் கண்டுபிடிக்க வேண்டியது எத்தனையோ இருக்கின்றது என்கிற வியப்பே அவனை இந்த பணிவான இடத்திற்கு அனுப்பும். அரைகுறைகள்தான் கடவுள் என்கிற மனோசக்தியை மறுக்கின்றன. தன் நெஞ்சின் வெகு ஆழத்தில் இயங்குகின்ற சக்தியை உணராத தற்குறிகள்தான், நம்புகிறவனைக் காட்டுமிராண்டி என்று சொல்கின்றன.

மாதவா, மீனாட்சி தன்னுள் பொதிந்து கிடக்கின்ற சக்தியை உணருகிற போது, ஏற்படுகின்ற பணிவிற்கு பெயரே இறைவணக்கம். அந்த மனிதர்கள் செயல், துவங்கிவிடுவார்கள்.

குழந்தைகளே, கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இத்தனைப் பேச்சுக்கும், பேச்சினால் வரும் தெளிவிற்கும் அப்பால் ஒரு விஷயம் இருக்கிறது. இதற்குப் பெயர் மரணம்.

எந்த நொடியிலும் ஒருவருக்கு மரணம்



ஏற்படலாம். இதற்காய் நீங்கள் எப்பொழுதும் தயாராய் இருக்கவேண்டும். இதுதான் இந்த பூமியின் மிகப்பெரிய விநோதம். எவனுக்கு எப்போது என்று தெரியாத விநோதம். இது தெரிந்து ஆகப்போகின்றது ஒன்றுமில்லை. ஆனால் வாழும் நாட்களில் தானும் சந்தோஷமாய் இருந்து, பிறரை சந்தோஷப் படுத்தினால் மரணம் சந்தோஷமாக இருக்கிறது. சந்தோஷமாக சாவது எத்தனை சுகம். எல்லோரும் சாகப் பயந்து கொண்டே சாகிறார்கள். மரணத்தை கைகூப்பி வரவேற்பவன்தான், மகிழ்வோடு ஏற்றுக் கொள்பவன் தான், மாமேதை அறிஞன். ஆனால் இங்கே அறிஞன் என்று பாராட்டப்பட்டவர்கள் எல்லாம் அழுதழுது செத்து போயிருக்கிறார்கள். மிகப் பெரிய பண்டிதன், அறிவாளி என்று பட்டம் பெற்றவர்கள் எல்லாம் ஐயோ போகிறோமே என்று அழுது போயிருக்கிறார்கள்.

ஒருவனுக்கு மரண பயம் ஏன் வருகிறது இடையறாது அவனை ஏன் ஆட்டிப்படைக்கிறது பற்று. தன் பட்டத்தின் மீதும், பதவியின் மீதும், சொத்தின் மீதும், சுகபோகம் தரும்பொருட்கள் மீதும், சொந்த பந்தங்கள் மீதும், நாடு நகரத்தின் மீதும், மொழியின் மீதும், மொழி துப்பிய புத்தகங்கள் மீதும், கலைகள் மீதும் பற்று. இவையெல்லாம் நிரந்தரமென்று மனிதன் நினைத்துக் கொள்கிறான். தன் கவிதைகளை விட்டுப் போகிறோமே என்று ஒரு கவிஞன் அழுதுகொண்டே இறக்கிறான்.

மொழி, மதம், கலாசாரம், பண்பாடு, நாகரிகம் எல்லாம்அழியும், வளர வளர அழியும். அழிந்து அழிந்து தன்னைப்புதுப்பித்து கொள்ளும். அடையாளமே தெரியாமல் போகும். பிறகு நீ எதைப் பற்றிக்கொள்ள போகிறாய். பற்றிக்கொள்ள இங்கு என்ன இருக்கிறது நீ அறுபது வயதில் செத்தால், உன் மொழி அறுநூறு வயதில் சாகும். உன் மதம் ஆறாயிரம் வயதில் சாகும். எனவே இங்கே நிரந்தரமானது எதுவுமேயில்லை, இந்த புவி உட்பட... உன் வேலை இந்த நிரந்தரமின்மையை புரிந்து கொள்வதே. ஈடுபடும் போதே விலகியிருப்பதே.

இப்படி இருப்பின் மொழிப்போர், மதப்போர், இனப்போர் எதுவுமில்லை. இந்தியன், பர்மாக்காரன், மலேசியாக்காரன் என்ற எல்லைகளே இல்லை. எல்லா எல்லைகளையுமே உடைத்துவிடலாம். ஏனெனில் எல்லோரும் சாகப் போகின்ற

ஜந்துக்கள்தான். சாகப் போகிறவன் பெரிய கார வைத்துக் கொண்டு குந்தாலென்ன கட்டை வண்டியில போனாலென்ன நாமே எல்லைகள் போட்டுக் கொண்டு, நாமே பிரிவினைகள் வளர்த்துக் கொண்டு, நாமே பரஸ்பரம், நம்மைக் கொன்று கொண்டு இருக்கிறோம். ஆப்பிரிக்காவில் வறுமையால் சாவு. ஐரோப்பாவில் அணுகுண்டால் சாவு. அமெரிக்காவில் நிறவெறிக் கொலைகள். இந்தியாவில் மதவெறிக் கொலைகள்.

மறுபடிச்சொல்கிறேன். மதம், மொழி, நிறம், இனம், இவையும் உன்னதம் என்று நினைக்கிறவன் நிர்மூடன். இவை எல்லாம் அழியும் தன்மை உள்ளவை. இவைகளைக் காப்பாற்ற நினைப்பது நீர்க்குமிழிக்கு இரும்புப்பூண் பூட்டுகின்ற முட்டாள் வேலை.

தன்னுள் பொங்கும் மகத்தான சக்தியைப் புரிந்தவனுக்கு இவை எதுவும் முக்கியமில்லை. இடையறாது அன்பு. கொஞ்சம் போதும். கோபித்துக் கொள்கிற போதும், கூடல் கொண் டாலும், ஊடல் கொண்டாலும் அடித்து நின்றாலும் விலகி போனாலும், கூட்டமாய் வாழ்ந்தாலும், தனித்து கிடந்தாலும் அன்பு. இடையறாது அன்பு பொங்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

மாதவா, மீனாட்சி, இங்குதான் இதைச் சொல்கிற போதுதான் எனக்கு வார்த்தைகள் கிடைக்காமல் போகின்றன. இடையறாது அன்பு பொங்குவதை, அந்த ஆனந்தத்தை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை. அப்படி பொங்குகின்ற வழி எது என்று கற்றுக் கொடுக்க முடியவில்லை. தேடித்தேடி நீங்களே கற்றுக் கொள்ள வேண்டிய வழி அது. இதைக் கற்றுக் கொள்ளாமல் வேறு எதைக் கற்றுக் கொண்டாலும் வியர்த்தம். நீங்கள் கற்றுக் கொண்ட எல்லாமும் வியர்த்தம். நீங்கள் கற்றுக் கொண்ட எல்லாமும் இந்த நிலையை அடைவதற்குதான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் மனிதர்கள் பெறுகின்ற அனுபவங்கள் எல்லாம் இந்த அன்பை அறிந்து கொள்வதற்கு தான் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் ஒவ்வொருவர் பிரச்சின்னையை எடுத்து ஆராய்வதைவிட, ஒட்டு மொத்தமாய் வாழ்க்கையை பற்றி சொல்லியிருக்கிறேன். இதற்குள் எல்லோர் பிரச்சினையும் அடங்கிவிடும். உங்கள்



பிரச்சினை களுக்கு தீர்வை பிறரிடம் கேட்காதீர்கள். நீங்களே தேடுங்கள். இன்று தீராமுடியாத பிரச்சினை நாளை சுலபமாய் தீர்ந்துபோய்விடும். நாளைக்கு வேறு பிரச்சினை தீர்க்கச் சொல்லி முளைக்கும். இந்த உடம்பாலான வாழ்க்கை தற்காலிகமானது. இந்த உடம்போ தற்காலிகம் என்கிறபோது. உடம்பால் ஏற்படுகின்ற சுகங்களும், துக்கங்களும் தற்காலி கமானவை. நிரந்தரமாய் சந்தோஷப் பட்டவனு மில்லை. நிரந்தரமாய் துக்கப்பட்டவனு மில்லை. ஆபத்தும் சம்பத்தும் இணைபிரியாதவை. நாணயத்தின் இருபக்கங்களைப் போல.

நிறைய காசு சம்பத்து எனில், கூடவே ஆபத்தும் இருக்கிறது. காசே இல்லாதது ஆபத்து எனில், உன்னை யாரும் எதற்கும் தொந்தரவு செய்ய மாட்டார்கள் என்கிற சம்பத்தும் இருக்கிறது.

எனக்கு தெரிந்ததைச் சொல்லிவிட்டேன் சொல்லித்தருவதில் விஷேசம் எதுவுமில்லை. கற்றுக் கொள்வதில்தான் இருக்கிறது. நான் இப்போது பேசியதெல்லாம் வார்த்தைகளாகவே இருக்கும்.

அனவரதமும் என்னையே எவன் நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அவன் தினசரி யோக க்ஷேமத்தை நான் கவனித்து கொள்கிறேன் என்பது வார்த்தைகளாகவே இருக்கும். இதை உள்வாங்கி யோசிக்க யோசிக்க உண்மை புரியும். வார்த்தைகள் அர்த்தமாவதற்கு அனுபவம் தேவை. அந்த அனுபவத்தில் இருந்து உண்மையை கிரகித்துக் கொள்ளும் நடுநிலைமையான புத்தி தேவை.

நான் சொன்னவைகளையெல்லாம் புரிந்து கொள்ளும், புத்தியும் அனுபவமும் கிடைத்துக் கொள்ள பிரார்த்திக்கிறேன்.

இந்தமாதிரி பேச்சு எப்போதாவது தான் பேசக்கிடைக்கும். எப்போதாவது தான் கேட்கக் கிடைக்கும். விட்டால் போயிற்று. மறுபடியும் கிடைக்காது. பிடித்துக் கொள்ள வேண்டும்.

இதுபோதும். சௌக்கியமாக இருங்கள். மாதவனின் அப்பா கை தூக்கினார். மெல்ல புன்னகை செய்து கொண்டு தலைகுனிந்து கொண்டார்.

சடேரென்று காதடைத்து பிரபஞ்சம் முழுவதும் அமைதியாகிவிட்டது போல் மாதவன் உணர்ந்தான். மீனாட்சி தலைசுற்றி விழுகின்ற ஒரு மயக்க நிலையில் இருந்தாள். சொன்னது எதுவுமே புரியாத நிலையில் புரிய வேண்டாத கதியில் இருந்தாள்.

சொல்லப்படுகின்ற விஷயங்கள் கலைகிற போது புரிந்த ஒரு நினைவு ஏற்பட்டு விடுகிறது. எல்லாவற்றையும் எப்படி புரிந்து கொள்ளப் போகிறோம் என்கிற பயம் ஏற்பட்டுவிடுகிறது. வாழ்க்கையைப் பற்றி இன்னும் சுருக்கமாக யாராவது சொல்லித்தர கூடாதா என்ற ஏக்கம் ஏற்பட்டு விடுகிறது.

மீனாட்சி மாதவன் அப்பாவையே உற்றுப் பார்த்தாள். அறிவும் கருணையும் அந்தக் கண்களிலிருந்து பொங்கி வழிந்து கொண்டிருந்தன. அவர் தலைமுடி அடர்த்தியாகவும், மிருதுவாய், பஞ்சு போல் இருந்தன. மெல்லிய புருவம் பொறாமையற்ற மனதைக் காட்டியது. விழிகளின் கோடியில் மெல்லிய கோடு விழுந்து தியானம் செய்வதின் பலத்தைக் காட்டியது. நெற்றி மேடாகவும் நான்கு சுருக்கங்கள் விழுந்தும் கன்ன பகுதிகள் பளபளப்பாகவும் உதடுகள் அகலமாகவும் இருந்து அவர் ஞானத்தைக் காட்டியது.

மனதில் கருமையே இல்லை என்பதால் உடம்பு வெண்மையாகவும், உள்ளங்கை சிவப்பாகவும் இருந்தன. மீனாட்சி கை கூப்பினாள்.

"நீங்கள் சொன்னதெல்லாம் எனக்கு விளங்கவில்லை. இன்னும் சுருக்கமாகச் சொன்னால் ஒருவேளை புரிந்து கொள்வேன். என்னை நீங்கள் புரிந்து கொள்வதற்கு பதிலாய், என்னை நீங்கள் புரிந்து கொண்டு, எனக்கு என்ன தேவையோ அதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். என் அறியாமையை புரிந்து கொண்டு, என் மீது கருணை காட்டுங்கள்."

சொல்லிவிட்டு முகம் பொத்தி மீனாட்சி விக்கி விக்கி அழுதாள். இதுவே சரணாகதி.

மாதவனின் அப்பா தன் மனோசக்தியை ஒன்று படுத்தி அவளை உற்றுப் பார்த்தார். தன்னை அவளாக மாற்றிப் பார்த்தார். உள்ளே அன்பு நுரைத்தது. நெஞ்சிலிருந்து உடம்பெங்கும் ஒரு அமைதி வழிந்தது. உடம்பிலிருந்து வெளிப்பட்ட அந்த அமைதி அந்த சூழ்நிலையெங்கும் ஆக்கிரமித்து அமைதியாய் அமர்ந்து கொண்டது. மனம் அவளை தலையில் வருடியது. அவள் நெற்றிக்கு நடுவே அவர் பார்வை நின்றது. தோல் தாண்டி, மண்டையோடு தாண்டி, உள்ளும் புறமும் இணைக்கப்பட்டன. அவள் நெஞ்சுக்குழியில் தன் சக்தியை வைத்து அவளை அவளுக்குள்ளே தள்ளினார்.



அவள் பெரும் இருட்டில் தலைகுப்புற விழுந்தாள். தனக்குள் பல கணக்கான மிகப்பெரிய பதானம் இருப்பதை உணர்ந்தாள். பயத்தில் ஐயோ என்று கத்தினாள். அவர் அவளு புறங்கையைத் தொட நீட்டிவிட்டு விழித்துக் கொண்டாள். திகைப்போடு அவரைப் பார்த்தாள்.

"உனக்கொரு கதை சொல்கிறேன். கேள், மீனாட்சி. தத்துவத்தின் கடுமையை கதையின் எளிமை குறைக்கும். உனக்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா.."

மீனாட்சி சரியென்று தலையசைத்தாள். மாதவனும் கேட்கத் துவங்கினான்.

"கடலோரத்து புதர் ஒன்றில் இரண்டு குருவிகள் கூடு அமைத்து குடித்தனம் செய்தன. இரண்டு முட்டைகள் இட்டன. கருத்தோடு பேணி வந்தன.

ஒருநாள் கடல் பொங்கி ஆடியதில், இரண்டு முட்டைகளும் நீருக்குள் போய்விட்டன. குருவிகள் பதறி தவித்தன. ஒரு குருவி வீரமாய் அடு மறுகுருவி சொல்கிறது.

"எதற்கு அழுகிறாய் உனக்கு அந்த முட்டைகள் வேண்டும், அவ்வளவுதானே. நான் எடுத்துத் தருகிறேன்" என்று வீரம் பேசியது.

"எப்படி முடியும்" மறுகுருவி கேட்டது.

"உழைத்தால் முடியும். முட்டைகள் கடலுக்குள் தானே இருக்க வேண்டும். கடல் நீரை மறுபக்கம் இறைத்து விட்டால் முட்டைகள் தெரியும் அல்லவா. அப்போது அவைகளை நாம் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா" உறுதியாய் பேசியது.

"முடியுமா" மறுகுருவி சந்தேகம் எழுப்பியது.

"முயற்சித்தால் முடியும்" இறுமாப்போடு அந்தக்குருவி பேசியது. இரண்டு குருவிகளும் உடனே கிளம்பின. தங்கள் அலகால் கடல்நீரை முகர்ந்து மறுபுறம் கொட்டின. இரவு பகல் பாராமல் அலைந்தன. முட்டைகள் கிடைத்தே ஆக வேண்டுமென்ற வெறியில் உழைத்தன. பசி, தூக்கம், நோவு எல்லாம் மறந்து நீரை அலகால் முகர்ந்து மறுகரையில் ஊற்றிக் கொண்டிருந்தன.

"அந்த கடற்கரை வழியே ஒரு முனிவன் நடந்து வந்தான். இடமும் வலதுமாய் இந்த குருவிகள் அலைவதை பார்த்தான். தன் மனோசக்தியை அவைகளுக்குள் செலுத்தி அவைகள் நோக்கம் அறிந்து கொண்டான். சிரித்தான். அதே மனோ சக்தியால் அந்த முட்டைகளை கண்டுபிடித்து

நீரிலிருந்து அவைகளை மிருதுவாய் எடுத்து கரை
யில் வைத்தான். தன் வழியே நடந்து போனான்.
குருவிகள் முட்டையைப் பார்த்து திகைத்தன.
துள்ளிப் பறந்தன."
"நான் சொன்னது நடந்து விட்டது பார்.
உழைத்தால் உயரலாம்.. முயற்சித்தால் முடியலாம்.
நாம் நீர் முகர்ந்து அந்த கரை சேர்த்ததில் கடல்வற்றி
முட்டைகள் வெளியே வந்துவிட்டன பார்"
என்று முதல் குருவி கூவிற்று.
மறுகுருவி "ஆமாம், ஆமாம்" என்றது.
"மீனாட்சி அந்த குருவிகள் முயற்சி
செய்திருக்கா விடில் முட்டைகள் கிடைத்திருக்காது.
முட்டைகள் கிடைத்ததற்கு முயற்சி மட்டுமே
காரணமில்லை."
"இது ரொம்ப சூட்சுமமான கதை மீனாட்சி,
யோசிக்க யோசிக்க எத்தனையோ விஷயங்கள்
இதிலிருந்து புரியும். கண்மூடி இந்த கதைக்
குள்ளேயே இரு."
மாதவனின் அப்பா, மீனாட்சியின் தலையில்
கைவைத்து அழுத்தினார். நெற்றியில் புறங்கை
யால் வருடினார். மூக்கில், கன்னங்களில்,
விரல்களால் வருடினார்.
மீனாட்சி இப்போது பயமில்லாமல் தன்னுள்
ஆழ்ந்தாள்.

## 32

எதிரே எவரோ ஒருவர் உட்கார்ந்து
சொல்லித் தருவதும் அப்படி
சொல்லித்தருபவர் எதிரே உட்கார்ந்து
கற்றுக் கொள்வதும் எளிதான விஷ
யங்கள். ஆனால் வாழ்க்கை
கடினமானது. கற்றுக் கொண்டதெல்லாம் மறந்து
போகின்ற சந்தர்ப் பங்களை வாழ்க்கை அடிக்கடி
ஏற்படுத்தித் தரும்.
நன்மை இது என்று தெரிந்திருந்தும், மிகச்
சரியாய் தீதான விஷயத்தை சுவீகரித்து கொள்ளும்.
மனசு மிகத் தெளிவாய் இருக்கிறது என்று நினைத்
துக் கொண்டிருக்கும்போதே, மிக மக்குத்தனமாய்
ஒரு முடிவு எடுக்கும். கற்றுக் கொள்வதற்கு ஒரு
திறமை வருவது போல, கற்றுக்கொண்டதை
வாழ்க்கையில் அப்பியாசம் செய்வதற்கு ஒரு
திறமை வேண்டியிருக்கிறது. அதாவது எந்நேரமும்
கற்றுக் கொண்ட பாடத்தோடயே இருக்க வேண்டி
யிருக்கிறது. அப்போதுதான் பூதாகரமான பிரச்



சினைகள் முளைக் கிறபோது எதிர்கொள்ள
முடிகிறது.
மூன்று நாட்கள் மீனாட்சி சொல்லிக்
கொடுத்ததோடேயே இருந்தாள். கடலோரத்தில்
வசித்த குருவிகளின் கதையை சிக்கென்று
பிடித்துக்கொண்டாள். அவள் மனசு இடைவிடாது
பல்வேறு கோணங்களில் அந்த கதையை அலசிக்
கொண்டிருந்தது. எந்த வேலை செய்தாலும்
அந்தக் கதையின் மீதே மனசு இருந்தது. வேறு
எந்த சிந்தனைகள் வந்தாலும் அதை ஒதுக்கிவிட்டு
அந்த கதை மீதே கவனம் வைத்தாள்.
குருவிகளின் முயற்சியால் முட்டை கிடைக்க
வில்லை. அதாவது கடல்நீரை அப்புறப்படுத்தி
முட்டையை குருவிகள் எடுத்துவிடவில்லை.
முட்டைகள் போனது போனதுதான் என்றும்
குருவிகள் இருந்துவிடவில்லை. இரவும் பகலும்
உண்ணாமல், ஓய்வு எடுக்காமல் முட்டையை
எடுத்துவிடுவோம் என்ற மிகப்பெரிய நம்பிக்கை
யோடு குருவிகள் அயராது பாடுபட்டு இருக்
கின்றன. அவைகள் முயற்சி செய்த வேகத்தில்
இறந்தும் போயிருக்கக்கூடும். அவ்வளவு வெறி
யோடு செயல்பட்டிருக்கின்றன. ஆனால், முட்டை
கள் வந்தது அவைகளின் முயற்சியால் அல்ல.
மிகச்சூட்சுமமான கதையிது. முயற்சி செய்வதை
இழிவு படுத்தாமல் என் முயற்சியால் தான் எல்லாம்
நடக்கிறது என்கிற கர்வத்தையும் வரவழைக்காத
மிக அற்புதமான கதையிது.
கர்வம் தேவையற்ற விஷயம். கர்வம் உள்ள
வனால் வெற்றியை அனுபவிக்க முடியாமல்
போய்விடும். வெற்றியை அனுபவித்தல் என்பது
என்ன. மற்றவரால் பாராட்டப்படல். கர்வப்பட்டால்
மற்றவர்கள் அருகேயிருப்பார்களா. ஓடிப்போய்
விடுவார்கள். வெற்றி வந்து வெற்றி பெற்றவன்
வாய்விட்டு சீறி, அந்த சீற்றத்தால் எல்லோரும்
விலக தனிமை தான் எஞ்சும். வெற்றிக்கு கர்வப்
படாதே என்றுதான் கதை சொல்கிறது. உன் முயற்சி
என்று ஆடிவிடாதே என்றுதான் கதை சொல்கிறது.
அதேநேரம் இரவு பகலாய் பசி, தூக்கம் மறந்த
வராய் உழைக்கவும் வேண்டும். என்ன வேடிக்கை
யிது. நீ உன் கடமையைச் செய் என்கிற கீதைதான்
இந்தக் கதை.
கர்வமில்லாத முயற்சி எப்படி வரும். எல்லாம்
கடவுள் செயல் என்று தன்னை ஒப்புக் கொடுத்து

வேலை செய்கிறவனுக்கு வரும். அதாவது வேலை செய்வதையே இறைபணியாய் எவன் கொண்டிருக்கிறானோ அவனுக்கு 'கர்மம்' வராது. வேலை செய்கின்ற நேரமெல்லாம் இறைசிந்தனை. இறை சிந்தனை செய்கின்ற நேரமெல்லாம் வேலை. அதாவது அனவரதம் இறைசிந்தனை. இப்போது புரிகிறது. எவனொருவன் அனவரதமும் என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவனது நித்ய யோகக்ஷேமத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்.

ஆக கடவுள் என்பது கோயிலில் இல்லை. தன்னுள் இருக்கிறது. தான் செய்யும் வேலையில் இருக்கிறது. மீனாட்சி எந்நேரமும் தன்னை உற்றுப் பார்க்க தெரிந்து கொண்டாள். மூன்றுநாட்கள் எல்லாம் மறந்து தன் யோசிப்போடேயே இருந்தாள்.

மாதவன் கர்ப்பிணி போல் இரு என்ற அப்பாவின் வாக்கியத்தை பிடித்துக் கொண்டான். நீ ஆவேசப் பட்டால், முன்னேறிக் கொண்டிருக்கும்போது கோபப்பட்டால், தம்முடைய முயற்சிதான் கெடும். தன்னையும் தன் முயற்சியையும் நேசித்து, தன்னையும் நேசித்து தனக்கு இணக்கமாக இருப்பவர்களோடு நெருக்கியும், இல்லாதவர்களோடு கொஞ்சம் இடைவெளி கொடுத்தும் வாழ்ந்தாக வேண்டிய அவசியத்தை புரிந்து கொண்டான். இதற்கு எந் நேரமும் விழிப்போடு இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டான். எந்த உணர்வுகளிலும் மாட்டாது. அப்படி உணர்வுகள் பொங்குகிற போதெல்லாம் தன்னையே உற்றுப் பார்த்து தன் யோக்கியதைகளை எடைபோட்டுக் கொண்டிருந் தான். நீங்கள் அமைதியானவராகவும், கெட்டிக் காரராகவும் இருக்க வாழ்க்கைவிடாது என்று அப்பா சொன்னது உண்மையாயிற்று.

நான்காம் நாள் காலை அண்ணா வந்திறங்கினான். "என்னடி நினைச்சுட்டிருக்க?" என்று கையை ஓங்கினான். "அவுங்க மேல உங்கவிரல் பட்டா நான் சும்மாயிருக்கமாட்டேன். நீங்க யாராயிருந்தாலும் கவலையில்லை" மாதவன் விறுக்கட்டுடை உருவ, அண்ணா அவன் பக்கம் திரும்பி முறைத்தான்.

"டேய் நான் பொறுக்கிடா. டெல்லி பொறுக்கி. உன்னை மாதிரி வட்டன் ஸ்டிக் எடுக்க மாட் டேன்டா. பொட்டுன்னு நெத்தியில சுட்டுடுவேன். ஏக் கோலிகா ஏக் தஷ்மன், சுட்டுட்டு போய்கிட்டே இருப்போம்."



"நீ சுடுவேன்னா உடனே பயந்திடுவாங்களா? முதல்ல வெளியே போ."

"அவ என் தங்கச்சி."

"இது என் வீடு" மாதவன் சொன்னான்.

"என்ன பெரியவரே பேசாம இருக்கீங்க?"

அண்ணா திசை திரும்பினான். "இத பேசி தீர்க்க வேண்டிய விஷயம். ஆனா இப்படி பேசக்கூடாது" அப்பா நிதானமாக பதில் சொன்னார்.

"நான் போலீஸ்காரன விட்டு பேசச் சொல்றேன். காசு கொடுத்தா போலீஸ்காரன் எதிரியா பேசுவான்" மீனாட்சியின் அண்ணா விருட்டென்று வெளியே போனான்.

மாதவனின் அம்மாவையும் சேர்த்து அவர்கள் நால்வரும் காத்திருந்தார்கள். காத்திருக்கும்போதே எல்லாம் வல்ல அந்த சக்தியிடம் தங்கள் பிரச்னை களை ஒப்படைத்தார்கள். உள்ளுக் குள்ளேயும் நிதானமாய் இருந்தார்கள்.

"ஐயா வணக்கம்" வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஷூக்களை கடக்கென்று சுழற்றிவிட்டு இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். மாதவனை உள்ளங்காலில் அடித்து லாடம் கட்டிய இன்ஸ் பெக்டர் வீட்டுக்குள் நுழைந்து கைகூப்பினார்.

"பொண்ணை கடத்திட்டு வந்துட்டான்னு புகார் குடுத்தாங்க. உங்க பேரும், உங்க புள்ள பேரும் சொன்னாங்க. நமக்கு நல்லா தெரிஞ்ச குடும் பமாச்சே. எவனோ உன்ன புகுந்து தப்பா சொல றான்னேன்னு உக்கார சொன்னேன். யாரு பொண்ணு என்ன ஊருன்னு கேட்டேன். இவரு தமிழ் நாட்டிலேயே பெரிய பேமிலின்னு சொல்றாரு. அவரு, பொண்ணுக்கு அண்ணேன்னு சொல்றாரு. என்னாங்க இது. யாரு இந்த அம்மா."

"நான் மீனாட்சி. எனக்கு வயசு இருபத்தியி ரண்டு வருஷம் நாலுமாசம். நான் இங்கே விருப்பப்பட்டுதான் தங்கியிருக்கேன். இவங்க எனக்கு தெரிஞ்ச பேமிலி. இந்த வீடு எனக்கு புடிச்ச இடம். எங்கண்ணனுக்கும் எனக்கும் சொத்து தகராறு. என்னைத் தனியா கூட்டிட்டுபோய் மிரட்டி கையெழுத்து வாங்கலாம்னு பாக்கறார்."

"ஐயையோ. அது தப்பாச்சுங்களே. நீங்க கைப்பட ஒரு புகார் ஒன்னு எழுதி கொடுத்தா உங்கண்ணனை உள்ளே தள்ளிடலாமே. மாதவன் தம்பி நீங்க ஏதுனா தொல்ல மாட்டிவிருக்கீங்களா"

இன்ஸ்பெக்டர் கேட்க, மாதவன் வாய்

திறக்குமுன் மீனாட்சி இடைமறித்தாள்.
"இவர் என்னோட பி.ஏ. இவரால எனக்கு எந்த
கெடுதலும் இல்லை."
"தோழரே" இன்ஸ்பெக்டர் மீனாட்சியின்
அண்ணனைப் பார்த்தார்.
"உங்க தங்கச்சி சட்டம் தெரிந்து, சமயம்
தெரிஞ்சு பேசுது. அதுவும்தவிர இந்த பேமிலிய
நல்லாத் தெரியும். இவருக்கு ஊர்ல மதிப்புண்டு.
இப்பல்லாம் நாங்கலேடிஸ் மேட்டர்ல ரொம்ப ஜாக்
கிரதையா இருக்கோம். தப்பான பொம்பளகிட்ட
கூட மரியாதையா நடந்துக்கிறோம். உங்க
பேமிலியும் பெரிய பேமிலி. உங்கய்யாவை கூட்டி
வந்து நல்ல வார்த்தை சொல்லி இட்டுகினு போ.
இந்த பெரியவர் எல்லாம் பழிபாவத்துக்கு அஞ்சுன
வரு. நீங்க சொல்றாப் போல ஒன்னும் ஆகாது."
"என்ன சொன்னார்" மீனாட்சி ஆவலாகக்
கேட்டாள்.
"உங்கண்ணனா.. என் தங்கச்சியை அந்த
டிரைவர் காதல் பண்றான். ஆசைவார்த்தை
சொல்லி கூட்டிட்டு வந்துட்டான்னு சொன்னாரு.
மாதவனை எனக்கு தெரியும். ஒன்னும் நம்பல."
மீனாட்சி அண்ணாவை உறுத்துப் பார்த்தாள்.
இந்த அண்ணா எல்லா லெவலுக்கும் போக
கூடியவன். எல்லாவித அயோக்கியத்தனங்களும்
உள்ளடங்கியவன். இவனை லேசாய் கையாளக்
கூடாது. அதிரடித்தனமான விஷயங்கள்தான் இவன்
போன்றவர்களை பின்னடைய வைக்கும்.
"எங்கண்ணன் சொன்னது உண்மை இன்ஸ்
பெக்டர். இது காதல் விவகாரம்தான். நானும்
மாதவனும் காதலிக்கிறோம். கல்யாணம் பண்ண
பெர்மிஷன் வாங்கத்தான் மாதவன் அப்பாவிடம்
வந்தோம். எங்கப்பாவிடம் இதை சொல்லிட்டேன்.
அவர் சரின்னுட்டார்."
"எங்கப்பா சரின்னு சொல்லியும் மாதவன் அப்பா
ஒத்துக்கலை. அவசரபடாத யோசனை பண்ணுன்னு
புத்தி சொல்றார். என்னுடைய காசு பணம் தெரிஞ்
சும் என்னை மருமகளா ஏத்துக்க தயங்குகிறார்."
"இந்த வீட்டிற்குள்ளே நுழைகிறபோதே ஒரு
கல்யாண வாசனை அடிக்கிறதேன்னு நெனைச்
சேன். இப்படி போகுதா மேட்டர்? நீங்க மேஜரா
இருந்தாலும், நீங்க இஷ்டப்பட்ட இடத்துல இருக்க
உரிமை யிருந்தாலும், உங்கப்பாவ இங்க வரவழைச்
சிட்டீங்கன்னா நல்லாயிருக்கும். வெளியே வந்து



எஸ்.டி.டி. போட்டு பேசிட்டீங்கன்னா ரொம்ப
சந்தோஷமா இருக்கும்." இன்ஸ்பெக்டர் உற்சாகத்
தோடு பேசினார்.
"நான் வெளியே வந்தா, எங்கண்ணா
தொந்தரவு பண்ணுவான். எனக்கு பதிலா மாதவன்
எங்கப்பாவுக்கு போன் பண்ணுவார்."
மாதவன் திகைத்து போய்நின்றான். மீனாட்சி
யோடு காதல் என்ற விஷயம் பேசப்பட்டவுடனேயே
திடுக்கிட்டான். ஆனால் பரவசபடவில்லை.
மீனாட்சி எதன் பொருட்டோ விரைவாய் செயல்
படுகிறாள் என்று நினைத்துக் கொண்டான். மிகச்
சாதாரணமாய் மீனாட்சியைப் பார்த்து "என்ன
சொல்லணும் மீனாட்சி. உங்கப்பாகிட்ட" என்று
கேட்டான்.
"அப்பாகிட்ட நான் இங்க பத்ரமா இருக்கிறதா
சொல். அண்ணா தொந்தரவு பண்றானு சொல்."
"சாரி இன்ஸ்பெக்டர். நான் யாரையும் தொந்
தரவு பண்ணவில்லை. இந்த விஷயத்தை இவனை
டெல்லி வரவழைச்சு பேசிக்கிறேன்" அண்ணா
கோபமாக வெளியேறினான்.
"பிரச்சினை முடியலே. புகார் கொடுத்த
உங்கண்ணன் போயிட்டாகூட நீங்க உங்க
வீட்டுக்கு போன் பண்ணித்தான் ஆகணும்.
உங்கப்பாட்ட பேசிடுறதுதான் நல்லது"
இன்ஸ்பெக்டர் சொல்ல எல்லோருமே எஸ்.டி.டி.
பூத்துக்கு போய் நின்றார்கள்.
"அப்பா" கண்ணாடி கூண்டுக்குள் இருந்து
மீனாட்சி உரக்கக் கத்தினாள். "என்ன குழந்தை.
ஏன் இப்படி திடீர்னு காணாமப்போயிட்டே
வெளிய போனவ எங்கிருந்தாவது எனக்கு போன்
பண்ணக் கூடாதா. போலீஸுக்கு போலாம்னு
நெனச் சிட்டேயிருந்தேன். நல்ல வேளை போன்
பண்ணே."
"அண்ணா கண்டுபிடிச்சு போலீஸுக்கு
போயிட்டாம்பா. பக்கத்துல போலீஸ் இன்ஸ்
பெக்டரை வெச்சுட்டுதான் பேசறேன்."
"அந்த மடையன் அங்க இருக்கானா?"
"உனக்கு போன் பண்றேன்னவுடனே இந்த
ாவிட்டு போய்ட்டான்."
"எந்த ஊர் மீனாட்சி"
"மாதவனுடைய ஊருப்பா. மாதவன்
வீட்டுலதான் இருக்கேன். மாதவன் வீட்டுல அவுங்க
அப்பா அம்மா இருக்காங்க. அப்பப்ப அந்த

"இருபத்திரெண்டாயிரத்து முன்னூத்தி நாப்பது ரூபா"

"வெரிகுட், நம்ம ஊர் தஞ்சாவூர்ல இருந்து ஆரம்பிப்போம். தஞ்சை மாவட்டம் முழுக்க இண்டு இடுக்கு விடாம சுத்துவோம். ஸவுத் இண்டியா முழுக்க கவர் பண்ணுவோம். காருல முதல்ல போவோம். ட்ரெய்ன்ல அப்புறம் போவோம். ஏர்ல கடைசியா போவோம். அப்பாட்ட முத தவணையா ஒரு லட்ச ரூபா கேக்கறேன். நம்மகூட உங்க அப்பா அம்மாவையும் வரச்சொல்லு. வருவாரான்னு கேளு. நாம ஒரு குடும்பம். ஒரு குடும்பம் ட்ராவல் பண்றது எப்படின்னு நாம சோதனை பண்ணிப்பாக்கணும். நம்ம டூரிஸ்ட் கம்பெனிக்கு என்ன பேர் மாதவா?"

"ஸீ பேர்ட்ஸ்" மாதவன் பதில் சொன்னான்.

"அடிச்சக்கை. கடல் குருவிகளா. இல்லை கடலோரக் குருவிகளா"

"ஸீ ஸைட் பேட்ஸ்"

"கரெக்ட். கடலோரக் குருவிகள். எஸ்.எஸ்.பி. டூரிஸ்ட் கம்பெனி. மாதவா எங்கப்பா என்ன தெரியுமா சொல்றாரு. நீ எங்கிட்ட போன் குடுத்தியே அப்ப நீ தான் கேட்கறேன்னு எங்கிட்ட பேசறார். இந்த மூனு கோடி ப்ராஜெக்ட் ஜெயிச்சா இன்னொரு ப்ராஜெக்ட் கிடைக்குமாம். மீனாட்சியே கூட கிடைச்சாலும் கிடைப்பாளாம். நான் நினைக்கிறதயே நம்ம அப்பாவும் சொல்றாரேன்னு ஒரு செகண்ட் ஆடிப்போயிட்டேன்."

"நீ என்ன நினைச்சே மீனாட்சி."

"உன்ன கல்யாணம் பண்ணிட்டா என்னன்னு நினைச்சேன். உனக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா மாதவன்"

"ஜெயிக்கணும். நம்ம முயற்சி ஜெயிக்கணும். ஆனா முயற்சி ஜெயிச்சது எப்ப தெரியும்"

"ஒரு வருஷ டர்ன் ஓவர் ஒன்பது கோடின்னா நாம் ஜெயிச்சதா அர்த்தம். அப்ப கல்யாணம் பண்ணிப்பியா என்னை"

"முதல்ல ஜெயிக்கணும் மீனாட்சி. கடல் தண்ணிய வாரி மறுகரையில் கொட்டுவோம். அலகு அலகா கொட்டுவோம். ராத்திரியும் பகலுமா உழைப்போம். மிச்சத்தை கடவுள்கிட்ட விட்டுடுவோம். எனக்கு கொஞ்சம் வேஷ்டி சட்டை."

"தோ. பேண்ட் போடு. ஷூ போடு. முழுக்கை



சட்டை போடு, டை கட்டு, விஸிட்டிங் கார்டு அடிச்சுக்கோ, ஏகப்பட்ட வேலையிருக்கு மாதவா."

"ஆமாம் வேலை ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி ரெண்டு பேரும் காவேரி வாய்க்காலுக்கு பக்கத்துல உக்காந்து ஒரு இருபது நிமிஷம் தியானம் பண்ணலாம்."

வீட்டுக்குள் நுழையும்போது மாதவனும், மீனாட்சியும் எதிரும்புதிருமாய் அமர்ந்து தியானம் செய்வதை பார்த்து மாதவன் அப்பா மெல்ல புன்னகை செய்தார்.

"இறையே இந்த குழந்தைகளை ஆசிர்வதியும். இவர்களுக்கு வேண்டியது எதுவோ, அதை வேண்டிய நேரத்தில் அவர்கள் வேண்டிய விதமாய் வழங்கும்" இரண்டு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்தார். அவர்களையே கருணை பொங்க பார்த்தார்.

மாதவனும் மீனாட்சியும் இன்னும் ஆழ்ந்து ஒரு அமைதிக்குள் இறங்கினார்கள். அந்த அமைதி அவர்களுக்கு ஒரு புதிய பலம் கொடுத்தது. உள்ளே தோன்றும் அமைதிக்கு பெயர்தான் அன்பு. எந்த எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு. இந்த அன்பு எதையும் சாதிக்கும் பலம் உள்ளது.

**சுபம்**

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION பல்சுவை நாவல், 77/1, மாதவரம் நெடுஞ்சாலை, காந்தி பூங்கா எதிரில், பெரம்பூர், சென்னை-600 011. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும். போன் : 044-2551 2661

PALSUVAI Naval Owner & Published by M.P. Chandra Sekaran published on behalf Sri Balaji Publications at 77, Madhavaram High Road, Perambur, Chennai - 600 011. Printed by M.P.Chandrasekaran at Mount Printers, Old No.12, New No.6, Ponnappa Lane, Triplicane, Chennai - 600 005.